கோவை தமிழ் வாசகம்
மூன்றாம் புத்தகம்
நாகராசன் (எஸ்)

கோவை

தமிழ் வாசகம்

மூன்றாம் புத்தகம்

வித்வான் S. நாகராசன், B.O.L., B.T.,

தமிழாசிரியன்,

தூய மேரி போதனாமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்.

ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி

ஈரோடு

பதிப்புரிமை] 1954 [விலை அணா 7

முதற் பதிப்பு—நவம்பர், 1951
திருத்திய பதிப்பு—நவம்பர், 1952
மூன்றாம் பதிப்பு—ஜூலை, 1954

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954
Supplement to Part I-B, Page 24]

Kabeer Printing Works, Madras (2598)

முகவுரை

'கோவை தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் வரிசை, கடைசியாக 1939-ஆம் ஆண்டில் ஆரம்ப வகுப்பு கட்கென்று கல்வித்துறையினர் வெளியிட்டுள்ள பாடவியலை முற்றிலும் தழுவி முறைப்படி அமைந்துள்ளது. அப் பாடவியலில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இவ்வரிசை யில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மொழிப் பயிற்சி பற்றிய பொது விதிகளையும், பொருட் பயிற்சி பற்றிய சிறப்பு விதி களையும் கருத்திற்கொண்டு அவற்றோடு சிறிதும் முரண் படா வகையில் இஃது ஆக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் பெற்ற வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல பொருள்களைப் பற்றிப் புதுச் சொற்களை அறிந்து பயன்படுத்தி உரை யாடல், சிறு சம்பவங்களைக் கோவையாகச் சொல்லல், படித்தல், மவுனமாகப் படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுதற்கு இயன்ற முறையில் பாடங்களும், பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் பிறவும் இவ்வரிசையில் சிறப்பாக அமைந்துள்ளன. சிறுவர்களின் சொல்லறிவும் பேச்சுப் பயிற்சியும் உரம் பெறுதற்கு உறுதுணையாதற் பொருட்டுப் பாடங்கள் பெரிதும் உரையாடல் முறையி லேயே எழுதப்பட்டுள்ளன. சிறுவர்கள் விரும்பிப் படித்து மகிழ்ந்து பாடத்தக்க எளிய இனிய அபிநயப் பாட்டுகளும், பாப்பாப் பாட்டுகளும், நீதிப் பாட்டுகளும் தெளிவான விளக்கப் படங்களுடன் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாற்றான் இப்பாட நூல் வரிசை, தெளிவான பொருளறிவும் திருந்திய மொழிப் பயிற்சியும் பெறத் தொடங்கும் இளஞ்சிறார்க்கு உறுதுணையாக அமைந்து பெரும் பயன் விளைப்பதாக அமைந்திருத்தலின், தொடக்க நிலைக் கல்வியுலகத்தில் சிறக்க வரவேற்புக் கொள்ளும் என நம்புகின்றோம்.

ஆசிரியன்

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	காலையில் கிராமக் காட்சி	...	1
2.	மாலையில் கிராமக் காட்சி	...	2
3.	கடவுள் வணக்கம்	...	3
4.	உலகம்	...	4
5.	எங்கள் கிராமம்	...	7
6.	பண்டிகைகள்	...	11
7.	தபால் யாத்திரை	...	17
8.	கிராமத் தொழிலாளிகள்	...	19
9.	தெனாலிராமன்	...	25
10.	அபிநயப் பாட்டு	...	30
11.	படப் பயிற்சி	...	31
12.	கடை வீதி–I	...	33
13.	கடை வீதி–II	...	38
14.	பாரியும் ஔவையும்	...	45
15.	உல்லாசப் பிரயாணம்–I—வாகனங்கள்	...	51
16.	உல்லாசப் பிரயாணம்–II—தாவரங்கள்	...	58
17.	உல்லாசப் பிரயாணம்–III—சுத்தம்	...	64
18.	ஆகாய விமானம்	...	70
19.	நார்த் தொழில் (படம்)	...	72
20.	வள்ளல் பேகன்	...	74
21.	குரங்கின் தீர்ப்பு (நாடகம்)	...	79
22.	நெற்பானையும் எலியும்	...	85
23.	சுகாதாரக் கும்மி	...	87
24.	நாடு	...	89
25.	ஆத்தி சூடி	...	90
26.	கொன்றை வேந்தன்	...	91

ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒவ்வொரு வாக்கியம் சொல்.

ஒவ்வொரு படத்திற்கும் ஒவ்வொரு வாக்கியம் சொல்.

3. கடவுள் வணக்கம்

சூரியன் வருவது யாராலே ?
சந்திரன் தெரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணில் படுவன அவை என்ன ?
பேரிடி மின்னல் எதனாலே ?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி ?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ ?
அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம் ;
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன ?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்.
வந்திப் போம் அதை வணங்கிடுவோம் ;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

4. உலகம்

நாம் பூமியில் வசிக்கிறோம். நாம் வசிக்கும் பூமியைப் பூ உலகம் என்பார்கள். பூ உலகம் அதிகப் பரப்பு உள்ளது. பூமியில் மலைகள் இருக்கின்றன; ஆறுகள் ஓடுகின்றன. பூமியில் காடுகளும் நாடுகளும் உள்ளன. பூமியில் விலங்குகள் வசிக்கின்றன; பறவைகள் வசிக்கின்றன; புழு பூச்சிகளும் வாழ்கின்றன. அவற்றைப் பிராணிகள் என்பர். அவை நமக்கு உதவி செய்கின்றன.

பூமியில் மரமும் செடியும் கொடியும் வளர்கின்றன. மரம் செடி கொடிகளுக்குத் தாவரங்கள் என்பது பெயர். தாவரங்கள் நமக்குப் பூவைத் தருகின்றன; காயைத் தருகின்றன; கனியைத் தருகின்றன. அவை நமக்கு நிழலையும், உணவையும், உடையையும் தருகின்றன.

பூமியைச் சுற்றிலும் கடல் இருக்கிறது. கடல் அதிகப் பரப்பு உள்ளது; அதிக ஆழம் உள்ளது. கடலில் பல பிராணிகள் வாழ்கின்றன. கடலில் முத்தும் பவளமும் கிடைக்கின்றன.

பூமிக்கு மேல் ஆகாயம் இருக்கிறது. ஆகாயத்தில் சூரியன் இருக்கிறது; சந்திரன் இருக்கிறது; நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. அவை நமக்கு ஒளியைத் தருகின்றன; வெப்பமும் குளிர்ச்சியும் தருகின்றன.

நம்மையும் அவற்றையும் படைத்தவர் கடவுள். நம்மையும் அவற்றையும் காப்பவரும் கடவுளே. கடவுள் அன்பு உருவம் ஆனவர். கடவுள் எங்கும் இருக்கிறார்; எல்லாவற்றிலும் இருக்கிறார்; என்றும் இருக்கிறார். கடவுள் இல்லாத இடமும் பொருளும் காலமும் இல்லை. நாம் கடவுளிடம் பக்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழ வேண்டும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

பூமி	தாவரம்	பவளம்
உலகம்	கனி	மலைகள்
பரப்பு	கடல்	ஆறுகள்
விலங்குகள்	ஆழம்	பக்தி
பிராணி	முத்து	நாடு

அருஞ்சொற்பொருள் : விலங்குகள் - மிருகங்கள். கனி - பழம். கடல் - சமுத்திரம். ஒளி - பிரகாசம். வெப்பம் - உஷ்ணம்.

விடை சொல் :

1. நாம் எங்கு வசிக்கிறோம்?
2. பிராணிகள் என்று எவற்றிற்குப் பெயர்?
3. தாவரங்கள் நமக்கு எப்படி உதவுகின்றன?
4. பூமியைச் சுற்றி என்ன இருக்கிறது?
5. கடவுள் எப்படிப் பட்டவர்?

பயிற்சி :

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

பிராணிகள் நமக்கு —— செய்கின்றன.
மரம் செடி கொடிகளுக்கு —— என்பது பெயர்.
பூமியைச் சுற்றிலும் —— இருக்கிறது.
நாம் —— வசிக்கிறோம்.
—— முத்தும் பவளமும் கிடைக்கின்றன.
—— சந்திரன் இருக்கிறது.
கடவுள் —— உருவம் ஆனவர்.
கடவுள் —— இருக்கிறார்.
கடவுள் இல்லாத இடம் ——.

2. குளிர்ச்சி × வெப்பம். காலை × மாலை—இவை எதிர்ச் சொற்கள். இவை போன்ற எதிர்ச் சொற்களைக் குறித்துக்கொள்.

3. நாம் பூமியில் வசிக்கிறோம்—இது வாக்கியம் எனப்படும். வாக்கியம் முழுக் கருத்தைத் தெரிவிக்கும். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.



5. எங்கள் கிராமம்

இது எங்கள் கிராமம். எங்கள் கிராமம் சிறியது; ஆனால் அழகானது. இதில் தெற்கு வடக்காக ஆறு தெருக்கள் இருக்கின்றன. தெருக்கள் அகலமாகவும், சுத்தமாகவும் இருக்கின்றன. தெருவின் இரு பக்கங்களிலும் வீடுகள் உள்ளன. வீடுகள் வரிசையாகக் கட்டப்பட்டு உள்ளன. ஓலை வீடுகளும், ஓட்டு வீடுகளும் அதிகமாக உள்ளன. மாடி வீடுகள் சிலவே உண்டு. சிறு குடிசைகளும் பல இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடும்பம் இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பலர் இருப்பார்கள். எல்லாக் குடும்பங்களும் ஒற்றுமையாக வாழும்.

கிராமத்தில் குடியானவர்கள் வாழ்கிறார்கள்.

குடியானவர் பயிர்த் தொழில் செய்வார்கள். வேறு தொழிலாளிகளும் கிராமத்தில் வசிக்கிறார்கள். கூலிவேலை செய்யும் ஏழைகளும் இங்கு இருக்கிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுகிறார்கள். எங்கள் கிராமத்தில் இந்துக்கள் இருக்கிறார்கள்; முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சகோதரர்களைப் போல ஒற்றுமையாக வாழ்கிறார்கள்.

கிராமத்திற்கு அதிகாரி மணியக்காரர். அவரே கிராமத்தை ஆள்பவர். கிராமத்தின் அமைதியைப் பாதுகாப்பதும், குடிகள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிகளை வசூல் செய்வதும் அவருடைய முக்கியக் கடமைகள் ஆகும். அவர் கிராமத்தில் நடக்கும் வழக்குகளை விசாரிப்பார்; சிறிய சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பார்; கொலை, களவு முதலியவை நடவாதபடி பார்த்துக் கொள்வார். மணியக்காரருக்கு உதவியாக இருப்பவர் கணக்குப் பிள்ளை. கிராமக் கணக்குகளை எழுதுவதே கணக்குப்பிள்ளையின் முக்கிய அலுவல் ஆகும். இவ்விருவரும் கிராம உத்தியோகஸ்தர் எனப் படுவர். இவர்களுக்கு உதவி செய்யத் தலையாரி, தோட்டி அல்லது வெட்டியான் என்னும் கிராமச் சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்கள் கிராமாதிகாரியின் எல்லா உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்து

நடப்பார்கள். இவர்களில் தலையாரியின் முக்கிய வேலை கிராமத்தைக் காவல் காப்பது ஆகும். கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை செய்யும் இடம் கிராமச்சாவடி எனப்படும்.

கிராமத்தின் பொது நன்மைகளைக் கவனிக்கக் கிராமப் பஞ்சாயத்துச் சபை உண்டு. அதில் பல அங்கத்தினர் இருப்பர். அங்கத்தினர்களைக் கிராம மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். அங்கத்தினர் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள். பஞ்சாயத்துச் சபையார் அடிக்கடி கூடித் தீர்மானங்கள் செய்வார்கள். தலைவர் தீர்மானங்களை நடத்தி வைப்பார். கிராமத்தின் கல்வி, சுகாதாரம், போக்கு வரவு ஆகியவற்றைக் கவனிப்பது பஞ்சாயத்துச் சபையின் கடமையாகும். பாடசாலை, வாசகசாலை, புத்தக நிலையம் முதலியவற்றை அமைத்தல், கிராமத்தைச் சுத்தமாகப் பாதுகாத்தல், குடி தண்ணீர் வசதி செய்தல், ரோட்டு போடுதல், சாலை வைத்தல், தோப்பு வளர்த்தல், முதலிய காரியங்களைப் பஞ்சாயத்துச் சபையார் செய்வர்.

கிராமம்	வாசகசாலை	பஞ்சாயத்துச் சபை
குடியானவர்	உத்தியோகஸ்தர்	வழக்கு
ஏழைகள்	சாவடி	அதிகாரி
இந்துக்கள்	அங்கத்தினர்	மணியக்காரர்
கிறிஸ்தவர்கள்	தலைவர்	வரி
சகோதரர்கள்	தீர்மானம்	சிப்பந்தி

அருஞ்சொற்பொருள் : அதிகாரி - தலைவர். களவு - திருட்டு. அலுவல் - வேலை.

விடை சொல் :

1. கிராமத்தில் யார் யார் இருக்கிறார்கள் ?
2. கிராம உத்தியோகஸ்தர்கள் யாவர் ?
3. கிராம உத்தியோகஸ்தர்களின் கடமைகள் யாவை?
4. பஞ்சாயத்துச் சபையாரின் வேலைகள் யாவை ?

பயிற்சி :

1. உங்கள் கிராமத்தில் வாழ்பவர்களைச் சொல்.

2. உங்கள் கிராமத்தில் உள்ள தொழிலாளிகளைச் சொல்.

3. உங்கள் கிராமத்தைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் சொல்.

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியப் பிரிவுகளைப் பொருத்தமாகச் சேர்த்து வாசி :

பூமியைச் சுற்றிலும்	ஆகாயம் இருக்கிறது.
பூமிக்கு மேல்	கடல் இருக்கிறது.
ஆகாயத்தில்	முத்துக் கிடைக்கும்.
கடலில்	சூரியன் இருக்கிறது.

5. எதிர்ச் சொற்கள் சொல் : சிறியது, அகலம், அதிகம், ஒற்றுமை, ஏழை, தூரம், உண்டு, பல, நன்மை.

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

வீடுகள் —— கட்டப்பட்டு உள்ளன.

கிராமத்தில் ஓட்டு வீடுகள் —— ; மாடி வீடுகள் —.

7. அகலமாக, சுத்தமாக, உதவியாக, கீழ்ப்படிந்து, வசதி, அமைதி—இச்சொற்களை வாக்கியங்களில் வைத்துச் சொல்.

8. கீழுள்ள வாக்கியங்களை முற்றுப்புள்ளி வைத்து எழுது.

கிராமத்தில் குடியானவர்கள் வாழ்கிறார்கள் குடியானவர் பயிர்த்தொழில் செய்வார்கள் வேறு தொழிலாளிகளும் கிராமத்தில் வசிக்கிறார்கள்



6. பண்டிகைகள்

தாமஸ் : கோவிந்தா! இன்று என்ன விசேஷம்? உங்கள் வீடுகளை எல்லாம் அலங்காரம் செய்து இருக்கிறீர்களே!

கோவிந்தன் : உனக்குத் தெரியாதா? இது புரட்டாசி மாதம் அல்லவா? இன்று நவராத்திரிப் பண்டிகை ஆரம்பம். அதற்காகத் தானே நம் பாடசாலைக்கும் விடுமுறை விட்டிருக்கிறார்கள்.

அப்துல்லா : நவராத்திரிப் பண்டிகை என்றால் என்ன?

கோவிந்தன் : நவராத்திரி என்பது இந்து பண்டிகைகளில் ஒன்று. இது ஒன்பது நாட்கள் நடைபெறும். இது பெண்களுக்கு

உரிய பண்டிகை. நவராத்திரி காலத்தில் துர்க்கை, இலக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவிகளையும் பூஜித்து வணங்குவார்கள்.

தாமஸ் : அந்தத் தேவிகள் யார்? அவர்களை நீங்கள் ஏன் பூஜிக்கிறீர்கள்?

கோவிந்தன் : பிரமன், திருமால், சிவ பெருமான் ஆகிய மூவரும் இந்து மதத்தின் முக்கிய தேவர்கள். பிரமதேவன் பத்தினி சரஸ்வதி, திருமாலின் தேவி இலக்ஷ்மி, சிவபெருமானுக்கு மனைவி துர்க்கை. சரஸ் வதியை வழிபட்டால் கல்வியும், அறிவும் உண் டாகும். இலக்ஷ்மியைத் தொழுதால் செல்வமும், இன்பமும் மிகும். துர்க்கையை வணங்கினால் வீரமும், வெற்றியும் கிடைக்கும்.

அப்துல்லா : நவராத்திரிப் பண்டிகையை எப்படிக் கொண்டாடுவது?

கோவிந்தன் : மக்கள் வீடுகளை அலங் காரம் செய்வார்கள். அழகான பொம்மைகளை அலங்காரம் செய்து வரிசையாகப் பரப்பிக் கொலு வைப்பார்கள். மாலை வேளைகளில் பெண்கள் தங்களை அலங்காரம் செய்து கொள்ளுவார்கள். அவர்கள் கொலுப்பொம்மை களுக்குப் பூஜை செய்வார்கள். அங்கு அமர்ந்து பாட்டுகள் பாடுவார்கள். பெண்கள் வீடு வீடாகச் சென்று கொலுவைப் பார்த்துவிட்டு வெற்றிலைப் பாக்கு வாங்கிக் கொண்டு வருவார்

கள். கோவில்களிலும் இந்தப் பண்டிகை நடைபெறும். மண்டபத்தை அலங்கரித்து, அதில் அம்மனை வைத்து வழிபடுவார்கள். அப்பொழுது அங்கு மேளக் கச்சேரி, சங்கீதக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி முதலியவை நடக்கும். அரசர்களுடைய அரண்மனைகளிலும் இது சிறப்பாகக் கொண்டாடப்படும். அரண்மனையை அழகாக அலங்கரிப்பார்கள். சபாமண்டபத்தில் அரசர் ஆடம்பரமாகக் கொலு இருப்பார். மைசூரில் நவராத்திரிப் பண்டிகை மிகவும் விசேஷமாக நடைபெறும். ஒன்பதாவது நாள் சரஸ்வதி பூஜை நடக்கும். அன்று புத்தகங்களையும் சுவடிகளையும் அடுக்கிப் பூஜை செய்வோம். மறுநாள் விஜய தசமி. அன்றோடு பண்டிகை முடிவு பெறும். அடுத்த மாதம் தீபாவளிப் பண்டிகை வரும்.

அப்துல்லா : எங்களுக்கும் பல பண்டிகைகள் உண்டு. அடுத்த மாதம் ரம்ஜான் பண்டிகை வரப்போகிறது. அது ஒரு முக்கியமான பண்டிகை. அது ஒரு மாதம் கொண்டாடப் படும். அந்த ஒரு மாத காலமும் நாங்கள் பகலில் விரதமிருப்போம். தினமும் மசூதிக்குச் சென்று தொழுவோம். எங்கள் பண்டிகைகளில் மொகரம் பண்டிகையே மிகவும் சிறப்புடையது.

தாமஸ் : நாங்களும் பண்டிகைகள் கொண்டாடுவது உண்டு. எங்கள் பண்டிகைகளில் மிகவும் முக்கியமானது கிறிஸ்துமஸ் பண்டிகை ஆகும். அது பல நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்படும். அப்போது நாங்கள் நன்ருக அலங்காரம் செய்துகொள்ளுவோம். ஆலயத்திற்குச் சென்று பிரார்த்தனை நடத்துவோம். ஈஸ்டர் பண்டிகையும் நாங்கள் கொண்டாடும் முக்கியமான பண்டிகை ஆகும்.

விசேஷம்	பத்மினி	பூஜை
அலங்காரம்	மனைவி	சுவடி
துர்க்கை	வீரம்	விஜய தசமி
திருமால்	வெற்றி	விரதம்
பிரமதேவன்	கல்வி	மருதி
தேவி	அறிவு	ஆலயம்
தேவர்	செல்வம்	கோவில்

அருஞ்சொற்பொருள் :—வழிபட்டால் - பூஜித்தால். வெற்றி - ஜயம். ஆலயம் - கோவில். பிரார்த்தனை - வழிபாடு.

விடை சொல் :

1. நவராத்திரிப் பண்டிகை எவ்வாறு கொண்டாடப்படும்?
2. முஸ்லிம் பண்டிகைகள் யாவை?
3. கிறிஸ்தவர்கள் பண்டிகைகள் யாவை?

பயிற்சி :

1. இந்து பண்டிகைகள் மூன்று சொல்.
2. அவை எந்தெந்த மாதத்தில் வரும், சொல்.

3. அவை கொண்டாடப்படும் விதத்தைச் சொல்.

4. கிறிஸ்தவர் பண்டிகை இரண்டு சொல்.

5. அவை வரும் மாதங்களைச் சொல்.

6. முஸ்லிம் பண்டிகை இரண்டு சொல்.

7. அவை கொண்டாடப்படும் விதத்தைச் சொல்.

8. நீ கண்ட திருவிழாக்கள் மூன்று சொல்.

9. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் சொல் :

விடுமுறை, அலங்காரம், சிறப்பாக, முக்கியமான.

10. இவற்றைக் குறித்துக்கொள் : தேவன் × தேவி. கணவன் × மனைவி.

11. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

பிரமதேவன் பத்தினி ——.

—— தேவி இலக்ஷ்மி.

சிவபெருமானுக்கு —— துர்க்கை.

சரஸ்வதியை வழிபட்டால் —— —— உண்டாகும்.

—— தொழுதால் செல்வமும் இன்பமும் மிகும்.

துர்க்கையை வணங்கினால் —— —— கிடைக்கும்.

12. பூஜை - வழிபாடு, விசேஷம் - சிறப்பு; இவை ஒரே பொருள் உள்ள சொற்கள். இவற்றைக் குறித்துக் கொள்.

13. எதிர்ச் சொற்கள் சொல் :

வெற்றி, இன்பம், முடிவு.

14. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானவற்றை வைத்து வாசி :

மொகரம் —— பண்டிகை. (இந்து, முஸ்லிம்)

—— கிறிஸ்தவர் பண்டிகை. (ரம்ஜான், ஈஸ்டர்)

நவராத்திரிப் பண்டிகை —— மாதத்தில் வரும்.
(ஐப்பசி, புரட்டாசி)

மைசூரில் —— பண்டிகை விசேஷமாக நடை பெறும். (நவராத்திரி, மொகரம்)

15. அரசர் கொலு இருப்பார்.

இது வாக்கியம் எனப்படும். இது முழுக் கருத்தைத் தெரிவிக்கிறது. இதில் அரசர், கொலு, இருப்பார் என்னும் மூன்று வார்த்தைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொரு வார்த்தையும் சொல் எனப்படும். வாக்கியம் சொற்களால் ஆகும்.

அரசர், கொலு, இருப்பார்—இவை சொற்கள். ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கிறது.

16. மக்கள் வீடுகளை அலங்காரம் செய்வார்கள் —இவ்வாக்கியத்தில் உள்ள சொற்களைச் சொல்.

7. தபால் யாத்திரை



பயிற்சி:

1. படத்தில் என்ன விளக்கப்பட்டிருக்கிறது?

2. ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒவ்வொரு வாக்கியம் சொல்.

3. நீ கார்டு கவர் ஆகிய தபால் கடிதங்களை எங்கு வாங்குவாய்?

4. எழுதின கடிதத்தை என்ன செய்வாய்?

5. பெட்டியில் போட்ட கடிதங்கள் தபால் ஆபீசுக்கு எப்படிப் போகும்?

6. தபால் ஆபீசில் கடிதங்களை என்ன செய்வார்கள்?

7. தபால் கடிதங்களை வெளியூர்களுக்கு எப்படி அனுப்புவார்கள்?

8. வெளியூரில் உள்ளவர்களுக்குத் தபால் கடிதம் எப்படிக் கிடைக்கிறது?

9. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து வாசி:

தபால் வேலைகள் நடக்கும் இடம் —— ஆகும். தபால் ஆபீசில் —— —— ஆகிய தபால் கடிதங்கள் கிடைக்கும். கடிதத்தில் —— எழுதி, அதைத் —— போடவேண்டும். —— பெட்டியில் போட்ட —— எடுத்துப் போவார். தபால் ஆபீசில் கடிதங்களுக்கு —— இடுவார்கள். முத்திரை இட்ட கடிதங்களைப் —— இட்டுக் கட்டுவார்கள். பைகளை —— வெளியூருக்கு அனுப்புவார்கள். அங்குள்ள —— பைகளை அவிழ்த்து —— முத்திரை இடுவார்கள். பிறகு —— வீடு வீடாகக் கொண்டு ——.

10. கார்டின் விலையைத் தெரிந்துகொள்.

11. கவரின் விலையைத் தெரிந்துகொள்.

12. தபால் ஆபீசுக்குப் போய்ப் பார்.

13. தபால் பெட்டி உள்ள இடத்தைத் தெரிந்துகொள்.

14. உன் வீட்டுக்கு வரும் கடிதங்களைக் கவனி.

15. வீட்டார் எழுதும் கடிதங்களைக் கவனி.

16. நீயும் சிறு கடிதங்கள் எழுதிப் பழகு.



8. கிராமத் தொழிலாளிகள்

ஜான் : கண்ணா! கரீம்! இருவருமாக எங்குப் புறப்பட்டீர்கள்?

கண்ணன் : இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா? ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்று புறப்பட்டோம். உன்னையும் அழைத்துப் போகலாம் என்று வந்தோம். வா, போவோம்.

ஜான் : ஊரில் என்ன பார்க்கப் போகிறீர்கள்?

கரீம் : நேற்று ஆசிரியர் சொன்னதை மறந்து விட்டாயா? இன்று கிராமத் தொழிலாளிகள் தொழில் செய்வதைப் பார்த்துவரச் சொன்னார் அல்லவா?

ஜான் : ஆம், மறந்து விட்டேன். வாருங்கள், போவோம்.

கண்ணன் : அதோ பாருங்கள். ஒருவன் நிலத்தில் ஏர் உழுகிறான். அவன் ஓர் உழவன். பயிர்த்தொழில் செய்பவன் உழவன் ஆவான்.



உழவனைக் குடியானவன், வேளாளன் என்றும் சொல்வார்கள். உழவன் நிலத்தை உழுது பயிர் செய்வான். அவன் குடும்பத்தார் எல்லோரும் பயிர் வேலை செய்வார்கள். உழவர்களே உணவுக்கு வேண்டும் தானியங்களை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் பயிர்த்தொழில் செய்யாவிட்டால் நமக்கெல்லாம் உணவு கிடைக்காது.

ஜான் : கண்ணா! அதோ மரத்தைச் சீவுகிறானே, அவன் யார்?

கண்ணன் : அவன் தச்சன். தச்சன் மரவேலை செய்வான். அவன் ரம்பத்தால் மரத்தை அறுப்பான்; வாச்சியால் சீவுவான்; இழைப்புளியால் இழைப்பான்; உளியால் துளை இடுவான். அவன் பயிர்த்தொழிலுக்கு வேண்

டிய கலப்பை ஏற்றம் முதலியவற்றைச் செய்து கொடுப்பான். வீட்டிற்கு வேண்டிய ஜன்னல், கதவு, பெஞ்சு, பெட்டி, மேஜை, நாற்காலி முதலியவற்றைச் செய்பவனும் தச்சனே ஆவான். ரம்பம், வாச்சி, இழைப்புளி, உளி முதலியவை தச்சன் உபயோகிக்கும் ஆயுதங்கள் ஆகும்.

கரீம் : அதோ மக்கள் கூட்டமாக இருக்கிறார்களே, அங்கு என்ன நடக்கிறது ?

கண்ணன் : அது கருமான் உலைக்களம். அங்குக் கருமான் இரும்பு வேலை செய்கிறான். கருமானைக் கொல்லன் என்றும் சொல்வார்கள். இரும்பு வேலை செய்பவன் கருமான் ஆவான். அவன் உலை நெருப்பில் இரும்பைக் காய்ச்சுவான்; அதைப் பட்டறையின்மேல் வைத்துச் சம்மட்டியால் அடிப்பான். அவன் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கலப்பைக்கொழு, ஏற்றச் சால், மண்வெட்டி, வண்டிக்கட்டு முதலியவற்றைச் செய்து கொடுப்பான். வீட்டுக்கு வேண்டிய ஆணி, கரண்டி, இரும்புச் சட்டி முதலியவையும் கருமான் செய்பவையே ஆகும். சுத்தி, சம்மட்டி, குறடு, அரம் முதலியவை கருமான் [illegible]

கிக்கும் ஆயுதங்கள் ஆகும். இதோ திண்ணை யில் குமுட்டி ஊதிக்கொண்டு இருக்கிறனே இவன் யார் தெரியுமா?

ஜான் : தெரியாதே. இவன் யார்? என்ன செய்கிறன்? சொல்.

கண்ணன் : இவன் தட்டான். பொன் வேலை செய்பவன் தட்டான் ஆவான். தட்டான் பொன், வெள்ளி இவற்றால் நகைகள் செய்வான். தட்டான் கடுக்கன், கம்மல், சங்கிலி, அட்டிகை

மோதிரம் முதலிய பொன் நகைகளும், காப்பு, தண்டை, கொலுசு முதலிய வெள்ளி நகைகளும் செய்து கொடுப்பான். தட்டான் குழையால் குமுட்டியை ஊதுவான். அவன் பொன்னையும் வெள்ளியையும் குமுட்டி யில் வைத்து உருக்குவான். அவன் காய்ந்த பொன்னையும் வெள்ளியையும் இடுக்கியால் எடுப்பான்; பட்டறையின் மேல் வைத்துச் சுத்தியால் அடிப்பான்.

கரீம் : அதோ சக்கரம் சுற்றுகிறனே, அவன் யார்?

ஜான் : அவன் தெரியாதா உனக்கு? அவன் குயவன். குயவன் மண் பாண்டங்கள் செய்வான். குயவன் களிமண்ணைப் பிசைந்து சக்கரத்தின் நடுவில் வைப்பான்; பிறகு தடியால்

சக்கரத்தைச் சுழற்றுவான். சக்கரம் சுழலும் போது மண்ணைக் கையால் பிடித்துப் பாண்டங்களாக ஆக்குவான்.

சட்டி, பானை, தோண்டி, தாழி, அகல், தொட்டி முதலியவற்றைச் செய்து கொடுப்பவன் குயவனே ஆவான். குயவன் மண்பாண்டங்களை அடுக்கிச் சூளை போடுவான். சூளையில் சுட்ட பாண்டங்களே உறுதியாக இருக்கும். திருகு சக்கரம், சுழற்று தடி, தட்டு பலகை முதலியவை குயவனுடைய கருவிகள் ஆகும்.

இவர்கள் எல்லோரும் கிராம ஜனங்களுக்கு உதவி செய்கின்றனர். இவர்கள் தங்களுக்குள்ளும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ளுகின்றனர். மற்றவர்கள் எல்லோரும் உழவனுக்கு உதவுகின்றனர். உழவன் அவர்கள் எல்லோருக்கும் தானியம் கொடுக்கிறான். இவர்கள் அனைவரும் கிராமத்தில் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இவர்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லை.

தொழிலாளிகள்	இழைப்புளி	குறடு
உழவன்	ஆயுதங்கள்	குழை
வேளாளன்	உலைக்களம்	குழட்டி
உற்பத்தி	பட்டறை	இடுக்கி
ரம்பம்	சம்மட்டி	சூளை
வாச்சி	சுத்தி	கருவி

விடை சொல் :

1. கிராமத் தொழிலாளிகள் யாவர்?
2. உணவுப் பொருளை உற்பத்தி செய்பவர் யார்?
3. தச்சன் செய்யும் தொழில் என்ன?
4 கருமான் வேலை செய்யும் இடத்திற்கு என்ன பெயர்?
5. தட்டான் செய்யும் பொருள்கள் யாவை?
6. குயவன் எவ்வாறு பாண்டங்கள் செய்கிறான்

பயிற்சி :

1. உனக்குத் தெரிந்த வேறு சில தொழிலாளிகளைச் சொல்.
2. அவர்கள் செய்யும் பொருள்களைச் சொல்.
3. அவர்கள் உபயோகிக்கும் கருவிகளைச் சொல்.
4. இவற்றைச் செய்பவர் யார் சொல் :
மேஜை, இரும்புக் கரண்டி, மண்குடம் மோதிரம்.
5. கோடிட்ட இடங்களில் எதிரில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஏற்றபடி அமைத்து வாசி :

உழவன் —— உழுவான். (நிலம்)
தச்சன் —— சீவுவான். (மரம்)
தட்டான் —— உருக்குவான். (பொன்)
கருமான் —— அடிப்பான். (இரும்பு)
வண்ணான் —— வெளுப்பான். (துணி)

6. இரும்பு, பொன், வெள்ளி-இவை உலோகங்கள். இவை போன்ற வேறு உலோகங்களைத் தெரிந்துகொள்.

7. தட்டான் நகை செய்வான்.

இவ்வாக்கியத்தில் தட்டான், நகை, செய்வான் என்னும் மூன்று சொற்கள் உள்ளன. தட்டான் என்பது ஒருவன் பெயரைக் குறிக்கிறது. நகை என்பது ஒரு பொருளின் பெயரைக் குறிக்கிறது. செய்வான் என்பது தட்டான் செய்யும் செயலை (வினையை)க் குறிக்கிறது. பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். தட்டான், நகை இவை பெயர்ச்சொற்கள். செயலை (வினையை)க் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். செய்வான் என்பது வினைச்சொல்.

8. தச்சன் மரத்தைச் சீவுகிறான்—இவ்வாக்கியத்தில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் சொல்.

9. தெனுலி ராமன்

(மவுன வாசிப்பு)

தெலுங்கு நாட்டில் தெனுலி என்று ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் இராமன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் எப்பொழுதும் விகடமாகவே பேசுவான். அவன் செய்கைகளும் விகடமாகவே இருக்கும். அவன் தன் விகடப் பேச்சால் எல்லோரையும் சிரிக்க வைப்பான். அவன் செய்கைகளைக் காண்போர் சிரிக்காமல் இருக்க முடியாது. அவனை எல்லோரும் விகடகவி என்று அழைத்து வந்தார்கள்.

தெனுலிராமன் கிருஷ்ணதேவராயர் சபையில் விகடகவியாக இருந்தான். இராயர் அவனிடம் மிகவும் அன்பாக இருந்தார்.

அவன் தன் விகடத்தால் இராயரை மகிழ்வித்து வந்தான். ஒரு நாள் அவன் சபையில் இராயரையே பரிகாசம் செய்தான். பரிகாசம் அளவுமீறிப் போய்விட்டது. அதனால் இராயருக்கு அவன்மீது அளவுகடந்த கோபம் உண்டாயிற்று. அவர் இரு வீரரை அழைத்து இராமன் தலையை வாங்கி விடும்படி உத்தர விட்டார். இராயர் வீரர்களைப் பார்த்து, "வீரர்களே, நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? இராமனை நடுவில் நிறுத்தி, நீங்கள் இருவரும் எதிர் எதிராக நின்று கொண்டு, ஏக காலத்தில் உங்கள் வாள்களை வீசி ஒரே வீச்சில் அவன் தலையை வெட்டித் தள்ள வேண்டும். அவன் தலை தப்பினால் உங்கள் தலைகள் தப்பமாட்டா, தெரியுமா?" என்று எச்சரித்தார்.

வீரர்கள் இருவரும் இராமனைக் கையும் பிடியுமாகக் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றனர். கொலைக்களத்தை அடைந்ததும் இராமன் வீரர்களைப் பார்த்து, "வீரர்களே, நான் இப்பொழுது இறக்கப் போகிறேன். இறப்பதற்கு முன் கடைசியாகக் கடவுளைத் துதிக்க விரும்புகிறேன். அதற்கு அனுமதி தருவீர்களா?" என்று பணிவோடு கேட்டான். வீரர்கள் அவன்மீது இரக்கம் கொண்டு "அப்படியே செய்" என்றனர்.

இராமன் வீரர்களைப் பார்த்து, "நான் இடுப்பளவு நீரில் நின்று கொண்டுதான் கடவுளைத் துதிப்பது வழக்கம். நான் பக்கத்தில் உள்ள குளத்தில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டு இறைவனைத் துதிக்கிறேன். நீங்கள் இருவரும் என் இரு பக்கங்களிலும் எதிர் எதிராக நில்லுங்கள். நான் துதி முடிந்ததும் சைகை செய்கிறேன். உடனே நீங்கள் வாளை வீசி என்னை வெட்டி வீழ்த்தி விடுங்கள்" என்றான்.

வீரர்கள் இராமனைப் பக்கத்தில் இருந்த குளத்திற்கு அழைத்துச் சென்றனர். இராமன் குளத்தில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டு, கடவுளைத் துதிப்பது போலப் பாவனை செய்தான். வீரர்கள் இருவரும் அவன் இரு பக்கங்களிலும் எதிர் எதிராக வாளை ஓங்கிக் கொண்டு நின்றனர். சிறிது நேரம் சென்றதும் இராமன் சைகை செய்தான். உடனே வீரர் தங்கள் வாள்களை ஓங்கி வீசினர்.

இராமன் சாமர்த்தியமாகச் சட்டென்று தண்ணீருக்குள் அமிழ்ந்து கொண்டான். இடையில் நின்ற இராமன் மறைந்துவிடவே, வீரர்களின் வாள்கள் மாறிச்சென்று அவ்வீரர்களின் தலைகளையே வெட்டி வீழ்த்தின. இவ்வாறு இரு வீரர்களும் ஒருவர் வாளால் ஒருவர் வெட்டுண்டு விழ்ந்தனர்.

இராமன் இரு வீரர்களின் தலைகளையும் தன் இரு கைகளில் எடுத்துக் கொண்டு அரசவையை அடைந்து இராயர் முன் நின்றான். இராயரும் அவையில் இருந்த மற்றவர்களும் திடுக்கிட்டுத் திகைத்துப் போயினர். பின்பு இராமன் நடந்தவற்றைச் சொன்னான். இராயரும் மற்றவர்களும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். இராயர் இராமனைப் பார்த்து, " இராமா, உன்னை யாராலும் கொல்ல முடியாது, கொல்லவும் கூடாது. நீ பழைய படியே நம் சபையில் விகடகவியாக இருந்து கொண்டிரு ", என்று கூறினார். இராமன் முன் போலவே தன் விகடத்தால் இராயரை மகிழ்வித்து வந்தான்.

தெலுங்கு	கோபம்	பாவனை
விகடம்	உத்தரவு	சாமர்த்தியம்
விகடகவி	கொலைக்களம்	அரசவை
சபை	வீரர்கள்	திடுக்கிட்டு
பரிகாசம்	அனுமதி	திகைத்து

அருஞ்சொற்பொருள் : ஏககாலத்தில் - ஒரே காலத்தில். அனுமதி - உத்தரவு. பணிவோடு - வணக்கத்தோடு. மகிழ்வித்து - சந்தோஷப்படுத்தி.

விடை சொல் :

1. தெனாலி ராமன் யார்?
2. இராயருக்குத் தெனாலிராமன் மேல் ஏன் கோபம் உண்டாயிற்று?
3. இராயர் வீரர்களுக்கு என்ன உத்தரவிட்டார்?
4. தெனாலிராமன் எவ்வாறு தப்பினான்?

பயிற்சி :

1. இந்தக் கதையை மவுனமாக வாசி.

2. இந்தக் கதையைத் தெனாலிராமன் சொல்வது போலச் சொல்.

3. இந்தக் கதையை இராயர் சொல்வது போலச் சொல்.

4. உனக்குத் தெரிந்த வேறொரு தெனாலிராமன் கதை சொல்.

5. கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் கோடிட்ட இடத்தில் ஏற்ற சொல்லை வைத்து வாசி.

உழுவான், ஆடை வெளுப்பான், க்ஷவரம் செய்வான், பானை செய்வான், பெட்டி செய்வான், ஆணி செய்வான்.

குயவன் —— வண்ணான் ——
தச்சன் —— உழவன் ——
அம்பட்டன் —— கருமான் ——

6. இந்தப் பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் அடியில் தரப்பட்டுள்ள கட்டங்களில் எடுத்து எழுது.

பெயர்ச் சொல்	வினைச் சொல்

7. பரிகாரம், அனுமதி, திடுக்கிட்டு, சாமர்த்தியமாக —இச்சொற்களை வாக்கியங்களில் வைத்துச் சொல்.

8. கோடிட்ட இடங்களில் எதிரில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றி அமைத்து வாசி.

தச்சன் —— மரத்தைச் சீவுவான். (வாச்சி)
கருமான் —— இரும்பை அடிப்பான். (சம்மட்டி)
தட்டான் —— குமுட்டியை ஊதுவான். (குழை)
குயவன் —— சக்கரத்தைச் சுழற்றுவான். (தடி)

10. அபிநயப் பாட்டு

நெல்லை உரலில் கொட்டு;
நின்று மெல்லக் குற்று.
அரிசியை அளந்து முன்னே
அரித்துக் கழுவு பின்னே.
உலையில் அதனைப் போடு;
உடனே மேலே மூடு.
கொதித்த பின்னே வடித்து
கொட்டி ஆற்று எடுத்து.
காயும் கறியும் அரிந்து
காரம் புளிப்புத் தெரிந்து
உப்பை அளவாய்ப் போட்டு
ஒத்திருக்கக் கூட்டு.
வெந்த பின்னே எடுப்பாய்;
விரித்த இலையில் படைப்பாய்;
எல்லோரும் கூடி உண்டு
இருப்போம் இன்பம் கொண்டு.

11. படப் பயிற்சி



ஒவ்வொரு படத்தையும் பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பயிற்சி :

1. உரிய இடங்களில் முற்றுப் புள்ளி வைத்து எழுது :

இராமன் எப்பொழுதும் விடகமாகவே பேசுவான் அவன் செய்கைகளும் விகடமாகவே இருக்கும் அவன் தன் விகடப் பேச்சால் எல்லோரையும் சிரிக்கு வைப்பான்

2. இவன் யார் தெரியுமா ?

இது கேள்வி கேட்பதாக இருக்கிறது அல்லவா ? இது கேள்வி வாக்கியம். கேள்வி வாக்கியத்தின் முடிவில் கேள்விக் குறி இட்டு எழுதவேண்டும்.

3. கீழ்வரும் கேள்வி வாக்கியங்களின் முடிவில் கேள்விக் குறி இட்டு எழுது :

அங்கு என்ன நடக்கிறது நம் துணியையும் இவன்தான் வெளுக்கிருனே

4. இவற்றை மவுனமாக வாசி :

தொழில்	— தொழிலாளி	அதிகாரம்	— அதிகாரி
நோய்	— நோயாளி	கடை	— கடைக்காரன்
உழைப்பு	— உழைப்பாளி	வேலை	— வேலைக்காரன்
படிப்பு	— படிப்பாளி	பால்	— பால்காரன்
வியாபாரம்	— வியாபாரி	விவசாயம்	— விவசாயி

5. உழவன் தொழில் செய்யாவிட்டால் நமக்கெல்லாம் உணவு கிடைக்காது. இந்த வாக்கியத்தை உழவன் தொழில் செய்தால் தான் நமக்கெல்லாம் உணவு கிடைக்கும்—என்று மாற்றினாலும் பொருள் கெடாது.

6. பின்வரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றி வாசி :

மழை பெய்யாவிட்டால் நெல் விளையாது.
மருந்து உண்ணாவிட்டால் நோய் தீராது.

12. கடை வீதி–I

இராமன் : அப்பா! வீட்டில் உப்பு இல்லையாம்; காய் கறிகளும் இல்லையாம். அம்மா உங்களைக் கடைக்குச் சென்று அவற்றை வாங்கி வரச் சொன்னார். எழுந்திருங்கள், போவோம்.

மணி : அப்பா! வெல்லமும் வேண்டுமாம். எனக்குச் சட்டை இல்லாமல் பாடசாலைக்குப் போக வெட்கமாக இருக்கிறது. அப்படியே ஒரு சட்டையும் தைத்துக்கொண்டு வாருங்கள்.

மங்களம் : எனக்கும் பாவாடை வேண்டும். என்னையும் அழைத்துக்கொண்டு போங்கள், அப்பா.

தகப்பனார் : ஒவ்வொன்றாகச் சொல்லாமல் வேண்டும் சாமான்களையெல்லாம் குறித்துக் கொடுக்கச் சொல்லி வாங்கிக்கொண்டு வாருங்கள்.

இராமன் : அப்பா! அம்மா இதோ ஒரு சீட்டுக் கொடுத்திருக்கிறார். இதில் எல்லாச் சாமான்களையும் ஒன்றுவிடாமல் குறித்திருக்கிறாராம்.

மங்களம் : அப்பா! எல்லாச் சாமான்களும் ஒரு கடையிலேயே கிடைக்குமா? அல்லது வெவ்வேறு கடையில் வாங்க வேண்டுமா?

தகப்பனார் : எல்லாச் சாமான்களும் ஒரு கடையிலேயே கிடைக்கமாட்டா. வெவ்வேறு கடையிலேயே வாங்க வேண்டும்.

இராமன் : அக்கடைகள் எல்லாம் ஒரு இடத்திலேயே இருக்குமா? வெவ்வேறு இடத்திற்குப் போக வேண்டுமா?

தகப்பனார் : கடை வீதியில் எல்லாக் கடைகளும் இருக்கும். அங்குச் சென்றால் எல்லாச் சாமான்களையும் வாங்கலாம். அதோ பாருங்கள், ஜனக் கூட்டம் தெரிகிறதே, அது தான் கடை வீதி.

இராமன் : இது என்ன கடை, அப்பா?

தகப்பனார் : இது பலசரக்கு மளிகைக் கடை. அதோ போர்டில் எழுதி இருக்கிறது, பார். இதுதான் நாம் வழக்கமாகச் சாமான்

வாங்கும் மளிகைக் கடை. சீட்டைக் கடைக் காரரிடம் கொடு. கடைக்காரரே, இந்தச் சீட்டில் குறித்திருக்கும் சாமான்களைக் கொடும்.



மணி : அப்பா! அதோ கடைக்காரர் முன் தொங்குகிறதே, அது என்ன? சாமான்களை ஏன் அதில் வைக்கிறார்?

தகப்பனார் : அதுதான் தராசு. வெல்லம், சர்க்கரை முதலியவற்றைத் தராசில் வைத்து நிறுத்துக் கொடுப்பார்கள்.

மங்களம் : அப்பா! தராசின் ஒரு தட்டில் சாமானை வைக்கிறார். மற்றொரு தட்டில் ஏதோ கல் மாதிரி வைக்கப்பட்டு இருக்கிறதே, அது என்ன?

தகப்பனார் : அதுதான் படிக்கல். ஒவ்வொரு அளவுக்கும் தனித் தனிப் படிக்கல் உண்டு. வருஷந்தோறும் அரசாங்கத்தார் படிக் கற்களின் அளவைச் சோதித்து அதில் முத்திரை இடுவார்கள். முத்திரை இல்லாத படிக் கல்லை உபயோகிப்பது குற்றமாகும்.

மணி : அப்பா! பருப்பை ஏன் நிறுக்கவில்லை? அதை முகந்து கொடுக்கிறாரே, அதன் அளவு எப்படித் தெரியும்?

தகப்பனுர் : அரிசி, பருப்பு முதலிய வற்றை நிறுக்கமாட்டார்கள். முகந்துதான் அளப்பார்கள். அதோ முகந்து அளக்கிருரே, அது முழுப்படி. அதோ ஆழாக்கு, கால்படி, அரைப்படி எல்லாம் இருக்கின்றன, பாருங்கள். படிகளுக்கும் முத்திரை உண்டு.

இராமன் : அப்பா ! கடைக்காரருக்குப் பணம் கொடுத்து விட்டீர்களா ?

தகப்பனுர் : கொடுத்து விட்டேனே.

வெல்லம்	போர்டு	படிக்கல்
சாமான்கள்	கடைக்காரர்	முத்திரை
சீட்டு	பலசரக்கு	முகத்தல்
சர்க்கரை	மளிகைக்கடை	சோதித்து

விடை சொல் :

1. வாழைப்பழம் எந்தக் கடையில் கிடைக்கும் ?
2. ஜவுளிக் கடையில் என்ன வாங்கலாம் ?
3. பலசரக்கு மளிகையில் இருக்கும் சாமான்கள் யாவை ?
4. பருப்பை எப்படி அளப்பார்கள் ?

பயிற்சி :

முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய இடத்தில் முற்றுப் புள்ளியும், கேள்விக்குறி வைக்கவேண்டிய இடத்தில் கேள் விக் குறியும் வைத்து எழுது :

இது என்ன கடை இது பலசரக்கு மளிகைக் கடை அது என்ன அது தராசு

5. அம்மா கால்படியால் அரிசி அளப்பார்—இவ்வாக் கியத்தில் உள்ள பெயர்ச்சொல் வினைச்சொற்களைச் சொல்.

6. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி :

மாம்பழம் —— கிடைக்கும்.
சட்டைத்துணி —— கிடைக்கும்.
—— பூந்தி வாங்கலாம்.
பதார்த்தக் கடையில் —— விற்பார்கள்.

7. பழக்கடை—பழம் + கடை. பின் வருபவைகளை இவ்வாறே பிரித்து எழுது.

பூக்கடை, கொலைக்களம், வாழைப்பழம்.

8. வழக்கமாக, வெவ்வேறு, உபயோகிப்பது—இவற்றை வாக்கியங்களில் வைத்துச் சொல்.

9. வருஷம்—இது சமஸ்கிருதச் சொல். ஆண்டு என்பது இதற்கு உரிய தமிழ்ச் சொல். இந்தப் பாடத்தில் வந்துள்ள ஒவ்வொரு சமஸ்கிருதச் சொல்லுக்கும் தமிழ்ச் சொல் தெரிந்துகொள்.

10. ஒன்று — பல
கடை — கடைகள்
சாமான் — சாமான்கள்

11. கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய் :

ஒன்று	பல
மலை	மலைகள்
மரம்	
பிராணி	
மனிதன்	
அரசன்	
பறவை	
காய்	



13. கடை வீதி–II

மணி : அதோ பழக்கடை இருக்கிறது, அப்பா!

தகப்பனுர் : பழக்கடைக்குப் பிறகு போகலாம். இதோ ஜவுளிக்கடை இருக்கிறது. முதலில் இங்குப் போவோம்.

மங்களம் : அப்பா! எனக்கு இந்தச் சீட்டி வேண்டும்.

மணி : எனக்கு இந்தச் சட்டைத் துணி வாங்கிக்கொடு, அப்பா!

தகப்பனுர் : ஐயா, கடைக்காரரே! பாவாடைச் சீட்டியில் ஆறு கஜமும், சட்டைத் துணியில் இரண்டரை கஜமும் கொடும்.

மணி : ஏன் அப்பா, துணியைக் கோலால் அளக்கிருர் ?

தகப்பஞர் : அது கஜக்கோல். துணியைக் கஜக்கோலால்தான் அளந்து கொடுப்பார்கள். வாருங்கள், இந்தத் தையல் கடைக்காரரிடம் இத்துணிகளைத் தைக்கக்கொடுப்போம்.

மங்களம் : அப்பா! அது என்ன அப்பா ?

தகப்பஞர் : அதுதான் தையல் மெஷின். தையல்காரரே, இந்தத் துணியில் இவனுக்கு இரண்டு சட்டைகளும், இந்தச் சீட்டியில் இவளுக்கு இரண்டு பாவாடைகளும் தைத்துக் கொடும்.

மங்களம் : ஏன் அப்பா, அவர் மணியின் உடம்பை அளக்கிருர் ? அவர் அளக்கிருரே, அது என்ன அப்பா ?

தகப்பஞர் : அவர் அளவு நாடாவால் அளவு எடுக்கிருர். அளவு எடுத்துத்தான் சட்டை, பாவாடை தைப்பார்கள். இப்பொழுது உன்னையும் அளவு எடுப்பார். சட்டையும் பாவாடையும் அவரவருக்குத் திட்டமாக இருக்க வேண்டும் அல்லவா ? தையல்காரரே, இவற்றிற்கு என்ன கூலி கேட்கிறீர் ? இவற்றை எப்பொழுது தருவீர் ?

தையல்காரர் : சட்டைக்கு 8 அணு. இரண்டு பாவாடைகளுக்கும் 1 ரூபா. நாளை

மாலை வாருங்கள். அதற்குள் தைத்து வைக்கிறேன்.

மங்களம் : அப்பா! இதோ மிட்டாய்க் கடை இருக்கிறதே!



தகப்பனார் : ஆம். வாருங்கள், போவோம்.

இராமன் : அப்பா! ஏன் மிட்டாய்களைக் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்கிறார்?

தகப்பனார் : அவை தின்பண்டங்கள் அல்லவா? அவற்றைத் திறந்து வைத்தால் ஈயும் கொசுவும் மொய்க்கும். தும்பும் தூசியும் படியும். அவற்றைத் தின்றால் நோய் உண்டாகும்.

மங்களம் : அப்பா! இதோ பக்கத்திலேயே பதார்த்தக் கடை இருக்கிறது. அதில் வாழைக்காய், கத்தரிக்காய், அவரைக்காய், புடலங்காய், பாகற்காய், வெண்டைக்காய், கொத்தவரைக்காய், உருளைக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, எலுமிச்சம் பழம், தக்காளிப் பழம், கீரை, கொத்துமல்லி எல்லாம் இருக்கின்றன. இங்குச் சென்று கத்தரிக்காயும் வாழைக்காயும் வாங்கிக்கொள்வோம்.

தகப்பஞர்: இந்தப் பூக்கடையில் பூ வாங்கிக்கொண்டு போவோம். அம்மா, என்னென்ன பூ வைத்திருக்கிருய்?

பூக்கடைக்காரி: மல்லி, முல்லே, சாமந்தி, ரோஜா, தாழம்பூ எல்லாம் இருக்கின்றன. மல்லி முழம் ஓர் அணு. முல்லே ஓர் அணுவுக்கு இரண்டு முழம். சாமந்தி நூறு நான்கு அணு. ரோஜா நூறு பத்து அணு. தாழம்பூ ஒன்று ஓர் அணு.

தகப்பஞர்: மல்லி இரண்டு முழமும் முல்லே இரண்டு முழமும் கொடு.

மணி: பூவைக் கையால் அளக்கிருரே, ஏன் அப்பா?

தகப்பஞர்: பூவைக் கைம் முழத்தால் தான் அளப்பார்கள்.

மங்களம்: அப்பா! இதோ இந்தக் கடையைப் பார்! அப்பா! பாடப் புத்தகங்கள், படப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எல்லாம் இருக்கின்றன.

தகப்பஞர்: ஆம். இது புத்தகக்கடை. இதில் எல்லாப் புத்தகங்களும் இருக்கும்.

மணி : அப்பா! இந்தக் கடையில் செருப்புக்களே அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவே. இது என்ன கடை ?



தகப்பனர் : இது செருப்புக் கடை. இதில் சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் எல்லோருக்கும் திட்டமான செருப்புகள் இருக்கும். அந்தப் பாத்திரக் கடையைப் பாருங்கள். செம்பு, பித்தளே, வெண்கலம், ஈயம் ஆகிய உலோகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்கள் எல்லாம் இருக்கின்றன.

மங்களம் : இது என்ன கடை அப்பா!

தகப்பனர் : இது நகைக் கடை. இதில் பொன் நகைகள், கல் நகைகள் எல்லாம் இருக்கும். கடுக்கன், மோதிரம், கைவளே, கழுத்துச் சங்கிலி, காது கம்மல், மூக்குத்தி இவைகள் எல்லாம் இருக்கின்றன, பார்.



மணி : அப்பா ! இந்த வெள்ளிக் கடை

யைப் பார்த்தீர்களா? வெள்ளி நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன!

மங்களம்: இதோ பொம்மைக் கடை, அப்பா! நம் பாப்பாவுக்கு ஒரு பொம்மை வாங்கிக்கொண்டு போகலாம், வா அப்பா.

தகப்பனர்: இன்று நேரமாகிவிட்டது. அம்மா காத்திருப்பாள். நாளைக்கு அம்மாவை யும் அழைத்து வருவோம்.

மணி: ஆம், அப்பா! எனக்கும் கால் வலிக் கிறது. வாருங்கள், வீட்டுக்குத் திரும்புவோம்.

சீட்டி	தையல்காரர்	முழம்
கஜம்	நாடா	உலோகங்கள்
கஜக்கோல்	தின்பண்டம்	பதார்த்தம்

விடை சொல்:

1. துணியை எதனுல் அளப்பார்கள்?
2. முகத்தல் அளவு என்பது என்ன?
3. வாழைப்பழம், வெற்றிலை—இவற்றை எவ்வாறு கணக்கிடுவார்கள்?

பயிற்சி:

1. உங்கள் ஊர்க் கடைவீதியில் உள்ள கடைகளைச் சொல்.
2. உங்கள் ஊர்ப் பழக்கடையில் கிடைக்கும் பழங் களைச் சொல்.
3. உங்கள் ஊர்ப் பதார்த்தக் கடையில் விற்கும் காய்களைச் சொல்.
4. உங்கள் ஊர்ப் பூக்கடையில் வாங்கக்கூடிய பூக் களைச் சொல்.

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி:

சர்க்கரையைத் தராசில் —— கொடுப்பார்கள்.
பருப்பைப் படியால் —— அளப்பார்கள்.
சட்டைத் துணியை —— அளப்பார்கள்.
பூவை —— அளப்பார்கள்.
வெற்றிலையை —— க் கொடுப்பார்கள்.

6. புடலங்காய், பாகற்காய், தாழம்பூ, பாடப்புத்தகம்—இவற்றைப் பிரித்து எழுது.

7. புத்தகம்+கடை, ஜனம்+கூட்டம்—இவற்றைச் சேர்த்து எழுது.

8. திண்பண்டங்களைத் திறந்து வைத்தால் ஈயும் கொசுவும் மொய்க்கும்—இந்த வாக்கியத்தை தின்பண்டங்களை மூடி வைத்தால் ஈயும் கொசுவும் மொய்க்காது—என்று மாற்றினாலும் பொருள் மாறுபடாது. இவ்வாறே பின் வரும் வாக்கியத்தை மாற்றிச் சொல்:

தண்ணீரைக் காய்ச்சாமல் குடித்தால் நோய் வரும்.

9. கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்:

ஒன்று	பல
குழந்தை	குழந்தைகள்
	விலங்குகள்
	செடிகள்
	பழங்கள்
	சிறுவர்
	கிழவர்
	திலங்கள்

10. மல்லி—வள்ளி, வாழை—வாளை—இவற்றை உச்சரித்து வேறுபாடு தெரிந்துகொள்.

11. பழம்—கனி, பூ—மலர், நகை—ஆபரணம்—இவை ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள். இவற்றைக் குறித்துக்கொள்.

12. ஜவுளிக் கடை, நகைக் கடை, பதார்த்தக் கடை—இவற்றிற்கு வேறு பெயர்கள் சொல்.

14. பாரியும் ஔவையும்

(மவுன வாசிப்பு)

தமிழ் நாட்டில் பறம்பு நாடு என்று ஒரு சிறிய நாடு இருந்தது. அதைப் பாரி என்னும் வள்ளல் ஆண்டு வந்தான். அவன் கொடையில் சிறந்தவன். அவன் எந்தப் பொருளையும் தனக்கு வேண்டும் என்று நினைத்ததில்லை; யார் எதைக் கேட்டாலும் தடை சொல்லாமல் மகிழ்ச்சியோடு கொடுத்து வந்தான். அவனை அடைந்தவர்கள் விரும்பி வந்த பொருளைப் பெறுமல் திரும்பியதே இல்லை.

பாரி தமிழ்மொழியில் சிறந்த புலவருகைவும்

இருந்தான். அவன் தமிழ்ப் புலவர்களை அன்போடு வரவேற்று உபசரித்தான்; தமிழ் நூல்களைப் பற்றி அவர்களோடு பேசி மகிழ்ந்தான்; அவர்களுடைய பாடல்களைக் கேட்டுக் களித்தான்; அவர்களுக்கு உணவும் உடையும் உதவினான்; பொன்னும் மணியும் கொடுத்தான்; தேரும் ஊரும் வழங்கினான். புலவர்கள் அவனைப் பலவாறு புகழ்ந்து பாடினார்கள்.

பாரியின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. ஒளவையார் அவன் புகழைக் கேள்விப்பட்டார்; அவனைப் பாடிப் பரிசுபெற விரும்பினார். அவர் பறம்பு நாட்டிற்கு வந்தார். பாரி ஒளவையாரைப் பற்றி முன்னரே கேள்விப் பட்டிருந்தான். அவன் அவரை அன்போடு வரவேற்றான்; அவரைத் தன் அரண்மனையிலேயே இருக்கும்படி வேண்டிக் கொண்டான்.

ஒளவையார் புதுப்புதுப் பாட்டுகளைப் பாடிப் பாரியை மகிழ்வித்தார். பாரியும் விதம் விதமாக விருந்து செய்து அவரை உபசரித்தான். இருவரும் சிறந்த நண்பர்களாக ஆனார்கள். பாரிக்கு ஒளவையாரைப் பிரிய மனம் இல்லை. அவன் அவரைத் தன் அரண்மனையிலேயே நிலையாக வைத்துக் கொள்ள விரும்பினான்; பரிசு கொடுத்தால் அவர் போய்விடுவார் என்று எண்ணினான்; அதனால் அவருக்குப் பரிசு கொடுக்காமல் காலம் கடத்தி வந்தான்.

ஔவையார் பலநாள்கள் பொறுத்துப் பார்த்தார். பாரி பரிசு கொடுப்பதாக இல்லை. ஔவையாருக்கு நண்பர்கள் பலர் இருந்தனர். எத்தனையோ அரசர்களும் வள்ளல்களும் ஒவ்வொரு நாளும் அவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவர் ஓர் இடத்திலேயே நிலையாக இருக்க முடியுமா? அவர் வேறு ஊருக்குச் செல்ல எண்ணினார்.

அவர் ஒரு நாள் தம் எண்ணத்தைப் பாரிக்கு அறிவித்துப் பரிசு வேண்டினார். அவன் அவரை இன்னும் சில நாள்கள் அங்கேயே தங்கி யிருக்கும்படி வேண்டிக்கொண்டான். ஔவையார் அதற்கு இணங்கவில்லை. ஆகவே பாரி குறைமனத்தோடு அவரை அனுப்பச் சம் மதித்தான். அவன் விலையுயர்ந்த பல பரிசுகளை வழங்கி அவரை வழியனுப்பினான். ஔவையார் அவனை வாழ்த்தி விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

ஔவையாரின் பிரிவால் பாரி வருந்தினான்; எப்படியாவது மீண்டும் அவரைத் தன்னிடம் வரும்படிச் செய்யவேண்டும் என்று எண்ணி னான். உடனே அவன் காவலாளர்களை அழைத் தான்; திருடர்கள் போலச் சென்று ஔவை யாரை வழிமறித்து, அவர் கொண்டு செல்லும் பொருள்களைப் பறித்துக்கொண்டு வரும்படி அவர்களை ஏவினான்

காவலாளர்கள் கூட்டமாக ஔவையாரைத் தொடர்ந்து சென்றனர். அவர் பறம்பு நாட்டின் எல்லையைக் கடப்பதற்குள், அவர்கள் அவரை வழிமடக்கி அவரிடம் இருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு மறைந்து விட்டனர். பொருளைப் பறிகொடுத்த ஔவையார் மிக்க வருத்தத்தோடு பாரியிடம் திரும்பி வந்தார். அவர் அவன் நாட்டு எல்லையில் தனக்கு நேர்ந்த கொடுமையைக் கூறி அவன் ஆட்சியை இகழ்ந்தார்.

பாரி ஔவையாரின் கோபத்தைக் கண்டு அஞ்சினான். அவன் அவரிடம் உண்மையை உரைத்தான்; முன்பு கொடுத்ததைப் போலப் பல மடங்கு அதிகமான பரிசுகளைக் கொடுத்து அவரைச் சமாதானப்படுத்தினான்.

ஔவையார் பாரியின் அன்பை அறிந்து வியந்தார். அவர் அவன் விரும்பியபடியே பல நாள்கள் அவனோடு தங்கியிருந்தார். அவன் அவரோடு தமிழ் நூல்களை ஆராய்ந்துகொண்டு இன்பமாக வாழ்ந்து வந்தான்.

தமிழ் நாடு	விருந்து	பறம்பு நாடு
நண்பர்கள்	பாரி	வள்ளல்கள்
கொடை	காவலாளர்	புலவன்
புகழ்	ஆட்சி	ஔவையார்
பரிசு	வழங்கினான்	இணங்கவில்லை
எல்லை	சமாதானம்	திருடர்

அருஞ்சொற்பொருள் : வள்ளல் - கொடையாளி. களித்தான் - சந்தோஷித்தான். வழங்கினன் - கொடுத்தான். பரிசு - வெகுமதி. நண்பர் - சிநேகிதர். வழிமறித்து - வழி மடக்கி. ஏவினன் - அனுப்பினன். கடப்பதற்குள் - தாண்டுவதற்குள்.

விடை சொல் :

1. பாரி என்பவன் யார்?
2. பாரி புலவர்களை எவ்வாறு உபசரித்தான்?
3. பாரி ஏன் ஔவையாருக்குப் பரிசு கொடாமல் காலம் கடத்தினன்?
4. பாரி ஔவையாரைத் தன்னிடம் திரும்பி வரச் செய்ய என்ன செய்தான்?
5. பொருளைப் பறிகொடுத்த ஔவையார் என்ன செய்தார்?
6. பாரி ஔவையாரை எவ்வாறு சமாதானப் படுத்தினன்?

பயிற்சி :

1. இந்தக் கதையை மவுனமாக வாசி.
2. இதைப் பாரி சொல்வது போலச் சொல்.
3. இதை ஔவையார் சொல்வது போலச் சொல்.
4. இதைக் காவலாளர் சொல்வது போலச் சொல்.
5. ஔவையாரைப் பற்றிய வேறுகதை ஒன்று சொல்.
6. பொருள் சொல்: கொடை, பரிசு, வள்ளல்கள், வியந்தார்.
7. ஒவ்வொரு சொல்லுக்கும் அதே பொருள் உள்ள வேறு சொல் சொல்.

வழங்கினன், இணங்கவில்லை, இகழ்ந்தார், களித்தான்.

8. வரவேற்று, விதம் விதமாக, விலையுயர்ந்த— இவற்றை வாக்கியங்களில் வைத்துச் சொல்.

9. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றி அமைத்து வாசி.

பாரி——உணவும் உடையும் உதவினன். (புலவர்)
—— பகை பூனை. (கிளி)
—— நண்பர்கள் பலர். (ஔவையார்),
—— கூலி கொடு. (வேலை)

10. கடை இருக்கிறது. கடைகள் இருக்கின்றன.

இவ்வாக்கியங்களில் உள்ள சொற்களில் கடை என்னும் பெயர்ச்சொல் ஒன்றைக் குறிக்கிறது. இருக்கிறது என்னும் வினைச்சொல்லும் ஒன்றைக் குறிக்கிறது. கடைகள் என்னும் பெயர்ச்சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிக்கிறது. இருக்கின்றன என்பதும் ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிக்கின்றது. ஒன்றைக் குறிப்பதற்கு ஒருமை என்பது பெயர். ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.

ஒருமை	பன்மை
நாடு	நாடுகள்
இருந்தது	இருந்தன

11. இந்தப் பாடத்தின் முதல் பாராவில் உள்ள ஒருமைப் பெயர்ச்சொற்களைத் தெரிந்து சொல்.

12. இரண்டாவது பாராவில் உள்ள பன்மைப் பெயர்ச்சொற்களைத் தெரிந்து சொல்.

13. மூன்றாவது பாராவில் உள்ள ஒருமை வினைச்சொற்களைத் தெரிந்து சொல்.

14. நான்காவது பாராவில் உள்ள பன்மை வினைச்சொற்களைத் தெரிந்து சொல்.

15. பன்மைச் சொற்கள் சொல்: மலை, பாடல், புலவர், விரும்பினன், இருந்தது.

16. ஒருமைச் சொற்கள் சொல்:—நூல்கள், பாடினர்கள், நான்கள், பரிசுகள், சென்றனர்.



15. உல்லாசப் பிரயாணம்–I

வாகனங்கள்

ஷாபி : கந்தா! இன்று ஞாயிற்றுக் கிழமை, பாடசாலை விடுமுறை அல்லவா? வா, வெளியில் சென்று உலாவி வருவோம்.

கந்தன் : நானும் அதையே நினைத்தேன். சாலை வழியே நடந்து, ஆறு வரையில் சென்று வருவோம். காலையில் நடந்தால் காலுக்குப் பலமாம். வரும்போது ஆற்றிலேயே குளித்துவிட்டு வருவோம்.

ஷாபி : நாம் இந்தப் பக்கம் போகலாகாது. இது நமக்கு இடக்கைப் பக்கம்

அல்லவா? சாலையில் நடந்து போகும்போது வலக்கைப் பக்கமே போகவேண்டும் என்று ஆசிரியர் நேற்றுக்கூடச் சொன்னார். நாம் அந்தப் பக்கம் போய்விடலாம், வா.

கந்தன் : ஏன் அப்படிப் போகவேண்டும், தெரியுமா? வண்டிகள் சாலையில் இடப்பக்கம்தான் போக வேண்டும். நடப்பவர்கள் இடப் பக்கம் போனால் வண்டிகள் அவர்களுக்குப் பின்னால் வரும். அவர்களுக்கு வண்டி வருவது தெரியாது. அதனால் அவர்கள் வண்டியில் அகப்பட்டுக் கொண்டாலும் கொள்ளலாம். வலப்பக்கம் போனால் வண்டிகள் எதிரே வரும். வண்டி வருவது நமக்குத் தெரியும். வண்டி வரும்போது நாம் ஒதுங்கிக் கொள்ளலாம்.

ஷாபி : எங்கள் ஆசிரியரும் அப்படித் தான் சொன்னார். அதோ குதிரைமீது வருகிறாரே, அவர் யார்? குதிரை அதிக வேகமாக வருகிறதே!

கந்தன் : அவர் நம் ஊர் கிராம அதிகாரி. அவர் எப்பொழுதும் வேகமாகத்தான் சவாரி செய்வார். அந்தக் கட்டை வண்டிக்காரனைப் பார். வலப்பக்கமாக வண்டி ஓட்டி வருகிறான்.

ஷாபி : அந்தக் கூண்டு வண்டியைப் பார். வண்டிக்காரன் நெஞ்சில் ஈரமில்லாதவனாக இருக்கிறான். சப்பை மாடுகளைக் கட்டிச் சாட்டையால் அடிக்கிறான்.

கந்தன் : அதோ வரும் ஒற்றை மாட்டு வண்டியைக் கவனி. அதில் பூட்டப்பட்டு இருக்கும் காளை எங்களுடையது.



ஷாபி : அதோ எங்கள் குதிரை வண்டி வருகிறது. அதில் எங்கள் தந்தையார் வருவார். எங்கள் குதிரை வேகமாக ஓடும். அதனிடம் எனக்கு அதிக அன்பு உண்டு.





கந்தன் : அது ஏன் இப்பொழுது மெதுவாக வருகிறது?

ஷாபி : அதன் காலில் லாடம் பெயர்ந்து விட்டது. அது லாடம் இருந்தால் இப்படியா வரும்?

கந்தன் : அந்தச் சைக்கிள் காரனைப் பார், எவ்வளவு வேகமாக வருகிறான்! மணி அடிக்காமல் வருகிறானே! நல்ல காலம்! அந்தக் குழந்தை தப்பியது. சற்றுத் தவறி இருந்தால் குழந்தை

—

சைக்கிளில் அகப்பட்டுக் கொண்டு இறந்து போய் இருக்கும். தாய்மார்கள் குழந்தைகளைக் கவனிப்பதே இல்லை. அவர்கள் குழந்தைகளைச் சாலையில் விட்டு விட்டு வீட்டிற்குள் இருக்கிருர்கள்.

ஷாபி : கந்தா! அது என்ன கூட்டம்?



கந்தன் : அங்கு ஒரு மோட்டார் கார் வந்திருக்கிறது. அதைப் பார்க்க ஜனங்கள் கூடி இருக்கிருர்கள். வேறு ஒன்றும் இல்லை.

ஷாபி : அங்கு மோட்டார் கார் ஏது? யார் வந்திருக்கிருர்கள்?

கந்தன் : யாரோ ஒரு உத்தியோகஸ்தர் வந்திருக்கிருர். அவர் கொண்டு வந்திருக்கிருராம்.

ஷாபி : நான் போன மாதம் என் தகப்பனுரோடு சென்னைப் பட்டினத்திற்குப் போயிருந்தேன். போகும் போது ரயில் வண்டியில் போனேம். வரும் போது மோட்டார் பஸ்ஸில் வந்தோம். மோட்டார் காரை விட மோட்டார் பஸ் மிகவும் பெரியது. அதில் இருபது மனிதர்களுக்கு மேலும் அமரலாம். நான் சென்னைப்பட்டினத்தில்



டிராம் வண்டியையும் ரிக்ஷா வண்டியையும் பார்த்தேன். ரிக்ஷா வண்டியை மனிதனே இழுக்கிருன். மோட்டார் பஸ்ஸைவிட டிராம் வண்டி பெரியது. டிராம் வண்டியைவிட ரயில் வண்டி பல மடங்கு பெரியது. நீ அவற்றை யெல்லாம் பார்த்திருக்கிருயா ?





கந்தன் : நான் மோட்டார் பஸ்ஸையும் ரயில் வண்டியையும் பார்த்திருக்கிறேன். ரிக்ஷா வண்டியையும் டிராம் வண்டியையும் பார்த்தது இல்லை. நான் அடுத்த மாதம் என் மாமாவோடு சென்னைக்குப் போவேன். அப் பொழுது பார்ப்பேன்.

ஷாபி : நான் எல்லா வண்டிகளையும் பார்த்திருக்கிறேன். நான் சென்னைக்குப் போயிருந்தபோது கப்பலையும் ஆகாய விமா னத்தையும்கூடப் பார்த்தேன். நீயும் அவற் றைப் பார்க்க வேண்டும்.

சாலை	மோட்டார்	சவாரி
வேகம்	கப்பல்	சாட்டை
மெது	டிராம்	காளை
ரயில்	சென்னை	ஈரம்

அருஞ்சொற்பொருள் : வதைசெய்கிறான் - துன்பப் படுத்துகிறான். ஈரம் - கருணை.

விடைசொல் :

1. உங்கள் ஊரில் உள்ள வாகனங்கள் யாவை?
2. நீ பிரயாணம் செய்துள்ள வாகனங்களைச் சொல்.
3. உங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள இரயில் நிலையம் எது?
4. இரயிலில் பிரயாணம் செய்வோர் என்ன செய்ய வேண்டும்?
5. டிராம் வண்டி எதனால் ஓடுகிறது?
6. மோட்டார் எதனால் செல்லுகிறது?
7. கடலைக் கடக்க உதவுவது யாது?
8. ஆகாயத்தில் பறந்து செல்லும் வாகனம் யாது?

பயிற்சி :

1. சாலையில் எந்தப் பக்கமாக நடந்து செல்வாய், சொல்.
2. சைக்கிளைச் செலுத்த என்ன செய்வாய், சொல்.
3. டிராம், இரயில்—இவை எதன்மீது செல்லுகின்றன, சொல்.
4. காளை—காலை, இவற்றை உச்சரித்து வேற்றுமை தெரிந்துகொள்.
5 கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி.

சாலையில் நடந்து செல்வோர் ———— போக வேண்டும்.

சாலையில் வண்டிகள் —— போகும்.

மோட்டார் மிக —— ஓடும்.

இரயிலில் —— பிரயாணம் செய்யலாம்.

கப்பல் —— செல்லும்.

—— ஆகாயத்தில் செல்லும்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமைப் பெயர்ச் சொற்களையும் பன்மைப் பெயர்ச் சொற்களையும் சொல் :

குதிரை வருகிறது.

குறவர்கள் கொடியவர்கள்.

தாய்மார்கள் குழந்தைகளைக் கவனிப்பதே இல்லை.

பாரி புலவர்களுக்குத் தேரும் ஊரும் வழங்கினான்.

மரத்தின் கீழ் மக்கள் கூட்டமாக இருக்கிறார்கள்.

7. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி வைத்து வாசி :

மோட்டார் —— ஓடுகிறது. (பெட்ரோல்)

டிராம் வண்டி —— ஓடுகிறது. (மின்சாரம்)

இரயில் வண்டி —— ஓடுகிறது. (நீராவி)



16. உல்லாசப் பிரயாணம்–II

தாவரங்கள்

ஷாபி : இந்தத் தோட்டத்தைப் பார். ரோஜாச் செடிகள் அழகாகப் பூத்து இருக்கின்றன. ரோஜாச் செடிகள் பெரியவை. ரோஜாச் செடியில் முள் உண்டு. ரோஜாப் பூ மிகவும் அழகானது. ரோஜா காலையில் மலரும். ரோஜா மலர் அதிக வாசனை உள்ளது. ரோஜா மலர் பெரியது. ரோஜா மாலை விலை அதிகம்.

கந்தன் : பக்கத்தில் சாமந்திச் செடியும் இருக்கிறது. சாமந்திச் செடி சிறியது. அதில் முள் இல்லை. சாமந்திப் பூ மஞ்சள் நிறம்

உடையது. சாமந்திப் பூ ரோஜாப் பூவை விடச் சிறியது. சாமந்தி மலரும் அழகானதே. சாமந்தியும் காலையில் மலரும்.

ஷாபி: அதோ பந்தலில் புடலங்கொடி படர்ந்து இருக்கிறது. புடலங்கொடியைப் பார். அக்கொடி பருமனாகவும், சொர சொரப்பாகவும் இருக்கிறது. புடல் இலை மூன்று கூர்களாக இருக்கிறது. அதைத் தொட்டால் வழுவழுப்பாக இருக்கும். புடலம் பூ வெண்மை நிறமாக இருக்கும். புடலங்காய் நீளமானது. சில வகைப் புடலங்காய்களில் கோடுகள் இருக்கும். புடலங்காயைக் கறி சமைப்பார்கள்.

கந்தன்: இந்தப் பாகற்கொடியைப் பார். இது வேலியில் படர்ந்து இருக்கிறது. பாகற் கொடி சிறுமனாக உள்ளது. பாகல் இலை பல கூர்களாக இருப்பதைப் பார். பாகற் பூ புடலம் பூவை விடச் சிறியது. பாகற்காய் குட்டையானது. அதன் நிறம் பசுமை ஆகும். அது கைப்புச் சுவை உள்ளது.

ஷாபி: கந்தா! நீ எங்கள் வாழைத் தோட்டத்தைப் பார்த்தது இல்லை அல்லவா? வா, பார்த்துவிட்டுப் போகலாம். வாழைக்கு விதை இல்லை; கீழ்க் கன்று உண்டு. அந்த மரத்தின் கீழ்க் கன்றுகள் அடர்த்தியாக முளைத்து இருக்கின்றன. இந்த மரம் செழிப்பாக வளர்ந்து இருக்கிறது. வாழைமரம் கிளை இல்

லாத மரம். இந்த மரம் குலை தள்ளி இருக்கிறது. குலையில் காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கின்றன. குலையின் நுனியில் பூ இருக்கிறது. அடி மரத்திற்கு உள்ளே தண்டு இருக்கும். வாழையின் காய், பூ, தண்டு இவை கறி சமைக்க உதவும். வாழைப் பழம் இனிப்பாக இருக்கும். வாழை இலை அகலமானது. அதில் உணவு வைத்து உண்ணலாம். வாழைமரத்தைக் கல்யாணப் பந்தலில் கட்டுவார்கள்.

கந்தன் : எங்கள் தென்னந் தோப்பைப் பார். தென்னை மரங்கள் வரிசை வரிசையாக இருக்கின்றன. வாழை மரத்தைப் போலவே தென்னை மரத்திற்கும் கிளை இல்லை. தென்னை மரம் உயரமாக வளர்ந்து உள்ளது. வாழை மரம் அவ்வளவு உயரம் வளராது. தென்னை மரத்தின் உச்சியில் மட்டைகள் விரிந்து இருக்கின்றன. ஒவ்வொரு மரத்திலும் காய்கள் குலை குலையாக இருக்கின்றன. வாழைக்காய் நீளம்; தேங்காய் உருண்டை வடிவம் உள்ளது. முற்றாத தேங்காய்க்கு இளநீர் என்பது பெயர். இளநீர் இனிப்பாக இருக்கும். முற்றின தேங்காய் கொப்பரை எனப்படும். கொப்பரையை ஆடி எண்ணெய் எடுப்பார்கள். தென்னை ஓலையைக் கீற்றாக முடைவார்கள். தென்னங் கீற்று கூரை வேயவும், பந்தல் போடவும் உதவும். முற்றின தேங்காயை நட்டால் கன்று முளைக்கும்.

ஷாபி : அதோ பார், எங்கள் மாமா வீட்டு மாந்தோப்பு. மாமரத்திற்குக் கிளைகள் உண்டு. மாங்கிளைகள் உறுதியானவை. இந்த மாமரத்தில் பல கிளைகள் இருக்கின்றன. அடிமரத்தைப் பார். அது பருமனாகவும் கரடு முரடாகவும் இருக்கிறது. மாமரத்தின்மேல் பட்டை மூடிக்கொண்டு இருக்கிறது. மாம்பட்டை சொரசொரப்பானது. மாங்கிளையில் கொம்புகள் இருக்கின்றன. மாவிலை நீளமானது. இந்த மரத்தில் காய்கள் கொத்துக் கொத்தாய் இருக்கின்றன, பார். முற்றாத மாங்காயை மாவடு என்பார்கள். மாங்காயை ஊறுகாய் போடலாம். மாம்பழம் இனிப்பாக இருக்கும். மாம்பழத்தினுள் கொட்டை உண்டு. மாங்கொட்டை துவர்ப்புச் சுவை உள்ளது. மாங்கொட்டையை நட்டால் செடி முளைக்கும். மாவிலையைக் கோத்துத் தோரணம் கட்டுவார்கள்.

கந்தன் : இந்த ஆல மரத்தைப் பார். ஆலமரம் மாமரத்தை விடப் பெரியது. அடிமரத்தைப் பார், எவ்வளவு பருமனாக இருக்கிறது! ஆலங்கிளைகள் அதிக பருமனும் நீளமும் உள்ளவை. கிளைகளைக் கவனித்தாயா? கிளைகளிலிருந்து வீழ்துகள் இறங்கி இருக்கின்றன. ஆலமரத்திற்கு வீழ்து உண்டு; மற்ற மரங்களுக்கு வீழ்து இல்லை. ஆலிலை

குட்டையானது. மாவிலையை விட ஆலிலை அகலம். ஆலங்காய் மாங்காயைக் காட்டிலும் மிகவும் சிறியது. ஆலமரம் பால் உள்ள மரம். ஆலங்கிளையை நட்டாலும் அது தளிர்த்து, வளரும். ஆலிலையைத் தைத்து உண்கலமாக உபயோகிப்பார்கள்.

ஷாபி: அந்தப் புல்வெளியைப் பார். பசும்புல் அடர்த்தியாகப் படர்ந்து இருக்கிறது. அதில் சிறு சிறு பூண்டுகளும் முளைத்திருக்கின்றன.

கந்தன்: ஷாபி! அந்தப் புதரின் அருகில் போகாதே. அது முள்புதர். அதில் விஷப் பூச்சிகள் மறைந்திருக்கும்.

சாமந்தி	பந்தல்	பட்டை
பருமன்	உருண்டை	ஊறுகாய்
சொரசொரப்பு	கொப்பரை	தோரணம்
வழுவழுப்பு	எண்ணெய்	வீழ்து
சிறுமன்	கீற்று	புதர்
குட்டை	இளநீர்	மாவடு

அருஞ்சொற்பொருள்: சுவை - ருசி. தளிர்த்து - தளிர் விட்டு. உண்கலம் - சாப்பிடும் பாத்திரம்.

விடைசொல்:

1. உங்கள் தோட்டத்தில் உள்ள செடி கொடிகள் யாவை?
2. வாழை மரத்தின் உபயோகங்கள் யாவை?
3. தென்னை மரம் எவ்வெவ்வாறு பயன்படும்?
4. கிளை இல்லாத மரங்கள் யாவை?
5. வீழ்து உள்ள மரம் எது?

பயிற்சி :

1. கறி—கரி, அறம்—அரம், உறி—உரி, இறை—இரை, பொறி—பொரி—இவற்றை உச்சரித்து வேறுபாட்டைத் தெரிந்து கொள்.

2. கறி - பதார்த்தம், கரி - அடுப்புக்கரி, அறம் - தருமம், அரம் - கருமான் அராவ உபயோகிக்கும் கருவி. இப்படியே மற்றவைகளின் பொருள் வேறுபாட்டையும் தெரிந்து கொள்.

3. பூ, மலர்—இவை இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள். இவ்வாறு ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களைச் சொல்.

4. எதிர்ப்பதம் சொல் : இல்லை, மலரும், சொர சொரப்பு, நீளம், பருமன்.

5. இனிப்பு, துவர்ப்பு, கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு—இவை அறுசுவைகள். இவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் சொல்.

6. கோடிட்ட இடத்தில் தக்க சொற்களை வைத்து வாசி :

தென்னை மரத்திற்கு —— இல்லை. (கிளை, விதை)
ஆலமரத்திற்கு வீழ்து ——. (இல்லை, உண்டு)
பாகற்காய் —— சுவை உள்ளது. (இனிப்பு, கைப்பு, புளிப்பு)
ஆலமரம் பால் —— மரம். (உள்ள, இல்லாத)
முற்றாத தேங்காய் —— எனப்படும். (இளநீர், கொப்பரை)

7. வாக்கியங்களில் வைத்துச் சொல் :

சொரசொரப்பாக, வழுவழுப்பாக, செழிப்பாக, அடர்த்தியாக.

8. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமை வினைச் சொற்களையும், பன்மை வினைச் சொற்களையும் சொல்.

குதிரை வருகிறது.
குதிரைகள் வருகின்றன.
உழவன் உழுகிறான்.
தொழிலாளிகள் வசிக்கிறார்கள்.
மீன்கள் நீந்துகின்றன.
விதை முளைத்தது.
மலர்கள் மலர்ந்தன.
சூரியன் மறைந்தது.

17. உல்லாசப் பிரயாணம்–III

சுத்தம்

கந்தன் : ஷாபி! குளத்தைப் பார்த்து விட்டுப் போகலாம், வா.

ஷாபி : அதோ பார், குடிநீர்க் குளத்தில் எவனோ குளிக்கிறானே! அதோ ஒரு பெண் பாத்திரம் கழுவுகிறாள். ஒருவன் மாடுகளைக் குளத்தில் இறக்கிவிட்டு, துணி தோய்க்கிறான். இது என்ன அக்கிரமம்! குடிக்கிற நீரை இப்படியா அசுத்தம் செய்வார்கள்? அதோ ஒருவன் தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறான், பார்.

கந்தன் : இதோ போர்டுகூடப் போட்டிருக்கிறதே. 'இந்தக் குளத்தை யாரும் எப்படியும் அசுத்தம் செய்யக் கூடாது. செய்தால் தண்டனை விதிக்கப்படும்' என்று அதில் எழுதி இருக்கிறது. இதைக் கவனியாமல் இவர்கள் இப்படி அக்கிரமம் செய்கிருர்களே. இவர்களும் இந்த நீரைத்தானே குடிக்கிருர்கள்!

ஷாபி : குடிக்கும் நீரை அசுத்தம் செய்வதும், சாக்கடை நீரைத் தெருவில் விடுவதும், நடைவழியில் எச்சில் துப்புவதும், திறந்த வெளிகளில் குப்பை கொட்டுவதும் இவர்களுக்கு வழக்கமாகப் போய்விட்டன. இவர்கள் என்ன சொன்ஞலும் கேட்பதில்லே. இவர்கள் பெயர்களைக் குறித்துக் கொள். கிராமாதிகாரியிடம் சொல்லி விசாரிக்கச் செய்வோம்.

கந்தன் : அதோ ஆறு தெரிகிறது பார். நாம் மேட்டில் நிற்கிரேும். ஆறு பள்ளத்தில் ஓடுகிறது. ஆற்றின் நடுவில் நீரோடை இருக்கிறது: சென்று அதில் குளிப்போம், வா.

ஷாபி : இங்கும் வண்ஞன் துணி தோய்க்கிருனே ! எங்குப் போஞலும் இந்தத் தொல்லேயா ! சிறிது தூரம் மேலே போய்க் குளிப்போம்.

கந்தன் : இந்த நீரோடையைப் பார். மிகவும் தெளிவான நீர் ஓடுகிறது. நீர் மிகவும்

குளிர்ச்சியாக இருக்கிறது. அதில் எத்தனை மீன்கள் நீந்துகின்றன! அவை எவ்வளவு அழகாகத் துள்ளுகின்றன! ஷாபி! உனக்கு நீந்தத் தெரியுமோ?

ஷாபி : நன்ருகத் தெரியும். என் தந்தையார் போன வருஷமே எனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்துவிட்டார். கிணறு குள மாளுல் நீந்தலாம். இங்கு ஆழம் இல்லையே. நீந்துவது உடம்புக்கு மிகவும் நல்லது.

கந்தன் : நமக்காளுல் வேறு ஒருவர் நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த மீன் குஞ்சுகளுக்கு யார் நீந்தக் கற்றுக் கொடுத்தார்கள்? சின்னஞ் சிறு குஞ்சுகள் எப்படி நீந்துகின்றன, பார்!

ஷாபி : ஆம். அது ஆச்சரியமாகவே இருக்கிறது. நமக்கு நேரம் ஆகிறது. துணி தோய்த்துக்கொள். குளித்துவிட்டுப் போகலாம்.

கந்தன் : நீரின் அடியில் மணல் இருக்கிறது, பார். இந்த மணலும் மீனும்தான் ஆற்று நீரைச் சுத்தம் செய்கின்றன. மீன் நீரில் உள்ள அழுக்கைத் தின்றுவிடுகிறது. மணல் அசுத்தங்களை அடக்கி நீரைத் தெளிய வைக்கிறது. ஆளுல் ஆற்று நீரையும் காய்ச்சிக் குடிப்பதே நலம்.

ஷாபி : இந்த மீன்கள் உடம்பில் உள்ள அழுக்கைக் கொத்தித் தின்கின்றன.

கந்தன் : இப்பொழுது வேறு வழியாகப் போவோம். ஆற்றின் இரண்டு கரைகளையும் பார். மரங்கள் தழைத்துக் காற்றில் அசைந்து கொண்டு இருக்கின்றன. இந்தப் பனஞ் சாலையில் உள்ள மரங்களை எண்ணிச் சொல்.

ஷாபி : ஒரு வரிசைக்குப் பத்து மரங்கள் இருக்கின்றன. அப்படிப் பத்து வரிசைகள் இருக்கின்றன. ஆகமொத்தம் நூறு மரங்கள் உள்ளன.

கந்தன் : சரியாகவே சொன்னாய். குளிக்கவே பசி அதிகமாகிறது. அதோ மிட்டாய்க்கடை இருக்கிறது. அங்குச் சென்று ஏதாவது வாங்கிச் சாப்பிடலாமா ?

ஷாபி : எனக்கும் பசியாகவே இருக்கிறது. ஆனால் அங்கு எல்லாப் பண்டங்களையும் திறந்து வைத்து இருக்கிறார்கள். அவற்றில் மண்ணும் தூசும் படிந்து இருக்கின்றன ; கொசுவும் ஈயும் மொய்த்துக்கொண்டு இருக்கின்றன. அவற்றைச் சாப்பிட்டால் தேக ஆரோக்கியம் கெடும். அதோ பழங்கள் இருக்கின்றன ! இளநீரும் இருக்கிறது. அங்குச் சென்று நல்ல பழங்கள் வாங்கிச் சாப்பிடலாம். இளநீர் வாங்கிக் குடிக்கலாம். அவை இரண்டும் உடம்புக்கு நல்லவை.

கந்தன் : இந்தத் தெருக்களைப் பார் ; மேடும் பள்ளமுமாக இருக்கின்றன. எங்கும்

ஒரே அசுத்தம். குப்பையும் கூளமும் நிறைந்து கிடக்கின்றன.

ஷாபி : ஆம். மிகவும் கேவலமாக இருக்கின்றன. தெருக்களை இப்படியா வைத்துக் கொண்டிருப்பார்கள்! நான் எங்கள் மாமா ஊருக்குப் போயிருந்தேன். அவ்வூரில் தெருக்கள் அழகாக இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டாரும் தங்கள் தங்கள் தெருக்களைச் சமப்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் தினந்தோறும் தெருவைச் சுத்தம் செய்கிறார்கள். அசுத்தத்தையே அங்குப் பார்க்க முடியாது. தெருக்களில் விளக்குகள் போட்டு இருக்கிறார்கள்.

கந்தன் : அப்படிச் செய்தால்தான் கிராமம் அழகாக இருக்கும். ஜனங்கள் சுகமாக வாழலாம். நாம் இதைப் பஞ்சாயத்துச் சபையாரிடம் சொல்லுவோம். விரைவில் இவற்றைச் சீர்திருத்தும்படி வேண்டிக் கொள்வோம்.

ஷாபி : நாம் இன்று பல விஷயங்களை அறிந்தோம். வாகனங்கள், தாவரங்கள், சுத்தம் இவற்றின் உண்மைகளை நேரில் கண்டு தெரிந்து கொண்டோம். எவ்வளவு புத்தகம் படித்தாலும் இவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமா? காலையில் இவ்வளவு தூரம் நடந்த தால் கைகால்களும் சுறுசுறுப்பாக இருக்

கின்றன. ஒவ்வொரு விடுமுறை நாளிலும் நாம் இப்படியே உல்லாசமாகச் செல்வோம்.

தண்டனை	பள்ளம்	குப்பை
அக்கிரமம்	தொல்லை	கூளம்
சாக்கடை	ஆச்சரியம்	சுறுசுறுப்பு
நடைவழி	பனஞ்சாலை	விஷயங்கள்
மேடு	ஆரோக்கியம்	சீர்திருத்தும்படி

விடை சொல் :

1. குடிக்கிற நீரை ஏன் அசுத்தம் செய்யக் கூடாது?
2. ஆற்று நீரை எவை சுத்தம் செய்கின்றன?
3. தின்பண்டங்களை ஏன் திறந்து வைக்கக்கூடாது?
4. தெருக்களை எப்படி வைத்திருக்க வேண்டும்?

பயிற்சி

1. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுது :

தண்டனை, தெளிவான, ஆரோக்கியம், அழகாக, சுறுசுறுப்பாக, உல்லாசமாக.

2. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றி அமைத்து எழுது :

மீன் —— வசிக்கும். (தண்ணீர்)
பறவை —— வசிக்கும். (கூடு)
பூனை —— வசிக்கும். (வீடு)
புலி —— வசிக்கும். (காடு)
பாம்பு —— வசிக்கும். (புற்று)
எலி —— வசிக்கும். (வளை)

3. பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்கள் சொல் :

மீன், கிளை, காய், கிளி, நாய், மனிதன், சிறுவன், அண்ணன், நடந்தது, ஓடுகின்றது, உழுவான்.

4. பின்வரும் பன்மைச் சொற்களுக்கு ஒருமைச் சொற்கள் சொல் :

பறவைகள், மரங்கள், பூக்கள், பூனைகள், மக்கள், தாய்மார், குறவர், வந்தன, போகின்றன, செய்வார்கள்.

18. ஆகாய விமானம்

கப்பல் என்றுமே—மெல்லக்
கடலில் நீந்துவதாம் ;
தப்பித் தப்பியே—ரயிலும்
தரையில் ஊருவதாம்.

வான மீதெழுவேன்—அங்கே
வட்டம் சுற்றிடுவேன் ;
கானம் மலையெல்லாம்—யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இடைவி டாது தபால்—உலகில்
எங்கும் கொண்டு செல்வேன் ;
சடைவி லாமலே—பலரைத்
தாங்கியும் போவேன்.

—தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி :

மரம் இருக்கிறது—இதில் உள்ள மரம் என்னும் பெயர்ச்சொல்லும், இருக்கிறது என்னும் வினைச் சொல்லும் ஒருமைச் சொற்கள். எனவே இது ஒருமை வாக்கியம். இதில் உள்ள ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்கள் ஆக்கினால் மரங்கள் இருக்கின்றன என்று ஆகும். இது பன்மை வாக்கியம். இப்படியே ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாகவும், பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாகவும் மாற்றலாம்.

1. பின் வரும் பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்கள் ஆக்கிச் சொல் :

மாடுகள் மேய்ந்தன.	சிறுவர் ஆடுவர்.
மரங்கள் காய்த்தன.	பெண்கள் பாடுவார்கள்.

2. பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்கள் ஆக்கிச் சொல் :

நாய் குரைத்தது.	கழுதை கத்துகிறது.
பூ மலர்ந்தது.	கிழவன் வருவான்.

3. தந்தை, தாய்—குறவன், குறத்தி — இவற்றில் தந்தை, குறவன் என்னும் சொற்கள் ஆணைக் குறிக்கின்றன. தாய், குறத்தி என்பன பெண்ணைக் குறிக்கின்றன. ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால் எனப்படும். பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால் எனப்படும்.

4. இவற்றை மவுனமாக வாசி :

ஆண்பால்	பெண்பால்
அப்பன்	அம்மை
தம்பி	தங்கை
மாமன்	மாமி
குயவன்	குயத்தி
இடையன்	இடைச்சி
வேலைக்காரன்	வேலைக்காரி
தேவன்	தேவி

—

19. நார்த்தொழில்



பயிற்சி :

1. முன்பக்கத்தில் உள்ள படங்களைப் பார்த்து, கீழே கோடிடப்பட்டுள்ள இடங்களைப் பூர்த்திசெய்து வாசி :

—— மரங்கள் —— வளர்ந்துள்ளன. ஒருவன் —— ஏறுகிறான். அவன் —— பறித்து ——. ஒருவன் தேங்காயின் —— உறிக்கிறான். ஒருவன் உறித்த மட்டையை ——. ஒருவன் மட்டையைப் பிய்க்கிறான். ஒருவன் —— பரப்பி ——. இருவர் நாரை —— திரிக்கிறார்கள். ஒருவன் நாரால் மிதியடி ——. கடையில் —— நாரால் செய்த —— இருக்கின்றன.

2. தென்னை ஓலையின் உபயோகங்களைச் சொல்.

3. தேங்காயின் உபயோகங்களைச் சொல்.

4. தேங்காயிலிருந்து நார் எடுக்கும் விதத்தைச் சொல்.

5. தேங்காய் நாரால் செய்யப்படும் பொருள்கள் மூன்று சொல்.

6. உனக்குத் தெரிந்த வேறு கைத்தொழில்கள் மூன்று சொல்.

7. ஒவ்வொன்றையும் பற்றி ஐந்து வாக்கியங்கள் சொல்.

8. தென்னையைப் போல நார்த்தொழிலுக்குப் பயன்படும் வேறு மரம் ஒன்று சொல்.

9. அதிலிருந்து நார் எடுக்கும் விதத்தைச் சொல்.

20. வள்ளல் பேகன்

(மவுன வாசிப்பு)

பாண்டிய நாட்டில் பழனிமலை என்று ஒரு மலை இருக்கிறது. அதில் முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கிறார். அவரைத் தரிசிப்பதற்காக நெடுந்தூரத்திலிருந்தும் மக்கள் அம் மலைக்கு வருவார்கள். அது இப்பொழுது சிறந்த யாத்திரை ஸ்தலமாக இருக்கிறது.

முன்னொரு காலத்தில் அம்மலையை அடுத்த நாட்டை ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அவன் பெயர் பேகன் என்பது. அவன் ஆவியர் குடியில் பிறந்தவன்; சிறந்த கொடைவள்ளல்; யார் எதைக் கேட்டாலும் இல்லை என்னாமல்

கொடுப்பவன் ; ஏழைகளைக் கண்டு இரங்கும் குணம் உடையவன் ; உயிர்களிடத்தில் அன்பு உள்ளவன்.

அவன் ஒரு சமயம் மலைவளம் காணச் சென்றான். அவனோடு வேறு யாரும் செல்ல வில்லை. அவன் மலையின் பலவகை வளங்களை யும் பார்த்து மகிழ்ந்தான் ; விதம் விதமான இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தான் ; மலர் மணத்தை முகர்ந்தும், பறவைகளின் குரலைக் கேட்டும் இன்பம் அடைந்தான்.

இவ்வாறு அவன் இயற்கை அழகை அனுபவித்துக் கொண்டே இருக்கையில் திடீர் என்று வானம் இருண்டது. கரிய மேகம் ஆகாயம் முழுவதும் பரந்து மூடிக்கொண்டது. மின்னி இடித்துப் பெரு மழை பொழிய ஆரம் பித்தது. பேகன் மழையில் நன்றாக நனைந்து போனான். குளிர் காற்று வேறு வீசத் தொடங் கியது. அவன் உடனே தான் கொண்டுவந் திருந்த கம்பளிப் போர்வையை எடுத்தான் ; அதைப் பிரித்து உடல் மறையப் போர்த்திக் கொண்டான் ; அங்கு இருந்த ஒரு மரத்தின் கீழே சென்று ஒடுங்கி நின்றான்.

அந்த மரத்தின் பக்கத்தில் ஓர் ஆண் மயில் இருந்தது. அது மேகத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டது. களிப்பினால் அது கத்திக் கொண்டே சிறகை விரித்து ஆடியது.

பேகன் அதைக் கண்டான். அது மேகத்தைக் கண்டு மகிழ்ந்து ஆடுகிறது என்பதை அவன் எண்ணவில்லை. அவன் அதைப் பார்த்து, "ஐயோ, இந்த மயிலும் நம்மைப் போல மழையில் நனைந்திருக்கிறது. இது குளிர் தாங்காமலே இப்படிக் கூவி நடுங்கி ஆடுகிறது! நாம் போர்வை போர்த்திக் கொண்டு குளிரைப் போக்கிக் கொள்ளுகிறோம். பாவம், எளிய பிராணியாகிய இது என்ன செய்யும்! இதன் குளிரை யார் போக்குவர்?" என்று மனம் இரங்கினான். "நம் முன்னே நின்று இப்படி வருந்தும் இதற்கு உதவி செய்யாமல் இருப்பது பெரும் பாவம்," என்று எண்ணினான். உடனே அவன் தான் போர்த்திருந்த போர்வையை எடுத்து அம்மயிலின்மீது போர்த்தினான். அது பயந்து ஓடி ஒரு புதரில் புகுந்து மறைந்து கொண்டது.

பேகன் அதன் குளிரைப் போக்கிவிட்டதாக எண்ணித் திருப்தி அடைந்தான். அவன் மழையில் நனைந்து கொண்டே நகருக்குத் திரும்பினான்; குளிரினால் நடுங்கிக் கொண்டே அரண்மனையை அடைந்தான்.

நகர மக்கள் மலையில் நடந்ததை அறிந்தார்கள். அவர்கள் அவன் தயாள குணத்தை வியந்தார்கள். இச் செய்தி விரைவில் தமிழ் நாடு முழுவதும் பரவியது. தமிழ்ப் புலவர்களும்

தமிழ் மக்களும் அவனைக் " கருணைக் கடல் " என்று புகழ்ந்து பாராட்டினார்கள்.

பாண்டிய நாடு	மலைவளம்	பாவம்
பழனிமலை	இயற்கை	திருப்தி
முருகக் கடவுள்	காட்சி	தயாள குணம்
யாத்திரை	மணம்	செய்தி
ஸ்தலம்	ஆனந்தம்	கருணை
சிற்றரசன்	வானம்	மேகம்

அருஞ்சொற்பொருள் : மணம் - வாசனை. வானம் - ஆகாயம்.

விடை சொல் :

1. பழனிமலை எங்கு உள்ளது ?
2. பேகன் யார் ? அவன் எப்படிப்பட்டவன் ?
3. பேகன் ஏன் மலைக்குச் சென்றான் ?
4. மயில் என்ன செய்தது ? பேகன் அதனைக் கண்டு என்ன எண்ணினான் ?
5. பேகன் மயிலுக்கு எவ்வாறு உதவி செய்தான் ?
6. .பேகன் ' கருணைக் கடல் ' ஆவது எவ்வாறு ?

பயிற்சி :

1. இந்தக் கதையை மவுனமாக வாசி.
2. இந்தக் கதையைப் பேகன் சொல்வதுபோல் சொல்.
3. இதை மயில் சொல்வதுபோல் சொல்.
4. சிற்றரசன் × பேரரசன்.
5. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் வைத்து எழுது:

திடீர் என்று, விதம் விதமான, ஆனந்தம்.

6. இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது. அவற்றுள் ஒருமைச் சொற்களையும் பன்மைச் சொற்களையும் வேறு வேறாகக் குறி.
7. இப்பாடத்தில் உள்ள வினைச் சொற்களை எடுத்து எழுது. அவற்றுள் ஒருமைச் சொற்களையும் பன்மைச் சொற்களையும் வேறு வேறாகக் குறி.

8. அட்டவணையைப் பூர்த்தி செய் :

ஆண்பால்	பெண்பால்
அரசன்	அரசி
தச்சன்	
மகன்	
மாணவன்	
தலைவன்	
அண்ணன்	
மாமன்	

9. கீழே கோடிட்ட இடங்களில் எதிரில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை ஏற்றவாறு மாற்றி வைத்து எழுது :

உழவன் —— உழுவான். (நிலம்)
தச்சன் —— மரத்தை அறுப்பான். (வாள்)
பேகன் —— போர்வை அளித்தான். (மயில்)
நிலத்திற்கு —— நீர் இறைப்பார்கள். (கிணறு)
உளி —— ஆயுதம். (தச்சன்)
எலி —— வசிக்கும். (வளை)

10. அட்டவணையைப் பூர்த்தி செய் :

ஆண்பால்	பெண்பால்
பொன்னன்	பொன்னி
	மருமகள்
	கள்ளி
	கூனி
	குருடி

21. குரங்கின் தீர்ப்பு

முதற் காட்சி

முதல் பூனை : நாம் இருவரும் சேர்ந்து இந்த ஓர் அப்பத்தைத் திருடினேம். இதை நாம் எப்படிப் பங்கிட்டுக் கொள்வது?

இரண்டாம் பூனை : இதை இரண்டாக விண்டு நீ ஒரு பாதி நான் ஒரு பாதியாக எடுத்துக் கொள்ளலாமே. இதில் என்ன கஷ்டம்?

முதல் பூனை : ஆம். அப்படியே செய்வோம். எனக்கு இந்த யோசனை தோன்றவில்லை. அப்பத்தை இரு துண்டுகளாக விண்டு ஒன்றை இரண்டாவது பூனையிடம் நீட்டுகிறது.)

இரண்டாம் பூனை : இது எனக்கு வேண்டாம். இது சிறியதாக இருக்கிறது. அந்தப் பெரிய துண்டுதான் எனக்கு வேண்டும்.

முதல் பூனை : அது முடியாது. நான் தானே அப்பத்தை எடுத்து வந்தேன்.

இரண்டாம் பூனை : நான்தானே அப்பம் இருப்பதைப் பார்த்துச் சொன்னேன்.

முதல் பூனை : பார்த்திருந்தவனுக்குப் பெரிய பங்கு; பாடுபட்டு எடுத்து வந்தவனுக்குச் சிறிய பங்கா? நன்ருய் இருக்கிறது உன் நியாயம்!

இரண்டாம் பூனை : சரி. நமக்குள் இந்த வழக்கு ஏன்? நாம் இருவரும் இதைச் சமமாகவே பங்கிட்டுக் கொள்வோமே.

முதல் பூனை : அப்படியாளுல் சரி. நாமே இதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாது. ஒரு பொதுவான மத்தியஸ்தரிடம் போய்ப் பங்கிட்டுக் கொடுக்கச் சொல்வோம்.

இரண்டாம் பூனை : அதுதான் நல்லது. அதோ குளக்கரையில் குரங்கார் இருக்கிருர். அவரைப் பங்கிட்டுக் கொடுக்கச் சொல்வோம். வா, போவோம்.

இரண்டாம் காட்சி

பூனைகள் : ஐயா, குரங்காரே! நீங்கள் எங்களுக்கு ஓர் உபகாரம் செய்யவேண்டும்.

குரங்கு: வாருங்கள், வாருங்கள்! என்ன உபகாரம் வேண்டும், சொல்லுங்கள். என்னால் முடிவதானால் அவசியம் செய்கிறேன்.

பூனைகள் : இந்த அப்பத்தை எங்கள் இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுத் தர வேண்டும்.

குரங்கு : இதுதானே பிரமாதம்! என்னிடம் இதோ தராசு இருக்கிறது. இதைக் கொண்டு சரிசமமாகப் பங்கிட்டுத் தருகிறேன்.

(பூனைகள் அப்பத் துண்டுகளைக் குரங்கினிடம் கொடுக்கின்றன. குரங்கு அவற்றைத் தராசில் வைத்துத் தூக்குகிறது.)

குரங்கு : பார்த்தீர்களா, எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! இதோ சமமாக்கித் தருகிறேன். *(பெரிய துண்டை எடுத்துச் சிறிது கடித்துத் தின்றுவிட்டுத் தட்டில் வைக்கிறது.)*

முதல் பூனை : இப்பொழுது அந்தத் தட்டுக் கீழே இறங்கி விட்டதே!

குரங்கு : இருக்கட்டும். இதோ சரியாக்கி விடுகிறேன். *(அந்தத் துண்டில் சிறிது கடித்துத் தின்றுவிட்டு வைக்கிறது.)*

இரண்டாம் பூனை : இது என்ன? இப்பொழுது அந்தத் தட்டுத் தாழ்ந்து விட்டதே!

குரங்கு : சற்றுப் பொறுங்கள். அவ சரப்பட்டால் முடியுமா? இதோ பாருங்கள்! (இந்தத் துண்டில் சிறிது கடித்துத் தின்றுவிட்டு வைக் கிறது.)

அட! அது பெரியதாகி விட்டதே! இருக் கட்டும். இதை விடுவதில்லை. (அந்தத் துண்டில் ஒரு பாகத்தைக் கடித்துத் தின்றுவிட்டு வைக்கிறது.)

இது என்ன விந்தை! இப்பொழுது இந்தத் தட்டுக் கனமாகி விட்டது! (மீண்டும் இந்தத் துண்டை வாயில் கடித்துக் கொள்ளப் போகிறது.)

இரண்டாம் பூனை : (முதல் பூனையைப் பார்த்து மெல்ல) இரண்டு துண்டுகளையும் மாற்றி மாற்றிக் கடித்துத் தின்று விடுகிருரே. முடி வில் பங்கிடுவதற்கு அப்பமே இராதுபோல் இருக்கிறதே! என்ன செய்யலாம்?

முதல் பூனை : செய்வது என்ன? (குரங் கைப் பார்த்து) குரங்காரே, நன்ருய் இருக் கிறது நீர் பங்கிடும் அழகு! அந்த இரண்டு அப்பத் துண்டுகளையும் எங்களிடம் கொடுத்து விடும். நாங்களே பங்கிட்டுக் கொள்கிருேம்.

குரங்கு : நான் பங்கிடுவதில் என்ன குறை கண்டாய்? சிறிதும் பெரிதுமாகவே கொடுத்துவிடச் சொல்கிருய்ா? என்னிடம் அது நடவாது. (இந்தத் துண்டைக் கடித்துக்கொண்டு தட் டில் வைக்கிறது. அந்தத் தட்டுத் தாழ்கிறது.)

இரண்டாம் பூனை : ஐயா, குரங்காரே! போதும் நீர் பங்கிட்டது. மிஞ்சியுள்ள அந்த இரண்டு துண்டுகளையும் கொடுத்து விடும்.

குரங்கு : ஏன்? ஏற்றத் தாழ்வாகப் பங்கிட்டுக் கொடுத்த பாவத்திற்கு நான் ஆளாகவா? அது முடியாது. இதோ முடித்துத் தந்து விடுகிறேன், இருங்கள். (மறுபடியும் அந்தத் துண்டைக் கடித்துக் கொள்ளப் போகிறது.)

பூனைகள் : (சேர்த்து) போதும், ஐயா, போதும். நீர் பங்கிட்டு முடிப்பதற்குள் அப்பமே முடிந்து விடும். நீர் பங்கிடவே வேண்டாம். அந்தத் துண்டுகளைக் கொடுத்துவிடும்.

குரங்கு : அப்படியானால் எனக்கென்ன? இதோ நிறுத்திவிட்டேன். ஆனால் இத்தனை நேரம் என் வேலைகளையெல்லாம் விட்டுக் கஷ்டப்பட்டேனே, எனக்குக் கூலி வேண்டாமா?

(மிகுந்திருந்த இரு துண்டுகளையும் வாயில் இட்டுக்கொண்டு மரத்தின் மேல் பாய்ந்து ஏறிக்கொண்டது.)

இரண்டாம் பூனை : இது என்ன அநியாயம்! இந்தக் குரங்கு நம் இருவரையும் ஏமாற்றி முழு அப்பத்தையும் தின்றுவிட்டதே! கஷ்டப்பட்டுத் திருடி வந்து குரங்குக்குப் பறி கொடுத்து விட்டோமே!

முதல் பூனை : என்ன செய்வது? உழைத்தவர் சண்டையிட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பவனிடம் போனால் இப்படித்தான்

ஆகும். இனிமேலாவது சண்டையிடாமல் சமாதானமாக இருப்போம். (பூனைகள் ஏமாற்றத்தோடு போகின்றன.)

விடை சொல் :

1. பூனைகளுக்கு அப்பம் எவ்வாறு கிடைத்தது?
2. பூனைகள் ஏன் வழக்கிட்டன?
3. பூனைகள் யாரிடம் மத்தியஸ்தத்திற்குச் சென்றன?
4. குரங்கு எப்படி அப்பம் பங்கிட்டது?
5. குரங்கு எவ்வாறு தீர்ப்புச் செய்தது?
6. இக்கதையால் பூனைகள் அறிந்த உண்மை என்ன?

பயிற்சி :

1. இதனை நாடகமாக நடித்துப் பழகு.
2. இதில் நீ யாராக நடிக்க விரும்புவாய், சொல்.
3. இந்தச் சம்பவத்தைக் கதையாகச் சொல்.
4. இதைப் பூனைகள் சொல்வதாகச் சொல்.
5. இதைக் குரங்கு சொல்வதாகச் சொல்.
6. வித்தியாசம், நியாயம், ஏற்றத் தாழ்வு—இச்சொற்களை வைத்து வாக்கியங்கள் சொல்.
7. எதிர்ப்பதம் சொல் :—சுலபம், கனம், குறை, பாவம்.

22. நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா ;
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா.

உள்ளே புகுந்துநெல் தின்றுதின்று—வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா ;
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா.

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்ததொரு
பூனை எலியினைக் கண்டதடா—ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா.

கள்ள வழியினில் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா ;
உள்ள படியே நடப்பவர்க்குத்—தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா.

—தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி :

எலி நெல்லைத் தின்றது

இது ஒரு வாக்கியம். இது சொற்களால் ஆகியுள்ளது. இதில் எலி, நெல்லை, தின்றது என்னும் மூன்று சொற்கள் உள்ளன. அவற்றுள் எலி என்னும் சொல் எ, லி என்னும் இரண்டு எழுத்துக்களால் ஆகியுள்ளது. மற்றச் சொற்களும் இப்படியே எழுத்துக்களால் ஆகியுள்ளன.

தமிழ் மொழியில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—என்னும் பன்னிரண்டு எழுத்துக்கள் ஓர் இனம். இவை உயிரெழுத்துக்கள் எனப்படும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—என்னும் பதினெட்டு எழுத்துக்கள் ஓர் இனம். இவை மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

பானை—இதில் பா, னை என்னும் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. அவை உயிரெழுத்தும் அல்ல; மெய்யெழுத்தும் அல்ல. ஆனால் அவற்றுள் ஒவ்வொன்றிலும் உயிரெழுத்தும் இருக்கிறது; மெய்யெழுத்தும் இருக்கிறது.

23. சுகாதாரக் கும்மி

கும்மியடி பெண்கள் கும்மியடி—குல
தெய்வத்தைக் கும்பிட் டடியுங்கடி ;
நம்முடை தேசத்தில் நோய்கள் இல்லாமலே
நாடு செழித்திட வேணுமென்று.

செத்தவர் தம்மை எழுப்பித் தரவல்ல
சித்தர் இருந்த திருநாட்டில்,
எத்தனை எத்தனை நோய்களி னால்மக்கள்
ஈசலைப் போல மடிவதென்னே !

ஈசன் அளித்த அறிவிருந்தும்—நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு
மோசம் மிகுந்த பகட்டுடை வாழ்க்கையில்
மோகம் வைத்தே இந்த மோசமுற்றோம்.

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டுவிட்டோம்;
நித்தம் குளிப்பதும் பத்தியம் காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே.

காலையில் எழுந்து நீராடல் கொஞ்சம்
கர்த்தனை எண்ணித் துதி பாடல்;
மாலையில் ஓடி விளையாடல்—இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம்.

அளவை அறிந்து புசிப்பதில்லை—தங்கள்
அளவை அளந்து வசிப்பதில்லை;
களவுக்குப் பின்னால் கதவை அடைப்பவர்
காரியம் போலடி கண்மணியே.

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்?
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்திட
நாடு செழுத்திட வேணுமடி.

—ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

பா என்னும் எழுத்தில் ப் என்னும் மெய்யெழுத்தும், ஆ என்னும் உயிரெழுத்தும் சேர்ந்துள்ளன (ப்+ஆ=பா.) னை என்பதில் ன் என்னும் மெய்யெழுத்தும் ஐ என்னும் உயிரெழுத்தும் சேர்ந்துள்ளன. (ன்+ஐ=னை)

இவ்வாறு உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து உண்டாகும் எழுத்துக்களுக்கு உயிர்மெய் யெழுத்துக் கள் என்பது பெயர்.

க முதல் னௌ வரையில் உள்ள 216 எழுத்துக்களும் உயிர் மெய்யெழுத்துக்கள் ஆகும்.



24. நாடு

இன்பத் தமிழ் நாடு—உலகில்
இணையில்லாத நாடு.
அன்புமிகக் கூடு—இதன்
அரிய புகழ் பாடு.

இந்திய நன்னாடு—எங்கும்
இல்லை இதற் கீடு.
சொந்த முள்ள நாடு—இதன்
சுதந்திரத்தை நாடு.

நாம் பிறந்த நாடு—பல
நன்மை தரும் நாடு.
நாம் வசிக்கும் நாடு—இது
நம்முடைய நாடு.

சத்தி யத்தினோடு—உயர்
தவம் தழைத்த நாடு.
பக்தி மிகக் கூடு—இதன்
பழம்புகழைப் பாடு.

—ம. வி. இராகவன்

25. ஆத்தி சூடி

1. அறம்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இளமையில் கல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. கண்டொன்று சொல்லேல்.
14. ஞயம்பட உரை.
15. இணக்கம் அறிந்து இணங்கு.
16. தந்தை தாய்ப் பேண்.
17. நன்றி மறவேல்.
18. பருவத்தே பயிர் செய்.
19. வஞ்சகம் பேசேல்.
20. செய்வன திருந்தச் செய்.
21. நோய்க்கு இடங்கொடேல்.
22. தேசத்தோடு ஒத்துவாழ்.

—ஔவையார்

26. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. ஏவா மக்கள் மூவா மருந்து.
7. ஐயம் புகினும் செய்வன செய்.
8. கற்பெனப் படுவது சொல் திறம்பாமை.
9. கீழோ ராயினும் தாழ உரை.
10. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
11. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
12. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
13. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
14. சூதும் வாதும் வேதனை செய்யும்.
15. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
16. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
17. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
18. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
19. தீராக் கோபம் போராய் முடியும்.
20. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
21. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

—ஔவையார்

கோவை

தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

வித்வான் S. நாகராசன், B.O.L., B.T.,
தமிழாசிரியர்,
தூய மேரி போதனாமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்.

ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி
ஈரோடு

பதிப்புரிமை] 1955 [விலை அணா 9

முதற் பதிப்பு—நவம்பர், 1951
ஆறும் பதிப்பு—ஜுலை, 1955

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954,
Supplement to Part I-B, Page 23]

Kabeer Printing Works, Madras (2972)

முகவுரை

'கோவை தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் வரிசை, கடைசியாக 1939-ஆம் ஆண்டில் ஆரம்ப வகுப்புகட்கென்று கல்வித்துறையினர் வெளியிட்டுள்ள பாடவியலை முற்றிலும் தழுவி முறைப்படி அமைந்துள்ளது. அப் பாடவியலில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இவ்வரிசையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மொழிப் பயிற்சி பற்றிய பொது விதிகளையும், பொருட் பயிற்சி பற்றிய சிறப்பு விதிகளையும் கருத்திற் கொண்டு அவற்றோடு சிறிதும் முரண்படா வகையில் இஃது ஆக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் பெற்ற வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல பொருள்களைப் பற்றிப் புதுச் சொற்களை அறிந்து பயன்படுத்தி உரையாடல், சிறு சம்பவங்களைக் கோவையாகச் சொல்லல், படித்தல், மவுனமாகப் படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுதற்கு இயன்ற முறையில் பாடங்களும், பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் பிறவும் இவ்வரிசையில் சிறப்பாக அமைந்துள்ளன. சிறுவர்களின் சொல்லறிவும் பேச்சுப் பயிற்சியும் உரம்பெறுதற்கு உறுதுணையாதற் பொருட்டுச் சில பாடங்கள் உரையாடல் முறையில் எழுதப்பட்டுள்ளன. சிறுவர்கள் விரும்பிப் படித்து மகிழ்ந்து பாடத்தக்க எளிய இனிய தேசீயப் பாட்டுகளும், கதைப் பாட்டுகளும், நீதிப் பாட்டுகளும், தெளிவான விளக்கப் படங்களுடன் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாற்றான் இப்பாடநூல் வரிசை, தெளிவான பொருளறிவும், திருந்திய மொழிப் பயிற்சியும் பெறத் தொடங்கும் இளஞ்சிறார்க்கு உறுதுணையாக அமைந்து பெரும் பயன் விளைப்பதாக அமைந்திருத்தலின், தொடக்கநிலைக் கல்வியுலகத்தில் சிறக்க வரவேற்புக் கொள்ளும் என நம்புகின்றோம்.

ஆசிரியன்

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	பிரார்த்தனை	... 1
2.	தமிழ் நாடு	... 3
3.	செந்தமிழ் நாடு	... [illegible]
4.	உழைப்பின் உயர்வு	... 11
5.	பொதுநலப் பணியாளர்	... 16
6.	அறிவுள்ள பசு	... 23
7.	தபால்	... 28
8.	கார்டு	... 37
9.	அயலான் யார்?	... 40
10.	பயிர்த்தொழில்—I	... 46
11.	பயிர்த்தொழில்—II	... 50
12.	பாரதியார்	... 56
13.	நல்ல வார்த்தை	... 62
14.	கடிதம் எழுதுதல்	... 64
15.	குடிவீட்டின் வரலாறு	... 70
16.	கரிகாலன் நியாய விசாரணை	... 76
17.	வஞ்சகப் பூனை	... 82
18.	குரங்கும் குருவிகளும்	... 88
19.	சென்னை மாநகரம்	... 90
20.	பருத்திச் செடி	... 96
21.	நூற்றல்	... 100
22.	புலிக் கூடு	... 105
23.	நாச்சியப்பர்	... 107
24.	தினசரிக் கடமைகள்	... 112
25.	தாய் நாடு	... 114
26.	நறுந்தொகை	... 115

கோவை தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

1. பிரார்த்தனை

உள்ளத்தில் உள்ள பரமா—எனக்(கு)
உன் அருள் வெள்ளத்தை ஈவாய் ;
கள்ளமில் லாத மனத்தால்—உன்னைக்
காலையும் மாலையும் நினைப்பேன்.

கல்வி யறிவொளி ஈவாய் ;—செய்ய
கலையில் புலமை அளிப்பாய் ;
நல்ல ஒழுக்கம் அருள்வாய் ;—தாய்
நாட்டின் மணிப்பிள்ளை யாவேன்.

துச்ச நினைவை ஒழிப்பாய் ;—என்றும்
தூய நினைப்பை வளர்ப்பாய் ;
அச்சப் பிசாசைத் துரத்தி—வீரர்
ஆண்மையும் ஆற்றலும் தாராய்.

தாயும் தகப்பனும் நீயே ;—கல்வி
தந்துத வும்குரு நீயே ;
நோய்தவிர் வைத்தியன் நீயே ;—நான்
நூறுண்டு வாழச்செய் வாயே.

—யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்

பயிற்சி

1. இப்பாடல்களை மனப் பாடம் செய்.
2. நாள்தோறும் காலை மாலையில் இப் பாடல்களைப் பாடிப் பிரார்த்தனை செய்.
3. பாடசாலையில் பிள்ளைகளோடு சேர்ந்து பாடு.
4. வேறு பிரார்த்தனைப் பாடல்களையும் மனப் பாடம் செய்து பாடிப் பழகு.



2. தமிழ் நாடு

நாம் தமிழ் மொழி பேசுகிறோம். தமிழ் மொழி நமக்குத் தாய்மொழி ஆகும். தமிழ் மொழியைத் தாய் மொழியாக உடையவர்கள் தமிழர், தமிழ் மக்கள் எனப்படுவர். தமிழ் மக்கள் பிறந்து வாழும் நாடு தமிழ் நாடு, தமிழகம் எனப்படும். தமிழ் நாடு மிகவும் பழமையானது. பழங்காலத்தில் அது மிக்க பரப்புள்ளதாக இருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அதன் பெரும்பகுதி கடலுள் மூழ்கியது. அதனால் அதன் கிழக்கு எல்லையும், தெற்கு எல்லையும் சுருங்கின. வடக்கில் திருவேங்கட மலையும், தெற்கில் குமரி முனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் அதன் எல்லைகளாக அமைந்தன.

இப்பொழுது மலையாள மொழி வழங்கும் பகுதி முன்னர் தமிழ் நாடாகவே இருந்தது. அங்கும்

தமிழ் மொழியே வழங்கி வந்தது. நாளடைவில் அங்கு வழங்கிய தமிழ் மொழி சிதைந்து மலையாள மொழியாக மாறியது. பின்னர் அம்மொழி வழங்கும் பகுதி தனியாகப் பிரிந்து விட்டது. எனவே தமிழ் நாட்டின் மேற்கு எல்லையும் சுருங்கியது. இப்பொழுது உள்ள தமிழ் நாடு இவ்வாறு சுருங்கிய பகுதியே ஆகும். இதன் வட எல்லை திருவேங்கட மலை; தெற்கு எல்லை குமரி முனை; கிழக்கு எல்லை வங்காளக் கடல்; மேற்கு எல்லை திருவாங்கூர், கொச்சி, மலையாளப் பகுதிகள். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட சுருங்கிய பகுதியே இன்று உள்ள தமிழ் நாடு ஆகும்.

தமிழ் நாடு முன் காலத்தில் மூன்று தனி நாடுகளாகப் பிரிந்து இருந்தது. அவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. தமிழ் நாட்டின் மேற்குப் பகுதி சேர நாடாக இருந்தது. அது சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மலையாள ஜில்லாக்களும், திருவாங்கூர், கொச்சி நாடுகளும் சேர்ந்த நிலப்பகுதி ஆகும். சேரநாட்டின் தலை நகரம் வஞ்சி என்பது. முசிறி, தொண்டி என்பன சேர நாட்டின் துறைமுகப் பட்டினங்கள். தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதி சோழ நாடாக இருந்தது. அது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும், கிழக்குக் கரைப் பகுதிகளும் சேர்ந்தது ஆகும். புகார் நகரம் என்னும் காவிரிப்பூம் பட்டினம் சோழ நாட்டின் தலைநகரமாகவும், துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. உறையூர் சில காலம் சோழ நாட்டிற்குத் தலை நகரமாக இருந்தது. தமிழ் நாட்டின் தென் பகுதி பாண்டிய நாடாகும். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்

கள் அடங்கிய பகுதியே பாண்டிய நாடாக இருந்தது. பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை ஆகும். கொற்கை என்பது பாண்டிய நாட்டின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது.

சேர சோழ பாண்டிய நாடுகளை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் பழந்தமிழ்க் குடியினர் ஆண்டுவந்தனர். இம்மூவரும் முடியுடைப் பேரரசர் ஆவர். இவர்கள் முடியுடை மூவேந்தர் என்று சிறப்பிக்கப் பட்டனர். இவர்களுள் சேரர் வீரம் சிறந்தவர்கள்; சோழர் வண்மையும் நீதியும் வாய்ந்தவர்கள்; பாண்டியர் கல்விச் சிறப்புடையவர்கள். இவர்களைத் தவிர, இவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களும் பலர் தமிழ் நாட்டில் இருந்தார்கள். அவர்கள் குறுநில மன்னர் எனப்பட்டனர். அவர்களுக்கு முடிசூடும் உரிமை இல்லை. அவர்கள் சிறு சிறு நாட்டுப் பகுதிகளுக்குத் தலைவர்களாக இருந்தார்கள்; போர்க் காலங்களில் பேரரசர்களுக்குத் துணைபுரிந்து வந்தார்கள்.

முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தார்கள். அவர்கள் தாங்கள் தமிழ் மொழியை விரும்பிக் கற்றுப் புலமை பெற்றார்கள்; தமிழ் மொழிப் புலவர்களை நன்கு மதித்துப் பொன்னும் பொருளும் கொடுத்து உயர்வாகப் போற்றினார்கள். மூவேந்தருள்ளும் தமிழ் மொழியைச் சிறப்பாகப் போற்றி வளர்த்தவர்கள் பாண்டியர்களே ஆவர். அவர்கள் தங்கள் தலைநகரமாகிய மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைத்தனர்; அதில் தமிழ்ப் புலவர்களைக் கூட்டினர்; பழைய

நூல்களை ஆராயவும், புது நூல்கள் இயற்றவும் செய்தனர். தமிழ் அரசர் ஆட்சியில் தமிழ்மொழி தலை சிறந்து விளங்கியது. தமிழ் நாடு கல்வி சிறந்த நாடாகக் காட்சி அளித்தது.

தமிழ் அரசர்கள் கல்வியோடு கைத்தொழிலை யும் வாணிகத்தையும் போற்றி வளர்த்தார்கள். தமிழ் நாட்டில் பலவகைத் தொழில்களும் சிறப்பாக நடந்து வந்தன. தமிழ் நாட்டில் செய்யப்பட்ட பொருள்கள் மேல் நாடுகளுக்கெல்லாம் சென்றன. உள் நாட்டு வாணிகமும், வெளி நாட்டு வாணிகமும் சிறப்பாக நடைபெற்றன. தமிழ் மக்கள் கப்பல் களின் மூலம் கடல்களைக் கடந்து வெளி நாடு களோடு வாணிகம் செய்து வந்தனர். மேல் நாட் டார் கப்பல்களில் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து, ஆடை, முத்து, வாசனைப் பொருள்கள் முதலியவற்றை வாங்கிச் சென்றனர். அதனால் பல நாடுகளின் செல்வமும் தமிழ் நாட்டில் வந்து குவிந்தது.

பழங்காலத் தமிழர்கள் கடவுள் பக்தி உடைய வர்களாக இருந்தார்கள். அவர்கள் நாடெங்கும் கோவில்களைக் கட்டினர்; அவற்றில் வழிபாடும் விழாக்களும் தடையின்றி நடந்துவர நிலையான ஏற்பாடுகளைச் செய்தனர். அதனால் தமிழ் நாட்டில் கடவுள் பக்தி வேரூன்றியது.

இவ்வாறு பழங்காலத்தில் தமிழ் நாடு கல்வியும், செல்வமும், கடவுள் பக்தியும் சிறந்த வளநாடாக இருந்தது. தமிழ் மக்கள் அறிவும், ஈகையும், நல் லொழுக்கமும் உடையவர்களாக இன்ப வாழ்வு வாழ்ந்தார்கள். அத்தகைய தமிழ் நாடு இன்று சீர்குலைந்து இருக்கிறது. அதனை மீண்டும் பழைய

உயர் நிலைக்கு உயர்த்த வேண்டுவது உங்கள் கடமையாகும். நீங்கள் தமிழ் மொழியை வளர்த்துக் கல்வியைப் பரப்ப வேண்டும்; கைத் தொழிலையும் வாணிகத்தையும் போற்றிச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். கடவுள் பக்தியை நிலை பெறச் செய்து நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தாய்மொழி	துறைமுகம்	குறுநில மன்னர்
தமிழர்	பட்டினம்	மேல் நாடு
தமிழகம்	உரிமை	தமிழ்ச் சங்கம்
ஆண்டு	ஈகை	நூல்கள்
புலமை	பேரரசர்	ஆட்சி
ஏற்பாடு	மூவேந்தர்	காட்சி
ஜில்லா	வண்மை	வாணிகம்
தலைநகரம்	சிற்றரசர்கள்	வெளிநாடு

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் சுருங்கியது ஏன்?
2. இன்று உள்ள தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
3. தமிழ் நாட்டின் மூன்று பிரிவுகள் யாவை?
4. தமிழ் நாட்டு மூவேந்தர்கள் யாவர்?
5. குறுநில மன்னர் என்போர் யார்?
6. பாண்டியர்கள் தமிழை எவ்வாறு வளர்த்தனர்?
7. தமிழ் நாட்டில் செல்வம் குவிந்தது எவ்வாறு?
8. தமிழ் அரசர் கடவுள் பக்தியை எவ்வாறு பரப்பினர்?
9. தமிழ்நாடு பழைய உயர்நிலையை அடைய என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் கூறுக:

பழமை, சுருங்கியது, சிற்றரசர், உள்நாடு, நல்லொழுக்கம்.

2. தாய்மொழி, பெரும்பகுதி, தனியாக, தலைநகரம், உயர்வாக, தலைசிறந்து, நிலையான ஏற்பாடு, சீர்குலைந்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பொருள் கூறு: ஆண்டு, புலமை, வண்மை.

4. அரசர்—இச்சொல்லுக்குச் சரியான வேறு மூன்று சொற்கள் சொல்.

5. வாசனை, பக்தி—இவற்றிற்குச் சரியான வேறு சொற்கள் சொல்.

6. முதல் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்து எழுது. ஒவ்வொன்றும் ஒருமையா, பன்மையா என்பதைக் குறி.

7. தமிழ் நாட்டின் படத்தைப் பார்த்து அதன் எல்லைகளையும், பிரிவுகளையும் தெரிந்து கொள்.

8. தமிழரசர்கள் புலவர்களைப் போற்றினர். இது முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறது. இது ஒரு வாக்கியம். இதில் தமிழரசர்கள், புலவர்களை போற்றினர் என்னும் மூன்று சொற்கள் உள்ளன. அவற்றுள் போற்றினர் என்பதே வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கிறது. இச்சொல் செயலைக் குறிக்கிறது. இது பயனிலை எனப்படும்.

'யார் போற்றினர்?' என்று கேள்வி கேட்டால் வரும் விடை தமிழரசர்கள் என்பது. இது செயலைச் செய்த பெயரைக் குறிக்கிறது. இது எழுவாய் எனப்படும்.

'யாரைப் போற்றினர்?' என்று கேள்வி கேட்டால் புலவர்களை என்பது விடையாக வருகிறது. இது செயப்படு பொருள் எனப்படும்.

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்னும் இம் மூன்றும் வாக்கியத்தின் உறுப்புகள் ஆகும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு:

புலவர்கள் நூல்களை ஆராய்ந்தனர்.

அரசர்கள் கோவில்களைக் கட்டினர்.

பாண்டியர் சங்கத்தை அமைத்தனர்.

3. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி—என
மேவிய ஆறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு.

கல்வி சிறந்த தமிழ் நாடு—உயர்
கம்பன் பிறந்த தமிழ் நாடு.
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு.

—பாரதியார்

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை வைத்து வாசி:

தமிழ் நாட்டின் வட எல்லை ——
தமிழ் நாடு —— தனி நாடுகளாகப் பிரிந்திருந்தது.
சிற்றரசர்கள் —— எனப்பட்டனர்.
குறுநில மன்னர்க்கு முடி சூடும் உரிமை ——.
—— தமிழ்ச் சங்கத்தை அமைத்தனர்.

2. இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து வாசி:

அரசர்கள் தமிழைக் கற்றுப் புலமை பெற்றார்கள்.
மேல் நாட்டார் பொன்னைக் கொடுத்துப் பொருளை வாங்கினர்.

3. ஒரு வாக்கியமாகச் சேர்த்து வாசி:

அரசர்கள் கோவில்களைக் கட்டினர். அரசர்கள் விழாக்கள் நடத்தினர்.

4. புலவர் நூல்களை ஆராய்ந்தனர்—இவ்வாக்கியத்தில் 'புலவர்' என்பது எழுவாய். அது பெயர்ச்சொல். எழுவாய் எப்பொழுதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். 'ஆராய்ந்தனர்' என்பது பயனிலை. அது வினைச்சொல். பெரும்பாலும் வினைச்சொல்லே பயனிலையாக வரும். 'நூல்களை' என்பது செயப்படுபொருள். அது பெயர்ச்சொல். செயப்படுபொருளும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும்.

5. புலவர் நூல்களை ஆராய்ந்தனர்—என்னும் வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை கடைசியிலும், செயப்படுபொருள் நடுவிலும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு அமைவதே முறையாகும்.

4. உழைப்பின் உயர்வு

நம் நாட்டில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் அல்லவா ? அவர்கள் மதத்திற்கு இஸ்லாம் என்பது பெயர். இஸ்லாம் மதத்தைப் புதுப்பித்தவர் முகம்மது நபி என்பவர். அவர் மக்களுக்குச் சிறந்த உண்மைகளை உபதேசித்தார். அவரால் நல்வழிப் பட்டவர்கள் பலர் ஆவர்.

ஒரு நாள் ஓர் ஏழைப் பிச்சைக்காரன் முகம்மது நபியிடம் வந்தான். அவன் அவரை வணங்கி, "ஐயனே, நான் ஓர் ஏழை. என் மனைவியும் மக்களும் உணவில்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். நீங்கள் மனம் இரங்கி ஏதாவது பிச்சை கொடுத்தால் அதைக் கொண்டு என் மனைவி மக்களின் பசியைப் போக்குவேன்" என்று இரந்தான்.

முகம்மது நபி அவனை உற்றுப் பார்த்தார். "உண்மையாக உன்னிடம் ஒன்றுமே இல்லையா? உள்ளதைக் காட்டு, பார்ப்போம்" என்றார். ஏழை அவரை நோக்கி, "என்னிடம் ஒரு சிறிய கம்பளியும், ஒரு பிச்சைப் பாத்திரமுமே உள்ளன. நான் இரவில் படுத்துத் தூங்கும்போது அந்தக் கம்பளியின் ஒரு பாதியைக் கீழே பரப்பிக்கொண்டு, மற்றொரு பாதியைப் போர்த்திக் கொள்வேன். பிச்சைப் பாத்திரம் பிச்சை வாங்கவும், தண்ணீர் முகந்து குடிக்கவும் பயன்படுகிறது. இவை இரண்டுமே எனக்குச் சொந்தமானவை" என்று அவற்றை முகம்மது நபியின் முன் வைத்தான்.

முகம்மது நபி, "இவ்விரண்டையும் என்னிடம் கொடுத்துவிடு" என்று கூறி, கம்பளியையும் பிச்சைப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டார்;

அவன் எதிரிலேயே அவ்விரண்டையும் இரண்டு ரூபாய்க்கு விற்று விட்டார். ஏழை அதைக் கண்டு திகைத்துப் போனன். "கம்பளி போனலும் போகட்டும். பிச்சைப் பாத்திரம் இல்லாமல் நான் என்ன செய்வேன்! எதில் பிச்சை வாங்குவேன்? எதனல் தண்ணீர் முகந்து குடிப்பேன்?" என்று அவன் மனம் கலங்கினன்.

முகம்மது நபி ஏழையின் மனக் கலக்கத்தைக் கண்டார். அவர் அவனை அன்போடு பார்த்து, "நீ ஏன் கவலைப்படுகிருய்? இந்த இரண்டு ரூபாயையும் பெற்றுக்கொள். ஒரு ரூபாய்க்கு உணவுப் பொருள் வாங்கி உன் மனைவி மக்களின் பசியைப் போக்கு. மற்றொரு ரூபாய்க்கு ஒரு கோடரி வாங்கிக்கொண்டு இங்கு வா" என்றுகூறி, இரண்டு ரூபாயையும் அவனிடம் கொடுத்தார்.

ஏழை ரூபாயைப் பெற்றுக்கொண்டு சென்ருன். அவர் கூறியபடியே ஒரு ரூபாய்க்கு உணவு வாங்கி மனைவி மக்களுக்குக் கொடுத்தான்; ஒரு ரூபாய்க்கு ஒரு கோடரியை வாங்கிக்கொண்டு அவரிடம் திரும்பி வந்தான். முகம்மது நபி அக்கோடரியை வாங்கினர்; தம் கையினலேயே ஒரு காம்பைச் சீவி அதில் கோத்தார்; அதை ஏழையிடம் கொடுத்து, "நீ இதை எடுத்துக்கொண்டு போ. நாள்தோறும் காட்டில் சென்று விறகு வெட்டு. அதை விற்று உன் மனைவி மக்களைக் காப்பாற்று. ஒரு மாதம் சென்ற பிறகு மறுபடியும் என்னிடம் வா" என்று கூறி அனுப்பினர்.

ஏழை கோடரியைப் பெற்றுக்கொண்டு சென்ருன்; அவர் சொன்னபடியே ஒருமாத காலம் செய்தான். ஒரு மாதம் கழிந்ததும் அவன் முகம்மது

நபியிடம் வந்தான்; அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றான். முகம்மது நபி அவனைக் கருணையோடு பார்த்தார்; "ஒரு மாத காலத்தை எவ்வாறு கழித்தாய்? இப்பொழுது எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டார்.

ஏழை அவரை நன்றியோடு வணங்கி, "ஐயனே! பிழைக்கும் வழியைக் காட்டி என்னை வாழ்வித்த உங்களை எவ்வாறு வாழ்த்துவேன்! உங்களால் நான் உழைப்பை அறிந்து உயர்வு அடைந்தேன். என் மனைவியும் மக்களும் வயிறார உண்டு சந்தோஷமாக இருக்கிறார்கள். உணவுக்கும் உடைக்கும் செலவழித்தது போக இதோ பத்து ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன்" என்று கூறி, பத்து ரூபாயை அவர் பாதங்களில் வைத்து வணங்கினான்.

முகம்மது நபி, "அன்பனே! நீ ஆண்டவனை வணங்கு. அவன் அருள்தான் உன்னை நல்வழிப் படுத்தியது. நீ இப்பொழுது உண்மையான உழைப்பின் உயர்வை அறிந்துகொண்டாய். வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்துப் பிழைப்பதைக் காட்டிலும் உடல் வருந்தி உழைத்து உண்டு வாழ்வது இன்பமாக இல்லையா? இப்பொழுது உன் மனைவி மக்கள் பட்டினி இல்லை. உனக்குக் கவலையில்லை. உழைப்பே உயர்வு தரும். உண்மையாக உழைப்பவர்களுக்கே ஆண்டவன் அருள் செய்வார். சந்தோஷமாகப் போ. கடவுள் உன்னைக் கைவிட மாட்டார்" என்று கூறி அனுப்பினார்.

மதம்	பட்டினி	காம்பு
இஸ்லாம்	பசி	பாதங்கள்
முகம்மது நபி	பிச்சை	நன்றி
பிச்சைக்காரன்	கலக்கம்	உழைப்பு
மனைவி	கவலை	சந்தோஷம்
மக்கள்	கோடரி	ஆண்டவன்

கேள்விகள்

1. முகம்மது நபி என்பவர் யார்?
2. பிச்சைக்காரனிடம் இருந்த பொருள்கள் யாவை?
3. முகம்மது நபி பிச்சைக்காரனுக்குச் செய்த உபதேசம் என்ன?
4. பிச்சைக்காரன் உழைப்பின் உயர்வை எவ்வாறு உணர்ந்தான்?
5. இக்கதையால் நீ தெரிந்து கொள்ளும் உண்மை என்ன?

பயிற்சி

1. இக்கதையை மவுனமாக வாசி.
2. இதனை முகம்மது நபி சொல்வதாகச் சொல்.
3. இதனைப் பிச்சைக்காரன் சொல்வதாகச் சொல்.
4. எதிர்ச்சொற்கள் சொல்: ஏழை, உயர்வு, தண்ணீர்.
5. நல்வழி, நன்றி, இன்பமாக, வயிறார—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.
6. ஒரே பொருள் உள்ள வேறு சொல் கூறு: பிச்சை, உண்மை, உணவு, அருள்.

7. பாதம், சந்தோஷம்—இவை சமஸ்கிருதச் சொற்கள்; அடி, மகிழ்ச்சி—இவை தமிழ்ச் சொற்கள்.

பாதம் என்னும் சொல் வரும் இடங்களில் அடி என்னும் சொல்லையும், சந்தோஷம் என்னும் சொல் வரும் இடங்களில் மகிழ்ச்சி என்னும் சொல்லையும் வைத்து வாசி.

8. கீழுள்ள வாக்கியங்களில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள்கள் வரிசை தப்பி இருக்கின்றன. அவற்றைச் சரியாக அமைத்து வாசி:

முகம்மது நபி உபதேசித்தார் உண்மைகளை.
பெற்றுக்கொண்டான் ஏழை ரூபாயை.
முகம்மது நபியை வணங்கினான் ஏழை.

9. இப்பாடத்தில் முதல் பாராவில் உள்ள உயிரெழுத்துக்களைச் சொல்.

10. மெய்யெழுத்துக்கள் மூன்று சொல்.

11. உயிர் மெய்யெழுத்துக்கள் ஐந்து சொல்.

12. பசி—இதில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களை உயிர் வேறு மெய் வேறாகப் பிரித்துச் சொல்.

13. கடைசிப் பாராவிலிருந்து உயிரெழுத்தை முதலிலே உடைய சொற்களைப் பொறுக்கிச் சொல்.

14. அவற்றை அகர வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாக எழுது.

5. பொது நலப் பணியாளர்

நம்முடைய நல்வாழ்வுக்காக உழைப்பவர்கள் பலர். அவர்கள் பொதுநலப் பணியாளர் எனப்படுவர். நாம் அவர்களுடைய வேலைகளையும், அவர்கள் எவ்வாறு நமக்காக உழைக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

படத்தில் ஒருவர் தெருவைப் பெருக்கிக் குப்பைகளைக் குவிக்கிறார். ஒருவர் குவித்த குப்பைகளைக் கூடைகளில் எடுத்து வண்டியில் சேர்க்கிறார். ஒருவர் குப்பை வண்டியை ஓட்டுகிறார். இவர்கள் தோட்டிகள் எனப்படுவர். பொது இடங்களைச் சுத்தம் செய்வது இவர்கள் வேலையாகும்.



இவர்கள் தெருக்களையும் சாலைகளையும் நாள் தோறும் பெருக்கி, குப்பைகளை வண்டிகளில் கொண்டுபோய் வெளியில் சேர்ப்பார்கள். தெருக்களில் குப்பைகள் சேர்ந்தால் அவற்றிலிருந்து பல நோய்கள் தோன்றிப் பரவும். ஆகவே நாம் வீட்டைப் போலவே தெருவையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் போடக் கூடாது; குப்பைத் தொட்டிகளிலேயே போட வேண்டும். தெருக்களில் மல ஜலம் கழிக்கக் கூடாது. சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால்தான் நாம் சுக வாழ்வு வாழ முடியும்.

இவர் சுகாதார அதிகாரி. இவர் பொது இடங்கள் சுத்தமாக இருக்கின்றனவா என்று மேற்

பார்வை செய்வார்; தொற்று நோய்கள் உண்டாகாதபடி பொது இடங்களிலும், குடிநீர் நிலைகளிலும் மருந்து போடுவார்; காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் உண்டானால் அவற்றைப் பரவாதபடி தடுப்பார். பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பது இவர் வேலையாகும். நாம் இவர் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு அவற்றின்படி நடந்துகொள்ள வேண்டும். நாம் அசுத்தமான இடங்களில் சஞ்சரிக்கலாகாது; அசுத்தமான பண்டங்களைத் தின்னலாகாது; அசுத்தமான நீரைக் குடிக்கக் கூடாது.

இவர் அம்மை குத்துபவர். இவர் ஒரு குழந்தைக்கு அம்மை குத்திக் கொண்டிருக்கிறார். இவர் கிராமம் கிராமமாகவும், தெருத்தெருவாகவும் சென்று, சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அம்மை குத்துவார். எங்கேயாவது பெரியம்மை நோய் தோன்றினால் இவர் உடனே அங்குச் சென்று மக்கள் எல்லோர்க்கும் அம்மை குத்துவார்.



இவர் அவ்வாறு செய்யாவிட்டால் மக்கள் பெருவாரியாகப் பெரியம்மைக்குப் பலியாவார்கள். நாம் நம்முடைய குழந்தைகளுக்குத் தப்பாமல் அம்மை குத்தவேண்டும். நாமும் சில வருஷங்களுக்கு ஒரு முறை அம்மை குத்திக் கொள்ள வேண்டும்.

இவர் வைத்தியர். இவர் வேலை செய்யும் இடம் வைத்திய சாலை எனப்படும். இவர் காலையிலும் மாலையிலும் வைத்திய சாலையில் இருந்து கொண்டு

வரும் நோயாளிகளைச் சோதித்து, அவர்களுக்கு மருந்து கொடுப்பார். நமக்கு ஏதாவது நோய் உண்டானால் நாம் உடனே வைத்தியரிடம் செல்ல வேண்டும். அவர் கொடுக்கும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். அவர் கூறும் ஆலோசனைப் படி நடந்து கொள்ள வேண்டும். வியாதியை அலட்சியம் செய்யக் கூடாது.



இவர் விவசாய அதிகாரி. இவர் விவசாயப் பண்ணைகளை வைத்து, அவற்றில் பல சோதனைகளைச் செய்வார்; விவசாயத்திற்கு உரிய நூதன கருவிகளையும், நவீன முறைகளையும் கண்டு பிடித்து உதவுவார்; இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற பயிர் வகைகளையும், குறைந்த காலத்தில் மிகுந்த விளைவைப் பெறும் முறைகளையும் அறிந்து விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுவார். இவர் கூறும் ஆலோசனைப்படி விவசாயிகள் நடந்து கொண்டால் விவசாயத் தொழில் விரைவில் முன்னேற்றம் அடையும். நாம் விவசாயத்தில் புதிய முறைகளை மேற்கொள்ளா விட்டால் நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்காது.



இவர் தபால்காரர். இவர் ஒவ்வொரு நாளும்

வீடு வீடாகச் சென்று, அவர்களுக்கு வந் துள்ள கடிதங்களைக் கொடுப்பார். இவர் தந்தி களையும், மணியார்டர்களையும் கொண்டு வருவார். தபால்காரர் இல்லா விட்டால் வெளியூர்களில் உள்ளவர்களைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குக் கிடைக்காது.

இவர் போலீஸ்காரர். நகரங் களையும், கிராமங்களையும் பாது காப்பது இவர் வேலையாகும். இவர் கலகம், களவு போன்ற கொடுமைகள் நேராதபடி பொது அமைதியைப் பாதுகாக்கிறார். இவர் இராக் காலங் களில் தெருத் தெருவாகச் சுற்றி, திருட்டு, கொள்ளை முதலியவை நட வாதபடி காப்பார்; கொண்டாட்டங் கள், திருவிழாக்கள் நடக்கும் சமயங் களில் மக்களிடையே ஒழுங்கை நிலை நிறுத்தி, கலகமும் குழப்பமும் உண் டாகாதவாறு பாதுகாப்பார். இவர் இல்லாவிட்டால் மக்கள் அச்சம் இல் லாமல் அமைதியாக வாழ முடியாது.

பெரிய நகரங்களில் இவர் சாலைகள் கூடும் சந்தி களில் நின்றுகொண்டு, மக்களையும் வண்டிகளையும் ஒழுங்காகச் செல்லும்படி செய்கிறார். இவர் அவ் வாறு செய்யாவிட்டால் பல விபத்துக்கள் நேரும். நாம் இவர் சொல்லுகிறபடி நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு பலர் நமக்காக உழைக்கிறார்கள்; நம்முடைய நல் வாழ்வுக்கு ஒவ்வொரு வகையில்

உதவி செய்கிறார்கள். நாம் அவர்களுக்கு வேண்டும் உதவிகளைச் செய்யவேண்டும். அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாகச் செய்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவர்கள் பணியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

நல்வாழ்வு	மேற்பார்வை	அம்மை
கொலை	பணியாளர்	தொற்று நோய்
பெரியம்மை	கலகம்	விவசாயம்
குழப்பம்	தோட்டி	காலரா
முன்னேற்றம்	அச்சம்	பிளேக்
பஞ்சம்	விபத்துக்கள்	குப்பைத்தொட்டி
கொள்ளை நோய்	கடிதங்கள்	வைத்தியர்
மலஜலம்	சுகாதாரம்	தபால்காரர்
நோயாளி	சுற்றுப்புறம்	ஆலோசனை
போலீஸ்காரர்	வியாதி	அலட்சியம்
களவு	நேர்மை	பண்ணை

கேள்விகள்

1. தோட்டிகள் என்ன செய்வார்கள்?
2. சுகாதார அதிகாரியின் வேலைகள் யாவை?
3. அம்மை நோய் வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?
4. வைத்தியர் வேலை செய்யும் இடத்திற்குப் பெயர் என்ன?
5. விவசாய அதிகாரி நமக்கு எப்படி உதவி செய்கிறார்?
6. வெளியூர்ச் செய்திகள் நமக்கு எவ்வாறு கிடைக்கின்றன?
7. போலீஸ்காரர் நமக்கு எவ்வாறு உதவி செய்கிறார்?

பயிற்சி

1. பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்:

நாள்தோறும், மேற் பார்வை, முன்னேற்றம், ஒத்துழைக்க, பொது நலம், நல்வாழ்வு.

2. போலீஸ்காரர் இல்லாவிட்டால் மக்கள் அமைதியாக வாழ முடியாது—இந்த வாக்கியத்தை, 'போலீஸ்காரர் இருந்தால்தான் மக்கள் அமைதியாக வாழமுடியும்' என்றும் மாற்றிச் சொல்லலாம்.

3. பின்வரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றிச் சொல்:

தபால்காரர் இல்லாவிட்டால் வெளியூர்களில் உள்ளவர்களைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குக் கிடைக்காது.

விவசாயத்தில் புதிய முறைகளைக் கையாளாவிட்டால் நாட்டில் உணவுப் பஞ்சம் நீங்காது.

4. 'சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தால்தான் நாம் சுகவாழ்வு வாழ முடியும்'—இந்த வாக்கியத்தை, 'சுற்றுப்புறம் சுத்தமாக இல்லா விட்டால் நாம் சுகவாழ்வு வாழ முடியாது' என்று மாற்றலாம்.

5. பின் வரும் வாக்கியத்தை இவ்வாறு மாற்றிச் சொல்:

இவர் கூறும் ஆலோசனைப்படி விவசாயிகள் நடந்து கொண்டால் விவசாயத்தொழில் விரைவில் முன்னேற்றம் அடையும்.

6. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைச் சொல்:

தபால்காரர் கடிதங்களைக் கொடுப்பார்.
வைத்தியர் நோயாளிகளைச் சோதிப்பார்.

7. கீழ்வரும் தொடர்களைப் பிரித்துச் சொல்:
மேற் பார்வை, முன்னேற்றம்.

8. கோடரி, கிராமம், மாதம், கை, உண்மை, உழைப்பு—இவை பெயர்ச் சொற்கள்.

இவற்றுள் கோடரி என்பது ஒரு பொருளின் பெயரைக் குறிக்கிறது. இது பொருட் பெயர்.

கிராமம் என்பது ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கிறது. இது இடப் பெயர்.

மாதம் என்பது ஒரு காலத்தின் பெயரைக் குறிக்கிறது. இது காலப் பெயர்.

கை என்பது ஒரு சினையின் (உறுப்பின்) பெயரைக் குறிக்கிறது. இது சினைப் பெயர்.

உண்மை என்பது ஒரு பண்பின் (குணத்தின்) பெயரைக் குறிக்கிறது. இது பண்புப் பெயர்.

உழைப்பு என்பது ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கிறது. இது தொழிற் பெயர்.

பெயர்ச் சொல் பொருட் பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என ஆறுவகைப் படும்.

9. இப் பாடத்தில் உள்ள பொருட் பெயர்களைச் சொல்.

10. ,, இடப் பெயர்களைச் சொல்.

11. ,, காலப் பெயர்களைச் சொல்.

12. ,, சினைப் பெயர்களைச் சொல்.

13. குப்பை, தெரு, நாள், பாதம், நேர்மை, குழப்பம்—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்னின்ன பெயர் என்று சொல்.

6. அறிவுள்ள பசு

மேலூர் என்பது ஒரு பெரிய கிராமம். அவ்வூரில் ஒரு பெருமாள் கோவில் உண்டு. அக்கோவிலில் இரண்டு பசுக்கள் இருந்தன. ஒன்று வெள்ளைப் பசு ; மற்றொன்று கறுப்புப் பசு. அவை ஒன்று மாறி ஒன்று கறக்கும். அவற்றின் பாலைச் சுவாமி பூஜைக்கு உபயோகப்படுத்துவார்கள். அவ்விரண்டு பசுக்களும் அழகாக இருக்கும்.

அவற்றுள் வெள்ளைப் பசு மிகவும் அழகானது. அது கறுப்புப் பசுவை விட மிகவும் சாது ; நல்ல அறிவு உள்ளது. இளஞ் சிறுவர்களும் அஞ்சாமல் அதைத் தொட்டுத் தடவிக்கொடுத்து வந்தார்கள். எல்லோரும் அதனிடம் அன்பாக இருந்தார்கள். கிராம ஜனங்கள் அதை அன்போடு அழைப்பார்கள் ; அது பக்கத்தில் வந்து நிற்கும் ; அதன்

முகத்தைக் கழுவி மஞ்சள் குங்குமம் இடுவார்கள்; அதற்குச் சோறும் பக்ஷணமும் கொடுப்பார்கள். அது தினந்தோறும் வீடுவீடாக வரும்; அவரவர்கள் கொடுப்பதைச் சாப்பிட்டுவிட்டுப் போகும். அதற்கு அவ்வூரில் எல்லா வீடுகளும் தெரியும். அது எல்லோரையும் அடையாளம் கண்டு கொள்ளும்.

அப்பசு ஒரு நாள் வெளியில் மேயப் போயிற்று. சில கெட்ட பிள்ளைகள் கூடிக்கொண்டு அதைத் துரத்தினார்கள். அது வேகமாக ஓடி வந்தது. வரும் வழியில் அது கால் இடறிக் கீழே விழுந்தது. அங்கு இருந்த ஒரு கூரான கல் அதன் காலில் ஆழமாக வெட்டிவிட்டது. வெட்டுவாயிலிருந்து இரத்தம் பெருகியது. பாவம்! அது நோய் தாங்காமல் 'ஓ' என்று கத்தியது. பிள்ளைகள் பயந்து ஓடிவிட்டார்கள். அது மெல்ல எழுந்தது; நொண்டிக்கொண்டே ஊருக்கு வந்தது.

அந்த ஊரில் ஓர் இரண வைத்தியர் இருந்தார். அந்தப் பசுவுக்கு அவர் வீடு தெரியும். அவர் காயம் பட்டவர்களுக்குக் கட்டுக் கட்டும்போது அது பல முறை பார்த்து இருக்கிறது. ஆகவே அது மெல்ல நடந்து வந்து அவர் வீட்டுத் தெருவில் படுத்துக் கொண்டு கத்தியது. அப்போது வைத்தியர் வீட்டில் இல்லை. பசுவின் கத்தலைக் கேட்டு ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்கள் அதற்குப் பழமும் பக்ஷணமும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அது அவற்றைத் தொடக்கூட இல்லை; எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. அவர்கள் அதன் காலைக் கவனிக்கவில்லை. அதனால் அவர்கள் ஏதாவது விஷக்கடியோ என்று சந்தேகப்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில் வெளியில் போயிருந்த வைத்தியர் வந்தார். அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "என்ன கூட்டம்?" என்று கேட்டார். பசு வைத்தியர் குரலைக் கேட்டுவிட்டது. உடனே அது 'அம்மா!' என்று கதறியது. வைத்தியர் வேகமாக அதன் அருகில் வந்தார். பசு அவரைப் பார்த்தது. அவர் காலில் முகத்தை வைத்துக் கொண்டு மறுபடியும் கத்தியது. அதன் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டு இருந்தது. அது தன் காயம்பட்ட காலை வைத்தியர் முன் நீட்டியது. வைத்தியர் அதன் காலில் காயம்பட்டிருப்பதைக் கண்டார். வாயில்லாத பிராணி நோயால் துடி துடிப்பதை வைத்தியர் பார்த்தார். அவர் வீட்டினுள் சென்று மருந்துப் பையை எடுத்து வந்தார்; இரத்தத்தைத் துடைத்தார்; காயத்தைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினார். அன்று பகல் முழுதும் அது கண்ணைத் திறக்கவே இல்லை; வலி தாங்காமல் மயங்கிக் கிடந்தது. அன்று மாலை வைத்தியர் ஆத்திக்கீரையும் புல்லும் கொண்டு வந்து கொடுத்தார். பசு மெல்ல அவற்றில் சிறிது தின்றது.

மறுநாள் காலையில் வைத்தியர் பசுவின் கட்டை அவிழ்த்தார்; மறுபடியும் புது மருந்து வைத்துக் கட்டினார். அன்று அதற்கு வலி சிறிது குறைந்து இருந்தது. ஊரார் தவிடும் சோறும் கொண்டுவந்து கொடுத்தனர். அது அவற்றைத் தின்றது. பிறகு மெல்ல எழுந்து நடந்தது; நொண்டிக்கொண்டே கோவிலுக்குப் போயிற்று; அங்குத் தன் கன்றையும், கறுப்புப் பசுவையும் கண்டு கண்ணீர் விட்டது. அவற்றிற்குத் தன் காயம்பட்ட காலைக் காட்டிற்று.

அது தினந்தோறும் வைத்தியர் வீட்டுக்கு வந்தது. அவர் நாள்தோறும் அதற்கு மருந்து வைத்துக் கட்டி வந்தார். அவ்வாறு ஒரு வாரம் நடந்தது. அந்நாள்களில் அதனுல் வெளியில் சென்று மேய முடியவில்லை. அதனுல் அது வீடு வீடாகப் போய் ஆகாரம் வாங்கிச் சாப்பிட்டு வந்தது. மக்கள் புல், கீரை, தவிடு, சோறு முதலிய வற்றை அன்போடு அதற்குக் கொடுத்து வந்தார்கள். ஒரு வாரத்தில் அதன் காயம் முழுதும் ஆறி விட்டது. அது நன்ருக நடக்க ஆரம்பித்தது. பிறகு அது முன்போலவே நடந்து வந்தது.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அதனிடம் மக்களுக்கு அன்பு அதிகம் ஆயிற்று. அதன் அறிவை மக்கள் புகழ்ந்தார்கள். அவர்கள் அதைத் 'தெய்வப் பசு' என்று கொண்டாடிஞர்கள்.

பெருமாள்	அறிவு	குங்குமம்
பக்ஷணம்	அடையாளம்	இரண வைத்தியர்
காயம்	விஷக்கடி	கண்ணீர்
சம்பவம்	அஞ்சாமல்	வெட்டுவாய்

கேள்விகள்

1. வெள்ளைப் பசு எப்படிப்பட்டது?
2. பசுவின் காலில் காயம் உண்டானது ஏன்?
3. பசு காயம் பட்டபின் என்ன செய்தது?
4. பசு காயத்தை எவ்வாறு ஆற்றிக்கொண்டது?
5. மக்கள் அதைத் 'தெய்வப் பசு' என்று கொண்டாடியது ஏன்?

பயிற்சி

1. இதை மவுனமாக வாசி.

2. இந்தச் சம்பவத்தைப் பசு சொல்வதாகச் சொல்.

3. ,, வைத்தியர் சொல்வதாகச் சொல்.

4. உனக்குத் தெரிந்த இது போன்ற சம்பவம் ஒன்றைச் சொல்.

5. எதிர்ச் சொற்கள் கூறு: நல்ல, வேகமாக, புகழ்ந்தார்கள், அழகாக.

6. 1. வைத்தியர் இரத்தத்தைத் துடைத்தார்.
2. நீ ஏன் கவலைப்படுகிறாய்?
3. நான் என்ன செய்வேன்!

இவை வாக்கியங்கள். இவற்றுள்

1. முதலாவது ஒரு விஷயத்தைச் சொல்லு கிறது. இது போன்ற வாக்கியங்களின் கடைசியில் முற்றுப்புள்ளி (.) இடவேண்டும்.

2. இரண்டாவது கேள்வி கேட்கிறது. அதன் இறுதியில் கேள்வி அல்லது வினாக்குறி (?) இட வேண்டும்.

3. மூன்றாவது உணர்ச்சியைக் காட்டுகிறது. அதன் முடிவில் உணர்ச்சிக் குறி (!) இடவேண்டும்.

4. இவை எவ்வகைப் பெயர்ச் சொற்கள்?
பசு, வீடு, நாள், கால், வெள்ளை, ஈகை.

5. புகழ், தின், ஓடு, வா, கலங்கு, வாங்கு—இச்சொற்களிலிருந்து உண்டாகும் தொழிற் பெயர்களைச் சொல்.

7. தபால்

தந்தை : கண்ணா ! நான் தபால் ஆபீசுக்குப் போகிறேன் ; நீயும் வருகிறாயா ?

மகன் : அங்கு என்ன செய்யப்போகிறீர், அப்பா ?

தந்தை : மதுரையில் உள்ள உன் மாமனுக்குக் கடிதம் அனுப்பப் போகிறேன்.

மகன் : இங்கிருந்து அனுப்பும் கடிதம் மதுரைக்கு எப்படி அப்பா போய்ச் சேரும் ?

தந்தை : என்னோடு வா, காட்டுகிறேன்.

மகன் : அப்பா, இதோ 'தபால்—தந்தி ஆபீசு' என்று போர்டு போட்டிருக்கிறதே, இது தானே தபால் ஆபீசு ?

தந்தை : ஆம். வா, உள்ளே போகலாம்.

மகன் : அங்கு என்ன அப்பா அவ்வளவு கூட்டம் ?

தந்தை: மேலே 'ஸ்டாம்புகள் விற்கும் இடம்' என்று எழுதியிருக்கிறது பார். அங்குத் தபால் கார்டு, கவர், ஸ்டாம்புகள் எல்லாம் விற்பார்கள். அவர்கள் ஸ்டாம்புகள் வாங்குவதற்காகக் கூடியிருக்கிறார்கள். அவர்கள் அறியாமையால் அவ்வாறு கூட்டம் கூடிக் குழப்பம் செய்கிறார்கள். அது தவறு. ஒருவர்பின் ஒருவர் வரிசையாக நின்று ஒவ்வொருவராக வாங்க வேண்டும்.



மகன்: அப்பா, அதோ ஒருவர் எழுதிக் கொண்டு இருக்கிறாரே, அவர் என்ன எழுதுகிறார்?

தந்தை: அவர் கடிதம் எழுதுகிறார். நீ இங்கு இரு. நான் ஒரு கார்டு வாங்கி எழுதிக்கொண்டு வருகிறேன்.



மகன்: எழுதிய பிறகு கார்டை என்ன செய்ய வேண்டும்?

தந்தை: இதோ பார். இது தபால் பெட்டி. நாம் எழுதிய கடிதங்களைத் தபால் பெட்டியில் போட வேண்டும்.

மகன்: பிறகு அக்கடிதம் என்ன ஆகும்?

தந்தை: அதோ தபால் சேவகர் வருகிறார். அவர் என்ன செய்கிறார் பார்.

மகன் : ஆம் அப்பா. அவர் தபால் பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்துக் கொண்டு போகிறார்.

தந்தை : இந்த ஜன்னல் வழியாக உள்ளே பார். அங்கு என்ன செய்கிறார்கள் ?

மகன் : கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்கள்.

தந்தை : பிறகு என்ன நடக்கிறது என்பதைப் பார்.

மகன் : தபால் பைகளை எடுத்துக் கொண்டு போய் வண்டியில் ஏற்றுகிறார்கள். இந்த வண்டியே நேராக மதுரைக்குப் போகுமா, அப்பா ?

தந்தை : இதில் மதுரைக்குப் போகும் கடிதங்கள் மாத்திரம் இல்லை. பல ஊர்களுக்குப் போக வேண்டிய கடிதங்களும் இருக்கின்றன. அவற்றை இரயில் நிலையத்திற்குக் கொண்டுபோவார்கள்.

மகன் : அங்கு அவற்றை என்ன செய்வார்கள் ?

தந்தை : வா, இரயில் ஸ்டேஷனுக்குப்

போவோம். அங்கு என்ன செய்கிருர்கள் என்பதைக் காட்டுகிறேன்.

மகன் : அப்பா, இதோ இரயில் வருகிறது அப்பா !

தந்தை : மேடையின் ஓரத்தில் நிற்காதே. ஒதுங்கி நில். இந்த வண்டியைப் பார். இது தான் தபால் வண்டி. தபால் சேவகர் தபால் ஆபீசிலிருந்து கொண்டு வந்த பைகளைக் கொடுத்துவிட்டு வேறு பைகளை வாங்கிக் கொள்ளுகிருர், பார்.

மகன் : தபால் சேவகர் அந்தப் பைகளை ஏன் வாங்கிக் கொள்ளுகிருர் ?

தந்தை : அவைகளில் வேறு இடங்களிலிருந்து இந்த ஊருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் இருக்கின்றன. தபால் வண்டியின் உள்ளே பார். அங்கு இருப்பவர்கள் என்ன செய்கிருர்கள் ?

மகன் : அவர்கள் தபால் சேவகர் கொண்டு வந்து கொடுத்த பைகளை அவிழ்த்து, கடிதங்களைப் பிரித்து வெவ்வேறு அறைகளில் அடுக்குகிருர்கள். ஏன் அப்பா அப்படிச் செய்கிருர்கள் ?

தந்தை : ஒவ்வொரு தபாலாபீசிலிருந்தும் வரும் பைகளில் வெவ்வேறு ஊர்களுக்குப் போக வேண்டிய கடிதங்கள் இருக்கும் அல்லவா ? இவர்கள் அக்கடிதங்களை ஊர்வாரியாகப் பிரித்து அடுக்கிக் கொண்டே போவார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அதைச் சார்ந்த இடங்களுக்குப் போக

வேண்டிய கடிதங்களைப் பையில் இட்டுக் கட்டிக் கொடுத்து விடுவார்கள்.

மகன் : தபால் சேவகர் வாங்கிக் கொண்ட பைகளை என்ன செய்வார், அப்பா ?

தந்தை : அவர் அந்தப் பைகளைத் தபால் ஆபீசுக்குக் கொண்டு போவார். வா, நாம் மறுபடியும் தபால் ஆபீசுக்குப் போவோம் ; அங்கு என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

மகன் : அப்பா, தபால் வண்டியும் இப்பொழுதுதான் வருகிறது. தபால் சேவகர் பைகளை எடுத்து வருகிறார்.

தந்தை : உள்ளே பார். அவற்றை என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனி.

மகன் : பைகளை அவிழ்த்துக் கடிதங்களை எடுக்கிறார்கள் ; கடிதங்களில் முத்திரை அடிக்கிறார்கள ; முத்திரை இட்ட கடிதங்களை வேறு வேறாகப் பிரித்து அடுக்குகிறார்கள். ஏன் அப்பா, அப்படிச் செய்கிறார்கள் ?

தந்தை : அவற்றில் வெவ்வேறு தெருவில் உள்ளவர்களுக்குச் சேர வேண்டிய கடிதங்களும் கலந்திருக்கும் அல்லவா ? அவர்கள் அவற்றைத் தெருவாரியாகப் பிரித்து எடுக்கிறார்கள். பிரித்து எடுத்த கடிதங்களை ஒவ்வொரு தபால்காரரும் எடுத்துக்கொண்டு தெருத் தெருவாகப் போய் வீடுவீடாகக் கொடுப்பார்.

மகன் : ஆம் அப்பா, அதோ தபால்காரர்கள் கடிதங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார் கள். நம் தெருவுக்கு வரும் தபால்காரர்கூட அதோ போகிருர். அப்பா, தந்தி ஆபீசு எங்கு இருக்கிறது?

தந்தை : அதோ 'தந்தி அனுப்பும் இடம்' என்று எழுதியிருக்கிறது, பார். அதுதான் தந்தி ஆபீசு. மிகவும் அவசரமான செய்தியாக இருந் தால் தந்தி அனுப்புவார்கள். அது சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடும்.

மகன் : அப்பா, அதோ 'மணியார்டர் செய் யும் இடம்' என்று எழுதியிருக்கிறதே, அது என்ன?

தந்தை : அது பணம் அனுப்பும் இடம். கடி தத்தைப் போலவே பணத்தையும் வெளியூரில் உள்ளவர்களுக்கு அனுப்பலாம். அதற்கு மணி யார்டர் என்பது பெயர்.

மகன் : பதிவு செய்வது என்ருல் என்ன அப்பா? அதோ 'பதிவு செய்யும் இடம்' என்று எழுதியிருக்கிறதே, அங்கு என்ன செய்வார்கள்?

தந்தை : நாம் அனுப்பும் கடிதமோ, பொருளோ பத்திரமாகப் போய்ச் சேரவேண்டு மாஞல் பதிவு செய்து அனுப்ப வேண்டும். பதிவு செய்து அனுப்பிஞல் தப்பாமல் போய்ச் சேரும். போய்ச் சேர்ந்ததற்கு அடையாளமாகப் பெற்றுக் கொண்டவர்கள் கையெழுத்திட்ட சீட்டு நமக்குத் திரும்பிவரும். பதிவு செய்த தபாலைப் பெற்றுக் கொண்டவர்கள் பிறகு இல்லை என்று ஏமாற்ற முடி யாது. அங்கு என்ன எழுதியிருக்கிறது, பார்.

மகன் : 'சேவிங்ஸ் பாங்க்' என்று எழுதி யிருக்கிறது. அது என்ன அப்பா? அங்கு என்ன நடக்கிறது?

தந்தை : அது சேமிப்பு நிதி. மக்கள் தங்கள் செலவு போக மிகுந்த பணத்தை அதில் சேர்த்து வைப்பார்கள். வேண்டும்போது திரும்ப வாங்கிக் கொள்வார்கள். பணத்தைக் கையில் வைத்திருந் தால் செலவழிந்து விடும் அல்லவா ? ஏழைகளுக்கு இந்த நிதி மிகவும் உபகாரமாக இருக்கிறது.

மகன் : அப்பா, தபால் போக்கு வரவு எப்படி நடக்கிறது என்பது எனக்கு நன்ருக விளங்கிவிட் டது. தபால் ஆபீசால் மக்கள் அடையும் நன்மை களேயும் தெரிந்து கொண்டேன்.

தந்தை : அதற்காகவே உன்னே அழைத்து வந்தேன். வா, வீட்டிற்குப் போவோம்.

தபால் ஆபீசு	ஸ்டேஷன்	பதிவு
ஸ்டாம்புகள்	தபால் வண்டி	பத்திரமாக
அறியாமை	வெவ்வேறு	அடையாளம்
கவர்	அவசரமான	சேவிங்ஸ் பாங்க்
தபால் பெட்டி	செய்தி	சேமிப்பு நிதி
இரயில் நிலேயம்	மணியார்டர்	செலவு
போக்கு வரவு	கையெழுத்து	உபகாரம்

கேள்விகள்

1. தபால் பெட்டியில் போடப்படும் கடிதங்களே என்ன செய்கின்றனர் ?

2. இரயிலில் உள்ள தபால் உத்தியோகஸ்தர்களின் வேலே என்ன ?

3. இரயிலிலிருந்து வரும் தபால் பைகளேத் தபால் ஆபீஸில் என்ன செய்கிருர்கள் ?

4. அவசரச் செய்தி அனுப்புவதற்கு என்ன ஏற் பாடு உள்ளது ?

5. தபால் ஆபீஸில் நடைபெறும் வேலேகள் யாவை?

பயிற்சி

1. உங்கள் ஊர்த் தபாலாபீஸ் எங்குள்ளது, சொல்.

2. அங்கிருந்து தபால் எப்படிச் செல்கிறது, சொல்.

3. உங்கள் ஊர்த் தபாலாபீஸைப் பார்த்து அங்கு நடப்பவைகளைச் சொல்.

4. வெவ்வேறு அவசரமான, பத்திரமாக, அடையாளம், பேரக்கு வரவு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

5. இப்பாடத்தில் வந்துள்ள ஆங்கிலச் சொற்களைச் சொல். அவற்றிற்குத் தமிழ்ச் சொல் தெரிந்துகொள்.

6. வெவ்வேறு தனி வாக்கியங்களாகப் பிரித்துச் சொல் :

> கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்.
>
> பைகளை அவிழ்த்துக் கடிதங்களை எடுக்கிறார்கள்.

7. ஒரு வாக்கியமாகச் சேர்த்துச் சொல் :

> அவர் தபால் பெட்டியைத் திறக்கிறார். அவர் கடிதங்களை எடுத்துக்கொண்டு போகிறார்.

8. தமிழ்மொழி, இஸ்லாம், தபால் பெட்டியில், முத்திரை, வேகமாக—இவற்றைக் கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமாக வைத்து வாசி :

> முகம்மது நபி——மதத்தைப் புதுப்பித்தார்.
> ——நமக்குத் தாய்மொழி ஆகும்.
> எழுதிய கடிதத்தை——போடவேண்டும்.
> தபால் சேவகர் கடிதங்களுக்கு —— அடிப்பார்.
> பசு——ஓடி வந்தது.

9. இரயில் வருகிறது—இது வாக்கியம். இது முடிவான கருத்தைத் தெரிவிக்கிறது. இதில் 'இரயில்' என்பது எழுவாய்; 'வருகிறது' என்பது பயனிலை. இந்த வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு

செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியம் அமைவது உண்டு.

10. இந்த வண்டியைப் பார்—இது ஒரு வாக்கியம். இதுவும் முடிவான கருத்தைத் தெரிவிக்கிறது. இதில் 'பார்' என்பது பயனிலை; 'வண்டியை' என்பது செயப்படுபொருள். இந்த வாக்கியத்தில் எழுவாய் இல்லை. 'நீ' என்னும் எழுவாய் மறைந்திருக்கிறது. இவ்வாறு சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்பதும் உண்டு.

11. இந்தப் பாடத்திலிருந்து செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் மூன்று சொல்.

12. எழுவாய் மறைந்து நிற்கும் வாக்கியங்கள் மூன்று சொல்.

13. மறைந்து நிற்கும் எழுவாயைச் சேர்த்து வாசி:

(1) அதற்காகவே உன்னை அழைத்து வந்தேன்.

(2) கடிதங்களை முத்திரை இட்டுப் பைகளில் கட்டுகிறார்கள்.

(3) அங்கு என்ன செய்யப்போகிறீர்?

8. காடு

மிக்க நலமுடைய மரங்கள்—பல
விந்தைச் சுவையுடைய கனிகள்—எந்தப்
பக்கத்தை யும்மறைக்கும் வரைகள்—அங்குப்
பாடி நகர்ந்து வரும் நதிகள்.

நெஞ்சில் கனல்மணக்கும் பூக்கள்—எங்கும்
நீளக் கிடக்கும் இலைக் கடல்கள்—மதி
வஞ்சித் திடும்அகழிச் சுனைகள்—முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள்.

ஆசை பெறவிருக்கும் மான்கள்—உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள்—நல்ல
நேசக் கவிதைச் சொல்லும் பறவை—அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு.

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத்தி னில்கலங்கும் யானை—அதன்
முன்னின்று ஓடும்இள மான்கள்—இவை
முட்டாது அயல்பதுங்கும் தவளை.

—பாரதியார்

பயிற்சி

1. நலம் - அழகு. விந்தை - அற்புதம். சுவை - ருசி. கனி - பழம். வரை - மலை. நதி - ஆறு—இவ்வாறு கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்.

கனல், மணம், கடல், மதி, அகழி, மண்டி, உள்ளம், நேசம், கவிதை, இச்சை, சத்தம், அயல்.

2. சுவை, மணம், நேசம்—இவை பெயர்ச் சொற்கள். இவற்றிலிருந்து சுவைத்தான், மணக்கும், நேசித்தார் என்னும் சொற்கள் உண்டாகும். இவை வினைச்சொற்கள். இவ்வாறே சில பெயர்ச்சொற்களி லிருந்து வினைச்சொற்கள் உண்டாக்கலாம்.

3. புகழ், உதவி, உபதேசம், பசி—இப்பெயர்ச் சொற்களிலிருந்து உண்டாகும். வினைச்சொற்களைச் சொல்.

4. உண்மையாக உழைப்பவர்களுக்கே ஆண்டவன் அருள் செய்வார். இவ்வாக்கியத்தை உண்மை யாக உழைக்காதவர்களுக்கு ஆண்டவன் அருள் செய்யமாட்டார் என்று மாற்றினாலும் பொருள் மாறு படாது.

5. பின்வரும் வாக்கியங்களை இவ்வாறு மாற்றிச் சொல் :

பொய் சொல்லாதவர்களுக்கே புகழ் உண்டாகும்.
கல்வி கற்றவர்களுக்கே மக்கள் பெருமை செய்வர்.
அழுத குழந்தைக்கே பால் கிடைக்கும்.
செல்வம் உள்ளவனே சிறப்பாக வாழ்வான்.

6. மேலூரில் பெருமாள் கோவில் உண்டு—இவ் வாக்கியத்தை, மேலூரில் பெருமாள் கோவில் உண்டா?' என்று மாற்றி அமைத்தால் இது வினு (கேள்வி) வாக்கியமாகும்.

7. கீழ்வரும் வாக்கியங்களைக் கேள்விகளாக மாற்று:

இரயில் வருகிறது.
அது பணம் அனுப்பும் இடம்.
இவர் தபால்காரர்.
உண்மை உயர்வு தரும்.

8. உனக்குத் தபாலாபீஸ் உள்ள இடம் தெரியுமா?

9. கார்டு எங்குக் கிடைக்கும்?

10. கடிதத்தை ஏன் தபால் பெட்டியில் போட வேண்டும்?

11. இந்த வண்டியே மதுரைக்குப் போகுமோ?

12. தபால் கடிதங்களைக் கொண்டு கொடுப்பவர் யார்?

இவையெல்லாம் கேள்விகள் அல்லது வினுக்கள். கேள்வி கேட்க உபயோகப்படும் எழுத்துக்கள் ஆ, எ, ஏ, ஓ, யா என்பன. இவற்றுள் ஆ, ஓ என்னும் இரண்டு எழுத்துக்களும் சொல்லுக்குக் கடைசியில் வரும். எ, யா என்னும் இரண்டு எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வரும். ஏ என்னும் எழுத்து சொல்லுக்கு முதலிலும் கடைசியிலும் வரும்.

9. அயலான் யார்?

நமது நாட்டின் பழமையான மதம் இந்து மதம் ஆகும். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்துக்கள் எனப்படுவர். இப்பொழுது இந்துக்களைத் தவிர வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் நம் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களுள் முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் முக்கியமானவர்கள். முகம்மதியர்கள் பின்பற்றுவது இஸ்லாம் மதம். கிறிஸ்தவர்கள் அனுஷ்டிப்பது கிறிஸ்து மதம் ஆகும். இஸ்லாம் மதத்தைப் பரப்பியவர் முகம்மது நபி என்னும் பெரியார் ஆவர். கிறிஸ்து மதத்தை ஏசுநாதர் என்னும் மகான் தோற்றுவித்தார்.

ஏசுநாதர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பாலஸ்தீன நாட்டில் உள்ள எருசலேம் என்னும் நகரில் தோன்றினர். ஆண்டவன் அருளால்

அவருக்கு இளமையிலேயே ஞானோதயம் உண்டா யிற்று. அவர் தாம் பெற்ற ஞானத்தை உலக மக்க ளுக்கெல்லாம் உணர்த்த விரும்பினர்; மக்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்தி நல்லவர்களாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் தமது தெய்வீக சக்தியால் பல அரிய அற்புதங்களைச் செய்தார். மக்கள் அவர் பெருமையை உணர்ந்து பெருங்கூட்டமாக அவரைத் தொடர்ந்தார்கள். அவர் தம்மைத் தொடர்ந்து வரும் மக்களுக்குத் தெய்வ பக்தியையும், அன்பு மார்க்கத்தையும் போதித்தார்; அரிய உண்மைகளை எளிய கதைக ளாக எல்லோர்க்கும் புரியும்படி உபதேசித்து வந்தார்.

ஒரு நாள் ஏசுநாதர் தம் சீடர்களோடு ஓர் இடத்தில் அமர்ந்திருந்தார். அங்கு ஒரு நியாய வாதி வந்தார். அவர் ஏசுநாதரை நோக்கி, "மர ணம் அடைந்த பிறகு நற்கதி பெற நான் இப் பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

ஏசுநாதர், "நீ மனமார உன்னைக் கடவு ளுக்கே அர்ப்பணம் செய். எந்தக் காரியம் செய் தாலும் கடவுளைத் துதிப்பதை மறவாதே. உன் னைக் கருதுவதைப் போலவே அயலாரையும் கருது" என்று பதில் அளித்தார்.

நியாயவாதி மறுபடியும் "அயலார் என் றீர்களே, அவர்கள் யார்?" என்று கேட்டார். ஏசுநாதர் அதற்குப் பதிலாக ஒரு கதை சொன் னார்; அந்தக் கதையின் மூலமாக அயலார் யார் என்பதை உணரும்படிச் செய்தார்.

ஒரு சமயம் செல்வன் ஒருவன் தன் ஊரி

லிருந்து வேறோர் ஊருக்குச் செல்லப் புறப்பட்டான். அவன் சென்ற வழி காடும் மலையுமாக இருந்தது. அவன் அவ்வழியில் தனியனாகச் சென்று கொண்டிருந்தான். அந்தக் காட்டில் திருடர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அவ் வழிப்போக்கனைக் கண்டனர். அவனது தோற்றத்திலிருந்து அவன் ஒரு செல்வன் என்பதையும், அவனிடம் நிறையப் பணம் இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டனர்; உடனே கூட்டமாகக் கூடிவந்து அவனை வழி மறித்துத் தாக்கினர். அவன் தன்னைக் காத்துக் கொள்ளச் சிறிது நேரம் திருடர்களோடு போராடினான். ஆனால் ஒருவன் பலரை எவ்வளவு நேரம் எதிர்த்து நிற்க முடியும்? கடைசியில் திருடர்கள் அவனை நையப் புடைத்துக் காயப்படுத்தி வீழ்த்தி விட்டு அவனிடம் இருந்த பணத்தை யெல்லாம் கவர்ந்துகொண்டு காட்டிற்குள் புகுந்து மறைந்து விட்டனர். அவன் அவ்வழியிலேயே பேச்சு மூச்சற்றுப் பிணம் போல விழுந்து கிடந்தான்.

சிறிது நேரம் கழித்து அவ்வழியே ஒரு சாமியார் சென்றார். அவர் காயமுற்றுக் கிடந்த அம்மனிதனைக் கண்டும் அவனுக்கு உதவி செய்யாமல் காணாதவர் போல ஒதுங்கிச் சென்றுவிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் வேறொரு சாதாரண வழிப்போக்கன் அவ்வழியே சென்றான். அவனும் காயமுற்று மயங்கிக் கிடந்த அச்செல்வனைக் கண்டான். 'நமக்கேன் இந்தத் தொல்லை? இவனுக்கு உதவி செய்யப் போனால் அது நமக்கு ஆபத்தாக முடியும்' என்று எண்ணி விரைவாக அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றான்.

பிறகு மூன்ருவதாக அவ்வழியே வேருெருவன் வந்தான். அவன் வழியிடையில் புண்பட்டு விழுந்துகிடந்த அச்செல்வனைக் கண்டான். கண்டதும் அவன் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கி அருகில் சென்று பார்த்தான். அவன் அச்செல்வன் நிலையைக் கண்டு மனம் இரங்கி, அவனை எடுத்து மடிமேல் வைத்து, புண்களைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினுன். செல்வன் சிறிது மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்தான். பிறகு அவ்வழிப்போக்கன் அவனைத் தன் குதிரைமீது ஏற்றிக்கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்ருன். அங்கு அவனை ஒரு சத்திரத்தில் சேர்த்து வேண்டும் உதவிகளைச் செய்தான். மறு நாள் காலையில் அவன் சத்திரத் தலைவனிடம் வேண்டிய பணம் கொடுத்து அக்காயம் பட்டவனை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டுத் தன் ஊருக்குச் சென்ருன்.

இக் கதையைக் கூறி முடித்தபின் ஏசுநாதர் நியாயவாதியை நோக்கி, "இம்மூவரில் கள்ளரிடம் அகப்பட்டு அடிபட்ட செல்வனுக்கு நல்ல அயலான் யார்?" என்று கேட்டார்.

அதற்கு நியாயவாதி, "அவனுக்கு உதவி செய்த புண்ணியனுகிய மூன்ருவது மனிதனே" என்று பதிலளித்தார். ஏசுநாதர், "அவனைப் போலவே நீயும் பிறர்க்கு உதவி செய்" என்ருர்.

பழமை	நியாயவாதி	புண்பட்டு
பின்பற்று	தனியன்	அருகில்
மகான்	தோற்றம்	நிலைமை
அனுஷ்டி	வழிமறித்து	மயக்கம்
ஆண்டு	நையப்புடைத்து	தெளிந்து
ஞானோதயம்	சாமியார்	இரங்கி
நல்வழி	கவர்ந்து	உதவி
பெருமை	போராடி	கவனி
அர்ப்பணம்	வீழ்த்தி	புண்ணியன்
உபதேசம்	புகுந்து	அளித்தார்
மரணம்	காயமுற்று	சத்திரம்
மனமார	தொலைல	அயலான்

கேள்விகள்

1. நியாயவாதி ஏசுநாதரைக் கேட்டது யாது?
2. நியாயவாதிக்கு ஏசுநாதர் கூறிய பதில் என்ன?
3. செல்வனுக்கு வழியில் என்ன நேர்ந்தது?
4. அடிபட்டுக்கிடந்த செல்வனுக்கு உதவி செய்தவன் யார்?
5. ஏசுநாதர் செய்த உபதேசம் யாது?

பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் கூறு: பெருமை, மரணம், தோற்றம், புண்ணியன், ஏற்றி.

2. ஞானோதயம், மனமார, அகப்பட்டு, ஆபத்து, அற்புதங்கள்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

3. இந்தக் கதையை மவுனமாக வாசி.

4. பாடசாலை நூல் நிலையத்திலிருந்து ஏசுநாதரின் உபதேசக் கதைகள் உள்ள புத்தகங்களை வாங்கிக் கதைகளை வாசி.

5. இராமகிருஷ்ணருடைய உபதேசக் கதைகள் உள்ள புத்தகத்தை வாங்கிக் கதைகளை வாசி.

6. நமக்குத் தாய்மொழி தமிழ். இது வாக்கியம். இதில் தமிழ் என்பது பயனிலை. அது பெயர்ச்சொல். இவ்வாறு சில வாக்கியங்களில் பெயர்ச்சொல் பயனிலையாக வருவது உண்டு.

7. கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமான பெயர்ப் பயனிலைகளைச் சேர்த்து வாசி:

முகம்மதியர் பின்பற்றும் மதம் ———
கிறிஸ்துவ மதத்தைத் தோற்றுவித்தவர் ———
வைத்தியர் வேலை செய்யும் இடம் ———
மக்களிடையே அமைதியைப் பாதுகாப்பவர் ———

8. பசு இருந்தது—ஒருமை.
பசுக்கள் இருந்தன—பன்மை.

இவ்வாக்கியங்களில் எழுவாய் ஒருமையானால் பயனிலையும் ஒருமையாகவும், எழுவாய் பன்மையானால் பயனிலையும் பன்மையாகவும் இருக்கின்றன. இவ்வாறு அமைவதே முறை. இம்முறை மாறி அமைவது பிழையாகும்.

9. பின் வரும் வாக்கியங்களில் ஒருமை எழுவாயைப் பன்மை எழுவாயாக மாற்றி அமைத்து வாசி:

மேலூரில் கோவில் இருந்தது.
பசு வேகமாக ஓடி வந்தது.
வழிப்போக்கன் திருடர்களோடு போராடினான்.
பெண் பாட்டுப் பாடினாள்.

10. பன்மை எழுவாய்களை ஒருமை எழுவாய்களாக மாற்றி அமைத்துச் சொல்:

(1) பிள்ளைகள் ஓடினார்கள்.
(2) திருடர்கள் தாக்கினார்கள்.
(3) பசுக்கள் இருந்தன.

10. பயிர்த்தொழில்–I

நாகன் : ஜான், இன்று கொல்லை வெளிக்குப் போவோமா? அதோ, இஸ்மேல் வருகிறன். அவனும் வருவான்.

ஜான் : நானும் கொல்லை வெளியைப் பார்த்துப் பலநாள்கள் ஆயின. வா, போவோம்.

நாகன் : இதோ கொல்லைவெளி. இவை புன்செய் நிலங்கள். இவ்வூரில் புழுதிப் பயிரே செய்வார்கள். முதலில் நிலத்தை உழுவார்கள். பிறகு விதை விதைப்பார்கள். பயிர் வளர்ந்ததும் களை வெட்டுவார்கள். வளர்ந்த பயிரைக் காவல் காக்க வேண்டும். அதோ சோளப் பயிரும் கம்புப் பயிரும் கதிர் முற்றி இருக்கின்றன.

இஸ்மேல் : சோளமும் கம்பும் உயரமாக வளர்ந்து இருக்கின்றன. கம்பங்கதிர் நீளமானது. சோளக் கதிர் குட்டையானது.

ஜான் : அந்தப் பரணின்மேல் இரண்டு பெண்கள் இருக்கிறர்கள், பார். அவர்கள் காவல் செய்கிறர்கள். அவர்கள் குருவி ஓட்டுகிறர்கள். அவர்கள் கையில் கவண் வைத்திருக்கிறர்கள்.

நாகன் : சோளத்தையும் கம்பையும் முதலில் கதிரை அறுப்பார்கள். கதிரை உலர்த்தி மாட்டை விட்டு மிதிக்கச் செய்வார்கள். பிறகு தூற்றி மணியை வேறு பிரிப்பார்கள். பிறகு அடித் தண்டை அறுப்பார்கள். அது மாட்டுக்குத் தீனி யாகும். அதோ துவரையும் எள்ளும் காய்த்து இருக்கின்றன. துவரைச் செடி பெரியது ; எள்ளுச் செடி சிறியது. துவரைச் செடியை அடியோடு அறுப்பார்கள். அதை வெயிலில் உலர்த்திப் பாறை

யிலோ பலகையிலோ அடிப்பார்கள். காய்பிளந்து மணிகள் உதிரும். பிறகு மணிகளைத் தூற்றி எடுப்பார்கள். எள்ளுச் செடியை வேரோடு பிடுங்கி வெயிலில் உலர்த்துவார்கள். பிறகு அதை மாட்டைக் கொண்டு மிதிக்கச் செய்து தூற்றி எடுப்பார்கள். எள்ளுச் செடியும் துவரஞ் செடியும் அடுப்பு எரிக்க உதவும்.

இஸ்மேல்: அதோ பாருங்கள். உளுந்து, பயறு, மொச்சை, காராமணி, கொள்ளு இவை சடைசடையாய்க் காய்த்து இருக்கின்றன. அவை யாவும் கொடிப் பயிர்கள். மொச்சைக்காய் தட்டையானது. காராமணிக்காய் திரட்சியானது. உளுத்தங்காய் பருமனாக இருக்கும். பயற்றங்காய் சிறுத்தும் இருக்கும். பயற்றங்காய் நேராக இருக்கும். கொள்ளுக்காய் வளைவாக இருக்கும். உளுந்து கருமை நிறமானது. பயறு பச்சை நிறமானது.

நாகன்: கொடிப்பயிர்களை வேரோடு பிடிங்கி வெயிலில் உலர்த்துவார்கள். உலர்ந்த பிறகு மாட்டை விட்டு மிதிக்கச் செய்வார்கள். காய்கள் வெடித்து மணி உதிரும். அவற்றைத் தூற்றி எடுப்பார்கள். இதோ வேர்க்கடலைப் பயிர் இருக்கிறது. வேர்க்கடலையும் கொடிப்பயிர் ஆகும். வேர்க்கடலை வேரில் காய்க்கும். காய் மண்ணில் மறைந்து இருக்கும். காய் முற்றியதும் கொடியை வெட்டி எடுப்பார்கள். காயைப் பறித்து எடுத்துக் கொள்வார்கள். வேர்க்கடலைக் கொடியை மாடு தின்னும்.

ஜான்: கொல்லை வெளியைப் பார்த்தாகி விட்டது. இன்னும் பொழுது இருக்கிறது. வயல் வெளியையும் பார்த்து வருவோம் வாருங்கள்.

கொல்லைவெளி	கவண்	வளைவு
புழுதிப்பயிர்	மிதி	கொடிப்பயிர்
களை	தூற்று	உதிரும்
உயரமாக	சடைசடையாய்	மறைந்து
நீளம்	நேராக	வெட்டி
குட்டை	பருமன்	பறித்து
பரண்	அடியோடு	திரட்சி

கேள்விகள்

1. புன்செய் நிலத்தில் எவ்வகைப் பயிர் செய்வர்?

2. கதிரில் கம்பிற்கும் சோளத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

3. பரண்மீது இருக்கும் பெண்கள் என்ன செய்கிறார்கள்?

4. அறுவடைசெய்வதில் துவரை, எள்ளு, சோளம், கம்பு இவைகளுக்குள்ள வித்தியாசம் என்ன?

5. வேர்க்கடலை எங்கு காய்க்கும்? அதனை எவ்வாறு சேகரிப்பர்?

பயிற்சி

1. உங்கள் ஊர்ப் புன்செய் நிலங்களைப் போய்ப் பார்?

2. உங்கள் ஊரில் பயிராகும் புன்செய்ப் பயிர்களைச் சொல்.

3. எதிர்ச் சொற்கள் கூறு:—புன்செய், உயரம், குட்டை, நேராக, பருமன், பெரியது.

4. சடைசடையாய்—இது இரட்டைச் சொல். கொத்துக்கொத்தாக, குலைகுலையாக, அடுக்கடுக்காக, சாரிசாரியாக, வரிசைவரிசையாக — இவற்றைப் பொருத்தமாக வாக்கியங்களில் வைத்துச் சொல்.

5. புழுதிப்பயிர், உயரமாக, கொடிப்பயிர், துவரை, பருமனாக, சிறுமனாக—கீழே கோடிட்ட இடங்களில் இவற்றைப் பொருத்தமாக வைத்து வாசி:

புன்செய் நிலத்தில் —— செய்வார்கள்.

உளுத்தங்காய் —— இருக்கும்.

வேர்க்கடலை —— ஆகும்.
சோளப்பயிர் —— வளரும்.
—— செடிப்பயிர் ஆகும்.
பயற்றங்காய் —— இருக்கும்.

6. சோளப்பயிர்; சோளம் + பயிர்—இவ்வாறே கீழே தரப்பட்டுள்ளவற்றைப் பிரித்து எழுது.

கம்பங்கதிர், உளுத்தங்காய், பயற்றங்காய், வேர்க்கடலை.

7. செல்வன்—இது ஆணைக் குறிக்கிறது. இவ்வாறு ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால் எனப்படும்.

செல்வி—இது பெண்ணைக் குறிக்கிறது. இவ்வாறு பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால் எனப்படும்.

8. ஆண்பால் சொல்லுக்குப் பெண்பால் சொல்லும் பெண்பால் சொல்லுக்கு ஆண்பால் சொல்லும் கூறு:

திருடன், கள்ளன், மனைவி, பிச்சைக்காரன், பெண், மகள், தந்தை, மாமன், பசு.

9. பன்மை எழுவாய்களை ஒருமை எழுவாய்களாக மாற்றி அமைத்து வாசி:

திருடர்கள் செல்வனைக் கண்டார்கள்.
பெண்கள் குருவி ஓட்டுகிறார்கள்.
கதிர்கள் முற்றியிருக்கின்றன.

10. கொல்லை, கொள்ளை, சோளம், சோழர்—இவற்றை உச்சரித்துப் பழகு.

11. கீழ்வரும் வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்த்துச் சொல்:

அவ்வழியே ஒரு சாமியார் சென்றார். அவர் அச் செல்வனைக் கண்டார்.

11. பயிர்த்தொழில்–II

நாகன் : இந்த வயல்வெளியைப் பாருங்கள். இவை நன்செய் நிலங்கள். நன்செய் நிலத்தில் பெரும்பாலும் சேற்றுப் பயிரே செய்வார்கள். இதோ உழவன் நிலத்தை உழுகின்றான். அவன் பாட்டுப் பாடிக்கொண்டே உழுகின்றான். எருதுகள் பாட்டைக் கேட்டுக்கொண்டே நடக்கின்றன. அவன் மனைவி கூடையில் எரு எடுத்துவந்து கொட்டுகிறாள். கிழவன் எருவைத் தூவி இறைக்கிறான். அவனுக்குப் பின்னால் ஒரு சிறுவன் நிலத்தைச் சமப்படுத்துகிறான்.

இஸ்மேல் : இந்த நிலத்தை உழுது சமப்படுத்தி இருக்கிறார்கள். இதில் ஒருவன் விதை விதைக்கிறான். அவன் என்ன அழகாக விதைக்கிறான், பாருங்கள்! அந்த நிலத்தின் ஒரு மூலையில் மாத்திரம் விதை விதைக்கிறானே, ஏன்?

நாகன் : அவன் நாற்று விடுகிறுன். சில நிலங்களில் விதைப்பார்கள்; சில நிலங்களில் நாற்றுவிட்டு நடுவார்கள்.

ஜான் : ஆம், அதோ பாருங்கள். சிலர் நாற்றுப் பறிக்கிருர்கள். அவர்கள் நாற்றைக் கட்டுக் கட்டாகக் கட்டி வைக்கிருர்கள். அந்த நிலத்தில் பலர் நாற்று நடுகிருர்கள். ஆண்களும் பெண்களும் கலந்து நடுவதைப் பாருங்கள். அது உழுது சமப்படுத்தப்பட்ட நிலம்.

இஸ்மேல் : பயிர் நிலங்களுக்கு நாள்தோறும் நீர் பாய்ச்சவேண்டுமே; இந்த நிலங்களுக்கு எங்கிருந்து நீர் பாய்ச்சுகிருர்கள்?

நாகன் : நேற்று வரையில் ஏரியிலிருந்து நீர் பாய்ச்சி வந்தார்கள். ஏரியிலிருந்து நீர் வாய்க்

கால் வழியாக வந்து பாயும். நேற்ருேடு ஏரியில் நீர் வற்றிவிட்டது. இன்று கிணற்றிலிருந்து இறைத்துப் பாய்ச்சுகிறர்கள். அந்தக் கிணற்றில் மூவர்

ஏற்றம் இறைக்கிறார்கள். ஒருவன் கபிலை ஓட்டுகிறான். இரண்டு எருதுகள் கபிலையை இழுக்கின்றன. அதோ ஒருவன் நீர் பாய்ச்சுகிறான், பாருங்கள்.

ஜான் : ஆம். ஏற்றம் இறைப்பவன் பாட்டுப் பாடுகிறான். அவன் பாட்டு இனிமையாக இருக்கிறது. இந்தக் கிணறு சதுரமாக இருக்கிறதே! நம் தோட்டக் கிணறு வட்டமாக அல்லவா இருக்கிறது?

இஸ்மேல் : அந்த நிலத்தில் ஜனங்கள் கூட்டமாக என்ன செய்கிறார்கள்?

நாகன் : அவர்கள் களை எடுக்கிறார்கள். பயிரோடு புல் பூண்டுகளும் முளைத்து வளரும். அவற்றைக் களை என்பார்கள். களை வளர்ந்தால் பயிர் வளராது. அதனால் களைகளைப் பறித்து எடுப்பார்கள். அதற்குக் களை எடுத்தல் என்பது பெயர்.

ஜான் : இந்த நிலத்தில் பயிர் உயரமாக வளர்ந்து இருக்கிறது. கதிர்கள் நீளமாக இருக்கின்றன. கதிரில் நெல் மணிகள் உள்ளன. கதிர்கள் காற்றில் அசைவது எவ்வளவு அழகாக இருக்கிறது, பாருங்கள்!

இஸ்மேல் : இந்த நிலத்தில் பயிர் சாய்ந்து மடிந்து கிடக்கின்றதே!

நாகன் : அந்த நிலத்தில் பயிர் முற்றவில்லை. அதனால் அது நேராக நிமிர்ந்து நிற்கிறது. இந்தப் பயிர் நன்றாக முற்றி விளைந்துவிட்டது. அதனால் இந்தப் பயிர் சாய்ந்து கிடக்கிறது. இது கதிர் முற்றிவிட்டதால் அறுவடை செய்கிறார்கள். பயிரை அறுத்து அரி அரியாக வைக்கிறார்கள். சிலர் அரிகளைக் கட்டுக் கட்டாகக் கட்டுகிறார்கள்.

பலர் கட்டுகளைக் களத்தில் கொண்டு சேர்க்கிறார்கள்.

ஜான் : இதோ இருவர் கட்டு அடிக்கிறார்கள், பாருங்கள். இரு பெண்கள் கட்டை அவிழ்த்து அரி எடுத்துக் கொடுக்கிறார்கள். இவர்கள் எவ்வளவு ஒற்றுமையாக வேலை செய்கிறார்கள் !

நாகன் : அந்தப் பக்கத்தில் பாருங்கள். அடிக்கப்பட்ட தாள்களைப் பரப்பித் தாம்பு அடிக்கிறார்கள். ஒருவன் தாளை உதறுகிறான். ஒரு பெண் நெல்லைப் பெருக்கிக் குவிக்கிறாள். இருவர் நெல்லைத் தூற்றுகிறார்கள். அவர்கள் பிறகு நெல்லை அளந்து மூட்டைகளில் கட்டுவார்கள். மூட்டைகளை வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு போவார்கள். நாம் நெல்லைக் குற்றிச் சமைத்துச் சாப்பிடுகிறோம்.

இஸ்மேல் : தாளை என்ன செய்வார்கள் ?

நாகன் : தாளை உலர்த்திச் சுமைகளாகக் கட்டுவார்கள். சுமைகளை எடுத்துச் சென்று போராகப் போடுவார்கள். அது வைக்கோல் எனப்படும். அதுவே மாட்டின் முக்கிய ஆகாரம் ஆகும்.

ஜான் : நன்செய் நிலத்தில் நெற்பயிரே தான் செய்வார்களா ?

நாகன் : நன்செய் நிலத்தில் பெரும்பாலும் நெற்பயிர்தான் செய்வார்கள். சில இடங்களில் கரும்புப் பயிரும் செய்வது உண்டு. சோளம், கம்பு முதலியவை புன்செய்ப் பயிர்கள். நன்செய் நிலங்களிலும் புன்செய் நிலங்களிலும் பயிர் செய்யும் தொழிலுக்குப் பயிர்த்தொழில் என்பது பெயர். அதை உழவு, விவசாயம் என்றும் சொல்வது

உண்டு. அத்தொழில் செய்பவர்கள் விவசாயிகள். அவர்களுக்கு உழவர், குடியானவர், வேளாளர் என்னும் பெயர்களும் உண்டு.

"உழவுத் தொழிலே உயர்ந்த தொழில்."

வயல்வெளி	வற்றி	ஒற்றுமை
நன்செய்	வட்டமாக	பரப்பி
பெரும்பாலும்	பூண்டு	தாள்
தூவி	அழகாக	போர்
சமப்படுத்து	சாய்ந்து	விவசாயம்
நாள்தோறும்	மடிந்து	விவசாயி
பாய்ச்சி	அரிஅரியாக	தாம்படித்தல்

கேள்விகள்

1. நன்செய் நிலத்தில் எவ்வகை பயிர் செய்வர்?
2. நிலங்களுக்கு நீர் எவ்வாறு பாய்ச்சப்படுகிறது?
3. களை என்று எவைகளுக்குப் பெயர்?
4. களைகளால் பயிர்களுக்கு ஏற்படுவது என்ன?
5. பயிர்த்தொழிலுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

பயிற்சி

1. உங்கள் ஊரிலுள்ள வயல்வெளியைப் போய்ப் பார்.
2. உங்கள் ஊரில் வயல்களுக்கு நீர் எப்படிப் பாய்ச்சுகிறார்கள், சொல்.
3. உங்கள் ஊரில் பயிராகும் நன்செய்ப் பயிர்களைச் சொல்.
4. நன்செய்ப் பயிர் செய்யும் முறைகளைத் தெரிந்து கொள்.
5. எதிர்ச் சொற்கள் கூறு: வட்டம், சாய்ந்து, ஒற்றுமை, பின்னால்.
6. அரிஅரியாக, கட்டுக் கட்டாக—இவற்றைக் குறித்துக்கொள். இவற்றை வைத்து வாக்கியங்கள் சொல்.
7. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஆண்பால் சொற்களைப் பெண்பால் சொற்களாக மாற்றி அமைத்து வாசி:

உழவன் நிலத்தை உழுகிறான்.
கிழவன் எருவைத் தூவி இறைக்கிறான்.

சிறுவன் நிலத்தைச் சமப்படுத்துகிறான்.
ஒருவன் விதை விதைக்கிறான்.

8. இவை நன்செய் நிலங்கள். இதில் பயனிலை எது? அது என்ன பயனிலை.

9. கீழ்வரும் வாக்கியங்களை 'உண்டு' என்பதற்குப் பதிலாக 'இல்லை' என்னும் பொருள்பட மாற்றிச் சொல்:

நன்செய் நிலத்தில் நெற்பயிர் செய்வது உண்டு.
சில நிலங்களில் நாற்று நடுவது உண்டு.
ஏரியில் நீர் இல்லாத காலத்தில் கிணற்றிலிருந்து நீரை இறைத்துப் பாய்ச்சுவது உண்டு.

10. கீழே கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து வாசி:

நன்செய் நிலத்தில் —— பயிரே செய்வர்.
ஏரி நீர் ——— வழியாக வந்து பாயும்.
ஏற்றப்பாட்டு ——— இருக்கிறது.
கதிர் ——— அறுவடை செய்கிறார்கள்.
——— மாட்டின் முக்கிய ஆகாரம் ஆகும்.
விவசாயத் தொழில் செய்பவர்கள் ———.

11. கீழ்வரும் வாக்கியங்களை ஒரு வாக்கியமாகச் சேர்த்துச் சொல்:

(1) பயிர் முற்றவில்லை. அதனால் அது நிமிர்ந்து நிற்கிறது.
(2) பயிர் முற்றி விளைந்துவிட்டது. அதனால் அது சாய்ந்து கிடக்கிறது.

12. உழவு—இதனைக் குறிக்கும் வேறு சொல் ஒன்று சொல்.

13. உழவர்—இவர்களைக் குறிக்கும் வேறு மூன்று சொற்கள் சொல்.

14. இறை—இரை, பறி—பரி: இவற்றைப் பொருள் வேறுபாடு தோன்ற உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

15. பிரித்து எழுது: தோட்டக் கிணறு, நெற்பயிர், சேற்றுப் பயிர்.

16. பயிர்த்தொழிலைப் பற்றிய பழமொழி ஒன்று சொல்.



12. பாரதியார்

நீங்கள் பாப்பாப் பாட்டுப் படித்திருக்கிறீர்கள் அல்லவா ? அதைப் பாடினவர் யார் தெரியுமா ? அதைப் பாடினவர் பாரதியார். பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர். அவர் இளஞ்சிறுவர் முதல் பெரும் புலவர் வரையில் எல்லோரும் படிக்கத்தக்க சிறந்த தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். நீங்கள் அவர் பெயரைக் கேட்டிருப்பீர்கள் ; அவர் உருவத்தைப் படத்தில் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர் வரலாறு உங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பாரதியாரின் முழுப் பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்பது. அவர் திருநெல்வேலி ஜில்லா வில் உள்ள எட்டையபுரம் என்னும் ஊரில் எழுபது வருஷங்களுக்கு முன் பிறந்தார். அவர் தந்தை யார் சின்னசாமி ஐயர்; தாயார் பெயர் இலக்ஷ்மி அம்மாள். இவரது ஐந்தாவது வயதில் இவர் தாயார் இறந்து போனார். அதுமுதல் தந்தையாரே இவரை அன்போடு வளர்த்து வந்தார். தந்தையார் இவரைத் தக்க பருவத்தில் உள்ளூர்ப் பாடசாலை யில் சேர்த்துப் படிக்க வைத்தார். ஆரம்பப் படிப்பு முடிந்ததும் இவர் திருநெல்வேலியில் உள்ள இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார்.

பாரதியார் கலாசாலையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்றார். ஆனால் ஆங்கில பாஷையில் இவர் மனம் செல்லவில்லை. இவர் தமிழ் மொழியையே அதிகமாக விரும்பிப் பயின் றார். தந்தையாரிடமே இவர் பல தமிழ் நூல்களைப் பாடம் கேட்டார். இவர் சிறு வயதில் யாரோடும் அதிகமாகப் பழகமாட்டார்; அயல் பிள்ளைகளோடு சேரமாட்டார்; எப்பொழுதும் தனிமையாகவே இருப்பார்; யாரும் இல்லாத தனியிடத்தில் இருந்து படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார். இவர் ஏழு எட்டு வயதிலேயே தமிழ்க் கவிகள் பாடத் தொடங்கினார்; அயலார் பாடல்களுக்கு எளிதில் பொருள் சொல்லியும் வந்தார். இவர் திறமையைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். பன்னிரண்டாவது வயதில் புலவர் கள் இவருக்குப் 'பாரதி' என்ற பட்டம் சூட் டினர். அதுமுதல் எல்லோரும் இவரைப் 'பாரதி' என்றே அழைக்கலாயினர்.

பாரதியாருக்குப் பதினைந்தாவது வயதில் திருமணம் நடந்தது. இவர் தந்தையார் கடயம் செல்லப்ப ஐயர் மகளான செல்லம்மாள் என்பவரை இவருக்கு மணம் செய்து வைத்தார். மணம் முடிந்த உடனே இவர் தந்தையாரும் இறந்தார். தந்தையார் இவருக்குச் சிறிதும் பொருள் தேடி வைக்கவில்லை. இவரை ஆதரிக்கக்கூடிய உற்றார் உறவினரும் யாரும் இல்லை. அதனால் இவர் மிகவும் வருத்தப்பட்டார். இவர் வருத்தத்தை அறிந்த இவருடைய அத்தையார் இவரைத் தம்மோடு காசிக்கு அழைத்துச் சென்றார். பாரதியார் காசியில் சில வருஷங்கள் இருந்தார். இவர் அங்கு இந்தி, சமஸ்கிருதம் ஆகிய பாஷைகளைக் கற்றார். இவருக்கு காசி வாழ்க்கையிலும் வெறுப்பு உண்டாகியது. இவர் மறுபடியும் எட்டையபுரத்திற்கு வந்தார். எட்டையபுர அரசர் இவர் பெருமையை அறிந்து, இவரைத் தம் அவைப் புலவராக அமர்த்திக் கொண்டார்; பொன்னும் பொருளும் கொடுத்து இவரை அன்போடு ஆதரித்தார். இவர் இனிமையான தமிழ்க் கவிகளைப் பாடி அரசரை மகிழ்வித்து வந்தார். சில வருஷங்கள் சென்றன. இவருக்கும் அரசருக்கும் மனவேறுபாடு உண்டாகியது. இவருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லை. ஆகவே இவர் எட்டையபுரத்தை விட்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

பாரதியார் மதுரையில் சிறிது காலம் தமிழாசிரியராக இருந்தார். அந்த வேலையும் இவருக்குப் பிடிக்கவில்லை. பிறகு இவர் சென்னைக்கு வந்து சேர்ந்தார் சென்னையில் இவர் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராகச் சில வருஷங்

கள் வேலை செய்தார். இவர் அங்கு உத்தியோகத்தோடு தேச சேவையிலும் ஈடுபட்டார்; 'இந்தியா,' 'பால பாரதம்' என்னும் பத்திரிகைகளைத் தாமே ஆரம்பித்து நடத்தினார். அரசாங்கம் அடக்கு முறையை ஆரம்பிக்கவே இவர் பத்திரிகை நின்று போயிற்று. அரசாங்கத்தார் இவரையும் சிறை செய்வதாக இருந்தனர். எனவே இவர் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குச் சென்றார்.

பாரதியார் புதுச்சேரியில் பத்து வருஷங்கள் தங்கியிருந்தார். அந்தப் பத்து வருஷ காலமும் இவர் அங்குப் பட்ட கஷ்டங்களுக்கு அளவே இல்லை. அறிமுகம் இல்லாத ஊரில் இவர் ஆதரவு இன்றிக் கஷ்டப்பட்டார். உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் இவர் மனைவி மக்களோடு வருந்தினார். ஆனால் பாரதியார் அக் கஷ்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இவர் இத்துன்பங்களை இன்பமாகவே கருதினார்; எப்பொழுதும் சந்தோஷமாகவே இருந்தார். அந்தக் காலத்தில்தான் இவர் அதிகமான பாடல்களைப் பாடினார். இவர் அனுபவித்த துன்பங்கள் எல்லாம் இன்பப் பாடல்களாக வெளிப்பட்டன.

பத்து வருஷங்களுக்குப் பிறகு பாரதியார் புதுச்சேரியிலிருந்து வெளிவந்தார். இவர் மறுபடியும் சென்னையை அடைந்து 'சுதேசமித்திரனில்' உதவி ஆசிரியராக அமர்ந்தார். பழைய படியே பல தேசீயப் பாடல்கள் பாடியும், கட்டுரைகள் எழுதியும் மக்களின் தேசபக்தியைத் தூண்டி வந்தார். ஆனால் இவர் அதிக காலம் உயிரோடு இருக்கவில்லை. நாளுக்கு நாள் இவருடைய உடல் மெலிந்து வந்தது. வறுமை நோயோடு உடல்

நோயும் சேர்ந்தது. கடைசியாக இவர் தமது முப்பத்தொன்பதாவது வயதில் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறைந்தார்.

பாரதியார் உடல் மறைந்தது. ஆனால் இவர் பாடல்கள் இன்றும் மறையாமல் இருக்கின்றன! அவை என்றும் மறையாமல் இருக்கும். நாம் அவற்றைப் படித்துப் பயன் அடையவேண்டும்.

கவிஞர்	புலவர்	மகிழ்வி
வரலாறு	பாரதி	வேறுபாடு
பருவம்	பட்டம்	அறிமுகம்
கலாசாலை	சூட்டு	பொருட்படுத்தல்
மொழி	மணம்	அடைந்து
திறமை	உற்றார்	தூண்டி
ஆச்சரியம்	அமர்த்தி	கட்டுரைகள்

கேள்விகள்

1. பாரதியாரின் பெற்றோர்கள் யார்?
2. பாரதியாருக்குப் "பாரதி" என்ற பட்டம் எப்படிக் கிடைத்தது?
3. பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லக் காரணம் என்ன?
4. பாரதியார் மக்களிடம் எவ்வாறு தேசபக்தியைத் தூண்டினார்?
5. பாரதியாரின் பாடல்கள் என்றும் மறையாமல் இருக்க நாம் என்ன செய்யவேண்டும்?

பயிற்சி

1. உனக்குத் தெரிந்த பாரதியார் பாடல்களைச் சொல்.
2. உங்கள் பாடசாலையில் நடந்த பாரதி திருநாளைப் பற்றிச் சொல்.

3. பாரதியார் எழுதின வசன நூல்களை வாங்கி வாசி.

4. பாரதியார் காசி வாழ்க்கையைப் பற்றிச் சொல்.

5. பாரதியார் புதுச்சேரி வாழ்க்கையைப் பற்றிச் சொல்.

6. வரலாறு, வேறுபாடு, அறிமுகம், அடக்குமுறை —இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

7. பாஷை—மொழி, வருஷம்—ஆண்டு, இவ்வாறே இப்பாடத்தில் வந்துள்ள சமஸ்கிருதச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் கூறு.

8. மணம்—கல்யாணம், வாசனை—இவ்வாறு வரும் இருபொருட் சொற்களைக் குறித்துக்கொள்.

9. பருவம், வறுமை—இவற்றிற்குப் பொருள் சொல்.

10. அவன் நாற்று விடுகிறான்.
இவை நன்செய் நிலங்கள்.

இவ்வாக்கியங்களில் அவன் என்பது ஒரு மனிதனையும், இவை என்பது நிலங்களையும் சுட்டுகின்றன. அவற்றுள், 'அவன்' என்பதில் உள்ள அ என்னும் எழுத்தும், 'இவை' என்பதில் உள்ள இ என்னும் எழுத்துமே சுட்டுப் பொருளைத் தந்து நிற்கின்றன. ஆகவே அவ்வெழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

அ, இ, உ—இம்மூன்றும் சுட்டுப்பொருளைத் தரும் எழுத்துக்கள் ஆகும். இவை சுட்டுப்பொருளைத் தந்து நிற்கும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

இவற்றுள் அ என்பது தூரத்தில் உள்ளதைச் சுட்டும்.

இ என்பது சமீபத்தில் உள்ளதைச் சுட்டும்.

உ என்பது இப்பொழுது வழக்கத்தில் இல்லை.

13. நல்ல வார்த்தை

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றந்தப் பூனை—அவை
பேருக்கு ஒரு நிறமாகும்.

சாம்பல் நிறத்தொரு குட்டி—கருஞ்
சாந்து நிறம்ஒரு குட்டி
பாம்பு நிறம்ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம்ஒரு குட்டி.

எந்த நிறம்இருந்தாலும்—அவை
யாவும் ஒரேதரம் அன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானிடர் வேற்றுமை இல்லை.
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

—பாரதியார்

பயிற்சி

1. கீழ்வரும் வாக்கியங்களை 'இல்லை' என்பதற்குப் பதிலாக 'உண்டு' என்று பொருள்படும்படி மாற்றி வாசி :

பாரதியாருக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லை.
பாரதியாருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லை.
பாரதியார் அதிக காலம் உயிரோடு இருக்கவில்லை.
களை வளர்ந்தால் பயிர் வளராது.

2. கீழ்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து வாசி :

அரசாங்கம் அடக்குமுறையை ஆரம்பிக்கவே பாரதியார் பத்திரிகை நின்றது.

பாரதியார் மறுபடியும் சென்னையை அடைந்து சுதேசமித்திரனில் ஆசிரியராக அமர்ந்தார்.

3. எதிர்ச்சொற்கள் கூறு : துன்பம், கஷ்டம், வெறுப்பு, நல்லது, ஏற்றம்.

4. அரசர், ஆங்கிலம்—அரசர் என்பதில் உள்ள அ குறுகி ஒலிக்கிறது. ஆங்கிலம் என்பதில் உள்ள ஆ நீண்டு ஒலிக்கிறது. இப்படியே உயிரெழுத்துக்களில் குறுகி ஒலிக்கும் எழுத்துகளும், நீண்டு ஒலிக்கும் எழுத்துகளும் உள்ளன. குறுகி ஒலிக்கும் எழுத்துகள் குறில் அல்லது குற்றெழுத்துக்கள் எனப்படும். நீண்டு ஒலிக்கும் எழுத்துகள் நெடில் அல்லது நெட்டெழுத்துகள் எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ—இவை ஐந்தும் குறுகி ஒலிக்கும் எழுத்துகள். இவை குற்றெழுத்துகள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவை ஏழும் நீண்டு ஒலிக்கும் எழுத்துகள். இவை நெட்டெழுத்துகள் எனப்படும்.



14. கடிதம் எழுதுதல்

மகன் : அப்பா, அண்ணு நவராத்திரி விடு முறைக்கு இங்கு வரப்போவதாகக் கடிதம் எழுதி யிருக்கிருர் அல்லவா ? அண்ணு வருவதற்குள் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். எப்படி எழுதுவது என்பதைச் சொல்லுங்கள், அப்பா.

தந்தை : காகிதமும் பென்சிலும் எடுத்துக் கொண்டுவா, சொல்லுகிறேன்.

மகன் : இதோ கொண்டு வந்திருக்கிறேன், அப்பா. கடிதத்தை எப்படி ஆரம்பிக்க வேண்டும் ?

தந்தை : கடிதத்தைப் பார்த்ததும் அது எங்கிருந்து வந்திருக்கிறது என்பதும், யாரிட மிருந்து வந்திருக்கிறது என்பதும் எப்பொழுது எழுதப்பட்டது என்பதும் தெரியவேண்டும் அல் லவா ? அதற்காக முதலில் காகிதத்தின் மேல்

பாகத்தில் வலப்பக்கமாக அனுப்புவோரது விலாசத்தையும், அதன் கீழ் அனுப்பப்படும் தேதியையும் எழுதவேண்டும்.

மகன்: இதோ எழுதியிருக்கிறேன், பாருங்கள். இப்படித்தானே எழுத வேண்டும்?

20, கடை வீதி,
ஈரோடு,
12-9-1951.

தந்தை: ஆம். இதன் பின் விலாசத்திற்குக் கீழ் இடப் பக்கமாகத் தொடங்கி நீ யாருக்கு எழுதுகிறாயோ அவரைக் குறிக்க வேண்டும். இது எழுதுபவருக்கும் எழுதப்படுபவருக்கும் உள்ள உறவு, நட்பு போன்ற தொடர்புக்கு ஏற்றபடி வேறுபடும்.

மகன்: அண்ணாவை எப்படிக் குறிக்கலாம், அப்பா?

தந்தை: அன்புள்ள அண்ணா என்று குறிக்கலாம்.

மகன்: அப்படியே குறித்துக் கொண்டேன். பிறகு என்ன செய்ய வேண்டும்?

தந்தை: அதன் பிறகு நீ விரும்பும் சமாசாரத்தை எழுத வேண்டும். அது கோவையாகவும், நேரில் பேசுவது போலவும் இருக்க வேண்டும்.

மகன்! அவ்வளவு தானே! இன்னும் ஏதாவது இருக்கிறதா?

தந்தை: செய்தியின் கீழ் வலப்பக்கத்தில் நமக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பைக் குறித்து, அதனடியில் கையெழுத்து இடவேண்டும்.

மகன்: நான் அண்ணாவுக்கு எழுதும் கடிதத்தில் என்னவென்று குறித்துக் கையெழுத்து இட வேண்டும்?

தந்தை : உங்கள் அன்புள்ள தம்பி என்று குறித்துக் கையெழுத்து இடலாம்.

மகன் : அப்பா, நீங்கள் சொன்னவைகளைக் கவனத்தில் வைத்துக்கொண்டு நான் அண்ணுவுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டு வரட்டுமா?

தந்தை: எழுதிக்கொண்டுவா, பார்ப்போம்.

மகன் : அப்பா, இதோ பாருங்கள், நான் எழுதிய கடிதம். சரியாக இருக்கிறதா என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்.

15, கடை வீதி,
ஈரோடு,
12–9–1951.

அன்புள்ள அண்ணு,

நீங்கள் அப்பாவுக்கு எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் நலம் அறிந்து மகிழ்ந்தோம். நீங்கள் நவராத்திரி விடுமுறைக்கு இங்கு வருவதாக எழுதியிருக்கிறீர்கள். உங்களைப் பார்க்க நாங்கள் எல்லோரும் ஆவலாய் இருக்கிறோம். நீங்கள் வரும் பொழுது எனக்கு ஒரு குடையும், தம்பிக்கு ஒரு குல்லாவும் வாங்கி வரவும். அம்மா மறவாமல் பெருங்காயம் வாங்கிவரும்படி எழுதச் சொன்ஞள்.

நீங்கள் வரும் நாளையும் நேரத்தையும் தெரிவித்தால், அப்பாவும் நானும் ஸ்டேஷனில் வந்திருப்போம்.

உங்கள் அன்புள்ள தம்பி,
அர்த்தநாரி.

தந்தை : நன்ருய் எழுதியிருக்கிருயே!

மகன் : இனி இதை என்ன செய்யவேண்டும் அப்பா?

தந்தை : இதை ஓர் உறைக்குள் இட்டு மூடி ஒட்ட வேண்டும். பிறகு உறையின் பின்புறத்தில் உன் அண்ணன் விலாசத்தை எழுத வேண்டும். அதன்பின் தபால் கட்டணத்திற்காக இரண்டணுத் தபால் முத்திரை வாங்கி உறையின் மேல்பாகத்தில் வலப்பக்கத்து மூலையில் ஒட்டவேண்டும். மேஜையில் உறையும் இரண்டணு முத்திரையும் வைத்திருக்கிறேன். போய்க் கடிதத்தை உறையில் இட்டு ஒட்டி விலாசம் எழுதிக் கொண்டுவா. உனக்கு அண்ணன் விலாசம் தெரியுமா? இந்தக்கடிதத்தில் இருக்கிறது, பார்.

மகன் : இதோ பாருங்கள், அப்பா.

திரு. மணிவண்ணன்,
6, பரோடா தெரு,
தியாகராயநகர்,
சென்னை-17

தந்தை : சரியாக எழுதியிருக்கிருய். இனி இதைத் தபால் பெட்டியில் போட வேண்டும். அடுத்த இரவில் இது சென்னைக்கு அனுப்பப்படும். நாளை காலை இது சென்னைக்குப் போய்ச் சேரும். அங்குத் தபால்காரர் இதை உன் அண்ணன் வீட்டில் கொண்டுபோய்க் கொடுப்பார். உன் அண்ணனைப் போல நீ சென்னையில் படித்துக் கொண்டிருக்கிருய் என்று வைத்துக்கொள். உன் தம்பி உனக்கு இம்மாதிரி கடிதம் எழுதினுல், நீ அவனுக்கு எப்படிப் பதில் எழுதுவாய்? எழுதிக் கொண்டுவா, பார்ப்போம்.

மகன் : இதோ எழுதியிருக்கிறேன், பாருங்கள்.

6, பரோடா தெரு,
தியாகராய நகர்,
சென்னை—17.
20—9—1951.

அன்புள்ள தம்பி,

உன் கடிதம் கிடைத்தது. உங்கள் நலம் அறிந்து மகிழ்ந்தேன். நானும் உங்களைப் பார்க்க ஆவலாய் இருக்கிறேன். நான் முதல் தேதி அன்று இரவு புறப்படும் 'ப்ளூ மவுண்டன்' இரயிலில் வருவேன். வரும்போது உனக்குக் குடையும், தம்பிக்குக் குல்லாவும் வாங்கி வருவேன். நான் மறவாமல் பெருங்காயம் வாங்கி வருவதாக அம்மா வுக்குச் சொல். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என் வணக்கத்தைத் தெரிவி.

உன் அன்புள்ள அண்ணன்,
அர்த்தநாரி.

திரு. பி. மாணிக்கம்,
15, கடை வீதி,
ஈரோடு.

தந்தை : நீ மிகவும் கெட்டிக்காரன். நன்றாக எழுதியிருக்கிறாய்.

நவராத்திரி	ஏற்றபடி	உறை
விடுமுறை	அன்புகூர்ந்து	பின்புறம்
விலாசம்	வேறுபடும்	மறவாமல்
வலப்பக்கம்	கோவையாக	வணக்கம்
தொடங்கி	ஆவலாய்	தெரிவி
தொடர்பு		

பயிற்சி

1. சென்னையில் உள்ள உன் அண்ணனுக்குப் புத்தகம் வாங்கி வரும்படி ஒரு கடிதம் எழுது.

2. பொம்மை வாங்கி வரும்படி எழுதிய உன் தங்கைக்குப் பதிலாக ஒரு கடிதம் எழுது.

3. அயலூரில் உள்ள உன் தகப்பனாருக்கு உனக்குப் பணம் அனுப்பும்படி ஒரு கடிதம் எழுது.

4. உன் அண்ணன் கலியாணத்திற்குப் போவதற்காக விடுமுறை கோரி உன் உபாத்தியாயருக்குக் கடிதம் எழுது.

5. ஒவ்வொரு கடிதத்திற்கும் ஐந்து பாகங்கள் உண்டு.

(1) எழுதுபவரின் விலாசமும் தேதியும்.
(2) யாருக்கு எழுதுகிறோமோ அவரை அழைப்பது.
(3) எழுதும் சமாசாரம்.
(4) முடிவு.
(5) மேல் விலாசம்.

இவற்றை நினைவில் வைத்துக்கொண்டு கடிதம் எழுதிப் பழகு.

6. இவ்விவரத்தைப் பூர்த்தி செய் :

கடிதத்தை எழுதி —— போடவேண்டும். தபால்காரர் பெட்டியிலிருந்து —— எடுத்துப் போவார். அவர் கடிதங்களை —— அடித்துப் —— இட்டுக் கட்டுவார். பைகளை —— கொண்டுபோய் —— சேர்ப்பார்கள். இரயிலில் உள்ள கடிதங்களை ஊர்வாரியாகத் —— தனித்தனி —— இட்டுக் கட்டி வைப்பார். அவர் ஒவ்வொரு—— அதைச் சேர்ந்த ஊர்களுக்குப் போக வேண்டிய——அடங்கிய பையை ——. தபால்காரர் பெற்றுக்கொண்டு போய், —— முத்திரை அடிப்பார். பிறகு கடிதங்களை —— பிரித்து எடுத்துக் கொண்டு —— சென்று கொடுப்பார்.



15. குடிவீட்டின் வரலாறு

இக்காலத்தில் நாம் நாடுகளில் வசிக்கிறோம். நாடுகளில் கிராமங்களும் நகரங்களும் இருக்கின்றன. கிராமங்களிலும் நகரங்களிலும் நாம் கூட்டமாகக் கூடி வாழ்கிறோம். ஓட்டு வீடுகளும், மாடி வீடுகளும், மாளிகைகளும் கட்டிக்கொண்டு அவற்றில் வசிக்கிறோம். இவை போன்ற உறைவிடங்கள் ஆதிகாலத்தில் இருந்தனவா? அக்காலத்து மக்கள் எங்கு எவ்வாறு தங்கி வசித்திருப்பார்கள்?

ஆதி காலத்தில் நாடு நகரங்கள் கிடையா. எங்கும் காடாகவே இருந்தது. அக்காலத்து மக்கள் காடுகளிலேயே வசித்து வந்தார்கள். அவர்கள் கூட்டமாக ஓர் இடத்தில் கூடி வாழாமல் தனித் தனியாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நம்மைப்போல வீடுகட்டிக்கொள்ளத் தெரியாது.

அவர்கள் மிருகங்களைப் போலவே வெயிலில் உலர்ந்தும் மழையில் நனைந்தும் காடுகளில் அலைந்தும் திரிந்தார்கள்; மர நிழலிலும், புதர் மறைவிலும் தங்கி வாழ்ந்தார்கள்.

அந்நிலையில் அவர்கள் கொடிய மிருகங்களால் அடிக்கடி துன்புற நேர்ந்தது. அவற்றின் கொடுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி அவர்கள் மலைக்குகைகளில் மறைந்து வசிக்கலானார்கள். அவையும் அவர்கட்குப் பாது காப்பான இடங்களாக அமையவில்லை. ஆகவே அவர்கள் மரக்கிளைகளில் தழைகளால் கூடாரம் போல அமைத்துக்கொண்டு வசிக்கத் தொடங்கினர்.

தனித்து வாழ்ந்த மக்கள், நாளடைவில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள். பிறகு மனைவி மக்களோடு குடும்பங்குடும்பமாக வாழ வேண்டிய நிலைமை உண்டாகியது. அப்பொழுது அவர்களால் மரக்கிளைகளில் வசிக்க முடியவில்லை. எனவே அவர்கள் உயரமான பரண்களை அமைத்துக் கொண்டும், நீர் நிலையின் நடுவில் ஓடங்களில் கூடாரம் அமைத்துக் கொண்டும் வசிக்கலானார்கள்.

பின்னர் அவர்கள் சிறிது சிறிதாக நாகரிகம் அடைந்தனர்; துன்பம் செய்யும் மிருகங்களை வேட்டையாடிக் கொல்வதற்கு வேண்டிய கருவிகளைச் செய்துகொள்ளக் கற்றனர்; நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருள்களைப் பயிர் செய்யவும் தெரிந்து கொண்டனர். அந்நிலையில் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழ்ந்த பல குடும்பத்தினர் ஓர் இடத்தில் சேர்ந்து வசிக்கத் தொடங்

கினர். அப்பொழுது அவர்கள் மரக்கிளைகளாலும், இலைகளாலும், புல்லாலும் குடிசைகளைக் கட்டிக் கொண்டு அவற்றில் வசித்து வந்தார்கள். இவற்றின் சின்னங்களை நாம் இன்றும் கிராமங்களில் காணலாம்.

இந்நிலையில் மக்கள் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் அவர்கள் மண்ணைப் பிசைந்து சுவர் வைத்து, அச்சுவரின்மீது கூரை வேய்ந்து பெரிய குடிசைகளை அமைக்கக் கற்றனர். பிறகு மரங்களை உபயோகித்துச் சிறிய ஓலை வீடுகளைக் கட்டிக்கொள்ளப் பழகினர்.

மண் சுவர் அதிகநாள் நிலைத்திராமல் அடிக்கடி மழையால் சிதைந்து வந்தது. அதைக் கண்ட மக்கள் செங்கல் செய்து சுவர் வைக்கத் தெரிந்தனர். மண்ணைப் பிசைந்து கற்களாக அறுத்துச் சூளையாக அடுக்கிச் சுட்டனர். சுட்ட செங்கற்களை அடுக்கிச் சுவர் வைத்து, அதன்மேல் மரத் தூலங்களை அமைத்துப் பெரிய வீடுகளைக் கட்டிக் கொண்டனர்.

சுவருக்குச் செங்கல் செய்யத் தெரிந்ததும், அவர்கள் கூரைக்கு ஓடுகளை அறுத்துச் சுட்டு உபயோகிக்கலாம் என்பதை அறிந்தார்கள். மண்

ஊைப் பிசைந்து வளைவான ஓடுகளை அறுத்துச் சுட்டு அவற்றை அடுக்கிக் கூரை அமைத்துக் கொண்டார்கள். செங்கல் சுவரும் ஓட்டுக் கூரையும் நீண்டகாலம் சிதையாமல் இருந்தன. அது முதல் மக்கள் உறைவிடத்தைப் பற்றிய கவலையின்றி வாழலானார்கள். நாகரிகம் மிக்க இக்காலத்திலும் செங்கல்லும் ஓடும் வீடு கட்ட உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

பிறகு மக்கள் சுண்ணும்பைக் கண்டுபிடித்தார்கள். செங்கற்களைப் பொருத்த மண்ணுக்குப் பதிலாகச் சுண்ணும்பை உபயோகிக்கத் தொடங்கினர். சுண்ணும்பின் உபயோகத்தை அறிந்ததும், அவர்கள் ஓட்டுக்குப் பதிலாகச் செங்கல்லையும் சுண்ணும்பையும் கொண்டே கூரை அமைக்கலாம் என்பதைக் கண்டார்கள். பின்னர் மாடி வீடுகளும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் தோன்றலாயின.

இப்பொழுது சிமெண்டு என்னும் ஒருவகைச் செயற்கைச் சுண்ணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சுண்ணும்புக்குப் பதிலாகச் சிமெண்டும், மரத்திற்குப் பதிலாக இரும்புமே இப்பொழுது அதிகமாக உபயோகப்படுகின்றன. இக்காலத்தில் கட்டப்படும் வீடுகள் எல்லாம் சிமெண்டினுலும் இரும்பினுலுமே கட்டப்படுகின்றன. அவை நெடுங்காலம் அழிவின்றி நிலைத்திருக்கின்றன. தீயினுலும் மழையினுலும் இவற்றிற்குத் தீங்கு செய்ய முடியாது. ஆகவே நாம் இன்று அச்சமும் கவலையும் இன்றி அமைதியாக வாழ்ந்து வருகிறோம்.

மனித வாழ்க்கை ஒவ்வொரு வகையிலும் இவ்வாறே முன்னேறி வந்திருக்கிறது. உணவு, உடை,

மொழி ஆகிய ஒவ்வொன்றிலும் நாம் படிப்படியாக உயர்ந்து இன்றுள்ள நிலையை அடைந்திருக்கிறோம்.

கூட்டமாக	காப்பாற்றி	நெடுங்காலம்
உறைவிடங்கள்	பாதுகாப்பு	வேய்ந்து
அக்காலம்	அமைய	சிதைந்து
தனித்தனியாக	நாளடைவில்	கூரை
அடிக்கடி	நீர்நிலை	கவலையின்றி
துன்புற	துன்பம்	நாகரிகம்
நேர்ந்தது	பண்படுத்தி	தீங்கு
கொடுமை	சின்னங்கள்	முன்னேறி

கேள்விகள்

1. ஆதிகாலத்து மக்கள் எங்கு எவ்வாறு வசித்தார்கள் ?
2. அவர்கள் மிருகங்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள என்ன செய்தார்கள் ?
3. மக்கள் எப்பொழுது மண்ணையும், மரத்தையும் கொண்டு வீடு கட்டப் பழகினர் ?
4. எப்பொழுது மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் தோன்றலாயின ?
5. தற்காலத்தில் கட்டப்படும் வீடுகள் எவற்றைக் கொண்டு கட்டப்படுகின்றன ? அவை எப்படிப்பட்டவை?
6. மக்கள் எவ்வாறு இன்றைய நிலையை அடைந்துள்ளனர் ?

பயிற்சி

1. உங்கள் ஊரிலுள்ள குடியிருப்பு வீடுகளைச் சொல்.
2. மனிதனுடைய உடை, உணவு இவற்றின் வரலாற்றையும் தெரிந்துகொள்.
3. கூட்டமாக, தனித்தனியாக, அடிக்கடி, நாளடைவில், நெடுங்காலம், முன்னேறி, நாகரிகம்— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

4. கடவுள், தெய்வம், திருமால், சுரஸ்வதி, மக்கள், அரசர், அண்ணன், தம்பி, மகள், மகன், மனைவி—இச் சொற்கள் எல்லாம் மனிதர் அல்லது தேவர் பெயரைக் குறிக்கின்றன. இவை **உயர்திணைச்** சொற்கள் எனப் படும்.

மரம், காடு, மிருகம், புலி, பறவை, கல், மண்—இவை மனிதரும் தேவரும் அல்லாத உயிருள்ள பொருள் கள் உயிரில்லாத பொருள்கள் ஆகியவற்றின் பெயரைக் குறிக்கின்றன. இவை **அஃறிணைச்** சொற்கள் எனப் படும்.

மனிதர் அல்லது தேவரைக் குறிக்கும் சொற்கள் உயர்திணை. உயிருள்ளவையும் இல்லாதவையுமாகிய மற்றப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் அஃறிணை. உயர்திணை, அஃறிணை எனத் திணை இருவகைப்படும்.

5. ஃ—இது ஆய்த எழுத்து.

6. **சுட்ட** செங்கற்களை **அடுக்கிச்** சுவர் **வைத்தனர்.** இந்த வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் வினையை (செயலை)க் குறிக்கின்றன. இவை **வினைச்** சொற்கள்.

இவற்றுள் வைத்தனர் என்பது முடிந்த வினையை (செயலை)க் குறிக்கிறது. ஆகவே இது முற்றுவினை. இது **வினைமுற்று** எனப்படும்.

சுட்ட, அடுக்கி என்பன முடியாமல் குறைந்து நிற் கும் வினையை (செயலை)க் குறிக்கின்றன. இவை எச்ச **வினைகள்.**

இவ்விரண்டினுள் சுட்ட என்னும் எச்சவினை செங் கல் என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகையால் அது **பெயரெச்சம்** எனப்படும்.

அடுக்கி என்பது வைத்தனர் என்னும் வினையைக் கொண்டு முடிகிறது. ஆகையால் அது **வினையெச்சம்** எனப்படும்.

இவ்வாறு வினைச்சொல் முற்றுவினை, எச்சவினை என இருவகைப்படும்.

எச்சவினை பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

16. கரிகாலன் நியாய விசாரணை

தமிழகத்தின் ஒரு பகுதியாகிய சோழநாட்டை ஆண்ட சோழ மன்னர் பலராவர். அவர்களுள் கரிகாலன் என்பவன் பெரும்புகழ் படைத்த பேரரசனாக விளங்கினான். அவன் குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்து, தாய்மாமனாகிய இரும்பிடர்த் தலையார் பாதுகாப்பில் வளர்ந்து வந்தான். அவனது தாயத்தார் அரசுரிமையைக் கவர விரும்பி அவனைக் கொல்லச் சதி செய்தனர். அவர்கள் ஒரு நாள் இரவில் கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர். இரும்பிடர்த்தலையார் அதனை அறிந்து அவனை அம்மனையிலிருந்து வெளியேற்றினார். வெளியேற்றும்போது அவனது கால் தீப்பட்டுக் கருகியது. அதனால் அவனுக்குக் 'கரிகாலன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

கரிகாலன் சிறு பிள்ளையாக இருந்தபோதே அரசனாகிவிட்டான். அவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் அறிவிலும் திறமையிலும் பெரியவனாக இருந்தான்; வீரத்திலும் ஈகையிலும் சிறந்து விளங்கினான். அவன் தன்னை இளைஞன் என்று இகழ்ந்த பகைவர்களை வென்று அடக்கினான். கரிகாலனது ஆட்சித் திறமையைக் கண்டு மற்றச் சேர பாண்டிய அரசர்களும் வியந்தனர்.

கரிகாலனது ஆட்சியில் சோழநாடு பலவகையிலும் சிறந்து விளங்கியது. அவன் காடுகளை அழித்து நாடாக்கினான்; காவிரியாற்றுக்குக் கரை கட்டினான்; நாடெங்கும் நீர்நிலைகளை அமைத்து நீர் வளத்தைப் பெருக்கினான்; குடிமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான்; தொழிலாளர்களை ஆதரித்துத் தொழில்களை வளர்த்தான்; புலவர்களைப் போற்றிக் கல்வியைப் பரப்பினான்; கொடியவர்களைக் கடுமையாகத் தண்டித்தான்; நல்லவர்களை அன்பாகப் போற்றினான். அவன் ஆட்சியில் சோழநாடு வள நாடாக ஆகியது; மக்கள் குறையின்றி இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

கரிகாலன் நாள்தோறும் தானே வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்குவது வழக்கம். ஒரு நாள் அவன் வழக்கப்படியே அவையில் அமர்ந்து நியாய விசாரணை நடத்திக்கொண்டிருந்தான். அப்பொழுது வயது முதிர்ந்த இருவர் அங்கு வந்தனர். அவர்கள் தங்கள் வழக்கை அரசனிடம் கூறித் தீர்த்துக் கொள்ளுவதற்காகவே வந்தார்கள். வந்தவர்கள் ஆசனத்தில் வீற்றிருந்த கரிகாலனைப் பார்த்தார்கள். அவன் இளமை கண்டு அவர்கள் அவனை

இகழ்ச்சியாக எண்ணினர்; 'இந்தச் சிறு பிள்ளையா நம் வழக்கைக் கேட்டு உண்மை தெரிந்து தீர்ப்புக் கூறப்போகிருன்? நன்ருய் இருக்கிறது! இவன் தீர்ப்புக் கூறுவது இருக்கட்டும். முதலில் நம் வழக்கைப் புரிந்து கொள்ளவே இவனுல் முடியாதே. இவனிடம் வழக்கைக் கூறுவதால் என்ன பயன்?' என்று எண்ணி, ஒன்றும் கூருமல் திரும்பினர்.

கரிகாலன் அவர்கள் திரும்பிச் செல்வதைக் கவனித்தான். அவன் அவர்களுடைய முகக் குறியிலிருந்தே அவர்கள் எண்ணத்தைத் தெரிந்து கொண்டான். உடனே அவன், அவர்களை அழைத்து வரும்படி காவலாளனை ஏவிவிட்டு, எழுந்து உள்ளே சென்ருன். சென்றவன் சிறிது நேரத்தில் நரைத்த மயிர்முடியும் தாடியும் கட்டிக் கொண்டு வயது முதிர்ந்த கிழவனைப்போல வந்து ஆசனத்தில் அமர்ந்தான். அவையில் இருந்தவர்கள் அவனை அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் யாரோ ஒரு கிழவன் வந்து ஆசனத்தில் அமர்வதாகவே எண்ணித் திகைத்தனர்.

காவலன் அவ்விருவரையும் அழைத்துவந்து அரசன் முன் நிறுத்தினன். அவர்கள் இளம்பிள்ளை இருந்த ஆசனத்தில் நரைத்த முதியவன் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர்கள், 'இவன் அறிவும் அனுபவமும் முதிர்ந்தவனுகக் காணப்படுகிருன். இவன் நம் வழக்கைத் தீர்க்க வல்லவனே. இவனிடம் கூறலாம்' என்று எண்ணினுர்கள். அதற்குள் அரசன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் வந்த காரணம் என்ன? உங்கள் குறையைக் கூறுங்கள்" என்ருன். அவர்கள் தங்கள்

வழக்கை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அரசன் இருவர் கூறியவற்றையும் பொறுமையாகக் கேட்டான்; நடு நிலையில் இருந்து ஆராய்ந்தான்; உண்மையைக் கண்டு அறிந்தான்: இருவரும் "நியாயம், நியாயம்" என்று ஏற்றுக் கொள்ளு மாறு தீர்ப்புக் கூறினான். வழக்கு உரைத்தவர்கள் அவன் அறிவையும் ஆராய்ச்சியையும் பாராட்டினார்கள். மற்றவர்கள் அவன் சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

உடனே கரிகாலன் அங்கேயே தன் வேஷத்தைக் களைத்தான்; அவன் அவர்கள் முதலில் கண்ட சிறு பிள்ளையேயாகத் தோன்றினான். அதைக் கண்டு அவர்கள் திகைப்பு அடைந்தார்கள். "இச் சிறு பிள்ளையா இவ்வளவு புத்திசாலித் தனமாகத் தீர்ப்புக் கூறினான்? சோழர் குலத்தின் பெருமையே பெருமை!" என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அரசனை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்.

பகுதி	தாயத்தார்	குறையின்றி
அமர்தல்	மன்னர்	சதி
அவை	அநுபவம்	படைத்த
வெளியேறு	முதிர்ந்த	வல்லவன்
பெரும்புகழ்	திறமை	தீர்ப்பு
குறை	பாதுகாப்பு	இகழ்ந்த
வழக்கு	ஏற்றுக்கொள்ளல்	அரசுரிமை
வசதி	நரைத்த	சாமர்த்தியம்

கேள்விகள்

1. கரிகாலனுக்கு அப்பெயர் ஏன் வழங்கலாயிற்று?
2. கரிகாலன் எப்படிப்பட்ட குணமுள்ளவன்?

3. கரிகாலன் காலத்தில் சோழநாடு எவ்வாறிருந்தது?

4. வழக்கைக் கூறவந்த முதியவர்கள் ஏன் திரும்பினார்கள்?

5. கரிகாலன் அவர்களது வழக்கை எவ்வாறு தீர்த்தான்?

பயிற்சி

1. இது போன்ற இலக்கியக் கதைகளை வாசி.

2. இதைக் கரிகாலனே கூறுவதாகச் சொல்.

3. இதை வழக்குரைக்க வந்த முதியோர் கூறுவதாகச் சொல்.

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம் இவற்றைச் சொல்:

கரிகாலன் தன்னை இகழ்ந்த பகைவர்களை வென்று அடக்கினான்.
கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர்.
காடுகளை அழித்து நாடு ஆக்கினான்.

5. கீழ் வரும் வாக்கியத்தில் உள்ள உயர்திணைப் பெயர்ச் சொற்களையும், அஃறிணைப் பெயர்ச் சொற்களையும் தனித்தனியாகச் சொல்:

தாயத்தார் ஒரு நாள் இரவில் கரிகாலன் இருந்த மனையில் தீயிட்டனர்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரி:

(1) தாயத்தார் அரசுரிமையைக் கவர விரும்பிக் கரிகாலனைக் கொல்லச் சதி செய்தனர்.

(2) மிருகங்களின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டி மக்கள் மலைக் குகைகளில் மறைந்து வசிக்கலாயினர்.

(3) பாரதியாருக்கு அரசரோடு பழக விருப்பம் இல்லாமையால் அவர் எட்டையபுரத்தை விட்டு மதுரைக்கு வந்தார்.

7. தந்தை—இது ஆணைக் குறிக்கிறது. இது ஆண்பால்.

தாய்—இது பெண்ணைக் குறிக்கிறது. இது பெண்பால்.

புலவர்கள்—இது பலரை குறிக்கிறது. இது பலர்பால்.

இவை மூன்றும் உயர்திணைக்கு உரியவை.

வீடு—இது ஒன்றைக் குறிக்கிறது. இது ஒன்றன்பால்.

வீடுகள்—இது பலவற்றைக் குறிக்கிறது. இது பலவின்பால்.

இவை இரண்டும் அஃறிணைக்கு உரியவை.

8. இப் பாடத்தில் உள்ள ஆண்பால் பெயர்கள் ஐந்து சொல்.

9. பலர்பால் பெயர்கள் ஆறு சொல்.

10. ஒன்றன்பால் பெயர்கள் மூன்று சொல்.

11. பலவின்பால் பெயர்கள் இரண்டு சொல்.

12. இப்பாடத்தில் வந்துள்ள ஆண்பால் பெயர்களுக்குப் பெண்பால் பெயர்கள் சொல்.

17. வஞ்சகப் பூனை

கங்கையாற்றின் கரையில் திரிகூடம் என்னும் மலை ஒன்று உண்டு. அம்மலையில் மிகப்பெரிய வித்திமரம் ஒன்று இருந்தது. அதில் பலவகைப் பறவைகளும் தங்கள் குஞ்சுகளோடு தங்கி வாழ்ந்து வந்தன. அம்மரத்தின் அடியில் ஒரு பொந்து இருந்தது. அந்தப் பொந்தில் ஒரு கிழக் கழுகு நெடுங் காலமாக வசித்து வந்தது. அதற்கு நகமும் கண்ணும் இல்லாமையால் அதனால் வெளியில் சென்று இரை தேட முடியவில்லை. கிழத்தனத்தாலும் இரையில்லாமையாலும் அது மிகவும் மெலிந்திருந்தது.

மரத்தில் வாழும் மற்றப் பறவைகள் கழுகின் நிலையைக் கண்டு இரக்கம் கொண்டன. அவை நாள்தோறும் தங்கள் குஞ்சுகளுக்காகக் கொண்டு வரும் இரையில் அக்கழுகுக்கும் சிறிது கொடுத்து வந்தன. கழுகு அவ்விரையை உண்டு உணவுக்

கவலை இன்றி உயிர் வாழ்ந்து வந்தது. அது பறவைகள் தனக்குச் செய்யும் நன்றிக்குப் பதிலாக, அவை இரைதேடச் செல்லும் சமயங்களில் அவற்றின் குஞ்சுகளைக் காத்து வந்தது. கழுகின் காவலில் பறவைக் குஞ்சுகள் அச்சம் இன்றி இருந்தன.

ஒரு நாள் அவ்வழியாக ஒரு பூனை வந்தது. அது வித்து மரத்தில் பறவைக் குஞ்சுகள் கூட்டமாக விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டது. மரப்பொந்தில் கழுகு காவல் இருப்பது பூனைக்குத் தெரியாது. அது பறவைக் குஞ்சுகளைப் பிடித்துத் தின்ன எண்ணி அம்மரத்தின் அருகில் வந்தது. பறவைக் குஞ்சுகள் பூனையைக் கண்டு பயந்து கூச்சலிட்டன. குஞ்சுகளின் கூச்சலைக் கேட்டுக் கழுகு வெளியில் வந்தது. அது, "குஞ்சுகளே, நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இங்கு அயலார் யாரேனும் வந்தார்களா?" என்றது.

கழுகின் குரலைக் கேட்டுப் பூனை திடுக்கிட்டது. அச்சத்தால் அதற்கு நடுக்கம் உண்டாகியது. அது மெல்ல மனத்தைக் தைரியப்படுத்திக் கொண்டு, 'நாம் அறியாமல் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டோம். இனி, இக்கழுகினிடமிருந்து தப்புவது இயலாத காரியம். ஆகவே வஞ்சகத்தால் இக்கழுகை ஏமாற்றி வந்த காரியத்தை முடித்துக் கொள்ளப் பார்ப்பதே அறிவுடைமை ஆகும்' என்று எண்ணி, கழுகின் அருகில் சென்று, "ஐயனே, உங்கள் அடிமையாகிய பூனை வணங்குகிறேன்" என்றது.

பூனை என்றதும் கழுகுக்குக் கடுங்கோபம் உண்டாகியது. அது "நீ இங்கு வரலாகாது. இப்பொழுதே இவ்விடம் விட்டு ஓடிப்போ. இல்லையேல் கொன்று விடுவேன்" என்று கடுமையாகக்

கூறியது. பூனை, "ஐயனே, நான் பூனை என்பத ஞலேயே நீங்கள் என்னைப் பகைவஞக நினைப்பது நேர்மை அன்று. நான் என் வரலாற்றையும், உங் களை நாடி வந்த காரியத்தையும் சொல்லி விடு கிறேன். அவற்றைக் கேட்டுவிட்டுப் பிறகு எது செய்யத் தக்கதோ அதைச் செய்யுங்கள்" என்று மிகவும் பணிவாகக் கூறியது.

கழுகு பூனையை நோக்கி, "அப்படியாஞல் உன் வரலாற்றையும், நீ வந்த காரியத்தையும் சொல்" என்றது. பூனை, "அறிஞனே, நான் பூனை யாக இருந்தாலும் அந்த இனத்திற்கு உரிய குணம் செயல்களை விட்டு நெடுங்காலம் ஆயிற்று. பூனை இனத்தை எல்லோரும் இகழ்கிருர்கள். அந்த அவ மானம் தாங்காமல் நான் அவ்வினத்தையே துறந் வந்துவிட்டேன். நான் பல வருஷங்களாகக் கங கைக் கரையில் விரதம் இருந்து தவம் செய்து வரு கிறேன். நீர் சிறந்த அறிஞர் என்றும், எல்லாக் கலைகளையும் அறிந்து அவற்றில் கூறியுள்ளபடி ஒழுகும் தரும சீலர் என்றும் பறவைகள் புகழ்ச்சி யாகப் பேசிக் கொள்வதைக் கேட்டேன். உம்மை அடுத்து உபதேசம் பெறலாம் என்று எண்ணி வந் தேன். நீரும் என்னைப் பூனை என்று இகழ்ந்து கொல்வதாகப் பயமுறுத்துகிறீர். ஏழையாகிய நான் வேறு யாரை அடைந்து எவ்வாறு வாழ் வேன்?" என்றது.

கழுகுக்குப் பூனையினிடம் இரக்கம் உண்டாகி யது. அது பூனையை நோக்கி, "நான் உன் வரலாற்றை அறியேன். நீயும் உன் இனத்தாரைப் போல உயிர்களைக் கொன்று தின்று வாழும் இயல் புடையவன் என்று எண்ணியே அவ்வாறு கூறி

னேன்'' என்றது. பூனை அதைக் கேட்டு, '' சிவ சிவ! நான் மாமிசம் தின்பதைவிட்டு நெடுங்காலம் ஆயிற்றே! நான் என் இனத்தைத் துறந்து வெளி யேறிய நாள் முதல் காய் கனி கிழங்குகளையே உண்டு உயிர் வாழ்ந்து வருகிறேன். குலப் பழியைப் போக்கப் பெரியோரை அடுத்து உபதேசம் பெற்றுவரும் நான் 'கொன்று தின்னும் கொடுமையை மனத்தாலும் நினைப்பேனோ? எல்லாம் அறிந்த நீர் எளியவனாகிய என்னைப் பற்றி இவ்வாறு நினைக்கலாமா?'' என்று கழுகுக்கு நம்பிக்கை உண்டாகும்படி நயமாகக் கூறியது.

கழுகு பூனையின் சொல்லை உண்மை என்று நம்பி அதற்கு இடம் கொடுத்தது. பூனை நாளைத் தோறும் பறவைகள் இரை தேடச் சென்ற பிறகு அவற்றின் குஞ்சுகளைப் பிடித்துக் கொன்று கொண்டு வந்து பொந்திலேயே ஒரு பக்கத்தில் வைத்துத் தின்று வந்தது. கழுகுக்குக் கண் இல்லாமையால் பூனையின் திருட்டுச் செயல் தெரியவில்லை.

ஒவ்வொரு நாளும் குஞ்சுகள் குறைவதைக் கண்டு பறவைகள் கலக்கம் அடைந்தன. நாள் தோறும் குஞ்சு இழந்த பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. எனவே பறவைகள் கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை அதனை அறிந்து கழுகுக்குத் தெரியாமல் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டது.

பறவைகள் இரை தேடச் செல்வதை விட்டுத் திருட்டைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன. அவை சுற்றுப் புறத்தில் உள்ள மறைவான இடங்களை எல்லாம் ஆராய்ந்து கொண்டே கழுகின் பொந்தண்டை வந்தன. பொந்தின் ஒரு

பக்கத்தில் குஞ்சுகளின் இறகுகளும் எலும்புகளும் குவிந்திருப்பதை அவை கண்டன. அவை அந்தப் பொந்தில் உள்ள கழுகே தாங்கள் இல்லாத சமயத்தில் தங்கள் குஞ்சுகளைக் கொன்று தின்று வந்திருக்கிறது என்று எண்ணின. பறவைகளுக்குக் கழுகின் மீது கடுங்கோபம் உண்டாகியது. அவை அங்கேயே அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. வஞ்சகப் பூனைக்கு இடம் கொடுத்த குற்றத்தால் கழுகு பறவைகளின் கோபத்திற்கு இலக்காகி இறந்தது.

கங்கை	அடிமை	நம்பிக்கை
திரிகூடம்	நேர்மை	நயமாக
வித்தி மரம்	வரலாறு	சோதிக்க
கழுகு	அவமானம்	முயற்சி
கூச்சல்	கலைகள்	ஆராய்ந்து
தைரியம்	தருமசீலர்	கடுங்கோபம்
ஆபத்து	புகழ்ச்சி	வஞ்சகம்
அறிவுடைமை	உபதேசம்	குற்றம்
இலக்கு	எலும்புகள்	துறந்து

கேள்விகள்

1. கழுகு பறவைகளின் நன்றிக்குப் பதிலாக என்ன செய்தது?

2. பூனை பறவைக் குஞ்சுகளைத் தின்ன என்ன உபாயம் செய்தது?

3. பூனை கழுகை எவ்வாறு வஞ்சித்தது?

4. பூனைக்கு இடம் கொடுத்ததால் கழுகிற்கு என்ன நேர்ந்தது?

5. இந்தக் கதையால் நீ தெரிந்து கொள்ளுவதென்ன?

பயிற்சி

1. இக்கதை எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்.

2. அந்தப் புத்தகத்தில் உள்ள மற்ற கதைகளையும் வாசி.

3. இந்தக் கதையைப் பூனை சொல்வதாகச் சொல்.

4. இந்தக் கதையைப் பறவைகள் சொல்வதாகச் சொல்.

5. பின்வரும் சொற்களில் ஒவ்வொன்றிற்கும் பால் கூறு :

மணி, மங்களம், அத்தை, மகள், மக்கள், குடியானவர்கள், கழுகு, பூனை, பறவைகள், வேடன், குரங்குகள், மரங்கள்.

6. கீழ்வரும் வாக்கியத்தில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றைச் சொல் :

(1) மரத்தில் வாழும் பறவைகள் கழுகின் நிலையைக் கண்டு இரக்கம் கொண்டன.

(2) வயது முதிர்ந்த இருவர் அங்கு வந்தனர்.

(3) அவன் சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்தார்கள்.

7. ஒரு பூனை வந்தது.
பூனை வளர்கிறது.
பார்த்து வருவோம்.

இவ்வாக்கியங்களில் 'வந்தது' என்பது முன்னமே நடந்துவிட்ட செயலைக் குறிக்கிறது. ஆகவே இது இறந்த காலம்.

வளர்கிறது என்பது இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் செயலைக் குறிக்கிறது. இது நிகழ் காலம்.

வருவோம் என்பது இனி நடக்கப் போகும் செயலைக் குறிக்கிறது. இது எதிர் காலம்.

இவ்வாறு வினைச் சொற்கள் காலம் பற்றி இறந்த கால வினைச்சொல், நிகழ்கால வினைச்சொல், எதிர் கால வினைச்சொல் என மூன்று வகைப்படும்.

18. குரங்கும் குருவிகளும்

குளிராலும் பசியாலும்
    குன்றியலே குரங்கொன்று
வளராலின் கீழ்வந்து
    மழைக்கொதுங்கி நிற்குங்கால்,
தளராமல் அம்மழையில்
    தாம் அமைத்த கூடுகளில்
உளவான குருவியெலாம்
    உற்றறிந்த இதன் துயரை. (1)
'குருவிகளைப் பாரும்நீர்
    கூடமைத்து வாழ்கின்றேம் ;
உருவினிலோ மனிதரையே
    ஒக்கின்றீர் ; எம்மைவிடக்
கருவிமிகப் படைத்துள்ளீர் ;
    கூடொன்றைக் கட்டியதில்
வருமையில் அஞ்சாமல்
    வாழவில்லை ஏன் ?' என்ன. (2)
நன்றுரைத்த தாறுைம்
    நாடாமல் கோபத்தால்,
'இன்றெனை நீர் ஏளனமாய்
    ஏன்சொன்னீர் ? உம்போல
நன்ருகக் கூடுகட்ட
    நானறியேன் ; ஆனாலும்
இன்றதனைப் பிய்த்தெறிய
    எளிதாகத் தெரியும்,' என,
கூட்டினெடும் அதில்வாழும்
    குருவியையும் குமைத்திட்டே
ஓட்டிவிட்டே இறங்கியது ;
    மூடர்களுக் கொருபுத்தி

காட்டிடினும் பெரியோர்கள்
கைக்கொள்ளார் ; சொன்னவர்க்கும்
கேட்டினையே தருவர் ; அதால்
கீழோர்க்குப் புத்தி சொல்லேல். (4)

—பஞ்ச தந்திரம்

கேள்விகள்

1. குரங்கு அடைந்த துயரம் என்ன?
2. குருவிகள் என்ன சொல்லின?
3. குரங்கு என்ன சொல்லியது? என்ன செய்தது?
4. இக்கதையால் உணர்த்தப்படும் நீதி என்ன?

பயிற்சி

1. இப்பாட்டுகளைப் படி.
2. பாட்டுகளின் திரண்ட கருத்தைச் சொல்.
3. பதம் பதமாகப் பொருள் சொல்.
4. இக்கதையைக் குரங்கு சொல்வதாகச் சொல்.
5. இக்கதையைக் குருவிகள் சொல்வதாகச் சொல்.
6. கீழே கோடிட்டுள்ள இடங்களில் 'போ' என்னும் சொல்லைப் பொருத்தமாக மாற்றி வைத்து வாசி.

நான் நேற்றுப் ——
நான் இப்பொழுது ——
நான் நாளை ——
குரங்கு முன்னமே ——
குரங்கு இப்பொழுது ——
குரங்கு இனி ——

7. கீழுள்ள வாக்கியங்களில் இறந்தகால வினைச் சொற்களுக்குப் பதிலாக நிகழ்கால வினைச்சொற்களை வைத்துச் சொல் :

(1) பூனை வந்தது.
(2) குஞ்சுகள் கூச்சலிட்டன.
(3) கரிகாலன் சென்றான்.
(4) இருவர் வந்தனர்.



19. சென்னை மாநகரம்

நமது நாடு கிராமங்கள் நிறைந்த நாடாகும். ஆயினும் இதில் பல பெரிய நகரங்களும் உள்ளன. நம் நாட்டின் தலைநகரம் டில்லி மாநகரம் என்பது ஆகும். அது அவ்வளவு பெரிய நகரம் அன்று. நம் நாட்டில் உள்ள நகரங்களில் மிகப் பெரியது கல்கத்தா. அதற்கு அடுத்த பெரிய நகரம் பம்பாய். மூன்ருவதாகப் பெரியது சென்னை மாநகரம். சென்னை மாநகரில் பதினன்கு லட்சம் ஜனங்கள் வாழ்கிருர்கள். அது நம் மாகாணத்தின் தலைநகரம் ஆகும்.

சென்னை நகரம் முன்னர் ஜார்ஜ் டவுன், பார்க் டவுன் என இரு பிரிவுகளாக இருந்தது. இப்பொழுது அது பல பிரிவுகளை உடைய பெரு நகரமாக வளர்ந்துள்ளது. அந்நகரத்தைச் சுற்றிலும் பல சிறிய கிராமங்கள் இருந்தன. நாளடைவில்

அவை ஒவ்வொன்றாக அந்நகரத்தோடு சேர்ந்து அதன் பிரிவுகளாகிவிட்டன. அவற்றுள் திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் என்பவை முக்கியமானவை ஆகும். இவையே அன்றி இப்பொழுது புதியவையாகச் சில பகுதிகள் தோன்றியுள்ளன. அவற்றுள் தியாகராய நகர், ஷெனாய் நகர், காந்தி நகர் என்பன சிறப்புடையவை ஆகும்.

சென்னை நகரம் பல மைல்கள் பரப்புள்ள பெரு நகரமாகும். அதில் ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் போகப் பலவகையான வண்டிகள் இருக்கின்றன. இரயில் வண்டி, மின்சார ரயில் வண்டி, டிராம் வண்டி, மோட்டார் பஸ் ஆகிய பல வகையான விசை வண்டிகள் எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இவையே அன்றி வாடகை மோட்டார்களும், குதிரை வண்டிகளும், ரிக்ஷா வண்டிகளும் மிகுதியாக உள்ளன. இவற்றின் உதவியால் மக்கள் நகரின் பல பிரிவுகட்கும் விரைவில் சென்று வருகின்றனர்.

சென்னை நகரம் மாகாணத் தலைநகரமாகவும், சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் அமைந்துள்ளது. அதனால் அதில் பல அரசாங்கத் தலைமைக் காரியாலயங்களும், வியாபார ஸ்தலங்களும் நிறைந்துள்ளன. கலாசாலைகளும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன; வைத்தியசாலைகள், இரயில் நிலையங்கள், விமான நிலையம் முதலியவையும் உள்ளன.

சென்னை நகரில் உள்ள கடைத் தெருக்களுள் 'சைனா பஜார்' என்பது மிகவும் முக்கியமானது ஆகும். அதில் விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகள் முதல் தங்க நகைக் கடைகள்வரை பல

வகைக் கடைகளும் உள்ளன. சென்னை நகரில் அமைந்துள்ள ரோடுகளில் மவுண்டு ரோடு சிறப்புடையது. அது அகலமான அழகிய ரோடு ஆகும். அதன் இருபக்கங்களிலும் அழகிய பெரிய கட்டடங்கள் வரிசையாக அமைந்துள்ளன.

சென்னை நகருக்குச் செல்வோர் தவறாமல் பார்க்கவேண்டிய இடங்கள் பல உள்ளன. அவை கப்பல் துறைமுகம், கலங்கரை விளக்கம்,



செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, மிருகக் காட்சிச் சாலை, பொருட்காட்சிச்சாலை, மீன் காட்சிச்சாலை, கைத்தொழில் காட்சிச் சாலை, மூர்மார்க்கெட், ஹைகோர்ட்டு, விமான நிலையம் முதலியவை ஆகும்.

சென்னை நகருக்கு அழகையும் சிறப்பையும் கொடுப்பது அதன் கடற்கரையே ஆகும். உலகத்தில் உள்ள சிறந்த கடற்கரைகளில் சென்னைக்

கடற்கரை இரண்டாவதாகப் புகழப்படுகிறது. அது செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து மயிலாப்பூர் வரை மூன்று மைல் தூரம் பரவிப் பரந்துள்ளது. அக்கடற்கரை ஓரத்தில் பல காரியாலயங்களும் கல்லூரிகளும் உள்ளன. மாலை வேளையில் அங்குத் தூய்மையான குளிர்ந்த கடல் காற்று வீசும். அது உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் செய்யும். அதனை அனுபவிப்பதற்காக மக்கள் ஒவ்வொரு நாளும் மாலையில் அங்குச் சென்று கூடுவார்கள். அவர்களுக்குப் பொழுது போக்கிற்காக அங்கு ஒலிப்பரப்பியும் வைத்துள்ளனர். மக்கள் கடல் காற்றை அனுபவித்துக்கொண்டே ஒலிபரப்பில் நடைபெறும் பாட்டுக்களையும், பிரசங்கங்களையும் கேட்டு மகிழ்வர்.

நம் மாகாணக் கவர்னரும் மந்திரிகளும் சென்னை நகரிலேயே வசிக்கின்றனர். மாகாணச் சட்ட சபைகளும், மாகாணத் தலைமைக் காரியாலயமும் அந்நகரிலேயே உள்ளன. கவர்னர் மாளிகை கிண்டியில் உள்ளது. சட்டசபைகள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள கட்டடங்களிலும் ராஜாஜி ஹாலை ஒட்டிய புதிய கட்டடங்களிலும் நடைபெறுகின்றன.

சென்னை நகரில் நிலையாக வாழ்பவர்களைத் தவிர, வியாபார வேலையாகவும், அரசாங்கக் காரியமாகவும் வெளியூர்களிலிருந்து நாள்தோறும் பெருந்திரளான மக்கள் அங்கு வருவார்கள். அவர்களில் பலர் சில நாள்கள் அங்குத் தங்கியிருப்பதும் உண்டு. அவர்களுடைய சௌகரியத்திற்காக உணவுச் சாலைகளும், தங்கும் விடுதிகளும், சத்திரங்களும் அங்கு அதிகமாக உள்ளன. மக்களின்

இன்பப் பொழுது போக்கிற்கான சினிமாக் கொட்டகைகள், நாடகக் கொட்டகைகள், சங்கீத அரங்குகள், பிரசங்க மண்டபங்கள் ஆகியவை மிகுதியாக இருக்கின்றன.

சென்னை நகரத்தின் பொது நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு நகர சபை இருக்கிறது. அதற்கு 'கார்ப்பரேஷன்' என்பது பெயர். அது நகரின் பொதுச் சுகாதாரம், குடித்தண்ணீர் வசதி, ஆரம்பக் கல்வி முதலியவற்றைக் கவனித்து வருகிறது.

எப்பொழுதும்	நிலையங்கள்	ஒலிபரப்பி
கோட்டை	அகலமான	திரளான
துறைமுகம்	கலங்கரை விளக்கம்	விடுதிகள்
அரசாங்கம்	கடற்கரை	அரங்குகள்
காரியாலயம்	தூய்மையான	நிர்வாகம்
கலாசாலை	கவர்னர்	மந்திரிகள்

கேள்விகள்

1. நம் மாகாணத்தின் தலைநகரம் எது?

2. சென்னையில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல என்ன வசதிகள் உள்ளன?

3. சென்னை நகருக்குச் செல்வோர் தவறாமல் பார்க்கக்கூடியவை யாவை?

4. சென்னைக்கு அழகையும் சிறப்பையும் கொடுப்பது எது?

5. மாலை வேளைகளில் ஜனங்கள் ஏன் கடற்கரையில் கூடுகின்றனர்?

6. சென்னை நகரத்தின் பொது நிர்வாகத்தைக் கவனிப்பது எது?

பயிற்சி

1. தென் இந்தியாவில் உள்ள முக்கியமான நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

2. நம் நாட்டின் தலைநகரத்தைப் பற்றித் தெரிந்து கொள்.

3. காசி, காஞ்சி போன்ற புண்ணிய நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

4. கோயம்புத்தூர் போன்ற தொழில் நகரங்களைப் பற்றித் தெரிந்துகொள்.

5. துறைமுகம், காரியாலயம், கலங்கரை விளக்கம், ஒலிபரப்பி, நிர்வாகம்—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.

6. கீழ்வரும் வாக்கியங்களை வாசி :

தன்மை	முன்னிலை
நான் வந்தேன்.	நீ வந்தாய்.
நாம் வந்தோம்.	நீர் வந்தீர்.
நாங்கள் வந்தோம்.	நீங்கள் வந்தீர்கள்.

படர்க்கை

அவன் வந்தான்.	அது வந்தது.
அவள் வந்தாள்.	அவை வந்தன.
அவர்கள் வந்தார்கள்.	

நான், நாம், நாங்கள் என்னும் சொற்கள் பேசுவோரைக் குறிக்கின்றன. இவை தன்மை ஆகும்.

நீ, நீர், நீங்கள் என்னும் சொற்கள் முன் நின்று கேட்போரைக் குறிக்கின்றன. இவை முன்னிலை ஆகும்.

அவன், அவள், அவர்கள், அது, அவை என்பன போன்ற சொற்கள் தன்மையையும் முன்னிலையையும் சேராதவை - பேசப்படும் வேறு பொருளைக் குறிப்பவை. இவை படர்க்கை ஆகும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இம்மூன்றும் இடம் எனப்படும். எல்லாச்சொற்களும் இம்மூன்று இடங்களில் அடங்கும்.

20. பருத்திச் செடி

நாம் உணவு இல்லாமல் உயிர்வாழ முடியாது. அதுபோலவே உடை இல்லாமல் நாம் வெளியில் உலாவ முடியாது. உணவும் உடையும் நம் வாழ்க்கைக்கு அவசியமானவை. உடையில் கம்பளி உடை, பட்டு உடை, பருத்தி உடை எனப் பல வகைகள் உண்டு. நாம் வெப்பம் மிக்க நாட்டில் வாழ்கிறோம். ஆகவே பருத்தி உடையே நமக்கு முக்கிய உடையாகும். பருத்தி ஆடை பஞ்சிலிருந்து நெய்யப்படுகிறது. பஞ்சு பருத்திச் செடியிலிருந்து கிடைக்கிறது.

பருத்தி, செடிவகையைச் சேர்ந்த பயிர் ஆகும். அது புன்செய்ப் பயிர். ஆகவே அதற்குத் தண்ணீர் அதிகமாக வேண்டுவதில்லை. கரிசல் மண் பூமியே பருத்திப் பயிர் செய்வதற்கு ஏற்ற நிலமாகும். நமது நாட்டில் சென்னை மாகாணத்திலும், பம்பாய்

மாகாணத்தில் பல பகுதிகளிலும், பீஹார் மாகாணத்திலும், குஜரத்திலும் பருத்தி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. நமது சென்னை மாகாணத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம், கடப்பை, கர்நூல், பல்லாரி, கோதாவரி, கிருஷ்ணு முதலிய ஜில்லாக்களில் பருத்தியை மிகுதியாகப் பயிரிடுகிருர்கள். ஆயினும் திருநெல்வேலி ஜில்லாவில் பயிராகும் பருத்தியே மிகச் சிறந்ததாகும்.

நம் நாட்டில் பயிராகும் பருத்தியில் இருவகைகள் உண்டு. ஒன்று ஐந்து மாதப் பயிர்; மற்றொன்று எட்டுமாதப் பயிர். கீழ்க்கரை நாடுகளில் ஐந்து மாதப் பருத்தியைப் பயிர் செய்கிருர்கள். மற்ற நாடுகளில் எட்டுமாதப் பருத்தி பயிர் செய்யப்படுகின்றது. ஐந்து மாதப் பருத்தியைப் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் நடுவார்கள். எட்டு மாதப் பருத்தி வைகாசி, ஆனி மாதங்களில் நடப்படும். இவ்வாறு இவற்றை நடுங்காலம் வேறுபட்டாலும் பறிக்கும் காலம் இரண்டிற்கும் ஒன்ருகவே இருக்கும். இருவகைப் பருத்திகளும் தை, மாசி மாதங்களிலேயே பறிக்கப்படும்.

பருத்தியை நடுவதற்குச் சில மாதங்கள் முன்பே நிலத்தை உழுது, எருவிட்டுப் பண்படுத்துவார்கள். பிறகு மழை பெய்ததும் பருத்தி விதையை இரண்டடிக்கு ஒன்ருக வரிசையாய் நடுவார்கள். விதை முளைத்ததும் இடையில் உள்ள நிலத்தை உழுதுவிடுவார்கள். சில இடங்களில் பருத்தியை நாற்று விட்டு நடுவதும் உண்டு. பருத்தி முளைக்கும் போதும், காய்க்கும் காலத்திலும் அதிக மழை கூடாது. செடி வளரும்போதும் மாதத்திற்கு ஒரு முறை இருமுறை மழை பெய்தால் போதும்.

பருத்தி நான்கடி உயரம்வரை வளரும். அது பக்கங்களில் கிளைகள் விட்டுப் புதர்போலப் படரும். பருத்தியின் இலை பல கூர்களாக இருக்கும். பருத்தி இரண்டு மூன்று மாதங்களில் மலரத் தொடங்கும். பருத்திப்பூ மஞ்சள் நிறம் உடையது. பூவின் அடியில் காய் தோன்றும். பருத்திக் காய் பசுமை நிறமாக இருக்கும். காயில் மூன்று அல்லது நான்கு அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையிலும் பஞ்சும் விதைகளும் நிறைந்திருக்கும். காய்கள் முற்றி உலர்ந்ததும் வெடிக்கும். வெடித்த காயில் பருத்தி வெளிப்படும். பருத்தி வெண்மை நிறமாக இருக்கும். சிவப்பு நிறமான பருத்தியும் உண்டு. அது செம்பருத்தி எனப்படும்.

காய் முற்றி வெடித்ததும் அவற்றைப் பறித்துச் சேர்ப்பார்கள். பிறகு அவற்றின்மேல் மூடிக்கொண்டிருக்கும் தோலை எடுத்துச் சுத்தம் செய்வார்கள். பருத்தியின் நார் துசும்பு அல்லது சிம்பு எனப்படும்.

பருத்தியில் பலவகைகள் உண்டு. அவற்றுள் கம்போடியா என்பதும், கருங்கண்ணி என்பதும் சிறந்தவைகளாகும்.

உடை	பஞ்சு	ஜில்லா
வாழ்க்கை	கரிசல் மண்	தோல்
பருத்தி	மாகாணம்	துசும்பு
சிம்பு	வெப்பம்	கீழ்க்கரை நாடுகள்

கேள்விகள்

1. நமக்கு ஏற்பட்ட ஆடை எது? அது எதிலிருந்து நெய்யப்படுகிறது?

2. பருத்தி எப்படிப்பட்ட நிலத்தில் பயிராகும்?

3. நம் மாகாணத்தில் பருத்தி எங்கு மிகுதியாகப் பயிராகின்றது ?

4. நம் நாட்டில் பயிராகும் பருத்தி எத்தனை வகைப்படும் ? அவை எவை ?

5. பருத்திக்காயிலிருந்து பஞ்சு எவ்வாறு எடுக்கப் படுகிறது ?

6. பருத்தியில் சிறந்தவை எவை ?

பயிற்சி

1. பருத்தியைப்போல நமக்கு உபயோகப்படும் வேறு மரம் செடிகளைப் பற்றித் தெரிந்துகொள்.

2. அவற்றைப் பயிர் செய்யும் முறைகளைத் தெரிந்து கொள்.

3. கீழுள்ள வாக்கியங்களை 'முடியாது' என்பதற்குப் பதிலாக 'முடியும்' என்பதை வைத்து மாற்றி வாசி:

(1) உணவு இல்லாமல் உயிர்வாழ முடியாது.

(2) உடை இல்லாமல் வெளியே உலாவ முடியாது.

4. தடித்த எழுத்தில் உள்ள சொற்களின் இடத்தைச் சொல் :

நான் எவ்வாறு வாழ்வேன் ?
நீ இங்கு வரலாகாது.
நாம் வாழ்கிறோம்.
நாங்கள் அறிவோம்.
நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் ?
அவர் கூறினார்.
அது கண்டது.
மக்கள் கூடுவர்.



21. நூற்றல்

முன் பாடத்தில் பருத்தி உண்டாகும் விதத்தைப்பற்றிப் படித்தோம். அந்தப் பருத்தியிலிருந்தே நூல் நூற்கப்படுகிறது. அந்நூலைக் கொண்டே ஆடைகள் நெய்யப்படுகின்றன. ஆகவே இந்தப் பாடத்தில் பருத்தியிலிருந்து நூல் எவ்வாறு நூற்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

காயிலிருந்து பிரித்தெடுத்த பருத்தியில் விதைகள் கலந்திருக்கும். அவ்விதைகளை நீக்கிய பிறகே அதை நூற்கமுடியும். பருத்தியிலிருந்து விதைகளை நீக்குவதற்கு ஒரு கருவி உண்டு. ஒரு மணையின் மேல் இரு கால்களை நிறுத்தி, அக்கால்களில் ஒன்றின்கீழ் ஒன்ருக இரு உருளைகள் கோக்கப்பட்டிருக்கும். அதன் வலப் பக்கத்தில் கைப்பிடி அமைந்திருக்கும். பருத்தியைச் சிறிது சிறிதாக இடக் கையால் எடுத்து, உருளைகளின் இடையில்

கொடுத்து, வலக்கையால் கைப்பிடியைச் சுழற்ற வேண்டும். உருளைகளின் இடையில் செல்லும் பருத்தியின் கொட்டைகள் பிரிந்து உள்பக்கம் விழும்; கொட்டை நீங்கிய பருத்தி வெளிப்பக்கம் விழும். கொட்டை நீங்கிய பருத்தி பஞ்சு எனப் படும்.

பஞ்சில் தோல், தூசு முதலியவை கலந்திருக் கும். அவற்றை ஒன்று விடாமல் நீக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் செய்யப்பட்ட பஞ்சை உடைத்துப் பிரிக்க வேண்டும். அதற்கு வில்லும் விருடையும் வேண்டும். வில்லை அதன் நரம்பு பஞ் சின்மேல் பொருந்தும்படி இடக்கையில் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு வலக்கையில் விருடை யைப்பற்றி அதனுல் வில்லின் நரம்பை இழுத்து விடவேண்டும். நரம்பில் உண்டாகும் அதிர்ச்சி யால் பஞ்சு உடைபடும். அதில் உள்ள துசும்புகள் தனித் தனியாகப் பிரியும். இது பஞ்சு அடித்தல் என்றும், பஞ்சு கொட்டுதல் என்றும் சொல்லப் படும்.

உடைபட்ட பஞ்சைத் திரிகளாகத் திரிக்க வேண்டும். இது பட்டைபோடுதல் எனப்படும். பஞ்சைப் பலகையின்மேல் பரப்பி, அதன்மீது திரட்சியான குச்சி ஒன்றை வைத்து உருட்ட வேண்டும். பஞ்சு திரிந்த பிறகு குச்சியை மெல்ல இழுத்து எடுத்துவிட வேண்டும். இவ்வாறு திரிக் கப்பட்ட பஞ்சுச் சுருணைக்குப் பஞ்சுத் திரி என் பது பெயர். இதனைப் பஞ்சுப் பட்டை என்றும் கூறுவது உண்டு.

இவ்வாறு திரிக்கப்பட்ட பஞ்சுத்திரியிலிருந்தே நூல் நூற்கப்படுகிறது. தக்ளி, இராட்டை என்பன

நூற்பதற்கு உபயோகிக்கப்பட்டு வரும் கருவிகளாகும். இவற்றுள் தக்ளியே பழைமையானது. தக்ளிக்குக் கதிர் என்றும் ஒரு பெயர் உண்டு. தக்ளியில் நூற்பவர்கள் இடக்கையில் பஞ்சுத் திரியை இடுக்கிக் கொள்வர். அத்திரியின் அடியிலிருந்து சிறிது பஞ்சை இழுத்து, தக்ளியின் நுனியில் இணைத்து, வலக்கையால் தக்ளியைச் சுழற்றி விடுவர். தக்ளி சுழலும் போது, வலக்கையால் திரியிலிருந்து பஞ்சைச் சிறிது சிறிதாக இழுத்து விடுவர். தக்ளியின் சுழற்சியால் பஞ்சுகள் சுழன்று முறுக்கு ஏறும். முறுக்கேறிய நூலைத் தக்ளியின் அடியிலோ, நுனியிலோ சுற்றிக் கொள்வர். தக்ளியில் நூற்பவர் நின்று கொண்டே நூற்கவேண்டும். இக்கருவியால் அதிக நூல் நூற்க முடியாது.

இராட்டையில் நூற்போர் அமர்ந்து கொண்டே நூற்க வேண்டும். இராட்டையின் ஒரு பக்கத்தில் பெரிய சக்கரம் இருக்கும். மற்ழுெரு பக்கத்தில் கதிர் கோக்கப்பட்டிருக்கும். சக்கரமும் கதிரும் கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும். சக்கரத்தில் கைப்பிடி அமைக்கப்பட்டிருக்கும். நூற்பவர் இடக்கை விரல்களுக்கு இடையில் பஞ்சுத் திரியை இடுக்கிக்கொண்டு, அதனைக் கதிர் நுனியோடு இணைத்துக் கொள்வர்; பிறகு வலக்கையால் சக்கரத்தின் கைப்பிடியைப் பற்றிச் சுழற்றுவர். சக்கரம் சுற்றிக் கதிரைச் சுற்றச் செய்யும். கதிரின் சுழற்சியால் பஞ்சும் சுழன்று முறுக்கு ஏறும். முறுக்கேறிய நூலை அக்கதிரிலேயே சுற்றிக் கொள்வர். பிறகு அந்நூலை எடுத்துக் குஞ்சங்களாகச் சுற்றிச் சிட்டங்களாகக் கட்டுவர்.

இவ்வாறு நூற்கப்பட்ட நூல் கைத்தறியில்

ஆடையாக நெய்யப்படும். நம் நாட்டில் நெடுங்காலமாக நூற்றலும் நெசவும் இவ்வாறே நடந்து வந்தன. பிற்காலத்தில் இயந்திரங்கள் தோன்றியதும் இவை மறைந்தன. பருத்தியைக் கொட்டை நீக்குவது முதல் ஆடை நெய்வது வரையில் எல்லாம் இயந்திரங்களாலேயே நடைபெறலாயின. இதனால் அத்தொழில்களைச் செய்து வந்த மக்கள் தொழிலை இழந்தனர். அவர்கள் பிழைப்புக்கு வழியில்லாமல் போயிற்று. நாட்டில் ஏழைமையும் துன்பமும் இடம் பெற்றன.

காந்தியடிகள் இவ்வுண்மையை உணர்ந்தார். மறைந்து போன இராட்டையைத் தேடிக் கொடுத்தார்; ஒவ்வொருவரும் இராட்டையில் நூற்கவேண்டும் என்றும், அந்நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்த கதர் ஆடையையே உடுக்க வேண்டும் என்றும் கூறினார். அவர் இத்தொழில்களைப் பாடசாலைகளிலேயே பாடமாக வைத்துச் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் இந்த நோக்கத்தோடேயே தாம் வகுத்த கல்வித் திட்டத்தில் நூற்றல் தொழிலையும், நெய்தல் தொழிலையும் அடிப்படைத் தொழில்களாகச் சேர்த்துள்ளார். நாம் இத் தொழில்களைக் கற்று நாட்டின் ஏழைமையைப் போக்க வேண்டும்; காந்தியடிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டும்.

ஆடைகள்	திரி	கைத்தறி
காந்தியடிகள்	உருளைகள்	சுருணை
நெசவு	கதர் ஆடை	கைப்பிடி
பட்டை	நூற்றல்	விருப்பம்
வில்	தக்ளி	இயந்திரங்கள்

பூர்த்தி	விருடை	இராட்டை
பிழைப்பு	நரம்பு	கதிர்
ஏழைமை	அதிர்ச்சி	குஞ்சம்
துன்பம்	அடித்தல்	சிட்டம்
கொட்டுதல்	பிழைப்பு	அடிப்படைத் தொழில்

கேள்விகள்

1. பருத்தியிலிருந்து கொட்டைகளை எவ்வாறு நீக்குவர்?
2. பஞ்சு கொட்டுதல் என்றால் என்ன?
3. நூற்பதற்கு உபயோகப்படும் கருவிகள் யாவை? அவற்றுள் பழைமையானது எது?
4. நம் நாட்டில் ஏழைமையும், துன்பமும் இடம் பெறக் காரணம் என்ன?
5. இதனைப் போக்கக் காந்தியடிகள் என்ன செய்தார்?

பயிற்சி

1. தக்ளி, இராட்டை இவைகளில் நூற்பதைப்பார்.
2. நீ அவற்றில் நூல் நூற்கப் பழகிக்கொள்.
3. நான் கேட்டேன்—இவ்வாறே கீழே கோடிட்ட இடங்களில் 'கேள்' என்னும் சொல்லைப் பொருத்தமாக மாற்றி அமைத்து வாசி:

நான் கேட்டேன்.

நாம்	———	அவன்	———
நாங்கள்	———	அவள்	———
நீ	———	அவர்கள்	———
நீர்	———	அது	———
நீங்கள்	———	அவை	———

4. நிகழ்கால வினைச் சொற்களை இறந்தகால வினைச் சொற்களாக மாற்றி வாசி:

நாம் வாழ்கிறோம்.
வண்டிகள் இருக்கின்றன.
குரங்கு தாவுகிறது.
பயிர் நிமிர்ந்து நிற்கிறது.



22. புலிக் கூடு

பந்தம் எரியு தோடி !—கண்களைப்
பார்க்க நடுங்குதடி !
குந்தம்வாள் ஈட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி !
வாயைப் பிளக்குதடி !—கையுறை
வாளும் உருவுதடி !
பேயைப் படைத்த பின்னோ—இதனையும்
பிரமன் படைத்தானடி ?
வாலை முறுக்குது பார்—வால் நுனி
வட்டம் சுழலுது பார்.
சாலப் பதுங்குது பார்—நம்மீது
சாடவும் நோக்குது பார்.
இடித்து முழங்குதடி—தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி ?
அடுத்து நெருங்காதேடி—அது மிக
ஆங்காரம் கொள்ளுதடி.

கூட்டில் அடைத்திடினும்—இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்
காட்டில் வளர்ந்த குணம்—புலிகளும்
காட்டா திருக்குமோடி?

—தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி

1. இப் பாட்டுகளை இசையோடு படி.
2. இவற்றை மனப்பாடம் செய்துகொள்.
3. இதன் ஆசிரியரைப் பற்றித் தெரிந்துகொள்.
4. கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி அமைத்து வாசி:

(1) —— நான்கடி உயரம் வளரும். (பருத்தி)
(2) —— உழுது பண்படுத்துவார்கள். (நிலம்)
(3) —— ஆடை நெய்வார்கள். (நூல்)
(4) கழுகு —— இடம் கொடுத்தது. (பூனை)
(5) கரிகாலனை —— வெளியேற்றினர். (மனை)
(6) —— ஆட்சி (கரிகாலன்)
(7) —— பறவைகள் வாழ்ந்தன. (மரம்)

5. சாலப் பதுங்குது — இதில் சால என்பது பதுங்குது என்னும் வினையின் குணத்தை உணர்த்துகிறது. இது உரிச்சொல் எனப்படும். இவ்வாறு ஒரு பெயர் அல்லது வினையின் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச் சொற்கள் ஆகும்.

மற்றொன்று — இதில் மற்று என்பது வேறு என்னும் பொருள் தருகிறது. இச்சொல் தனித்து வந்து பொருள் உணர்த்தாது. ஒரு பெயர் அல்லது வினைச் சொற்களின் இடையில் அவற்றைச் சார்ந்தே வரும். இவ்வாறு வரும் சொல் இடைச் சொல் எனப்படும்.



23. நாச்சியப்பர்

உலகத்தில் மனிதனுகப் பிறந்தால் புகழோடு பிறக்க வேண்டும். புகழ்பெற வாழ்வதே மனிதப் பிறவியின் நோக்கமாகும். தன் நலத்தை மறந்து பொது நலத்திற்காக உழைப்பவர்களே அதனை அடைய முடியும். அவ்வாறு பொது நலப் பணியால் புகழ்பெற்ற பெருமக்கள் பலர் நம் தமிழ் நாட்டில் தோன்றியுள்ளனர். அவர்களுள் சேலம் நாச்சியப்ப கவுண்டரும் ஒருவராவர்.

நாச்சியப்பர் சேலம் ஜில்லாவில் உள்ள கொங்கணபுரம் என்னும் சிற்றூரில் 1904-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி பிறந்தார். அவரது தந்தையார் அர்த்தநாரி கவுண்டர். தாயார் நல்லம்மாள். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்', என்றபடி நாச்சியப்பர் சிறுவயதிலிருந்தே மிக்க சுறுசுறுப்பும், நற்குணமும் உடையவராய் இருந்தார்.

நாச்சியப்பர் சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதே அவரது தந்தை இறந்துவிட்டார். ஆயினும் அவரது தாய் அவருக்குத் தந்தையை இழந்ததால் ஏற்படக்கூடிய துன்பங்கள் தோன்றாதவாறு காப்பாற்றினார்; அவருக்குக் கல்லூரிப் படிப்பு வரையில் கற்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நாச்சியப்பர் முதலில் தமது ஆரம்பக் கல்வியைத் தங்கள் கிராமத்துப் பாடசாலையிலேயே ஆரம்பித்தார். பின்பு அவர் நாமக்கல்லில் உள்ள உயர்நிலைப் பள்ளியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் சேர்ந்து கற்கலானார்.

நாச்சியப்பர்பால் மாணவர்களுக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள் யாவும் நிறைந்திருந்தன. அவரிடம் சிறந்து விளங்கிய எடுத்த செயலைத் தொடர்ந்து முடிக்கும் குணம் அவருக்கு மாணவராய் இருந்த காலத்திலிருந்தே ஏற்பட்டது. அவர் தளராத மனமும், குறையாத ஊக்கமும் படைத்திருந்ததால் தாம் கற்கவேண்டியவற்றைச் சிறப்புறக் கற்றார்.

நாச்சியப்பர் பொதுநலப் பணியில் ஆர்வம் மிக்கவர். இதனை அறிந்த மக்கள் அவரை அவரது கல்வி முடிவதற்கு முன்பே பொதுநலப் பணியில்

ஈடுபடுமாறு செய்தனர். அதன் பயனாக அவர் தமது தாலூக்கா போர்டின் அங்கத்தினராக ஆனார். அதுவே அவர் முதன்முதலாகப் பொது நலப் பணியில் ஈடுபடத் தொடங்கியதாகும்.

தாலூக்கா போர்டில் பணியாற்றத் தொடங்கிய நாச்சியப்பர் சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராகப் பணியாற்றவும் தொடங்கினார்.

நாச்சியப்பருக்குக் கல்வியில் மிகுந்த விருப்பம் உண்டு. ஆகவே அவர் சேலம் ஜில்லா போர்டின் தலைவராய் இருந்தபொழுது அந்த ஜில்லாவில் பல பள்ளிகளை ஏற்படுத்தினார். அதனால் சேலம் ஜில்லா கல்வியில் சிறந்த ஜில்லா எனப் பெயர் பெற்றது.

நாச்சியப்பரது தன்னலமற்ற பணியையும், நேர்மையையும் கண்ட அந்த ஜில்லா மக்கள் அவரைப் பல வேறு பொதுப் பணிகளில் ஈடுபடச் செய்தனர். அவர் சட்டசபை, மதுவிலக்குக் குழு, கூட்டுறவுச் சங்கம், சாரணர் இயக்கம் முதலியவற்றில் கலந்துகொண்டு ஆற்றிய செயல்கள் அளவிலடங்கா. அவர் தம் தாய் நாட்டின் விடுதலைப் போரிலும் கலந்துகொண்டு சேவை செய்தார். அதன் பயனாக அவர் பலமுறை சிறைவாசமும் அடைந்தார். சிறையிலும் அவர் பல சிறந்த சீர்திருத்தங்களைச் செய்தார்.

தலைவர் நாச்சியப்பர் பொதுநலத் தொண்டாற்றவே பிறந்தவராதலால் அல்லும் பகலும் ஓய்வு சிறிதுமின்றி உழைத்து வந்தார். அதன் பயனாக அவரது உடல் நலிவுற்றது. அவர் நோய் உற்று வருந்தும் காலத்திலும் ஊழியம் செய்வதை நிறுத்தவில்லை; முடிந்த வரையில் தொண்டாற்றி வந்தார்.

கடைசியாக அவர் 1951-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி வைத்தியரிடம் விடைபெற்று ஊர் சென்ருர். ஊர் சென்றவர் சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அன்றிரவே சென்னைக்குப் பயணமானுர்.

சென்னை சென்ற நாச்சியப்பர் சட்டசபையில் முதல் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனுல் அவரால் மறுநாள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. தன்னலம் சிறிதும் இன்றிப் பிறர் நலத்துக்காகவே அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்த அப்பெரியார் அரசாங்க விடுதியிலேயே உயிர் நீத்தார்.

தலைவர் நாச்சியப்பர்பால் விளங்கிய நற்குணங்கள் பல. அவருக்கு அவரது அன்னையாரிடம் மிக்க அன்பும் பக்தியும் உண்டு. அவர் ஒழுக்கத்தில் சிறந்தவர்; குறையைக் களைந்து நிறைவை நிலை நிறுத்துபவர்; குற்றம் போக்கிக் குணத்தைக் கொள்ளுபவர். அவர் எண்ணியதை எண்ணியபடியே செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். செய்வன திருந்தச் செய் என்னும் குணம் அவர் பால் சிறந்து விளங்கியது. அவர் ஒரு வேலையில் ஈடுபட்டாராஞல் எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாது தாம் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்கும் கலங்காத நெஞ்சம் படைத்தவர். நாச்சியப்பர் வெள்ளை மனம் படைத்தவர். அவர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதை அறியாதவர். அவர் தம்மைப் பொதுநலப் பணிக்கே ஆளாக்கிக் கொண்டவர்.

இத்தகைய அரும் பெரும் குணங்களைப்

படைத்த நாச்சியப்பரது வாழ்க்கை வரலாறு வருங் காலத்துத் தலைவர்களாய் விளங்கப்போகும் சிறுவர் களுக்கு ஒரு உதாரணமாக விளங்கும். தமக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்த இப்பெரியாரது பேரும் புகழும் என்றும் நிலைத்திருக்க வேண்டும். அதற்குச் சிறுவர்கள் அவரது குணங்களை அறிந்து அவற்றை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த வழி யாகும்.

நோக்கம்	தோன்றுதவாறு	தொடங்கி
அல்லும் பகலும்	தன்னலம்	ஏற்பாடு
அங்கத்தினர்	ஊழியம்	பொது நலம்
நற்குணம்	முயற்சி	ஆற்றல்
பணி	தளராத	குழு
இடையூறு	தோன்றி	சிறப்புற
சங்கம்	கலங்காத	சுறுசுறுப்பு
ஈடுபாடு	சிறைவாசம்	ஆளாக்கி

கேள்விகள்

1. நாச்சியப்பரது பெற்றோர் யாவர்?
2. நாச்சியப்பரிடம் விளங்கிய நற்குணங்கள் யாவை?
3. அவர் செய்த பொதுநலத் தொண்டுகள் யாவை?
4. நாச்சியப்பருக்குக் கல்வியில் ஆர்வம் உண்டு என்பது எவ்வாறு விளங்குகிறது?
5. அவரது பெயர் நிலைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

1. நாச்சியப்பர் போன்ற பொதுநலத் தொண்டர் களைப்பற்றித் தெரிந்துகொள்.
2. உனக்குத் தெரிந்த வேறொரு பொதுநலத் தொண்டரைப் பற்றிச் சொல்.
3. பொதுநலம், ஏற்பாடு, தளராத, அல்லும் பக லும், இடையூறு, கலங்காத—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்துச் சொல்.
4. ஊழியம்—இதற்கு வேறு ஒரு சொல் கூறு.



24. தினசரிக் கடமைகள்

காலை எழுந்திருக்க வேண்டும்—அன்பாய்க்
கடவுள் அடி பரவ வேண்டும் ;
பல்லெனப் பல்துலக்க வேண்டும்—புதுப்
பாடம் பலபடிக்க வேண்டும்.

ஆடைகளைத் துவைத்துக் கொண்டு—அழுக்கு
அகலத் தலைமுழுக வேண்டும் ;
நாடி உரியகுறி நன்ருய்—நெற்றி
நலம்பெற வேதரிக்க வேண்டும்.

ஆத்திரம் இன்றிமெது வாக—உணவை
அளவாய் அறிந்துண்ண வேண்டும் ;
நேர்த்தியாய் உடுத்துக் கொண்டு—குறித்த
நேரத்தில் பள்ளிசெல்ல வேண்டும்.

குருவை வணங்கிநிற்க வேண்டும்—அவர்
குறிப்பின் வழிநடக்க வேண்டும்;
மருவி அமைதியாய் இடத்தில்—இருந்து
வணங்கிப் பாடம்கேட்க வேண்டும்.

தீய பிள்ளைகளுடன் கூட—என்றும்
சேர லாகாதுதீமை சேரும்;
தூய மனத்துடனே மாலை—வேளையில்
துள்ளி யாடினால்நலம் சாரும்.

கண்ணுக் கிருட்டுவதன் முன்னே—நீ
கடுகி வீடடைய வேண்டும்;
பண்ணுக் கினியதுதி பாடி—கடவுளைப்
பக்தி யுடன்பரவ வேண்டும்.

உண்டு ஓய்வுசிறிது கொண்டு—பின்பு
உரிய பாடம்படிக்க வேண்டும்;
தொண்டை கிழியப்படிக் காதே—வாய்விட்டுத்
தோன்று மனும்முணுக் காதே.

அதிக நேரம்விழிக் காதே—நன்கு
அமையா இடத்தில்படுக் காதே—தெய்வத்
துதிகள் பாடிப்படுத் துறங்கு—பல
சுகங்களும் சாருமுனை ஒருங்கு.

—ம. வி. இராகவன்

25. தாய் நாடு

இந்திய நாடிது உன்னுடை நாடு
என்று தினம்தினம் நீ இதைப் பாடு
முந்தி பரதன் புரந்தமுன் னாடு
முன்னிய பாரதவீரர்தம் நாடு.

வீரன் இராமன் விளங்கிய நாடு
விண்ணவர் யாவரும் விரும்புநன் னாடு
வீரப் பெண்கள்பலர் தோன்றிய நாடு
வேதமும் கீதமும் நிறைந்ததொன் னாடு.

மலையும் கடலும் வளைந்திடும் கோட்டை
மாநதி கள்பல பாய்ந்தோடும் பாட்டை
கலையும் பொருளும் கலந்ததிந் நாட்டை
கடவுளர் சொந்தமாய்க் கொண்டாரிவ் வீட்டை.

மோனமும் ஞானமும் முற்றின திங்கே
முன்னின யாவும் முடிவதும் இங்கே
தானமும் தவமும் பிறந்தன இங்கே
தருமம் சிறந்து தவழ்ந்ததும் இங்கே.

பாரத நாடிது பழம் பெரு நாடு
பாட்டனின் நாடு பரம்பரை நாடு
பாரித னில்சொல்ல வேறில்லை ஈடு
பக்தி யுடனிதன் மேன்மையை நாடு.

—ம. வி. இராகவன்

26. நறுந் தொகை

(இறைவன்)

எழுத்தறி வித்தவன் இறைவனாகும்

(அழகு)

கல்விக் கழகு கசடற மொழிதல்
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
மன்னர்க் கழகு செங்கோல் முறைமை
உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்
மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
குலமகட் கழகு கொழுநனைப் பேணுதல்
அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்
வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை

(பெரியோரும் சிறியோரும்)

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்
உற்றோ ரெல்லாம் உறவினர் அல்ல+.

(குணம் கெடாமை)

அடினும் ஆவின் பால் தன் சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண் கடல் சேறு காது.

(பெரியோர் சிறியோர் கேண்மை)

ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே.
நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்கொள் ளாதே.
பெருமையும் சிறுமையும் தாம்தர வருமே.
சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

(கல்வி)

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதராகும்மே.
நாற்பால் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல் வருகென்பர்..

—அதிவீரராம பாண்டியன்

கோவை தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

வித்வான் S. நாகராசன், B.O.L., B.T.,
தமிழாசிரியர்,
தூய மேரி போதனுமுறை உயர்நிலைப்பள்ளி, சேலம்.

ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி
ஈரோடு

பதிப்புரிமை] 1954 [விலை அணு 10

முதற் பதிப்பு—நவம்பர், 1951
நான்காம் பதிப்பு—ஜூலை, 195·

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954
Supplement to Part I-B, Page 23]

Kabeer Printing Works, Madras (2604)

முகவுரை

கோவை தமிழ் வாசகம்' என்னும் இப்பாட நூல் வரிசை, கடைசியாக 1939-ஆம் ஆண்டில் ஆரம்ப வகுப்புகட்கென்று கல்வித்துறையினர் வெளியிட்டுள்ள பாடவியலை முற்றிலும் தழுவி முறைப்படி அமைந்துள்ளது. அப்பாடவியலில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இவ்வரிசையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மொழிப் பயிற்சி பற்றிய பொது விதிகளையும், பொருட் பயிற்சி பற்றிய சிறப்பு விதிகளையும் கருத்திற் கொண்டு அவற்றோடு சிறிதும் முரண்படா வகையில் இஃது ஆக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் பெற்ற வாய்மொழிப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு, வேறு பல பொருள்களைப் பற்றிப் புதுச் சொற்களை அறிந்து பயன்படுத்தி உரையாடல், சிறு சம்பவங்களைக் கோவையாகச் சொல்லல், படித்தல், மவுனமாகப் படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி பெறுதற்கு இயன்ற முறையில் பாடங்களும், பயிற்சிகளும், படப் பயிற்சிகளும் பிறவும் இவ்வரிசையில் சிறப்பாக அமைந்துள்ளன. சிறுவர்களின் சொல்லறிவும், பேச்சுப் பயிற்சியும் உரம்பெறுதற்கு உறுதுணையாதற் பொருட்டுச் சில பாடங்கள் உரையாடல் முறையில் எழுதப் பட்டுள்ளன. சிறுவர்கள் விரும்பிப் படித்து மகிழ்ந்து பாடத்தக்க எளிய இனிய தேசியப் பாட்டுகளும், கதைப் பாட்டுகளும், நீதிப் பாட்டுகளும், தெளிவான விளக்கப் படங்களுடன் மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாற்றான் இப்பாடநூல் வரிசை, தெளிவான பொருளறிவும், திருந்திய மொழிப் பயிற்சியும் பெறத் தொடங்கும் இளஞ்சிறார்க்கு உறுதுணையாக அமைந்து பெரும் பயன் விளைப்பதாக அமைந்திருத்தலின், தொடக்க நிலைக் கல்வியுலகத்தில் சிறக்க வரவேற்புக் கொள்ளும் என நம்புகின்றோம்.

எங்கள் வேண்டுகோட் கிணங்கி, தமது தந்தையாரின் வாழ்க்கைக் குறிப்பும், அவர் அமைத்த் கால்நடைப் பண்ணையின் வரலாறும், புகைப் படங்களும் தந்து உதவிய பழைய கோட்டை முப்பதாவது பட்டக்காரர் உயர்திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கட்கு எமது வணக்கத்தோடு கூடிய நன்றி உரியதாகும்.

ஆசிரியன்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	கடவுள் வணக்கம்	...	1
2.	பாரத நாடு	...	3
3.	எங்கள் பாரத நாடு	...	8
4.	சீனச் சிறுவர்கள்	...	9
5.	கரும்புப் பயிர்	...	15
6.	குதிரை முட்டை	...	21
7.	ஆறு	...	27
8.	ஆதிகாலத்து மக்கள்	...	30
9.	வேடனும் புறுவும்	...	36
10.	இரயில் பிரயாணம்	...	42
11.	கம்பர்	...	52
12.	சிங்கமும் முயலும்	...	57
13.	நெசவுத் தொழில்	...	61
14.	கடிதங்கள்	...	65
15.	மிருகக் காட்சிச் சாலை	...	71
16.	புத்தர்	...	81
17.	ஔவையார் தூது	...	87
18.	வீரமாமுனிவர்	...	93
19.	செஞ்சி வீரர்	...	99

எண்	பொருள்		பக்கம்
20.	தேசிங்கும் குதிரையும்	...	106
21.	வீர மங்கை	...	108
22.	பழைய கோட்டைப் பட்டக்காரர்	...	113

செய்யுட் பகுதி

1.	வாக்குண்டாம்	...	121
2.	நல்வழி	...	122
3.	நீதி வெண்பா	...	123
4.	விவேக சிந்தாமணி	...	124
5.	சதகச் செய்யுள்	...	126
6.	திருக்குறள்	...	128
7.	வாழ்த்து	...	129

கோவை தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. கடவுள் வணக்கம்

சூரியன் வருவது யாராலே ?
    சந்திரன் தெரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினிபோல்
    கண்ணில் படுவன அவை என்ன ?

பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ?

அந்தப் பொருளை நாம்நினைத்து
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?

நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

2. பாரத நாடு

நாம் வாழும் நாடு இந்தியா. இந்தியா நாடு நமது தாய்நாடாகும். இதற்குப் பாரத நாடு என்ற மற்றொரு பெயரும் உண்டு. முன்னொரு காலத்தில் இந்நாட்டைப் பரதன் என்னும் புகழ் பெற்ற அரசன் ஆண்டு வந்தான். அவனே முதன் முதலில் இந்நாட்டைப் பல வகையிலும் சீர்திருத்தி, சிறந்த அரசியலை அமைத்தான்; நாடு முழுவதையும் தன் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வந்து ஆண்டான். அதனால் அவனுக்குப் பிறகு இந்நாடு 'பாரத நாடு' என்று வழங்கலாயிற்று.

இப்பாரத நாடு மிகவும் பழமையான நாடாகும். இதில் வாழும் மக்கள் ஆதி காலத்திலிருந்தே நாகரி

கம் அடைந்திருந்தனர். அவர்கள் கல்வி கேள்விகளி லும், செல்வத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

இந்நாடு மிக்க பரப்புள்ளதொரு நாடாகும். இது வளமையும், செழுமையும் மிகுந்து விளங்கும் நாடு. இதன்கண் பல உயர்ந்த மலைகளும், நீண்ட நதிக ளும், பரந்த சம வெளிகளும் உள்ளன. இத்தகைய நாட்டின் வனப்பையும், செல்வச் சிறப்பையும், உயர்ந்த நாகரிகத்தையும் அறிந்த வெளிநாட்டு மக் கள் பலர் இதனை நேரிற் காண வேண்டி அடிக்கடி இங்கு வந்த வண்ணமாக இருக்கின்றனர்.

இந்நாட்டின் வடக்கில் இமயமலை என்னும் ஒரு மலை கோட்டைச் சுவர்போல் அமைந்துள்ளது. இது உலகிலேயே உயர்ந்ததொரு மலையாகும். இதன் மீது எப்பொழுதும் பனி உறைந்து கிடக்கும் காரணத்தால் இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று. இதில் உன் னதமான சிகரங்கள் பல உள்ளன. அவற்றுள் மிக்க உயர்வினையுடையது எவரெஸ்டு சிகரமாகும்.

இப்பரந்த நாட்டின் மத்தியில் விந்திய மலை என்பதொரு மலை உள்ளது. அது இந்நாட்டை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இம்மலைக்கு வடக்கில் பரந்த சமவெளி ஒன்று இருக்கின்றது. அது சிந்து கங்கைச் சமவெளி அல்லது ஹிந்துஸ்தானம் எனப்படும். அது மிக்க வளப்ப முடையது. அதற்குக் காரணம் அதன் வழியே பாய்ந்தோடும் சிந்து, கங்கை, யமுனை முதலிய வற்றாத நதிகளே யாகும். அவை மிகுதியான நீரை யும் வண்டலையும் கொண்டுவந்து சேர்ப்பதால் அது செழிப்பாக விளங்குகிறது.

விந்திய மலையின் தெற்கில் உள்ள பாகம் தக்க ணம் அல்லது தென் இந்தியா எனப் பெயர் பெறும்.

இது ஒரு பீடபூமியாகும். இதன் கிழக்கிலும் மேற்கிலும் கடற் கரையை ஒட்டினாற் போல் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் அமைந்துள்ளன. இதன் தென் பாகத்திற்குத் தமிழகம் என்பது பெயர். சிந்துவும் கங்கையும் வட பாகத்தைச் செழிக்கச் செய்வது போலக் கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலிய நதிகள் தென் பாகத்தை வளமுள்ளதாகச் செய்கின்றன.

இந்நாடு ஒரு விவசாய நாடாகும். இங்கு மற்றைத் தொழில்கள் செய்வதற்கும் போதிய வசதிகள் உள்ளன. மக்கள் உணர்வும் ஊக்கமும் கொண்டு உழைப்பார்களானால் நம் நாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் நாம் இங்கேயே செய்து கொள்ளலாம். அப்பொழுது பிற நாட்டினரின் உதவியை நாடவேண்டிய அவசியமே இராது.

இத்தகைய பரந்த நாட்டில் வாழும் மக்கள், இனத்தாலும், மதத்தாலும், மொழியாலும், பழக்க வழக்கங்களாலும் வேறுபட்டுள்ளனர். எனினும் அவர்கள் யாவரும் பாரதத் தாயின் மக்களே ஆவர். ஆகவே அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டுச் சகோதரர் போல வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் தான் நாடும் செழித்து விளங்கும்; நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பேரும் புகழும் நிலைத்து நிற்கும்; உலக மக்களிடையே நமக்கு ஏற்பட்டுள்ள மதிப்புக் குறையாமல் நிலை பெற்று நிற்கும்.

முற்காலம்	உன்னதமான	வளம்
வழங்கலாயிற்று	சிகரம்	விவசாயம்
பழமையான	மத்தியில்	உணர்வு
விசாலமான	பரந்த	ஊக்கம்
சமவெளி	பாய்ந்து	நாட
நாகரிகம்	மிகுதியான	சுருதாமல்
கோட்டை	பீடபூமி	நிலைத்து நிற்கும்
உறைந்து	தொடர்ச்சி	பெருக

கேள்விகள்

1. நம் நாட்டிற்குப் பாரத நாடு எனப் பெயர் வழங்குவது ஏன் ?

2. வெளி நாட்டிலிருந்து மக்கள் நம் நாட்டிற்கு ஏன் வருகின்றனர் ?

3. சிந்து கங்கைச் சமவெளி செழுமையாய் இருப்பது ஏன் ?

4. தென் இந்தியாவில் பாயும் நதிகள் எவை ?

5. இந்திய மக்கள் எப்படி வாழ்வது நல்லது ?

பயிற்சி

1. பரதன் வரலாற்றைத் தெரிந்துகொள்.

2. இந்தியா படத்தைப் பார்த்துப் பாடத்தில் வந்துள்ள ஆறு மலைகளைக் கண்டுகொள்.

3. நம் நாட்டில் வழங்கும் மதங்கள், மொழிகளைத் தெரிந்துகொள்.

4. சமவெளி, விசாலமான, உன்னதமான, பீடபூமி இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

5. பின்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது:

(1) அவை மிகுதியான நீரையும் வண்டலையும் கொண்டு வந்து சேர்ப்பதால் அது செழிப்பாக விளங்குகிறது.

(2) மக்கள் உணர்வும் ஊக்கமும் கொண்டு உழைப்பார்களானால் நம் நாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் நாம் இங்கேயே செய்து கொள்ளலாம்.

6. பரதன் இந்நாட்டை ஆண்டான். இவ் வாக்கியத்தில் பரதன், நாடு என்பன பெயரைக் குறிக்கின்றன. எனவே இவை பெயர்ச் சொற்கள். ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

ஆண்டான் என்பது பரதனின் வினையை (செயலை)க் குறிக்கின்றது. எனவே இது வினைச்சொல். ஒன்றின் வினையை (செயலை)க் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

7. முதல் பாராவில் உள்ள பெயர்ச்சொற்களைச் சொல்.

8. இரண்டாவது பாராவில் உள்ள வினைச்சொற்களைச் சொல்.

3. எங்கள் பாரத நாடு

மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீததுபோல் பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே
இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே?
பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்ஒளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே.

—பாரதியார்

பயிற்சி

1. இப் பாட்டுகளை மனப்பாடம் செய்.
2. இவற்றை இசையோடு பாடிப் பழகு.
3. இதுபோன்ற நாட்டுப் பாடல்களைப் படித்து மனப்பாடம் செய்.
4. பொருள் தெரிந்துகொள்: மன்னும், பிறிது, இன்னறு நீர், மாண்பு, பன்னரும், பார்மிசை, ஈடு, பாரதம், மலிந்த, கானம், திகழ், பூரண ஞானம், பொலிந்த.
5. பிரித்து எழுது: இன்னறு, பன்னரும், பொன்ஒளிர், நன்னாடு.
6. பரதன் இந்நாட்டை ஆண்டான்—இது ஒரு வாக்கியம். இதில் பரதன் என்பது எழுவாய். ஆண்டான் என்பது பயனிலை, நாடு என்பது செயப்படுபொருள்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் மூன்றும் வாக்கியத்தின் உறுப்புகள்.

4. சீனச் சிறுவர்கள்

நீங்கள் தீபாவளி அன்று சீனவெடி வெடிக் கிறீர்கள் அல்லவா? அதற்குப் அப்பெயர் ஏன் வந்தது தெரியுமா? அது முதலில் சீன தேசத்திலேயே மிகுதியாகச் செய்யப்பட்டது. அதனாலேயே அப் பெயர் பெற்றது. சீன தேசம் நம் தேசத்திற்குக் கிழக்கே உள்ளது. உலகத்தில் உள்ள மிகப் பெரிய தேசங்களில் சீன தேசமும் ஒன்று. சீன தேசம் மிக்க ஜனத்தொகை உள்ள தேசம். அது நம் இந்தியாவைப் போலவே மிக்க பழமையும் பெரு மையும் உடைய தேசம் ஆகும். அதைச் சைனா என்றும் சொல்வது உண்டு.

நம் நாட்டில் இருப்பதுபோலச் சீனாவிலும் கிராமங்களே அதிகம். மக்களில் பெரும்பாலோர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் மன்

8 சுவர்களை உடைய கூரை வீடுகளிலேயே வசிக்கின்றனர். ஒவ்வொரு வீட்டின் முன்புறத்திலும் தோட்டம் உண்டு. தோட்டத்தின் வேலிகளில் முசுக்கட்டைச் செடிகளை வளர்ப்பார்கள். முசுக்கட்டை இலை பட்டுப் புழுவுக்குச் சிறந்த உணவாகும். சீனர்கள் பட்டுப் புழு வளர்த்துப் பட்டு எடுப்பதில் தேர்ந்தவர்கள். சீனு பட்டுக்குப் பெயர்போன தேசமாகும்.

சீனர்கள் தோட்டங்களில் காய்கறிகளைப் பயிர் செய்வார்கள்; வயல்களில் நெல் பயிரிடுவார்கள். சீனர்கள் தேநீர்ப் பானத்தை விரும்பிப் பருகுவார்கள். அவர்கள் மலைச் சரிவுகளில் தேயிலையைப் பயிர் செய்துகொள்ளுகிருர்கள். சீனர்கள் பலர் மீன் பிடித்து வாழ்கின்றனர். அவர்கள் மீன் பிடிக்க உபயோகிக்கும் படகுக்கு 'ஜங்ஸ்' என்பது பெயர். அவர்கள் அப் படகுகளிலேயே வசிக்கின்றனர். சீனர்கள் உணவு உண்பது விநோதமாக இருக்கும். அவர்கள் நம்மைப்போல் சோற்றைக் கையால் எடுத்து உண்பதில்லை; தட்டையான இரு குச்சிகளால் அள்ளி உண்கிருர்கள்.

முற்காலத்தில் அயல் நாட்டார் சீனுவின்மீது அடிக்கடி படையெடுத்தார்கள். அவர்கள் அந் நாட்டைத் தாக்கிக் கொள்ளையடித்து வந்தார்கள். அக்காலத்தில் சீன மக்கள் தங்கள் நாட்டைச் சுற்றி மிகப் பெரிய மதில்சுவரை எழுப்பினுர்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுப்பிய அம்மதில் சுவர் இன்னும் அப்படியே இருக்கிறது.

சீன தேசத்துச் சிறுவர்களின் வாழ்க்கை நமக்கு வியப்பை உண்டாக்குவதாகும். சீன மக்கள் ஆண் குழந்தைகளையே மிகவும் விரும்புகிருர்கள்; பெண் குழந்தைகளை வெறுக்கிருர்கள். ஆண் குழந்தை

பிறந்தால் அவர்கள் சந்தோஷமாகக் கொண்டாடு கிறார்கள்; பெண் குழந்தை பிறந்தால் வருத்தப் படுகிறார்கள். இந்த மூடப் பழக்கம் அவர்களிடம் வேரூன்றி இருக்கிறது. இதற்கு அவர்களுடைய அறியாமையே காரணமாகும்.

சீனச் சிறுவர்கள் பார்வைக்கு அழகாக இருக்க மாட்டார்கள். அவர்கள் குட்டையாக இருப்பார்கள். அவர்கள் இருண்ட மஞ்சள் நிறம் உடையவர்கள். அவர்களுடைய முகம் தட்டையாயும், மூக்கு சப்பை யாயும், கண்கள் குறுகியும் இருக்கும்.

சீனாவில் சிறுவர்களும் சிறுமிகளும் தங்கள் தலை மயிரை நீளமாக வளர்த்து, பின்னல் இட்டு, பின்புறம் தொங்கவிட்டுக் கொள்ளுவார்கள். சிறுமிகள் தங்கள் பாதங்களை இறுகக் கட்டி, விரல்களை வளரவிடாமல் தடுத்துக் கொள்ளுவார்கள். அதனால் சீனச் சிறுமி களின் பாதம் குறுகி இருக்கும். அவர்களால் வேக மாக நடக்க முடியாது. இப்பழக்கங்கள் இப்பொழுது சிறிது சிறிதாகக் குறைந்து வருகின்றன.

நம் நாட்டில் சிறுவர் சிறுமிகளின் பிறந்த தினத்தைத் தனித்தனியாகக் கொண்டாடுகிறோம் அல்லவா? சீனர்கள் அவ்வாறு கொண்டாடுவது இல்லை. புது வருஷம் பிறக்கும் தினத்தையே அந் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் பிறந்த தினமாகக் கொண்டாடுகிறார்கள். அன்று சீனச் சிறுவர்களும் சிறுமிகளும் பல பரிசுகள் பெற்று மகிழ்வார்கள்; பட்டாசு சுட்டுக் களிப்பார்கள்; பலவகைப் பட்டங் களைப் பறக்கவிட்டு விளையாடுவார்கள்.

சீனச் சிறுவர்கள் இளமையிலேயே பாட சாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்குவார்கள். சீன பாஷை மற்றப் பாஷைகளைப் போன்றது அன்று.

அது கற்பதற்கு மிகவும் அரிதானது. அந்தப் பாஷையில் கற்கவேண்டிய எழுத்துக்கள் மிகவும் அதிகம். சீன எழுத்துக்கள் பூக்கள் போன்ற வடிவம் உடையவை. அவை எழுதுவதற்கு மிகவும் கடின மானவை. நாம் புத்தகங்களை இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகப் படிக்கிறோம்; மேலிருந்து கீழ் நோக்கிப் படித்துக்கொண்டு போகிறோம். சீன பாஷையில் அப்படி இல்லை. வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகப் படிக்கவேண்டும்; கீழிருந்துமேல் நோக்கிப் படித்துக்கொண்டு போகவேண்டும். இவ்வளவு கஷ்டம் இருந்தும் சீனச் சிறுவர்கள் அப்பாஷையை முயன்று கற்கின்றனர்.

சீனச் சிறுவர்களுக்கு மிட்டாய் தின்பதில் விருப்பம் அதிகம். அவர்கள் பாடசாலைக்குப் போகும் போதும், பாடசாலையிலிருந்து திரும்பி வரும்போதும் மிட்டாய் வகைகளை வாங்கித் தின்பார்கள். பொதுவாகச் சீனச் சிறுவர்கள் அனைவரும் நற்குணம் உடையவர்கள்; அன்பும் அடக்கமும் வாய்ந்தவர்கள். பெற்றோர்களிடமும் பெரியோர்களிடமும் அவர்கள் வணக்கமாகவும் மரியாதையாகவும் நடந்துகொள்வார்கள்.

சீனமக்கள் பெரும்பாலும் ஏழைகள். அவர்கள் உடல் வருந்தி உழைத்து வாழ்க்கை நடத்துபவர்கள். அவர்கள் பயிர்த்தொழில் செய்தும், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தும், பட்டுப் பூச்சி வளர்த்துப் பட்டு எடுத்தும் ஜீவனம் செய்கிறார்கள். சீனச் சிறுவர்களும் சிறுமிகளும் அவ்வேலைகளில் பெரியோர்க்கு உதவி செய்வார்கள். சீனர்கள் உழைப்பாளிகளாகவும், பொறுமைசாலிகளாகவும் விளங்குவதற்கு அவர்கள் இளமையில் பெறும் இப்பழக்கமே காரணமாகும்.

மிகுதியாக	எழுப்பி	அரிது
ஒவ்வொரு	வியப்பு	முயன்று
பின்புறம்	மூடப்பழக்கம்	திரும்பி
பானம்	வேரூன்றி	நற்குணம்
விரும்பி	அறியாமை	வாய்ந்து
பருகு	இருண்ட	ஜீவனம்
விநோதம்	பரிசு	உதவி
அள்ளி	பலவகை	காரணம்

கேள்விகள்

1. சீனு எப்படிப்பட்ட தேசம் ஆகும்?
2. சீனர்களிடம் வேரூன்றி உள்ள மூடப் பழக்கம் என்ன?
3. சீனச் சிறுவர்கள் பார்வைக்கு எப்படி இருப்பார்கள்?
4. சீன பாஷை எப்படிப்பட்டது? ஏன்?
5. சீனச் சிறுவர்கள் எத்தகைய குணமுள்ளவர்கள்?
6. சீனர்கள் செய்யும் தொழில்கள் யாவை?

பயிற்சி

1. உலகப் படத்தைப் பார்த்துச் சீனு தேசம் உள்ள இடத்தைத் தெரிந்துகொள்.
2. சீனர்களைப்பற்றிய புத்தகங்களைப்படித்து அவர்களுடைய வாழ்க்கையைத் தெரிந்துகொள்.
3. அயல்நாட்டுச் சிறுவர்களைப் பற்றிய புத்தகங்களைப் படித்து அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்.
4. இதனைச் சீனச்சிறுவன் ஒருவன் கூறுவதுபோல எழுது.
5. எதிர்ச்சொல் கூறு: மிகுதி, அரிது, நற்குணம், பழமை, பெருமை, வலம், கீழ்.
6. பானம், பரிசு—பொருள் தெரிந்துகொள்.
7. ஒவ்வொரு, பலவகை, அறியாமை, விநோதம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது

8. தேசம் - நாடு, பாஷை - மொழி, ஜீவனம் - வாழ்க்கை.

9. மூன்ருவது பத்தியில் உள்ள வினைச்சொற்களை எடுத்து எழுது.

10. கீழ்வரும் வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது :

(i) சீனர்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் மண் சுவர்கள் உடைய கூரை வீடுகளிலேயே வசிக்கின்றனர்.

(ii) சிறுமிகள் தங்கள் பாதங்களை இறுகக் கட்டி விரல்களை வளரவிடாமல் தடுத்துக் கொள்ளுவார்கள். அதனுல் சீனச் சிறுமிகளின் பாதம் குறுகியிருக்கும்.

11. பட்டு, நாடு, வருஷம், கை, அன்பு, வணக்கம்—இவற்றில் பட்டு என்பது ஒரு பொருளின் பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது பொருட்பெயர் எனப்படும்.

நாடு என்பது ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது இடப்பெயர் எனப்படும்.

வருஷம் என்பது ஒரு காலத்தின் பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது காலப்பெயர் எனப்படும்.

கை என்பது ஒரு சினையின் (உறுப்பின்) பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது சினைப்பெயர் எனப்படும்.

அன்பு என்பது ஒரு பண்பின் (குணத்தின்) பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது பண்புப்பெயர் (குணப்பெயர்) எனப்படும்.

வணக்கம் என்பது ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கிறது. ஆகவே அது தொழிற்பெயர் எனப்படும்.

பெயர்ச்சொல் பொருட்பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என ஆறுவகைப்படும்.



5. கரும்புப் பயிர்

நம் நாடு விவசாய நாடு. பயிர்த் தொழிலே நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர்க்கு முக்கியத் தொழிலாக உள்ளது. இதில் பலவகையான பயிர்கள் செய்யப்படுகின்றன. அவற்றுள் கரும்பும் ஒன்று. கரும்பு நாணல் இனத்தைச் சேர்ந்தது. இதனை நன்செய் நிலத்தில் பயிர் செய்வர். கரும்பில் பலவகை உண்டு. சிலவற்றிற்கு மேல் தோல் மிருதுவாக இருக்கும்; சிலவற்றிற்கு மேல் தோல் உறுதியாக இருக்கும். கரும்பு அதிக உஷ்ணமுள்ள பகுதிகளில் தான் நன்றாகப் பயிராகும். கரும்புப் பயிருக்குத் தண்ணீர் மிகுதியாக வேண்டும்.

கரும்புப் பயிர் செய்வதற்கு முன் நிலத்தை நன்றாக உழுவார்கள். பிறகு உரம் சேர்த்துப் பண்

படுத்துவர். அவ்வாறு பண்படுத்திய நிலத்தில் பாத்தி களை அமைப்பர். பின்னர் முற்றிய கருப்பங்கழிகளை ஒவ்வொன்றிலும் ஒன்றிரண்டு கணுக்கள் இருக்கு மாறு துண்டுகளாகச் செய்வர். அவ்வாறு செய்யப் பட்ட துண்டுகளைப் பாத்திகளில் ஊன்றித் தண்ணீர் பாய்ச்சுவார்கள். துண்டுகளில் உள்ள கணுக்களில் முளைகள் இருப்பதால் கரும்பு நட்ட சில நாட்களில் குறுத்து விட்டுத் தளிர்க்கும்.

கரும்புப் பயிர் நன்கு வளர அதற்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சிவர வேண்டும். கருப்பஞ் சோலை கள் சுமார் பத்துப் பன்னிரண்டு அடி உயரம் வளரும். கரும்பைப் பயிரிடுபவர்கள் கருப்பங் கழிகள் காய்ந்து வெடித்து விடாமல் இருப்பதற்காகச் சோகைகளைக் கழிகளின் மேலேயே சுற்றி வைப்பர். கரும்பு நட்ட ஏழு எட்டு மாதங்களில் வளர்ந்து முதிர்ந்துவிடும். முதிர்ந்த கரும்பிலிருந்துதான் வெல்லமும் சர்க்கரை யும் செய்யப்படுகின்றன.

கரும்பு நம் நாட்டில் ஐக்கிய மாகாணம், பீகார், சென்னை முதலிய இடங்களில் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றது. ஆனால் மற்ற மாகாணங்களை விட நம் மாகாணத்தில் தான் கரும்பு பயிரிடுவதற்குத் தகுதியான சீதோஷ்ணமும் நிலவளமும் பொருந்தி யுள்ளன. இங்குப் பயிராகும் கரும்பிலிருந்து எடுக் கப்படும் சர்க்கரை மற்ற மாகாணங்களில் எடுக் கப்படும் சர்க்கரையை விடத் தரத்தில் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

நன்கு முற்றிய பின் கருப்பங் கழிகளை வெட்டி ஆலைக் களத்திற்குக் கொண்டு செல்வார்கள். அங்கு அவற்றின் சோகைகளை நீக்கிவிட்டு, அவற்றைப் பல துண்டுகளாகச் செய்து ஆலையில் கொடுப்பார்கள்.

ஆலையில் உள்ள இரும்பு உருளைகள் கருப்பங்கழிகளை நசுக்கிப் பிழிந்து சாறு வேறு சக்கை வேருகப் பிரிக்கும். அவ்வாறு பிழிந் தெடுக்கப்படும் சாறு தனியே ஒரு பானையில் வந்து விழும். பானையில்

விழும் சாற்றைப் பெரிய இரும்புக் கொப்பரைகளில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். சாறு கொதித்து வரும் பொழுது அதில் உள்ள அழுக்கை நீக்குவதற்காக அதனேடு கொஞ்சம் சுண்ணும்பைச் சேர்ப்பர். அப்பொழுது அதில் உள்ள அழுக்குத் திரண்டு மேலே வரும். அதனைத் துடுப்பால் சிறிது சிறிதாக எடுத்து அப்பறப் படுத்துவார்கள். கொதிக்கும் கருப்பஞ்சாறு குழம்பு போலாகும். அப்பொழுது அதனை ஆழமில் லாத மரத் தொட்டியில் ஊற்றி ஆற வைப்பார்கள்.

தொட்டிகளில் ஊற்றிய சாறு நன்ருக ஆறுவதற்கு முன் ஒரு கட்டையினல் அதைத் தேய்த்துக் கட்டிகளை

உடைப்பர். அதுவே சர்க்கரையாகும். அது பழுப்பு நிறமாய் இருக்கும். அதனால் அது பழுப்புச் சர்க்கரை எனப்படும். கொதித்த சாற்றை மரத் தொட்டிகளில் ஊற்றுமல் வெல்லம் செய்வதற்கான அச்சுகளில் ஊற்றி ஆறவைத்தால் வெல்ல மாகிவிடும்.

பழுப்புச் சர்க்கரையிலிருந்தே வெள்ளைச் சர்க்கரை செய்யப்படுகிறது. பழுப்புச் சர்க்கரையைத் தண்ணீரில் கரைத்து அதனோடு சில மருந்துகளைச் சேர்த்துக் கொதிக்க வைத்தால் அது பழுப்பு நிறம் போய் வெண்மை நிறமாக மாறிவிடும். அது வெள்ளைச் சர்க்கரை எனப்படும்.

முற்காலத்தில் நம் நாட்டில் கரும்புப் பயிர் பிரபலமாக இருந்தது. ஆனால் இடையில் வெளி நாடுகளிலிருந்து சர்க்கரை வரத் தொடங்கியதனால் இத் தொழில் குன்றலாயிற்று. ஆனால் இப்பொழுது நம் நாட்டில் கரும்புப் பயிர் விருத்தி அடைந்து வருகிறது. சர்க்கரை செய்யுந் தொழிற்சாலைகளும் அதிகரித்து வருகின்றன. நம் மாகாணத்தில் நெல்லிக்குப்பம், ஹோஸ்பேட்டை, மேல்பட்டி ஆகிய இடங்களில் சர்க்கரை செய்யும் ஆலைகள் உள்ளன.

கோயம்புத்தூரில் உள்ள அரசாங்க விவசாயக் கல்லூரியைச் சேர்ந்த சர் டி. எஸ். வேங்கடராமன் என்பவர் கரும்பின் தரத்தை உயர்த்தவும், சர்க்கரைப் பொருளை அதிகரிக்கச் செய்யவும் ஆராய்ச்சி செய்து வெற்றியும் பெற்றுள்ளார். இவரைப் போன்ற அறிவாளிகள் செய்யும் ஆராய்ச்சிகளின் பயனாக நம் நாட்டில் கரும்புப் பயிர் விருத்தி அடைவது திண்ணம்.

விவசாயம்	அடிக்கடி	மாறி
பெரும்பாலோர்	முதிர்ந்த	முற்காலம்
உறுதி	பொருந்தி	தொடங்கி
பகுதி	தகுதி	குன்றல்
மிகுதி	தரம்	விருத்தி
பண்படுத்தல்	பிழிந்து	கல்லூரி
கழிகள்	சாறு	போன்ற
குழைத்து	கொப்பரை	திண்ணம்
தளிர்க்கும்	குழம்பு	

கேள்விகள்

1. கரும்புப் பயிர் எந்த இனத்தைச் சேர்ந்தது?
2. கரும்பு எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?
3. கருப்பஞ் சோகைகளைக் கழிகளின்மேல் சுற்றுவது ஏன்?
4. கரும்புப் பயிர் எப்படிப்பட்ட நாடுகளில் மிகுதியாகப் பயிராகும்?
5. சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது?
6. நம் நாட்டில் கரும்பாலைகள் உள்ள இடங்கள் எவை?
7. கரும்புப் பயிர் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த பெரியவர் யார்?

பயிற்சி

1. கரும்பு வயலைச் சென்று பார்.
2. ஆலைக் களத்திற்குச் சென்று கரும்பு ஆடுவதைப் பார்.
3. கருப்பஞ் சாற்றிலிருந்து வெல்லம், சர்க்கரை செய்வதைப் பார்த்துத் தெரிந்துகொள்.
4. பெரும்பாலோர், பண்படுத்தல், அடிக்கடி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.
5. பிரித்து எழுது: தண்ணீர், கருப்பங்கழிகள், தொழிற்சாலை.

2601—3

6. சீதோஷ்ணம்—சீத+உஷ்ணம்; இது சமஸ்கிருதத் தொடர். இதற்குப் பதிலாகத் 'தட்ப வெப்பம்' என்னும் தமிழ்த் தொடரை வைத்து எழுது.

7. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் கூறு:

(i) இந்நாட்டைப் பரதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான்.

(ii) சீனர்கள் தோட்டங்களில் காய்கறிகளைப் பயிர் செய்வார்கள்.

8. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களைக் கூறு:

(i) பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுப்பிய அம் மதில்சுவர் இன்னும் அப்படியே இருக்கிறது.

(ii) கரும்புப் பயிர் விருத்தியடைவது திண்ணம்.

(iii) கரும்புப் பயிருக்குத் தண்ணீர் மிகுதியாக வேண்டும்.

9. சிவன், திருமால், பரதன், புத்தர், கண்ணகி.

—இச்சொற்களில் சிவன், திருமால் என்பன தேவரைக் குறிக்கின்றன. பரதன், புத்தர், கண்ணகி என்பன மனிதரைக் குறிக்கின்றன. இவை உயர்திணை. தேவரும் மனிதரும் உயர்திணை.

புழு, பூச்சி, மலை, ஆறு, ஆலை.

—இவை தேவரும் மனிதரும் அல்லாதவற்றைக் குறிக்கின்றன. இவற்றுள் புழு, பூச்சி என்பன உயிருள்ளவை; மலை, ஆறு, ஆலை என்பன உயிரில்லாதவை. இவை அஃறிணை. தேவரும் மனிதரும் அல்லாத உயிருள்ளவையும் உயிரில்லாதவையும் ஆகிய யாவும் அஃறிணை.

6. குதிரை முட்டை

முன்னொரு காலத்தில் பரமார்த்த குரு என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கு மட்டி, மடையன், மூடன், மூர்க்கன், மிலேச்சன் என்னும் சீடர்கள் ஐவர் இருந்தனர். பரமார்த்த குரு நாள்தோறும் சீடர்களோடு பல ஊர்களுக்குச் சென்று வருவார். அவர் கிழப்பருவம் உடையவர் ஆகையால் அவரால் நெடுந்தூரம் நடந்து பிரயாணம் செய்ய முடிய வில்லை. சீடர்கள் அவரை ஒரு குதிரை வாங்கிக் கொள்ளும்படி கூறினர். குரு, "குதிரையின் விலை என்ன இருக்கும்?" என்று விசாரித்தார். ஊரில் உள்ளவர்கள் "ஐம்பது பொன், நூறு பொன்

இருக்கும்" என்றனர். குரு, 'அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவேன்?' என்று நடந்தே பிரயாணம் செய்து வந்தார். ஆனால் சீடர்கள் குதிரையைப் பற்றிய நினைவாகவே இருந்தனர்.

ஒரு நாள் பரமார்த்த குருவின் கறவைப் பசு காணமல் போய்விட்டது. குரு பசுவைத் தேடிப் பிடித்து வரும்படி மட்டியை அனுப்பினார். மட்டி ஊர் ஊராகச் சென்று பசுவைத் தேடி அலைந்தான். எங்கும் பசு அகப்படவில்லை. மூன்று நாள்களுக்குப் பிறகு மட்டி வெறுங்கையோடு திரும்பி வந்தான். ஆனால் அவன் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கொண்டு வந்தான். அவன் குருவை அடைந்து, "ஐயனே, பசு கிடைக்கவில்லை. ஆனால் அதைக் காட்டிலும் சிறந்தது ஒன்று கண்டேன். மிகக் குறைந்த விலையில் நமக்குச் சிறந்த குதிரை கிடைத்தது" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

குரு பசுவை மறந்து குதிரையைப் பற்றி விசாரிக்கலானார். மட்டி, "ஐயனே, நான் பசுவைத் தேடி ஊர் ஊராகச் சென்று, தோட்டம் தோட்டமாகவும், கொல்லை கொல்லையாகவும் அலைந்தேன். அப்பொழுது ஓர் ஏரி அருகில் சில குதிரைகள் மேய்வதைக் கண்டேன். உடனே அவற்றின் அருகில் சென்று நோக்கினேன். அங்குப் பல குதிரை முட்டைகளையும் கண்டேன். அவை போன்ற குதிரை முட்டைகளை நான் இதுவரையில் கண்டதில்லை. ஒவ்வொன்றும் இரு கைகளிலும் அடங்காத அத்தனைப் பெரியவை; சாம்பல் பூத்த வெண்மை நிறமானவை. ஒன்றா, இரண்டா! நூற்றுக் கணக்கான முட்டைகள்! நான் அவை குதிரை முட்டைதானா என்று சந்தேகப்பட்டு, அங்கு வந்த ஒருவரைக் கேட்டேன்.

அவர் "ஆம், இவை உயர்ந்த வகைக் குதிரை முட்டைகளே" என்று கூறி என் ஐயத்தைப் போக்கினார். ஒவ்வொன்றின் விலை நான்கு அல்லது ஐந்து பொன்னுக்கு அதிகமாக இராது என்றும் அவர் கூறினார். "நாம் அம்முட்டைகளில் ஒன்றை வாங்கி வருவது நல்லது" என்று கூறி முடித்தான்.

மட்டி கூறியவற்றைக் கேட்டு, குருவும் மற்றச் சீடர்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள். குரு மட்டியின் கையில் ஐந்து பொன்னைக் கொடுத்து, அவனுக்குத் துணையாக மடையன் என்பவனையும் அனுப்பினார். மட்டி மடையனையும் அழைத்துக் கொண்டு நெடுந் தூரம் நடந்து சென்று, முன் தான் கண்ட ஏரியை அடைந்தான்; அதன் அருகில் செடிகளின் இடையே கிடந்த சாம்பல் பூசணிக்காய்களை மடையனுக்குக் காட்டினான். பிறகு இருவரும் குடிசையில் இருந்த குடியானவனிடம் சென்று, "ஐயா, எங்கள் குருவுக்கு ஒரு குதிரை முட்டை வேண்டும். இந்தக் கொல்லையில் உள்ள முட்டைகளில் ஒன்றை எங்கட்குத் தரவேண்டும். அதற்கு உரிய விலையைக் கொடுத்து விடுகிறோம்" என்று பணிவாக வேண்டிக் கொண்டனர். குடியானவன் அவர்கள் அறியாமையைத் தெரிந்துகொண்டு, "இவை உயர்ந்தவகைக் குதிரை முட்டைகள்; அதிக விலை உள்ளவை. உங்களால் இவற்றிற்கு விலை கொடுக்க முடியுமோ?" என்றான். உடனே அவர்கள், "இவற்றின் விலையை நாங்கள் அறிவோம். ஒரு முட்டையின் விலை ஐந்து பொன்தானே! ஐந்து பொன்னைப் பெற்றுக் கொண்டு முட்டையைக் கொடுங்கள்" என்றனர். குடியானவன், "முட்டையின் விலை ஐந்து பொன்னுக்கும் அதிகம். ஆனால்,

நீங்கள் நல்லவர்களாக இருக்கிறீர்கள். குருவுக்காகக் கேட்கிறீர்கள். உங்களுக்காக ஐந்து பொன்னுக்கு ஒரு முட்டை தருவேன். இக்குறைந்த விலையை வேறு யாரிடமும் சொல்லாதீர்கள்'' என்று கூறி, ஐந்து பொன்னை வாங்கிக் கொண்டு, பெரிய பூசணிக்காய் ஒன்றைப் பறித்துக் கொடுத்தான்.

மட்டி பூசணிக்காயை வாங்கித் தன் தலைமீது வைத்துக் கொண்டான். பிறகு இருவரும் உயர்ந்த குதிரை முட்டையைக் குறைந்த விலைக்கு வாங்கின தங்கள் சாமர்த்தியத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டே வழி நடந்தனர். இடையில் ஓர் இடுக்கு வழி குறுக்கிட்டது. அவர்கள் அவ்வழியில் செல்லும்பொழுது, மேலே தாழ்ந்து வளைந்திருந்த மரக்கிளை மட்டியின் தலைமீது இருந்த பூசணிக்காயைத் தடுத்துத் தள்ளியது. பூசணிக்காய் கீழே இருந்த புதரில் விழுந்து உடைந்து சிதறியது. அப்புதரில் பதுங்கி யிருந்த முயல் ஒன்று அந்த அதிர்ச்சியைக் கேட்டுப் பயந்து வெளிப்பட்டு ஓடியது.

பூசணிக்காய் உடைந்ததையும், உடனே அங்கிருந்து முயல் ஓடியதையும் மட்டியும் மடையனும் கண்டனர்; முட்டைக் குள்ளிருந்த குதிரைக் குட்டியே ஓடுகிறது என்று எண்ணினர்; "குதிரைக் குட்டி! குதிரைக் குட்டி!'' என்று கூவிக் கொண்டே அதனைப் பிடிக்கப் பின்தொடர்ந்தனர். அவர்கள் கல்லும் முள்ளும் காடும் மேடும் பாராமல் அம்முயல் போனவழியே ஓடினர். அவர்களுடைய ஆடைகள் முள் செடிகளில் மாட்டிக் கிழிந்தன; முள்ளும் கல்லும் குத்தியதால் கால்களில் இரத்தம் பெருகியது; புதர்களுக்குள் நுழைந்து ஓடியதனால் உடம்பெல்லாம் காயங்கள் உண்டாயின. முயல் வேகமாக ஓடி

விரைவில் அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது. அவர்கள் அன்று பகல் முழுவதும் அதனைப் பிடிக்க ஓடி ஓடிக் களைத்துப் போயினர்; மாலை வரையில் முயன்றும் அதனைப் பிடிக்க முடியாமையால் சலித்து ஊர் திரும்பினர்.

குருவும் மற்றச் சீடர்களும் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தனர். அவர்கள் களைப்பு நீங்கி, நடந்தவற்றைக் கூறி வருந்தினர். அதைக் கேட்ட குரு, "இம்மாதிரிக் குதிரைக் குட்டி நமக்கு வேண்டாம். பிறந்த வுடனேயே இப்படி வேகமாக ஓடினுல் அது வளர்ந்து பெரியதான பிறகு எப்படி ஓடும்! கிழவனுகிய நான் அதன்மீது ஏறிச் சவாரி செய்ய முடியுமோ? அது ஓடிப் போனதே நல்லது," என்று கூறி அவர்களைத் தேற்றினுர்.

சீடர்கள்	ஐயத்தை	இடுக்குவழி
கறவைப்பசு	மட்டற்ற	பதுங்கியிருந்த
வெறுங்கையோடு	துணையாக	அதிர்ச்சி
குதிரை முட்டை	பணிவாக	களைத்து
சந்தேகப்பட்டு	பூசணிக்காய்	சலித்து
தேற்றினுர்	சாமர்த்தியத்தை	உபசாரங்கள்

கேள்விகள்

1. பரமார்த்த குருவின் சீடர்கள் யாவர்?

2. பசுவைத் தேடப்போன மட்டி திரும்பி வந்து என்ன கூறினுன்?

3. சீடர் குதிரை முட்டை வாங்கியது எவ்வாறு?

4. சீடர் எதனைக் குதிரைக் குட்டி என்று எண்ணினர்? அவ்வாறு எண்ணியது ஏன்?

5. குதிரைக்குட்டி ஓடியதைக் கேட்டுக் குரு என்ன கூறினர் ?

பயிற்சி

1. இக்கதையை மவுனமாக வாசி.

2. பரமார்த்த குருவைப் பற்றிய மற்றக் கதைகளைப் படி.

3. இதைக் குரு சொல்வது போலச் சொல்.

4. இதை மட்டி சொல்வதாகச் சொல்.

5. பசு, ஊர், நாள், தலை, அழகு, உழைப்பு—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்ன பெயர் என்பதைக் கூறு.

6. முனிவர், மடையர், மக்கள், குதிரை, மரம், பொன், ஏரி—இவற்றிற்குத் திணை சொல்.

7. கீழே சில கேள்விகளும், அவற்றின் விடைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்த்து ஒரே வாக்கியமாகச் சொல் :

கேள்விகள் :

(1) குரு நடந்தே பிரயாணம் செய்து வந்தார். ஏன் ?

(2) குரு மட்டியை எதற்காக அனுப்பினர் ?

(3) மட்டியும் மடையனும் ஏன் முயலைத் துரத்திக் கொண்டு ஓடினர் ?

விடைகள் :

(1) குதிரை வாங்கப் பணம் இல்லாமையால்

(2) காணாமற் போன பசுவைத் தேடி வருவதற்காக

(3) முட்டைக்குள்ளிருந்த குதிரைக்குட்டியே ஓடுகிறது என்று எண்ணியதால்



7. ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். (1)

கட்டும் அணையேறிச் சாடி வந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன் ;
திட்டுத் திடர்களும் சுற்றி வந்தேன் ;—மடைச்
சீப்புகள் மோதித் திறந்து வந்தேன். (2)

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்—அங்கென்
ஆசை திரவியை யாடி வந்தேன். (3)

ஏருத மேடுகள் ஏறி வந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன் ;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன். (4)

பஞ்சை அரைத்துநூல் நூற்று வந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்து வந்தேன் ;
நெஞ்சும் உலர்ந்த நெடுநகரில் குழாய்
நீராக வும்சென்று பாய்ந்து வந்தேன். (5)

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன் ;
நிற்க எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டு மம்மா ! (6)

—தேசிக விநாயகம் பிள்ளை

பயிற்சி

1. ஆறு வந்த வழியைச் சொல்.
2. ஆறு செய்த அற்புதச் செயல்களைச் சொல்.
3. ஆற்ருல் உண்டாகும் பயன்களைச் சொல்.
4. இப்பாட்டைப் பாடிய ஆசிரியரைப் பற்றித் தெரிந்து கொள்.
5. இப்பாடலில் வந்துள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுதி ஒவ்வொன்றிற்கும் பால் குறி.
6. முயன்ருன் - உயர்திணை. முயன்றது-அஃறிணை.

முயன்ருன் - ஆண்பால்
முயன்ருள் - பெண்பால்
முயன்றனர் - பலர்பால்
முயன்றது - ஒன்றன்பால்
முயன்றன - பலவின்பால்.

பெயர்ச்சொற்கள் போல வினைச்சொற்களுக்கும் திணை பால்கள் உண்டு.

7. கீழ்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாகப் பிரித்து எழுது :

(1) மட்டியும் மடையனும் புதர்களுக்குள் நுழைந்து ஓடியதனால் அவர்கள் உடம்பெல்லாம் காயங்கள் உண்டாயின.

(2) குடியானவன் ஐந்து பொன்னை வாங்கிக் கொண்டு பெரிய பூசணிக்காய் ஒன்றைப் பறித்துக் கொடுத்தான்.

8. திணை சொல்: முனிவர், பரதன், மலை, ஆறு, வீரர், புத்தர், குரு, முயல்.

9. இன்னபெயர் என்பதைச் சொல் : குதிரை, நாடு, மாதம், கிளை, வெண்மை, முயற்சி.

10. அரசன், அரசி, சிறுவர், குதிரை, குதிரைகள் —இவற்றுள் அரசன் என்பது ஆணைக் குறிக்கிறது. இது ஆண்பால்.

அரசி என்பது பெண்ணைக் குறிக்கிறது. இது பெண்பால்.

சிறுவர் என்பது பலரைக் குறிக்கிறது. இது பலர்பால்.

குதிரை என்பது ஒன்றைக் குறிக்கிறது. இது ஒன்றன்பால்.

குதிரைகள் என்பது பலவற்றைக் குறிக்கிறது. இது பலவின்பால்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால்கள் ஐந்து. இவற்றுள் ஆண்பால், பெண்பால், பலர்பால் மூன்றும் உயர்திணைக்கு உரியவை. ஒன்றன்பால், பலவின்பால் இரண்டும் அஃறிணைக்கு உரியவை.

8. ஆதி காலத்து மக்கள்

இக்காலத்தில் நாம் நாடுகளில் வசிக்கிறோம். நாடுகளில் கிராமங்களும் நகரங்களும் உள்ளன. கிராமங்களிலும் நகரங்களிலும் நாம் கூட்டமாகக் கூடி வாழ்கிறோம். ஓலை வீடுகளும், மாடி வீடுகளும், மாளிகைகளும் கட்டிக் கொண்டு அவற்றில் வசிக்கிறோம். பலவகை உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறோம். வெவ்வேறு சுவையுள்ள விதம் விதமான உணவுகளைச் சமைத்து உண்கிறோம்; பருத்தியினாலும் பட்டினாலும் பகட்டான ஆடைகளை நெய்து உடுக்கிறோம்; பொன்னினாலும் வெள்ளியினாலும் ஆபரணங்கள் செய்து அணிகிறோம்; உலோகங்களால் பாத்திரங்கள் செய்து உபயோகிக்கிறோம்;

இரும்பினாலும் எஃகினாலும் புதுப் புதுக் கருவிகளைச் செய்து பயன்படுத்துகிறோம். இவையெல்லாம் ஆதி காலத்தில் இருந்திருக்குமா? ஆதி காலத்து மக்கள் எவ்வாறு வாழ்ந்திருப்பார்கள்?

ஆதி காலத்து மக்கள் வாழ்க்கையைக் கூறினால் நீங்கள் வியப்புக் கொள்வீர்கள். ஆதி காலத்தில் நாடு நகரங்கள் கிடையா; எங்கும் காடாகவே இருந்தது. அக்காலத்து மக்கள் காடுகளிலேயே வசித்து வந்தார்கள். அவர்கள் கூட்டமாக ஓரிடத்தில் கூடி வாழாமல் தனித் தனிக் குடும்பமாகப் பிரிந்து வாழ்ந்தார்கள். அவர்களுக்கு நம்மைப் போல வீடு கட்டிக் கொள்ளத் தெரியாது. அவர்கள் மிருகங்களைப் போலவே வெயிலில் உலர்ந்தும், மழையில் நனைந்தும், காடுகளில் அலைந்தும் திரிந்தார்கள்; இராக் காலங்களில் கொடிய மிருகங்களுக்கு அஞ்சி மலைக் குகைகளிலும், மரக் கிளைகளிலும் தங்கி வாழ்ந்தார்கள்.

அவர்கள் ஆடை நெய்யவும் ஆபரணங்கள் செய்யவும் அறியார்கள். அதனால் அவர்கள் மரத் தழைகளாலும் மரப்பட்டையாலுமே தங்கள் உடலை மறைத்து வந்தார்கள்; பிறகு தாங்கள் வேட்டையாடிக் கொல்லும் விலங்குகளின் தோலை ஆடையாக உடுக்கலானார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள்களைப் பயிர் செய்யத் தெரியாது. உணவு சமைப்பதும் அவர்கள் அறியாத ஒன்றாகும். அவர்கள் நெருப்பின் உபயோகத்தையே அறியாதவர்கள். ஆகவே அவர்கள் காய், கனி, கிழங்கு முதலியவைகளை அப்படியே உண்டார்கள்; விலங்குகளை வேட்டையாடிக் கொன்று அவற்றின் இறைச்சியைப் பச்சையாகவே புசித்தார்கள்.

ஆதி காலத்தில் பொன், வெள்ளி, இரும்பு

போன்ற உலோகங்கள் கண்டுபிடிக்கப் படவில்லை. அக்காலத்து மக்கள் புலிப் பல், புலி நகம், நரிப் பல், கிளிஞ்சல், பலகறை முதலியவற்றையே ஆபரண மாகக் கோத்து அணிந்து வந்தனர். உலர்ந்த காய் களின் ஓடுகளும், உட் குழிவாகக் குடையப்பட்ட மரக் குடுவைகளுமே அவர்கள் உபயோகித்த பாத்திரங்களாகும்.

தீங்கு இழைக்கும் கொடிய மிருகங்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதும், தங்கள் உயிர் வாழ்க்கைக்கு வேண்டும் உணவைத் தேடிப் பெறுவ துமே ஆதி காலத்து மக்களின் முயற்சிகளாக இருந் தன. அவற்றிற்கு வேண்டும் கருவிகளைச் செய்து கொள்ளுவதே அவர்கள் அறிந்த முதல் தொழிலாகும். அவர்கள் முதலில் கற்களாலேயே அக்கருவிகளைச் செய்து கொண்டார்கள். விலங்குகளைக் குத்தவும், வெட்டவும், பிளக்கவும் வேண்டிய கத்தி, ஈட்டி, அம்பு, கோடரி முதலிய கருவிகளை அவர்கள் கற்களாலேயே செய்துகொள்ளக் கற்றனர். அது பற்றியே அவர்கள் வாழ்ந்த காலம் கற்காலம் என வழங்கலாயிற்று.

அவர்கள் அவ்வாறு கற்களை உபயோகித்து வரு கையில் அவை ஒன்றோடு ஒன்று தாக்கும் பொழுது நெருப்பு உண்டாவதைக் கண்டார்கள். அதிலிருந்து அவர்கள் கல்லைக் கடைந்து நெருப்பு உண்டாக்கிக் கொள்ளக் கற்றார்கள். பிறகு அவர்கள் காய் கிழங்கு களையும், மிருகங்களின் இறைச்சிகளையும் தீயில் வேக வைத்துப் புசிக்கத் தொடங்கினர். நெருப் பையும், அதன் உபயோகத்தையும் அறிந்தது முதல் அவர்கள் வாழ்க்கை விரைவாக முன்னேறியது.

காய் கிழங்குகளையும் மாமிசங்களையும் உண்டு உயிர் வாழ்ந்து வந்தவர்கள் நிலத்தைக் கொத்தித்

தானியங்களைப் பயிரிடும் முறையைக் கண்டனர். கூர்மையான மரக் கொம்புகளால் நிலத்தைக் கொத்தித் தங்களுக்கு வேண்டும் உணவுப் பொருள்களை விளைவித்துக் கொண்டார்கள். நாளடைவில் மரத்தால் கலப்பை செய்து மாடுகளைப் பூட்டி நிலத்தை உழக் கற்றுக் கொண்டார்கள். அந்நிலையில் தனித் தனியாகப் பிரிந்து வாழ்ந்த அவர்கள் கூட்டமாகக் கூடி வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பலர் கூடி ஓர் இடத்தில் குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழத்தொடங்கினர். அவர்கள் தோலுக்குப் பதிலாகச் சிலவகை மரங்களின் நாரை உரித்துப் பின்னி உடுத்துக் கொண்டார்கள். உணவு சமைப்பதற்கும் உண்ணுவதற்கும் மண் பாண்டங்கள் செய்யவும் கற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் பிறகு பூமியை வெட்டி உலோகங்களைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் முதன் முதலில் கண்டு பிடித்த உலோகம் இரும்பு ஆகும். இரும்பைக் கொண்டு அவர்கள் பல கருவிகளைச் செய்து பயன் படுத்திக் கொள்ளலானார்கள். பிறகு செம்பு, வெள்ளி, வெண்கலம் முதலிய உலோகங்கள் ஒவ்வொன்றாகக் கண்டு பிடிக்கப்பட்டன. அவர்கள் செங்கலும் ஓடும் செய்து அவற்றால் வீடுகள் கட்டிக்கொள்ளக் கற்றனர். பருத்திச் செடியைக் கண்டு, அதன் உபயோகத்தை அறிந்து, பஞ்சிலிருந்து நூல் நூற்று ஆடை நெய்து உடுக்கத் தொடங்கினர். உலோகங்களால் ஆபரணங் களும் பாத்திரங்களும் செய்து பயன்படுத்திக் கொள்ள முற்பட்டனர்.

ஆதியில் விலங்கு நிலையில் வாழத் தொடங்கிய மக்கள் இவ்வாறு சிறிது சிறிதாக முயன்று முன் னேறி இன்றுள்ள உயர் நிலையை அடைந்துள்ளார்

கள். இந்த முயற்சிகளே நாகரிகப் படிகள் என்பவை. இந்நாகரிகப் படிகளைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

நகரம்	ஆபரணம்	கடைந்து
பூட்டி	கூடி	புதுப்புது
தொடங்கு	உரித்து	மாடி
வியப்பு	முறை	பின்னி
மாளிகை	அலைந்து	கருவிகள்
பாண்டம்	பலவகை	விலங்கு
சிறிதுசிறிதாக	கூர்மை	நாளடைவில்
விதம்விதமான	புசி	அவசியம்

கேள்விகள்

1. ஆதிகாலத்து மக்கள் எப்படி வாழ்ந்து வந்தார்கள்?

2. அவர்கள் எப்படிப்பட்ட ஆபரணங்களை அணிந்திருந்தனர்?

3. "கற்காலம்" என்று ஏன் பெயர் வந்தது?

4. அவர்கள் கல்லைக் கடைந்து நெருப்பு உண்டாக்குவதை எவ்வாறு அறிந்தார்கள்?

5. தனித்தனியாகப் பிரிந்து வாழ்ந்தவர்களுக்குக் கூடி வாழ வேண்டிய அவசியம் எப்பொழுது ஏற்பட்டது?

6. எவை நாகரிகப் படிகள் எனப்படும்?

பயிற்சி

1. இப் பாடத்தை மவுனமாக வாசி.

2. விதம் விதமான, சிறிது சிறிதாக, புதுப்புது, நாளடைவில்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

3. உணவு, ஆகாரம், இறைச்சி, மாமிசம், பாஷை, மொழி, ஜீவனம், வாழ்க்கை, விலங்கு, மிருகம்—இச் சொற்களில் ஒரே அர்த்தமுள்ள சொற்களை அறிந்து சொல்.

4. பெண்பால் கூறு: ஆண், சிறுவன், சகோதரன்.

5. கோடிட்ட இடங்களில், 'தெரியும்' 'தெரியாது' என்னும் சொற்களில் பொருத்தமானதை வைத்து வாசி:

(1) ஆதிகாலத்து மக்களுக்கு வீடு கட்டிக் கொண்டு வாழ——

(2) நமக்கு உணவுப் பொருள்களைப் பயிர் செய்ய ——

(3) அதிகாலத்து மக்களுக்கு நெருப்பின் உப யோகம் ——

(4) இக்காலத்து மக்களுக்கு நெருப்பின் உப யோகம் ——

6. வீடு, வீடுகள்—

வீடு என்பது ஒன்றினைக் குறிக்கிறது. இது ஒருமை எண்.

வீடுகள் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிக்கிறது. இது பன்மை எண்.

ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும்.

9. வேடனும் புருவும்

ஒரு காட்டில் வேடன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் கொலை செய்வதையே குலத்தொழிலாக உடைய கொடியவன். அவனைக் கண்டுவிட்டால் சிங்கம் புலி போன்ற கொடிய விலங்குகளும் அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளும்; பறவைகள் குரல் அடங்கிக் கூடுகளில் பதுங்கிக் கொள்ளும். அவன் பகல் முழுதும் காட்டில் அலைந்து திரிந்து வேட்டையாடுவான்; கண்ணிற் பட்ட விலங்குகளையும் பறவைகளையும் கொன்று அவற்றின் இறைச்சியைத் தின்பான்; ஆற்று நீரைப் பருகி மரநிழலில் இளைப்பாறுவான்; இரவில் மலைக் குகையில் படுத்து உறங்குவான். அவன் இவ்வாறு கொலையையே வாழ்க்கையாகக் கொண்டு காலங் கழித்து வந்தான்.

அவன் ஒரு நாள் வழக்கம்போல் வில்லும், அம்பும், கூடும், கண்ணியும், குறுந்தடியும் ஆகிய கருவிகளை எடுத்துக்கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டான். அவன் முதலில் ஒரு மரத்தின் அடியில் கண்ணியைக் கட்டிவிட்டு, ஒரு புதரின் மறைவில் பதுங்கியிருந்தான். அப்பொழுது ஒரு பெண் புறு இரைதேட அங்கு வந்தது. அது அறியாமல் கண்ணியில் அகப்பட்டுக் கொண்டது. வேடன் அதனைப் பிடித்துக் கூட்டில் அடைத்து எடுத்துக்கொண்டு, மேலும் விலங்கு பறவைகளைத் தேடிக் காட்டில் திரிந்துகொண்டிருந்தான். அப்பொழுது திடீரென்று கடுங்காற்றும் பெருமழையும் கலந்து எழுந்தன. வேடன் மழையில் நனைந்து காற்றால் கலங்கினான். அவன் உடல் குளிரால் நடுங்கியது. அவன் ஒரு மரத்தின் கீழ்ச்சென்று ஒடுங்கி நின்றான்.

வேடன் தங்கிய மரத்தின்மேல் ஓர் ஆண் புறு இருந்தது. இரை தேடச் சென்ற அதன் பெட்டை நெடுநேரம் ஆகியும் திரும்பிவராமையால், "காலையில் பிரிந்து சென்ற என் மனைவி இன்னும் திரும்பி வரவில்லை. அவளுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. வேடர்கள் கையில் சிக்கிக் கொண்டாளோ! காற்று மழையில் அகப்பட்டு அவதிப்படுகிறாளோ! அவள் இல்லாத இவ்விடம் எனக்குப் பாழாக அன்றோ தோற்றுகிறது! நான் அவளை எங்குக் கண்டு தேடுவேன்? அவள் இல்லாமல் எப்படி உயிர்வாழ்வேன்?" என்று பலவாறு கூறி அழுது புலம்பியது.

வேடன் கூட்டில் இருந்த பெண் புறு ஆண் புறுவின் புலம்பலைக் கேட்டு வருந்தியது. அது மரத்தின் மேல் இருந்த ஆண் புறுவை நோக்கி, "அன்பனே, முன் பிறப்பில் பாவம் செய்தவர்கள் மறு பிறப்பில்

அதன் பலனை அனுபவிக்கிறார்கள். நான் எனது பழைய வினையின் பயனாக இப்பொழுது இந்த வேடன் கூட்டில் அடைபட்டிருக்கிறேன். எந்தச் சமயத்தில் எது நேர வேண்டுமோ அது நேர்ந்தே தீரும். அதற்காக வருந்துவது அறியாமை ஆகும். இந்த வேடன் நம் வீட்டை நாடி வந்திருக்கிறான். இவன் இப்பொழுது குளிராலும் பசியாலும் மெலிந்திருக்கிறான். இவனை உபசரிக்க வேண்டியது நம் கடமையாகும். என்னைப் பிடித்துக் கூட்டில் அடைத்திருக்கிறான் என்பதற்காக நீர் இவன் மீது பகைமை பாராட்டாமல், இவனுக்கு உம்மால் இயன்ற உதவியைச் செய்வீராக '' என்று வேண்டிக் கொண்டது.

பெண் புறாவின் அறிவுரையைக் கேட்டு ஆண் புறா மனம் தெளிந்தது. அது வேடனை நோக்கி, '' வேடரே, உம்மை வரவேற்கிறேன். நீர் இதை உமது வீடாகவே கருதி உமக்கு வேண்டுவதைக் கேளும்'', என்றது. வேடன், '' புறாவே, முதலில் என் குளிரைப் போக்கு. அதுவே எனக்குப் பெரிய உபகாரம் ஆகும் '' என்றான். உடனே ஆண் புறா உலர்ந்த சருகுகளையும் சுள்ளிகளையும் கொண்டு வந்து வேடன் முன் குவித்து, பிறகு காட்டிலிருந்து ஒரு கொள்ளி எடுத்துவந்து அதில் வைத்துத் தீ மூட்டியது. தீ மூண்டு எரியத் தொடங்கியது. ஆண் புறா வேடனை நோக்கி, '' இந்தத் தீயில் குளிர்காய்ந்து உமது உடல் நடுக்கத்தைப் போக்கிக் கொள்ளும். நான் முன் பிறப்பில் செய்த பாவத்தால் பறவையாகப் பிறந்திருக்கிறேன். அதனால் உமது பசியைப் போக்குவதற்கு ஏற்ற உணவுப் பொருள் ஏதும் என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளது இந்த உடல் ஒன்றுமே ஆகும். இது பல துன்பங்களுக்கு இடமானது; பிறருக்குப்

பயன்படாதது. இதனைப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருப்பதால் பயன் என்ன? பசியால் வருந்தும் உமக்கு இது பயன்படட்டும். நீர் இதனை உண்டு பசியைத் தீர்த்துக்கொள்ளும்'' என்று கூறி, எரியும் நெருப்பில் மகிழ்ச்சியோடு விழுந்தது.

வேடன் ஆண் புறுவின் செயலைக்கண்டு திகைப்பு அடைந்தான். இரக்கம் அறியாத அவன் இரும்பு உள்ளமும் இளகியது. "ஆ ஆ! இந்த அற்பப் புறு எனக்காகத் தன் உடலைத் துறந்தது. நான் கொலைத் தொழில் புரியும் கொடியவன்; உயிர்களைக் கொன்று தின்று உடல் வளர்ப்பவன்; இரக்கமும் உதவியும் அறியாத தீவினையாளன். ஆகவே நான் கொடிய நரகத்தில் வீழ்வேன். இந்தப் புறுவின் செய்கையால் நான் இவ்வுண்மையை உணர்ந்தேன். இனி நான் உயிர்க்கொலை புரியேன். பசி, தாகம், குளிர், வெயில் இவற்றைப் பொறுத்து, பிறருக்கு உதவி செய்வதிலேயே காலம் கழிப்பேன்'' என்று உறுதி கொண்டான். வில், அம்பு, கூடு, கண்ணி முதலிய வேட்டைக் கருவிகளை முறித்து எறிந்தான்; கூட்டைத் திறந்து பெண் புறுவையும் விட்டு விட்டான்.

வெளிப்பட்ட பெண் புறு உயிர்வாழ விரும்பவில்லை. அது வேடனைப் பார்த்து, "என் அருமைக் கணவன் தருமத்திற்காகத் தன் உடலை விட்டான். கணவன் இறந்த பிறகு கற்புடைய பெண்களுக்கு வாழ்வு ஏது? என் கணவன் உடலோடு என் உடலையும் சேர்த்து உண்டு பசி ஆறும்'' என்று சொல்லிக் கொண்டே தீயில் விழுந்து இறந்தது. அடைந்தவனை ஆதரித்த புண்ணியத்தால் அவ்விரு புறுக்களும் தெய்வ வடிவம் பெற்றுத் தேவருலகம் அடைந்தன.

குலத்தொழில்	பாழாக	அறிவுரை
வேட்டை	பலவாறு	கொள்ளி
இறைச்சி	புலம்பியது	மூட்டியது
உறங்குவான்	முன்பிறப்பு	தீவினை
வில்	பாவம்	நரகம்
அம்பு	மறுபிறப்பு	முறித்து
கண்ணி	பழையவினை	கற்பு
குறுந்தடி	பகைமை	ஆறும்
அவதி	இயன்ற	புண்ணியம்

கேள்விகள்

1. மழையாலும் குளிராலும் வருந்திய வேடன் என்ன செய்தான்?

2. மரத்தின் மீது இருந்த ஆண் புறு என்ன சொல்லி வருந்தியது?

3. பெண் புறு ஆண் புறுவை என்ன செய்யுமாறு வேண்டியது?

4. பெண் புறுவினுல் அறிவு தெளிந்த ஆண் புறு செய்தது என்ன?

5. ஆண் புறுவினது செயலைக் கண்ட வேடன் உணர்ந்தது என்ன? அவன் செய்தது என்ன?

6. விடுபட்ட பெண் புறு என்ன செய்தது?

7. இக்கதையால் நீ அறிவது என்ன?

பயிற்சி

1. இக்கதையை மவுனமாக வாசி.

2. இக்கதை எதில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்.

3. அதிலுள்ள மற்றக் கதைகளையும் மவுனமாக வாசி.

4. எதிர்ச்சொல் கூறு: பாவம், தீவினை, பிறப்பு உபகாரம்.

5. ஒருமை கூறு: பறவைகள், கருவிகள், விலங்குகள், வேடர்கள்.

6. பன்மை கூறு: காடு, சிங்கம், மரம், புரு, கூடு, கணவன், வடிவம்.

7. சொல்லியுள்ளவாறு செய்:

(1) பெண்புரு உயிர்வாழ விரும்பவில்லை—இதை விரும்பவில்லை என்பதற்குப் பதிலாக விரும்பியது என்பதை அமைத்து வாசி.

(2) நெருப்பையும், அதன் உபயோகத்தையும் அறிந்தது முதல் அவர்கள் வாழ்க்கை விரைவாக முன்னேறியது—இதை முன்னேறியது என்பதற்குப் பதிலாக முன்னேறவில்லை என்பதை அமைத்து வாசி.

8. இவற்றைக் கவனித்துப் படி:

திணை	பால்	எண்
உயர்திணை	ஆண்பால்	ஒருமை
	பெண்பால்	ஒருமை
	பலர்பால்	—பன்மை
அஃறிணை	ஒன்றன்பால்	—ஒருமை
	பலவின்பால்	—பன்மை



10. இரயில் பிரயாணம்

நம்பி: அப்பா, நான் இதுவரையில் இரயிலில் பிரயாணம் செய்ததே இல்லை. இப்பொழுது எனக்கு விடுமுறை நாளாகவும் இருக்கிறது. என்னை எங்கேயாவது இரயிலில் அழைத்துப் போகிறீர்களா ?

நங்கை: அப்பா, எனக்கும் இரயிலில் பிரயாணம் செய்யவேண்டும் என்று ஆசையாய் இருக்கிறது. அண்ணாவோடு என்னையும் அழைத்துப் போங்கள், அப்பா.

தந்தை: நான் இன்று காஞ்சிபுரம் போகப் போகிறேன். உங்களையும் அழைத்துப் போகிறேன். உங்களுக்கு வேண்டிய உடை, படுக்கை முதலியவைகளை எடுத்துக் கட்டிக்கொண்டு புறப்படுங்கள். இன்னும் ஒருமணி நேரத்தில் புறப்பட வேண்டும்.

நம்பி : எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டோம். புறப்படலாமா, அப்பா?

தந்தை : அதோ, வண்டி வந்துவிட்டது. மூட்டைகளைக் கொண்டுபோய் அதில் வைத்து விட்டு நீங்களும் ஏறிக் கொள்ளுங்கள். ஸ்டேஷனுக்குப் போவோம்.

நங்கை : அதோ தெரிகிறதே, அதுதானே அப்பா இரயில் ஸ்டேஷன்?

நம்பி : அங்கு எத்தனை வண்டிகள் நிற்கின்றன பாருங்கள், அப்பா.

தந்தை : இறங்குங்கள், ஸ்டேஷனுக்கு வந்து விட்டோம். அந்த ஆளைக் கூப்பிடுங்கள். மூட்டைகளை அவனிடம் கொடுப்போம்.

நங்கை : அவன் யார் அப்பா? மூட்டைகளை ஏன் அவனிடம் கொடுக்க வேண்டும்?

தந்தை : அவன் ஸ்டேஷன் கூலியாள். அவனுக்குப் போர்ட்டர் என்பது பெயர். அவனிடம் மூட்டையைக் கொடுத்தால் அவன் அதை இரயிலில் கொண்டுவந்து வைப்பான்.

நம்பி : அவனுக்குக் கூலி கொடுக்க வேண்டுமா, அப்பா?

தந்தை : கூலி வாங்காமல் வேலை செய்வானா? ஆனால் அவன் மற்றக் கூலியாள்களைப் போலத் தன் இஷ்டப்படி கூலி கேட்க முடியாது. ஒரு மணங்கு எடையுள்ள மூட்டைக்கு நான்கணா கூலி என்று இரயில் அதிகாரிகளே திட்டம் செய்திருக்கிறார்கள். அதற்கு அதிகமாக அவன் கேட்க முடியாது.

நங்கை : இவன் இரயில் போர்ட்டர் என்பது எப்படித் தெரியும்?

தந்தை : இவன் கையில் ஒரு பித்தளைத் தகடு

கட்டிக் கொண்டிருக்கிறான், பார். அதுதான் இவன் இரயில் போர்ட்டர் என்பதற்கு அடையாளம். அதில் இவனுக்குரிய எண் பதித்திருக்கிறது. மற்றக் கூலிகளைப்போல இவன் மூட்டையைத் திருடிக் கொண்டு மறைந்துவிட முடியாது. மறைந்து விட்டாலும் இவன் எண்ணைச் சொல்லி அதிகாரிகளிடம் புகார் செய்தால், அவர்கள் இவனைப் பிடித்து விடுவார்கள்.

நங்கை : இது நல்ல ஏற்பாடு, அப்பா. அங்கு ஏன் அவர்கள் வரிசையாக நிற்கிறார்கள் ?

தந்தை : அது டிக்கெட் கொடுக்கும் இடம்; மேலே எழுதியிருக்கிறது, பார். டிக்கெட் வாங்குவதற்காக அவர்கள் அங்கு வரிசையாக நிற்கிறார்கள். கூட்டமாகக் கூடி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து நெருக்கினால் டிக்கெட் வாங்குவது கஷ்டம். டிக்கெட் கொடுப்பவரும் சிரமப்படுவார். இப்படி வரிசையாக நின்று ஒவ்வொருவராக வாங்குவதால் வந்த வரிசை முறைப்படி எல்லோரும் எளிதில் வாங்கிக்கொள்ள முடியும். நாம் எல்லாப் பொது இடங்களிலுமே இப்படி நடந்துகொள்ள வேண்டும். நம்பி, நீ வரிசையில் நின்று காஞ்சிபுரத்திற்கு இரண்டு டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு வா.

நம்பி : இரண்டு டிக்கெட்டுகளா ? நாம் மூன்று பேர்கள் அல்லவோ இருக்கிறோம் ?

தந்தை : எனக்கு ஒரு டிக்கெட். நீங்கள் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்கள் அல்லவா ? உங்கள் இருவருக்கும் சேர்ந்து ஒரு டிக்கெட்டுதான்.

நங்கை : பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு அரை டிக்கெட்டா, அப்பா ?

தந்தை : ஆம். இருங்கள். இந்தச் சாமானை நிறுத்துக்கொண்டு போவோம்.

நம்பி : சாமானை ஏன் அப்பா, நிறுக்கவேண்டும்?

தந்தை : ஒரு டிக்கெட்டுக்கு 25 சேர் நிறையுள்ள சாமான்தான் கட்டணம் இல்லாமல் கொண்டு போகலாம். அதற்கு அதிகமாக இருந்தால், அதிகமுள்ள நிறைக்குக் கட்டணம் செலுத்தவேண்டும்.

நங்கை : அப்படியானால் நாம் ஐம்பது சேர் நிறையுள்ள சாமான் வரையில் கட்டணம் இல்லாமல் கொண்டு போகலாம் அல்லவா ?

தந்தை : நல்லவேளை ! நம் சாமான் நாற்பது சேர் நிறைதான் உள்ளது. போர்ட்டர், சாமானை எடுத்துக் கொண்டு வா.

நம்பி : அப்பா, இவர் யார் ? இவர் ஏன் நம் டிக்கெட்டை வாங்கிக் கத்தரித்துத் தருகிறார் ?

தந்தை : இவர் டிக்கெட் பரிசோதகர். டிக்கெட் இல்லாதவர்கள் உள்ளே வரக்கூடாது. அதற்காக நம் டிக்கெட்டைப் பார்த்து, பார்த்ததற்கு அடையாளமாக அதைக் கத்தரித்துக் கொடுக்கிறார்.

நங்கை : இது என்ன அப்பா, மேடைமாதிரி இருக்கிறது ?

தந்தை : இதுதான் ஸ்டேஷன் மேடை. இதற்குப் பிளாட்பாரம் என்பது பெயர்.

நம்பி : எவ்வளவு கூட்டம், அப்பா ! இத்தனைப் பேர்களும் இந்த இரயிலில் பிரயாணம் செய்யப் போகிறவர்களா ?

தந்தை : இரயிலில் பிரயாணம் செய்யப் போகிறவர்களும் இருக்கிறார்கள் ; அவர்களை வழியனுப்ப வந்தவர்களும் இருக்கிறார்கள்.

நங்கை : வழியனுப்ப வந்தவர்கள் டிக்கெட் இல்லாமல் எப்படி உள்ளே வந்தார்கள் ? டிக்கெட் பரிசோதகர் இவர்களை எப்படி விட்டார் ?

தந்தை : அவர்கள் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்திருப்பார்கள். இரண்டு அணுக் கொடுத்தால் பிளாட்பாரம் டிக்கெட் கொடுப்பார்கள். அதை வாங்கிக்கொண்டால் பிளாட்பாரத்திற்குள் வரலாம்.

நங்கை : அதோ மணி அடிக்கிறது! வண்டி வருகிறதா, அப்பா?

தந்தை : இல்லை. வண்டி முன் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு விட்டது என்பதை அறிவிக்க மணி அடிக்கிறது. இன்னும் கால் மணி நேரத்தில் வண்டி இங்கு வந்துவிடும்.

நம்பி : இந்தப் பிளாட்பாரத்தைப் பாருங்கள், அப்பா! குப்பையை எறிந்தும், எச்சிலைத் துப்பியும் எப்படி அசுத்தம் செய்திருக்கிறார்கள்! அதோ ஒருவர் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே எச்சில் துப்புகிறார், பாருங்கள்.

தந்தை : என்ன செய்வது? இன்னும் நம் மக்களுக்குப் பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பது தெரியவில்லை. அதோ 'அசுத்தம் செய்யக்கூடாது' 'எச்சில் துப்பக் கூடாது' என்று போர்டுகூடப் போட்டிருக்கிறார்கள். எச்சில் துப்புவதற்கென்று தொட்டிகளும் வைத்திருக் கிறார்கள். பொது மக்கள் ஒழுங்காக நடந்துகொண் டால்தானே!

நங்கை : பழம், பணியாரம், காப்பி இவைகளை விற்பவர்கள் ஏன் இங்கு இருக்கிறார்கள்?

தந்தை : பிரயாணிகளுக்கு விற்பதற்காகவே இருக்கிறார்கள். இரயில் வந்து நின்றதும் இவர்கள் கூவிக்கொண்டே இங்கும் அங்கும் போவார்கள்.

நம்பி : அதோ இரயில் வருகிறது, அப்பா!

தந்தை : ஆம். அதுதான் நாம் ஏறிச் செல்ல வேண்டிய இரயில். நீங்கள் ஓரத்தில் நிற்காதீர்கள்; ஒதுங்கி நில்லுங்கள். அவசரப்படாதீர்கள். வண்டி நிற்கட்டும். முதலில் இறங்குபவர்களுக்கு வழிவிட்டு, அவர்கள் இறங்கியான பிறகு நாம் ஏறிக்கொள்ளலாம்.

நங்கை : நான் ஜன்னல் பக்கத்தில் உட்காருகிறேன், அப்பா.

தந்தை : உட்கார். ஆனால் முகத்தை வெளியில் நீட்டாதே. கரித்தூள் பறந்து வந்து கண்ணில் விழும். ஜன்னல் கதவு நன்றாகப் பொருந்தியிருக்கிறதா, பார்.

நம்பி : அப்பா, மணி அடிக்கிறதே! வண்டி புறப்பட்டுவிடுமா?

தந்தை : இது முதல் மணி. வண்டி புறப்பட இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன. ஐந்து நிமிஷங்கள் கழிந்ததும் இரண்டாவது மணி அடிக்கும். கார்டு பச்சைக் கொடியைக் காட்டி, ஊது குழலை ஊதுவார். அதற்குப் பிறகே வண்டி புறப்படும்.

நங்கை : கார்டு யார், அப்பா?

தந்தை : அதோ கையில் கொடியும் வாயில் குழலும் வைத்துக்கொண்டு நிற்கிறார், பார். அவர்தான் கார்டு. இரயிலைப் பாதுகாத்துச் செலுத்துபவர் கார்டு எனப்படுவார். அவர் வண்டியிலேயே வருவார். அவர் உத்தரவுப்படியே டிரைவர் இரயிலைச் செலுத்த வேண்டும்.

நம்பி : அவர் பக்கத்தில் ஒருவர் நிற்கிறாரே, அவர் யார்? அவரும் கையில் கொடி வைத்துக்கொண்டிருக்கிறாரே!

தந்தை : அவர் ஸ்டேஷன் மாஸ்டர். அவர்

தான் ஸ்டேஷனுக்குத் தலைவர். அவர் உத்தரவு கொடுத்தால்தான் இரயில் ஸ்டேஷனை விட்டுப் புறப் படலாம்.

நங்கை : அவர்கள் சிவப்புக் கொடியும் வைத் திருக்கிறார்களே, ஏன் அப்பா?

தந்தை : இரயிலை நிறுத்த வேண்டுமானால் சிவப்புக் கொடியைக் காட்டுவார்கள்.

நம்பி : இரண்டாவது மணி அடிக்கிறது, அப்பா!

நங்கை : அதோடு கார்டு பச்சைக் கொடியைக் காட்டி ஊதுகுழலை ஒலிக்கின்றார், அப்பா!

தந்தை : ஆம், வண்டி புறப்பட்டு விட்டது.

நம்பி : பிரயாணம் செய்யும் வண்டியில் எப்படி அசுத்தம் செய்திருக்கிறார்கள் பாருங்கள், அப்பா! இதில் அவர்களும்தானே பிரயாணம் செய்கிறார்கள்?

தந்தை : நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர்க் குக் கல்வியறிவு இல்லை. இவையெல்லாம் அதன் விளைவுகளே ஆகும். மக்கள் அனைவரும் போதுமான கல்வியறிவு பெற்றாலொழிய இச் சீர்கேடுகளைத் தடை செய்ய முடியாது.

நங்கை : அதோ பாருங்கள் அப்பா, பலர் இடம் இல்லாமல் நின்றுகொண்டிருக்க, ஒருவர் நீட்டிப் படுத்துக்கொண்டிருக்கிறார்!

தந்தை : ஐயா, பெண்களும் சிறுவர்களுமாகப் பலர் நிற்கும்பொழுது நீர் படுத்திருப்பது நியாயமா? எழுந்து உட்கார்ந்து நிற்பவர்களுக்கு இடம் கொடுங்கள்.

நம்பி : இரயில் வண்டியை யார் அப்பா, கண்டு பிடித்தார்?

தந்தை : ஜேம்ஸ் வாட் என்னும் ஆங்கிலேயர்

நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தார். அவருக்குப் பிறகு ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் என்பவர் நீராவியின் சக்தியால் ஓடும் இரயில் இயந்திரத்தைச் செய்து இருப்புப் பாதையின்மேல் ஓடச் செய்தார். பிறகு அது எல்லா நாடுகளிலும் பரவியது.

நங்கை : நாம் எப்பொழுது காஞ்சிபுரம் போய்ச் சேருவோம் ?

தந்தை : மாலையில் போய்ச் சேருவோம்.

நங்கை : அங்கு நாம் எங்கே தங்குவது ?

தந்தை : அங்குப் பல சத்திரங்கள் உள்ளன. ஏதாவது ஒரு சத்திரத்தில் தங்கலாம்.

நம்பி : அப்பா, நான் காஞ்சிபுரத்தைப் பற்றி என் பாடப் புத்தகத்தில் படித்தேன். அது மிகவும் பழமையான நகரமாம். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே அது சிறந்த நகரமாக விளங்கியதாம். கரிகால் வளவன் என்னும் சோழன் அந்நகரத்தைப் புதுப்பித்தானும். பல்லவச் சக்கரவர்த்திகளுக்கு அது தலைநகரமாக இருந்ததாம். அது கோவில்கள் நிறைந்த நகரமாம். அங்கு ஏகாம்பரநாதர் கோவில், காமாட்சி அம்மன் கோவில், வாதராஜப் பெருமாள் கோவில் முதலிய பெரிய கோவில்கள் இருக்கின்றனவாம். இராஜ வீதி, தேரோடும் வீதி எல்லாம் உள்ளனவாம். அவற்றையெல்லாம் எங்களுக்குக் காட்டுகிறீர்களா, அப்பா ?

தந்தை : அதற்காகத்தானே உங்களை அழைத்துப் போகிறேன்.

விடுமுறை	திட்டம்	கார்டு
சக்தி	ஸ்டேஷன்	ஏற்பாடு
உத்தரவு	இருப்புப் பாதை	கூலியாள்
டிக்கெட்	ஸ்டேஷன் மாஸ்டர்	சத்திரங்கள்
போர்ட்டர்	முறைப்படி	போதுமான
இஷ்டப்படி	பரிசோதகர்	கல்வியறிவு
பிளாட்பாரம்	அசுத்தம்	நீராவி

பயிற்சி

1. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள இரயில் ஸ்டேஷனைச் சொல்.

2. இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று பார்.

3. போர்ட்டர், கார்டு, ஸ்டேஷன் மாஸ்டர் ஆகியோர் வேலைகளைக் கவனி.

4. இரயில் வருவதையும் புறப்படுவதையும் கவனி.

5. போர்ட்டர்—இது ஆங்கிலச் சொல். இப்பாடத்தில் வந்துள்ள ஆங்கிலச் சொற்களைக் குறித்துக் கொள்.

6. அவற்றிற்குத் தமிழ்ச் சொற்கள் தெரிந்து கொள்.

7. இஷ்டப்படி, ஏற்பாடு, முறைப்படி, போதுமான—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

8. பிரித்து எழுது: தேவருலகம், மரநிழல், கல்வியறிவு, தேரோடும்.

9. கண்ணிற்பட்ட பறவைகளையும் விலங்குகளையும் கொன்று தின்பான்.

இவ்வாக்கியத்தில் தின்பான், பட்ட, கொன்று என்பன வினையை (செயலை)க் குறிக்கின்றன. இவை வினைச் சொற்கள். இவற்றுள் தின்பான் என்னும் வினைச்சொல் பொருள் முடிந்து நிற்கிறது. இது முற்று வினை. இது வினை முற்று எனப்படும்.

பட்ட என்பதும், கொன்று என்பதும் பொருள் முடியாமல் நிற்கின்றன. இவை எச்ச வினைகள். இவற்றுள் பட்ட என்னும் எச்ச வினை பறவைகள் என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு பொருள் முடிகிறது. ஆகவே இது பெயரெச்சம்.

கொன்று என்னும் எச்ச வினை தின்பான் என்னும் வினைச் சொல்லைக் கொண்டு பொருள் முடிகிறது. ஆகவே இது வினையெச்சம்.

10. (1) தருமட்டியை அனுப்பினுர்.

(2) குதிரையின் விலை என்ன ?

(3) மாநில மீது அதுபோல் பிறிதில்லையே !

1. முதல் வாக்கியம் ஒரு முழுக் கருத்தைத் தெரிவிக்கிறது. இது போன்ற வாக்கியங்களின் முடிவில் முற்றுப் புள்ளி (.) இட்டு எழுதவேண்டும்.

2. இரண்டாவது வாக்கியம் கேள்வி கேட்கிறது. இது போன்ற கேள்வி வாக்கியங்களின் கடைசியில் கேள்விக் குறி (?) இட்டு எழுதவேண்டும்.

3. மூன்ருவது வியப்பு உணர்ச்சியைக் காட்டுகிறது. இது போல உணர்ச்சியைத் தெரிவிக்கும் வாக்கியங்களின் இறுதியில் உணர்ச்சிக் குறி (!) இட்டு எழுதவேண்டும்.

11. கம்பர்

நம் நாட்டு இதிகாசங்கள் இரண்டு. ஒன்று இராமாயணம்; மற்றொன்று மகாபாரதம். இராமாயணம் இராம இலக்குமணர்களின் வரலாற்றைக் கூறுவது. இதனை முதன் முதலில் வால்மீகி என்னும் முனிவர் வடமொழியில் எழுதினார். இதனைத் தமிழில் முதன் முதலாக எழுதி உதவியவர் கம்பர்.

வால்மீகியால் இயற்றப்பட்டது வால்மீகி இராமாயணம். கம்பரால் இயற்றப்பட்டது கம்பராமாயணம். சொற்சுவை பொருட்சுவை ஆகியவற்றில் கம்பராமாயணம் மிகச் சிறந்து விளங்கும் ஒரு காவியமாகும்.

இதனைப் போற்றாத புலவரில்லை. இதனாலேயே 'கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்று நம் நாட்டைப் போற்றுகின்றார் பாரதியார்.

கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் இளமையிலேயே தம் பெற்றோரை இழந்து வறுமையால் வாடினார். இவர் தக்கோர் உதவியால் திருவெண்ணெய் நல்லூர் என்னும் ஊரை அடைந்தார்; அங்குச் சடையப்ப வள்ளலின் வள்ளல் தன்மையைக் கேள்வியுற்று அவரை யடைந்து, தம்மை ஆதரிக்க வேண்டினார். சடையப்பரும் கம்பரைத் தம் மகனுக்குத் தூக்குத் தூக்கியாக நியமித்து அவரை ஆதரித்து வந்தார்.

கம்பர் சடையப்ப வள்ளலின் புதல்வனோடு பள்ளிக்குச் சென்று வரலானார். கம்பரும் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கினார். இதனை யுணர்ந்த சடையப்ப வள்ளல் அவருக்கும் கல்வி யூட்டத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். கம்பர் சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் 'கல்வியில் பெரியவர் கம்பர்' என்று எல்லோரும் புகழுமாறு விளங்கினார். இரண்டாம் குலோத்துங்கன் என்னும் சோழ மன்னன் கம்பரது புலமையைக் கேள்வியுற்று, அவரை யழைத்துத் தம்மிடம் ஆஸ்தானப் புலவராக அமர்த்திக் கொண்டான். கம்பரது புகழ் எங்கும் பரவிற்று. எல்லோரும் கம்பரது புலமையைப் பலவாறு போற்றிப் புகழலாயினர்.

இங்ஙனம் இருக்கும் நாளில் கம்பரை வடமொழி இராமாயணக் கதையைத் தமிழில் இயற்ற வேண்டுமென்று குலோத்துங்க மன்னன் வேண்டினன். இவ் வேண்டுகோளுக்கு உறுதுணையாக இருந்தவர் சடையப்ப வள்ளலாவர். சடையப்ப வள்ளலின்

சொல்லை மறுக்க அஞ்சிய கம்பர் தேனினு மினிய செந்தமிழ்ப் பாக்களால் இராம கதையைச் செவ்வனே இயற்றி முடித்தார்.

முற்காலத்தில் நூல் இயற்றியவர் அந் நூலை அரங்கேற்ற வேண்டும். அரங்கேற்றினாலன்றி அந் நூலைப் புலவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரங்கேற்றுதலாவது, கற்று வல்ல புலவர்கள் கூடிய அவையில் நூலின் ஆசிரியர் தம் நூலைப் படித்துக் காட்டி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறி, நூலினை ஒப்புக்கொள்ளுமாறு செய்தல் ஆகும். இதற்குப் பின்னரே அந் நூல் புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். புலவர்கள் ஏற்றுக்கொண்ட நூலையே பொது மக்களும் போற்றிப் படிப்பர்.

கம்பரும் தம் நூலை அரங்கேற்ற விரும்பினர். ஒரு நல்ல நாளில் திருவரங்கத்தில் கம்பர் தம் நூலைக் கற்றுவல்ல புலவர் அவையில் அரங்கேற்றினார். நூலின் சுவையை அறிஞர் சுவைத்து அகமகிழ்ந் தனர்; கம்பரைக் 'கவிச் சக்கரவர்த்தி' என்று புகழ்ந்தனர்.

கம்பர் செய்ந் நன்றி மறவாதவர். இவர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலுக்குக் கைம்மாறு செய்யக் கருதினார்; தாம் இயற்றிய இராமாயணத்துள் தம்மை ஆதரித்த வள்ளலைப் பல விடங்களில் பாராட் டிப் புகழ்ந்தார். சடையப்பர் ஊனுடல் அழிந்தது; ஆயினும் அவரது புகழுடல் அழியவில்லை. கம்பரது இராமாயணம் இவ் வுலகில் உள்ள அளவும் சடை யப்பர் புகழ் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

கம்பராமாயணம் இன்று உலக காவியங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. கம்பர் உலகப் பெருங் கவிஞருள் ஒருவராகப் பாராட்டப்படுகிறார். "யாம்

அறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல், பூமிதனில் யாங் காணுமே பிறந்ததில்லை; உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை" என்று பாரதியார் கம்பர் பெருமையைப் பாடியுள்ளார். தம் கவிதையால் தாய் நாட்டிற்கு உலகப் புகழ் அளித்த பெரியவர் கம்பர். அவர் கவிகளைப் போற்றிப் படித்து, அப்புகழை நிலை நிறுத்த வேண்டுவது நமது கடமையாகும்.

இதிகாசங்கள்	காவியம்	ஆஸ்தானப்புலவர்
செய்நன்றி	இராமாயணம்	வறுமை
வேண்டுகோள்	கைம்மாறு	மகாபாரதம்
வள்ளல் தன்மை	பாக்கள்	ஊறுடல்
வடமொழி	தூக்குத் தூக்கி	செவ்வனே
புகழுடல்	சொற்சுவை	இலக்கணம்
அரங்கேற்றி	கவிதை	பொருட்சுவை
இலக்கியம்	அவையில்	உறுதுணை
புலமை	நல்ல நாளில்	கவிச் சக்கரவர்த்தி

கேள்விகள்

1. பாரதியார் தமிழ் நாட்டை எவ்வாறு போற்று கின்றார்?

2. கம்பர் பிறப்பு வளர்ப்பு வரலாறு யாது?

3. கம்பர் கல்வி கற்றது எவ்வாறு?

4. கம்பர் இராமாயணம் இயற்றிய காரணம் யாது?

5. கம்பர் இராமாயணத்தை எங்கு அரங்கேற்றினார்

6. கம்பரின் செய்ந்நன்றி மறவாமை எவ்வாறு தெரிகிறது.

7. கம்பர் சிறப்பு யாது?

பயிற்சி

1. திருவழுந்தூர் உள்ள இடத்தைத் தெரிந்து கொள்.

2. திருவள்ளுவர், இளங்கோவடிகள் போன்ற புலவர்களுடைய வரலாறுகளையும் படித்துத் தெரிந்து கொள்.

3. கம்பர் காலத்திலிருந்த வேறு புலவர்கள் சிலர் பெயர்களைத் தெரிந்து கொள்.

4. கம்பர் இயற்றிய வேறு நூல்களைக் கேட்டுத் தெரிந்து கொள்.

5. சொற்சுவை, பொருட்சுவை, நல்ல நாளில், வேண்டுகோள், செய்ந் நன்றி, கைம்மாறு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

6. பிரித்து எழுது: சொற்சுவை, பொருட்சுவை, கம்பராமாயணம், அரங்கேற்ற, ஊனுடல்.

7. எழுவாய் பயனிலை செயப்படுபொருள் கூறு:
அறிஞர் கம்பரைப் புகழ்ந்தனர்.
வேடன் கருவிகளை முறித்து எறிந்தான்.
சடையப்பர் கம்பனை ஆதரித்தார்.

8. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்து வாசி.
இரயிலைப் பாதுகாத்துச் செலுத்துபவர் ——— எனப்படுவார்.
இரயிலை நிறுத்த வேண்டுமானால்——காட்டுவர்.
ஜேம்ஸ் வாட் என்பவர் —— கண்டுபிடித்தார்.
——— நீராவியால் ஓடும் இயந்திரத்தைச்செய்து இரயிலை ஓடச் செய்தார்.
காஞ்சிபுரம் —— தலைநகரமாக இருந்தது.
கம்பனை —— ஆதரித்தார்.

9. சடையப்பர் ஊனுடல் அழிந்தது — உடன்பாடு.

புகழுடல்	அழியவில்லை	— எதிர் மறை.
போற்றிப்	படிப்பார்	— உடன்பாடு.
போற்றிப்	படியார்	— எதிர் மறை.



12. சிங்கமும் முயலும்

குறுமுயல் சிங்கந் தன்னைக்
    கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
    சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
    யாடி ஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
    விலங்கெலாம் ஒருங்கு கூடி, (1)

'ஆண் இளஞ் சிங்கமே! உன்
    அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா
    விதத் தினித் தினமொன் றாக

ணை உனக் களிப்போம்' என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்று
அருந்திஅங் கிருக்கும் நாளில், (2)

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
'இனி அது விடாது நம்மை;
எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து
வென்று நாம் உயர்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்குநற் புகழுண்' டென்றே, (3)

கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி
மன்னன், 'நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவ தென்? உரைநீ' என்று
மனந்தனிற் சினந்து கூற, (4)

'ஐய! நின் பசித்த வேளைக்
கடியனேன் வந்தேன்; அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித்தி ருந்தேன்;
பையவே சிங்கம் அங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யநின் பக்கல் வந்தேன்
சுவாமி!'' என் றிறைஞ்சி நிற்க, (5)

சிங்கம், 'நாம் அல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வா,' என்
றழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்த்த(து)
அதன்நிழல் உருவம் தோன்ற, (6)

தன் உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே உயிர் இழந்த
தென்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாம் என்
றின்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். (7)

கேள்விகள்

1. மிருகங்கள் சிங்கத்தோடு என்ன ஒப்பந்தம் செய்துகொண்டன?
2. கிழமுயல் சிங்கத்தைக் கொல்ல என்ன உபாயம் செய்தது?
3. சிங்கம் கிணற்றில் ஏன் பாய்ந்தது?
4. இக்கதையால் நீ அறிவது என்ன?
5. இதே நீதியை விளக்கும் வேறு கதை எது?

பயிற்சி

1. இப்பாட்டுக்களைப் படித்து மனப்பாடம் செய்.
2. இதில் கூறப்பட்டுள்ள கதையை உன் சொந்த வசனத்தில் எழுது.

3. இதை முயல் சொல்வதாகச் சொல்.

4. பொருள் தெரிந்துகொள்: செறியும், ஊன், அடவி, ஊண், எடுப்பு, உய்யும், வேழம், வெருவி, வெய்ய, பைய, முழை, துய்ய, பங்கம், புனம், துளங்கி, சத்துரு, ஈர்ந்தது.

5. ஒரே பொருள் உள்ள சொற்களைச் சொல்:
உண்டு, காடு, வினை, துரவு, வேழம், விலங்கு,
அடவி, அருந்தி, யானை, மிருகம், உபாயம்.

6.

ஒருமை	பன்மை
முயல் கொன்றது.	முயல்கள் கொன்றன.
மன்னன் வேண்டினன்.	மன்னர்கள் வேண்டினர்கள்.
வண்டி வந்தது.	வண்டிகள் வந்தன..

மேலே இடப்புறமுள்ள வாக்கியங்களில் எழுவாயும் பயனிலையும் ஒருமையாக உள்ளன. வலப்புறமுள்ள வாக்கியங்களில் எழுவாயும் பயனிலையும் பன்மையாக உள்ளன. ஆகவே ஒரு வாக்கியத்தில் எழுவாய் பயனிலை இரண்டும் எண்ணில் ஒத்திருக்கும்.

7. ஒருமை எழுவாய்களைப் பன்மையாக்கி இவ்வாக்கியங்களை மாற்றி எழுது:

சிங்கம் உயிர் இழந்தது.
நண்டு கொக்கை ஈர்ந்தது.
உடல் அழிந்தது.
வேடன் வேட்டைக்குப் புறப்பட்டான்.



13. நெசவுத் தொழில்

மக்கள் வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் இன்றியமையாத தேவைப் பொருள் களாகும். இவற்றைப் பெறுவதன் பொருட்டு மக்கள் பலவகைத் தொழில்களைச் செய்கின்றனர். பயிர்த் தொழில் செய்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துகொள்ளுகின்றனர். பருத்தியை விளைத்து நூல் நூற்றுப் பல வகை ஆடைகளை நெய்து உடுத் துக் கொள்ளுகின்றனர். இன்று நூற்றலும் நெசவும் பெரும்பாலும் இயந்திரங்களினால் செய்யப்படு கின்றன. ஆனால் ஆதி காலத்தில் மக்கள் கையினா லேயே இத்தொழில்களைச் செய்து வந்தனர்.

பண்டைக் காலத்து மக்கள் சாதாரணமாகப் பாய் நெய்யவும், கூடை முடையவும் தெரிந்திருந் தார்கள். துணி நெய்வதும் இவற்றைப் போன்ற தொரு தொழிலேயாகும். ஆனாலும் நெய்வதற்கான

இழைகளை நூற்கக் கற்பதற்கு முன் ஆடைகள் நெய்வது இயலாததாக இருந்தது.

பிறகு பருத்தியைக் கொண்டு நூல் நூற்று ஆடை நெய்யலாம் என்பதை மக்கள் அறிந்து கொண்டனர். எனவே அவர்கள் பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கி அதைக் கொண்டு மெல்லிய இழைகளைக் கையினாலேயே நூற்றார்கள். அவ்வாறு நூற்கப்பட்ட இழைகள் போதிய முறுக்கு இல்லாமல் இருந்ததுடன் கரடு முரடாகவும் இருந்தன.

பின்னர் கதிரைக் கொண்டு நூற்றால் விரைவாக நூற்க முடியும் என்பதை அறிந்தார்கள். அதனால் இவைகள் கரடுமுரடு இல்லாமல் சன்னமாகவும், உறுதியாகவும் இருக்கும் என்பதையும் உணர்ந்தார்கள். உடனே கதிரால் நூற்பது எங்கும் பரவத் தொடங்கியது.

பல ஆண்டுகளுக்குப் பிறகே இராட்டையினால் நூற்றால் மிகவும் வேகமாக நூற்க முடிவதோடு இழைகளும் நயமாக இருக்கும் என்பது தெரிய வந்தது. எனவே கைராட்டையினால் நூற்பது பிரபலமாயிற்று. கதிராலும் இராட்டையாலும் நூற்கத் தெரிந்த உடனே நெசவுத் தொழிலும் ஏற்பட்டது. மெல்லிய நூலைக் கொண்டு கையினால் நெய்வது மிகவும் கடினமாக இருந்தது. எனவே மக்கள் முயன்று கைத்தறியைக் கண்டு பிடித்தனர். கைத்தறியில் நெய்யப்பட்ட மிக மெல்லிய ஆடைகள் நம் நாட்டிலிருந்து நெடுநாள்கள் வரை வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

இக்காலத்தில் நூல் நூற்பது முதல் ஆடை நெய்வது வரை யாவும் இயந்திரத்தின் உதவியால் செய்யப் படுகின்றன. ஒரு மணி நேரத்தில் எத்தனையோ ஆயிரக் கணக்கான கஜம் துணியை இயந்திரங்கள்

நெய்து விடுகின்றன. இத்தகைய நெசவுத் தொழிற் சாலைகள் நம் நாட்டில் பல விடங்களில் உள்ளன. அவற்றுள் பம்பாய், ஆமதாபாத், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் முதலிய இடங்கள் மிகவும் முக்கிய மானவையாகும். தென்னாட்டில் கோயம்புத்தூரே நெசவுத் தொழிற்சாலைக்குப் பெயர் பெற்ற இடமாக விளங்கி வருகிறது.

இவ்வாறு இயந்திரங்களின் உதவியால் நூல் நூற் பது ஆடை நெய்வது முதலிய தொழில்கள் நடை பெறுவதால் அவற்றையே வாழ்க்கைத் தொழிலாகச் செய்து வந்த பலர் வேலையின்றி வறுமைக்கு ஆளாகி வருந்துவாராயினர்.

இவ்வுண்மையை நன்கறிந்த காந்தியடிகள் நாட் டில் வறுமையைப் போக்க ஒவ்வொருவரும் கையினால் நூற்றுக் கைத்தறியில் நெய்த ஆடைகளையே உடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இதனை வற்புறுத் தவே அவர் தாம் வகுத்த வார்தாக் கல்வித் திட்டத்தில் பயிர்த் தொழிலையும் நெசவுத் தொழிலையும் மூலத் தொழில்களாகச் சேர்த்துள்ளார்.

நாம் மகாத்மாவின் விருப்பத்திற்கு ஏற்பக் கையினால் நூற்று நெய்த கதர் ஆடைகளையே எப் பொழுதும் உடுத்த வேண்டும். அப்பொழுதுதான் நாடு செழிக்கும்; மக்களும் சுகமாக வாழ இயலும்.

உறைவிடம்	பிரபலம்	விளைத்து
இன்றியமையாத	தொழிற்சாலை	இயலாததாக
தேவைப்பொருள்	இயலும்	பெரும்பாலும்
இயந்திரங்கள்	இழைகள்	வெளிநாடுகள்
நயமாக	வாழ்க்கை	கைத்தறி

கேள்விகள்

1. மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத மூன்று தேவைப் பொருள்கள் யாவை?

2. ஆதி காலத்து மனிதனுக்கு ஏன் ஆடை நெய்வது இயலாததாக இருந்தது?

3. முதன் முதலில் நூற்புச் சாதனம் யாது?

4. வேகமாக நூற்பதற்கு ஏற்பட்ட சாதனம் யாது?

5. முதலில் கண்டுபிடிக்கப்பட்ட நெசவுக் கருவி யாது?

6. நம் நாட்டில் நெசவுத் தொழிற்சாலைகள் எங்கெங்கு உள்ளன?

7. நூற்பதும் நெய்வதும் இயந்திரங்களால் நடப்பதால் நம் நாட்டில் வறுமை உண்டானது ஏன்?

8. வறுமை நீங்க வழி கூறியவர் யார்? அவர் கூறியது என்ன?

பயிற்சி

1. உங்கள் ஊரில் கைத்தறி நெசவுத்தொழில் உண்டானால் அது செய்யப்படும் இடத்திற்குச் சென்று பார்.

2. உங்கள் ஊருக்கு அருகில் நெசவு ஆலை இருந்தால் சென்று பார்.

3. உங்கள் பாடசாலையில் நெசவுத் தொழில் கற்பிக்கப்பட்டால் நீயும் அதனைக் கற்றுக்கொள்.

4. பன்மை எழுவாய்களை ஒருமையாக்கி இவ்வாக்கியங்களை மாற்றி எழுது :

தொழிற்சாலைகள் உள்ளன.
வண்டிகள் நிற்கின்றன.
சிறுவர்கள் கற்கின்றனர்.

14. கடிதங்கள்

I

15, கடை வீதி,
ஈரோடு,
10–10–1951.

ஐயா,

என் அன்னையார்க்கு உடல் நலம் இல்லை என்று சென்னையிலிருந்து கடிதம் வந்துள்ளது. அவர் குணமடைய இன்னும் இரண்டு வாரங்கள் செல்லும் என்று வைத்தியர் கூறியிருக்கிறாராம். அவருக்கு உடனிருந்து பணி செய்ய அங்கு யாரும் இல்லை. ஆகவே என் மாமன் என்னை உடனே புறப்பட்டு வருமாறு வற்புறுத்தி எழுதியுள்ளார். அடுத்த வாரத்திலிருந்து நம் பாடசாலையில் விடுமுறை தொடங்குகிறது. ஆகையால் தாங்கள் தயைசெய்து இந்த ஒரு வாரத்திற்கு மட்டும் எனக்கு விடுமுறை கொடுத்து உதவுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
உங்கள் பணிவுள்ள மாணவன்,
மணிவண்ணன்,
(ஐந்தாம் வகுப்பு)

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு,
நகராண்மைக் கழக ஆரம்பப் பாடசாலை,
ஈரோடு.

II

10, கம்பர் தெரு,
சென்னை–17,
10–10–1951.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அன்பு கூர்ந்து கீழே குறிக்கப்பட்டுள்ள புத்தகங்களை அடுத்த தபாலிலேயே வி. பி. மூலமாக எனது விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன். உரிய விகிதப்படி கழிப்புத் தொகையைக் குறைத்து அனுப்பவும்.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள,
கபிலன்.

1. கோவை தமிழ் வாசகம்
   ஒன்று முதல் ஐந்து ... ஒவ்வொரு பிரதி
2. இளங்கோ இலக்கணம்
   (முதற் புத்தகம்) ... 1
3. இலக்கியச் சிறுகதைகள்
   (இரண்டாம் புத்தகம்) 1

தலைவர்,
ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி,
ஈரோடு.

III

10, கம்பர் வீதி,
சென்னை–17,
15–10–1951.

அன்புள்ள ஐயா,

நான் முன் கடிதத்தில் 'கோவை தமிழ் வாசகம்' ஒன்று முதல் ஐந்து புத்தகங்களில் ஒவ்வொரு பிரதியும், 'இளங்கோ இலக்கணம்' முதற் புத்தகம் ஒன்றும், 'இலக்கியச் சிறு கதைகள்' இரண்டாம் புத்தகம் ஒன்றும் எனக்கு அனுப்பி வைக்குமாறு எழுதியிருந்தேன். நீங்கள் அனுப்பிய கட்டில் நான் குறித்த புத்தகம் ஒன்று கூட இல்லை. வேறு ஆங்கிலப் புத்தகங்கள் ஏதேதோ இருந்தன. ஆகவே அவற்றை அப்படியே உங்களுக்குத் திருப்பியுள்ளேன். அவற்றைப் பெற்றுக் கொண்டு நான் குறித்த புத்தகங்களை உடனே அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
உங்கள் உண்மையுள்ள,
கபிலன்.

தலைவர்,
ஸ்டாண்டர்ட் டெக்ஸ்ட்புக் கம்பெனி,
ஈரோடு.

IV

15, கம்பர் வீதி,
சென்னை–17,
15–10–1951.

அன்பு மிக்க தந்தையீர்,

வணக்கம். நானும் மற்றவர்களும் இங்குச் சுகமாக இருக்கிறோம். உங்கள் கடிதம் கண்டு, அங்குள்ளவர்கள் நலம் அறிந்து மகிழ்ந்தேன். நான் ஒவ்வொரு விஷயத்திலும் உங்கள் அறிவுரைகளைப் பின்பற்றியே நடந்து வருகிறேன். நான் காலத்தை வீணாக்காமல் பாடங்களைப் படித்துக் கொண்டும், வேறு பயனுள்ள காரியங்களைச் செய்து கொண்டும் இருக்கிறேன். நீங்கள் எழுதியபடியே எனது உடல் நலத்தில் கண்ணுங் கருத்துமாகவே இருக்கிறேன். நாள்தோறும் மாலையில் விளையாடிக் கொண்டும், விளையாட்டு முடிந்ததும் சிறிது நேரம் செய்திப் பத்திரிகை படித்துக் கொண்டும் வருகிறேன். நானும் வேறு சில மாணவர்களும் சேர்ந்து ஒரு வாசகசாலை ஆரம்பித்திருக்கிறோம். முக்கியமான தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளும், வாரப் பத்திரிகைகளும் வரவழைக்கிறோம். அந்த வாசகசாலை எங்களுக்கு மிகவும் உபகாரமாக இருக்கிறது. நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்துகொண்டும், குறித்த நேரத்தில் பாடசாலை சென்றுகொண்டும் இருக்கிறேன். ஆசிரியர்கள் என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார்கள். மாமனும் மாமியும் என்னை மிகவும் அன்பாக நடத்துகிறார்கள்.

நான் இப்போது புதிய புத்தகங்கள் சில வாங்க வேண்டும். அன்றியும் வாசக சாலைக்கும் எனக்

குரிய பங்குத் தொகையைச் செலுத்த வேண்டும். என்னுடைய சட்டைகளும் கிழிந்து விட்டன. ஆகவே நீங்கள் அன்பு கூர்ந்து இவை எல்லாவற்றிற்குமாகப் பதினைந்து ரூபாய் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

பாட்டனார் பாட்டியார்க்கும், அன்னையார்க்கும் எனது வணக்கத்தையும், தம்பிக்கும் தங்கைக்கும் எனது அன்பையும் தெரிவிக்கவும்.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள மகன்,
கபிலன்.

திரு. இராமசாமி அவர்கள்,
10, பெருமாள் கோவில் தெரு,
சேலம்.

ஒன்றுகூட	அன்புகூர்ந்து	செய்திப் பத்திரிகை
ஏதேதோ	விதிப்படி	வாசகசாலை
குணம் அடைய	அறிவுரைகள்	பிரியமாக
பணிசெய்ய	பின்பற்றி	அன்பாக
பயனுள்ள	உடல் நலம்	பங்குத்தொகை

பயிற்சி

1. இக்கடிதங்களை மவுனமாகப் படி.
2. இவைபோன்ற கடிதங்களை எழுதிப் பழகு.
3. மாணவர் சங்கக் கூட்டத்திற்கு அழைப்புக் கடிதம் ஒன்று எழுது.
4. உங்கள் பாடசாலையில் நடந்த ஒரு கொண்டாட்டத்தை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

5. திருத்தி வாசி:
குதிரைகள் மேய்து கொண்டிருந்தது.
மன்னவன் ஆண்டு வந்தாள்.
மக்கள் தொழில்களைச் செய்கின்றன.
வண்டிகள் நிற்கின்றனர்.

6.

இடம்	ஒருமை	பன்மை
தன்மை:	நான் இருக்கிறேன்.	நாம் இருக்கிறோம். நாங்கள் இருக்கிறோம்.
முன்னிலை:	நீ சொன்னாய்.	நீர் சொன்னீர். நீங்கள் சொன்னீர்கள்.
படர்க்கை:	அவன் நின்றான். அவள் நின்றாள். அது நின்றது.	அவர்கள் நின்றார்கள். அவை நின்றன.

பேசுபவன் தன்மை. முன் நின்று கேட்பவன் முன்னிலை. இவர்கள் இருவரும் அல்லாத பேசப்படும் பொருள் படர்க்கை. ஆகவே இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

7. கம்பர் பிறந்தார். இது ஒரு வாக்கியம். இதில் பிறந்தார் என்பது பயனிலை. கம்பர் என்பது எழுவாய். இதில் செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு சில வாக்கியங்கள் செயப்படுபொருள் இல்லாமலும் வருவது உண்டு.

8. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எதிர்மறை வினைகளை உடன்பாட்டு வினைகளாக்கி வாக்கியங்களை மாற்றி அமைத்து வாசி:

(1) சீனப் பெண்களால் வேகமாக நடக்க முடியாது.
(2) பெண்புறு உயிர்வாழ விரும்பவில்லை.
(3) மக்கள் கல்வியறிவு பெற்றாலொழிய இச் சீர்கேடுகளைத் தடுக்க முடியாது.



15. மிருகக் காட்சிச் சாலை

மணி: அப்பா! இன்று ஞாயிற்றுக் கிழமை. இன்று எனக்குப் பாடசாலை இல்லை. என்னை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துப் போகிறீர்களா?

மங்களம்: நானும் காட்டு மிருகங்களைப் பார்க்க வேண்டும். என்னையும் அழைத்துப் போங்கள், அப்பா!

தந்தை: எனக்கும் இன்று விடுமுறைதான்; வாருங்கள், போவோம்.

மணி: மிருகக் காட்சிச் சாலையில் எல்லாக் காட்டு மிருகங்களும் இருக்குமோ, அப்பா?

தந்தை: ஆம், சிங்கம், புலி, கரடி, யானை, கங்காரு, மான், ஒட்டகம் எல்லாம் இருக்கும். இன்னும் குரங்குகள், பறவை வகைகள் முதலியவையும் அங்கு வைத்திருக்கிறார்கள்.

மணி : நேற்றுப் பாடசாலையில் காட்டு மிருகங்களைப் பற்றிய பாடம் நடந்தது. ஆசிரியர் அவற்றையெல்லாம் பற்றிச் சொன்னார்.

தந்தை : இதுதான் மிருகக் காட்சிச் சாலை. அதோ எழுதியிருக்கிறது, பாருங்கள். வாருங்கள், உள்ளே போகலாம்.

மங்களம் : அப்பா, அங்கே மக்கள் கூட்டமாக இருக்கிறார்களே, அவர்கள் என்ன பார்க்கிறார்கள் ?

தந்தை : அங்குச் சிங்கம் இருக்கிறது. நாமும் முதலில் அங்குப் போய்ச் சிங்கத்தைப் பார்க்கலாம், வாருங்கள்.

மணி : ஆம், அப்பா ! இரும்புக் கூண்டுக்குள் இரண்டு சிங்கங்கள் இருக்கின்றன !

தந்தை : ஒன்று ஆண் சிங்கம் ; மற்றொன்று பெண் சிங்கம். ஆண் சிங்கத்திற்குக் கழுத்தில் பிடரி மயிர் உண்டு. பிடரி மயிர் இல்லாதது பெண் சிங்கம். சிங்கம் எவ்வளவு கம்பீரமாக இருக்கிறது, பாருங்கள். சிங்கம் கம்பீரமான மிருகம். அதை மிருக ராஜன் என்று சொல்வார்கள். சிங்கம் காட்டில் வாழும் பிராணி. அது மாமிசம் தின்னும். யானை போன்ற பெரிய மிருகங்களையும் சிங்கம் அடித்துக் கொன்றுவிடும். அதன் காலில் நீண்டு வளைந்த நகங்கள் இருக்கின்றன, பாருங்கள். அது நகங்களால் மிருகங்களின் உடலைக் கிழிக்கும். பெண் சிங்கம் கர்ஜிக்கிறது, பாருங்கள்.

மணி : ஏன் அப்பா, சிங்கங்களைக் கூட்டில் அடைத்து வைத்திருக்கிறார்கள் ?

தந்தை : சிங்கம் கொடிய மிருகம். அவற்றை வெளியில் விட்டால் எல்லோரையும் கொன்றுவிடும்.

அதனால் அவற்றைக் கூண்டில் அடைத்து வைத்திருக்கிறார்கள்.

மங்களம்: சிங்கத்தைப் பார்க்கப் பயமாக இருக்கிறது. அது கர்ஜிக்கும்போது இடி இடிப்பது போல் இருக்கிறது. என்றாலும் அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது!

தந்தை: இந்தக் கூண்டில் பாருங்கள். இது புலிக் கூண்டு. இதில் உள்ள புலியைப் பாருங்கள்.

மங்களம்: ஆம் அப்பா! எங்கள் பாடப் புத்தகத்தில் புலியின் படம் இருக்கிறது. இது அந்தப் படத்தில் பார்த்த புலியைப் போலவே இருக்கிறது. இதன் பார்வையில் எவ்வளவு கொடுமை, அப்பா!

தந்தை: இது வேங்கைப் புலி. புலியும் காட்டில் வாழும் கொடிய பிராணி. இதன் உடம்பில் கோடுகள் இருக்கின்றன, பாருங்கள். புலியும் மாமிச பட்சிணி. இதுவும் சிங்கத்தைப் போலவே மற்ற மிருகங்களைக் கொன்று தின்னும். மணி, சிங்கத்திற்கும் புலிக்கும் என்ன வித்தியாசம் காண்கிறாய், சொல்.

மணி: சிங்கத்திற்குப் பிடரி மயிர் இருக்கிறது. புலிக்குப் பிடரி மயிர் இல்லை. சிங்கம் கம்பீரமான தோற்றம் உடையது. புலியின் தோற்றம் அப்படி இல்லை. இது கொடுமையாகத் தோன்றுகிறது.

மங்களம்: அப்பா, சிங்கத்திற்குப் பலம் அதிகமா, புலிக்குப் பலம் அதிகமா? சிங்கமும் புலியும் சண்டையிட்டால் எது வெல்லும்?

தந்தை: சிங்கம் புலி இரண்டிலும் எதற்குப் பலம் அதிகம் என்று திட்டமாகச் சொல்ல முடியாது. பொதுவாகச் சிங்கத்தைக் காட்டிலும் புலிக்கே பலம் அதிகம் என்று சொல்வார்கள். சிங்கமும் புலியும்

சண்டை இட்டால் பெரும்பாலும் புலியே வெல்லு மாம்.

மணி: அப்பா, அந்தக் கூட்டில் கரடி என்று எழுதியிருக்கிறது. அங்குப் போய்ப் பார்க்கலாமா?

தந்தை: வாருங்கள், போவோம்.

மங்களம்: அப்பா, நேற்று ஒருவன் தெருவில் கரடி கொண்டு வந்திருந்தான். அவன் கொண்டு வந்த கரடி போலவே இருக்கிறது, அப்பா இது.

தந்தை: கரடியின் உடம்பில் மயிர் அடர்ந் திருப்பதைப் பாருங்கள்; கரடியின் கால்களில் கூர்மையான நகங்கள் உள்ளன. இது பார்வைக்குப் பன்றியைப் போல இருக்கிறது அல்லவா? கரடியும் மிக்க கொடுமை வாய்ந்தது. இது மக்களையும் மிரு கங்களையும் கடித்துக் கொன்றுவிடும். ஆனால் கரடி மாமிசம் தின்னாது. புற்றில் உள்ள ஈசல்களைத் தின் பதில் கரடிக்கு விருப்பம் அதிகம்.

மணி: அது என்ன அப்பா, வெள்ளையாக இருக்கிறதே!

தந்தை: அது வெள்ளைக் கரடி. இது சாதா ரணக் கரடியைக் காட்டிலும் மிக்க கொடுமை வாய்ந் தது. இது குளிர் மிகுந்த பனிப் பிரதேசங்களில் வசிக்கும்.

மணி: ஆம், அப்பா. நான் வெள்ளைக் கரடி யைப்பற்றிப் பூகோளத்தில் படித்திருக்கிறேன். எஸ்கிமோக்கள் வாழும் பிரதேசத்தில் வெள்ளைக் கரடி அதிகமாம். அங்கு ஸீல், வால்ரஸ் என்னும் வேறு பிராணிகளும் உள்ளனவாம். அவை இங்கு இருக் கின்றனவா, அப்பா?

தந்தை: அவை இங்கு இல்லை. அதோ காட்டுப் பன்றி இருக்கிறது, பாருங்கள்.

மங்களம் : இது ஊரில் நாம் பார்க்கும் பன்றியைப் போலவேதான் இருக்கிறது. ஆனால் உருவத்தில் பெரியது. இது நம்மைப் பார்த்து உறுமுகிறது பாருங்கள், அப்பா!

தந்தை : காட்டுப் பன்றி மிகவும் கொடியது. இது காடுகளில் வசிக்கும். மனிதரைக் கண்டால் உடனே மேலே பாய்ந்து கொன்று விடும். இதன் வாயில் உள்ள கோரைப் பற்களைப் பாருங்கள்.

மங்களம் : அப்பா, அதோ யானை பார் அப்பா! மிருகங்களில் பெரியது யானை தானே அப்பா?

தந்தை : ஆம். யானைதான் மிருகங்களில் பெரியது. யானையும் காடுகளிலேயே வசிக்கும். யானை தழை தின்னும். யானைக்குத் துதிக்கையும் தந்தங்களும் உண்டு; மற்றப் பிராணிகளுக்கு அவை இல்லை. யானைத் தந்தம் விலையுயர்ந்த பொருள். அதனால் பல பொருள்கள் செய்வார்கள். நம் நாட்டில் யானை எங்கு அதிகமாக இருக்கிறது, தெரியுமா?

மணி : தெரியும் அப்பா. மலையாளப் பிரதேசத்தில் உள்ள காடுகளில் யானைகள் அதிகமாக உள்ளன.



மங்களம் : யானை துதிக்கையை உயர்த்திக் கொண்டு பிளிறுகிறது பாருங்கள், அப்பா!

தந்தை: அதோ, ஒட்டகம் இருக்கிறது, பாருங்கள். ஒட்டகம் காட்டில் வாழும் பிராணி.



யானையைப் போலவே அதுவும் சாகபட்சிணி. அதன் உருவம் எவ்வளவு விகாரமாக இருக்கிறது!

மங்களம்: ஆம் அப்பா. அதற்குக் கழுத்து எவ்வளவு நீளம்! உடம்பில் எத்தனைக் கோணல்கள்! அதன் கால்கள் அதிக உயரம்; தலை மிகவும் சிறியது. அதன் முதுகில் மேடாக இருக்கிறதே, அது என்ன அப்பா?

தந்தை: அதற்கு முசுப்பு என்பது பெயர். அது ஒட்டகம் ஒன்றுக்கே உண்டு. மற்றப் பிராணிகளுக்கு இல்லை.

மணி: ஒட்டகத்திற்குத் தானே 'பாலைவனக் கப்பல்' என்பது பெயர்?

தந்தை: ஆம், பாலைவனவாசிகள் ஒட்டகங்களை வளர்ப்பார்கள். ஒட்டகங்கள் அவர்களுக்கு வாகனமாக உபயோகப்படுகின்றன.

மங்களம்: அப்பா, அது என்ன? அதன் உடம்பெல்லாம் வரிவரியாக இருக்கிறதே!

தந்தை: அது வரிக் குதிரை.



மணி: அதோ மான்கள் மேய்கின்றன பாருங்கள், அப்பா!

தந்தை: அவை புள்ளி மான்கள். அவற்றின் கொம்பைப் பாருங்கள்.

மங்களம்: எவ்வளவு நீளமான கொம்புகள்! வால் மாத்திரம் மிகவும் குட்டையாக இருக்கிறது. மான் பார்வைக்கு மிகவும் அழகாக இல்லையா அப்பா!

மணி: அப்பா, அதோ பாருங்கள், ஒரு விநோத மான பிராணி! அது என்ன அப்பா?

தந்தை: அது கங்காரு என்னும் பிராணி. அதன் வயிற்றின் அடியில் பாருங்கள், பையில் குட்டியைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதன் உடல்

முள்ளம் பன்றியின் உடல் போல முட்களால் மூடப் பட்டிருப்பதைப் கவனியுங்கள். அதன் முகத்தைப் பார்த்தீர்களா? மூஞ்சூற்றின் முகம் போன்று இருக் கிறது அல்லவா?

மணி: இந்தப் பிராணி எங்கிருக்கிறது, அப்பா?

தந்தை: ஆஸ்திரேலியா என்னும் தேசத்தில் இருக்கிறது. நம் நாட்டில் இது போன்ற பிராணி இல்லை.

மங்களம்: அப்பா, அதோ பாருங்கள், எத்தனை வகையான குரங்குகள்!

மணி: வாலில்லாத குரங்கு கூட இருக்கிறது அப்பா! அந்தக் கருங்குரங்கைப் பாருங்கள், எப்படி இருக்கிறது? அது தாவித் தாவி வேடிக்கை யெல்லாம் செய்கிறது!

மங்களம்: அப்பா, அந்தக் குரங்கைப் பாருங் கள். அது வயிற்றில் குட்டியைக் கட்டிக்கொண்டு கிளைக்குக் கிளை தாவுகிறதே!

தந்தை: குரங்குகளை யெல்லாம் பார்த்துவிட் டீர்களா? வாருங்கள், பறவைகள் உள்ள இடத்திற்குப் போவோம்.

மங்களம்: அப்பா, அது என்ன பறவை! அவ்வளவு பெரியதாக இருக்கிறது!

தந்தை: அது நெருப்புக்கோழி. அது காடு களில் வசிக்கும்.

மங்களம்: அது நெருப்பைத் தின்னுமோ, அப்பா?

தந்தை: ஆம். அது தணல் கட்டிகளைத் தின்னும்; சிறிய கூழாங் கற்களையும் விழுங்கிவிடும்.

மணி: எத்தனை வகையான பறவைகள் வைத்

திருக்கிறார்கள் பாருங்கள், அப்பா! ஒவ்வொன்றிலும் எத்தனை விதங்கள்!

மங்களம் : அதோ பாருங்கள் அப்பா, விதம் விதமான கிளிகள் இருக்கின்றன!

தந்தை : பச்சைக்கிளி, வெள்ளைக்கிளி, சிவப்புக்கிளி, பஞ்சவர்ணக்கிளி எல்லாம் இருக்கின்றன.

மங்களம் : அப்பா, அந்தப் பஞ்சவர்ணக்கிளி எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்!

தந்தை : எல்லாம் பார்த்தாகி விட்டது. வாருங்கள், வீட்டுக்குத் திரும்புவோம்.

மங்களம் : இந்த மிருகக் காட்சிச் சாலையை யார் வைத்து நடத்துகிறார்கள்?

தந்தை : பொது மக்களின் நன்மைக்காக அரசாங்கத்தார் வைத்து நடத்துகிறார்கள். இதற்காகப் பல ஆயிரக் கணக்கில் பணம் செலவாகிறது.

காட்சி	கொடுமை	பாய்ந்து
சாகபட்சிணி	தாவுதல்	பட்சிணி
வித்தியாசம்	முசுப்பு	மற்றொன்று
கூட்டமாக	திட்டமாக	விதம் விதமான
பஞ்சவர்ணம்	பிடரிமயிர்	முடியாது
வரி வரியாக	நடந்து	கம்பீரமாக
அடர்ந்து	நீளமாக	நன்மை
அடைத்து	சாதாரண	தாங்கிக் கொண்டு
செலவு	அரசாங்கத்தார்	மூஞ்சூறு

கேள்விகள்

1. காட்சிச் சாலையில் கண்ட மிருகங்கள் யாவை?
2. அவர்கள் காட்சிச் சாலையில் என்னென்ன பறவைகளைக் கண்டார்கள்?

3. சிங்கம் எப்படிப்பட்ட மிருகம்? அதை என்ன வென்று சொல்வார்கள்?

4. சிங்கத்திற்கும் புலிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

5. வெள்ளைக் கரடி எங்கு வசிக்கும்?

6. மற்றப் பிராணிகளுக்கு இல்லாமல் யானைக்கு மட்டும் உள்ள உறுப்பு எது?

7. ஒட்டகத்திற்கு வழங்கும் வேறு பெயர் என்ன?

8. கங்காரு எந்த நாட்டில் இருக்கிறது?

9. மிருகக் காட்சிச் சாலையை யார் நடத்துகிறார்கள்? ஏன்?

பயிற்சி

1. மிருகக் காட்சிச் சாலை உள்ள இடத்தைச் சொல்.

2. அதற்குப் போகும் மார்க்கத்தைச் சொல்.

3. மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று பார்.

4. அங்குள்ள ஒவ்வொரு பிராணியைப் பற்றியும் தெரிந்துகொள்.

5. அவற்றைக் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்.

6. மாமிச பட்சிணி, வெல்லும், குளிர், உயர்த்தி, அழகு, செலவு—இவற்றிற்கு எதிர்ச் சொற்கள் சொல்.

7. கீழே கோடிட்ட இடங்களில் எதிரில் தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானதை வைத்து வாசி:

சிங்கத்தை —— என்பர். (மிருகராஜன், பாலைவனக் கப்பல்)

புலி —— ஆகும். (மாமிச பட்சணி, சாகபட்சணி)

கங்காரு —— பிராணி. (விநோதமான, விகாரமான)

—— கம்பீரமான தோற்றம் உடையது. (சிங்கம், புலி)

—— முதுகில் முசுப்பு உண்டு. (ஒட்டகத்திற்கு, யானைக்கு)

16. புத்தர்

உலகத்தில் தருமம் குறைந்து பாவம் மிகும் காலங்களில் கடவுள் அருளால். பெரியோர் பலர் தோன்றி அறநெறியை நிலைநிறுத்துவர். அவ்வாறு தோன்றும் பெரியோர் அவதார புருஷர் என்று மக்களால் பாராட்டப் பெறுவர். புத்தரும் அத்தகைய அவதார புருஷரே யாவார். புத்தரது கொள்கைகளைப் பின்பற்றி நடப்பவர் புத்த மதத்தினர் ஆவர். புத்த மதம், சீனு, ஜப்பான், நேபாளம், திபெத், பர்மா, இலங்கை முதலிய நாடுகளில் பரவியுள்ளது. நம் நாட்டிலும் அம்மதத்தினர் சிலர் உளர்.

வட இந்தியாவில் கபிலவாஸ்து என்னும் நகரத்தில் சுத்தோதனர் என்பவர் அரசு செலுத்தி வந்தார். அவருக்கு நெடுங்காலமாக மகப்பேறு இல்லை. பிறகு கடவுளருளால் ஒரு குழந்தை பிறந்தது. அச்செல்வக் குழந்தையே புத்தர் என்னும் பெரியார். சுத்தோதனர் அக்குழந்தைக்குச் சித்தார்த்தன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தார். தக்க வயதில் யசோதரை என்பாளை அவருக்கு மணம் புரிவித்தார். சித்தார்த்தர் தம் மனைவியோடு பத்து ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினார். ஆயினும் அவர் உள்ளம் இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கவில்லை. அவர் நாட்டில் மக்கள் வறுமையினாலும், பிணியினாலும் துன்புறுவதைக் கண்டார். அவர் மனம் மிக்க துன்பத்தை அடைந்தது; அதனை நீக்க வழி கண்டுபிடிப்பதில் கருத்துக் கொண்டார்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் அவர் ஒருநாள் முதியவன் ஒருவனையும், நோயாளி ஒருவனையும், பிணம் ஒன்றினையும் கண்டார். அப்பொழுது உலக இன்பங்களை வெறுத்துத் துறவியாதலே இன்பத்தை அடையும் வழியென்பது அவர் மனத்தில் தோன்றியது. சிறிது காலத்தில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான்.

பிறகு ஒரு நாள் இரவில் தம் மனைவியும், குழந்தையும் தூங்குகையில் அவர் அரண்மனையிலிருந்து புறப்பட்டு வெளிச் சென்று துறவியானார். அவர் முதன் முதலில் மகததேசம் சென்று அங்குக் குகைகளில் தங்கித் தவம்புரியும் முனிவர்களைக் கண்டார்; அவர்களிடம் வைதிகமதக் கொள்கைகளைக் கற்றறிந்தார்; பின்னர் உருவேலா என்ற வனத்தில் சென்று கடுந்தவம் புரிந்தார். ஒரு நாள் அவர் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்ததினால் தவம் புரிதலை விட்டொழித்தார்.

பிறகு சித்தார்த்தர் பல இடங்களுக்குச் சென்று பிச்சை வாங்கி உண்டு சில நாட்கள் கழித்தார். அவர் ஒரு நாள் ஓர் போதி மரத்தடியில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தார். சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. 'ஒருவன் அறவழி நடந்து ஆசைகளை ஒழிப்பானாயின், அவன் உலகத்தில் துன்பங்களை அடையாதிருக்கலாம்' என்னும் உண்மை அவர் உள்ளத்தில் தோன்றியது. அதன் பின்னரே அவர் புத்தர் என வழங்கப் பெற்றார்.

இவ்வாறு புதிய வழியைக் கண்ட புத்தர் அவ் விடத்தினின்று போய்க் காசியை அடைந்தார்; அங்குத் தாம் கண்ட கொள்கைகளைப் பலருக்கு அறிவித்தார். பலர் அதனை ஏற்றுக்கொண்டு அவருடைய சீடர்களானார்கள். அவர்களுக்குப் புத்தர் தம் கொள்கைகளை நன்கு போதித்து, பலவேறு இடங்களுக்கு அவர்களை அனுப்பி, அவற்றை மக்களுக்கு விளங்க அறிவிக்குமாறு செய்தார். பிறகு அவர் அவ்விடம் விட்டு நீங்கி உருவேலா என்னும் வனம் சென்று அங்குள்ள முனிவர்களுக்குத் தம் கொள்கைகளைப் போதித்தார். அவர்களும் அவர் மதத்தைப் பின்பற்றினர்.

அதன்பின், புத்தர் மகத தேசத்திற்குச் சென்றார். அதனை ஆண்ட அரசன் புத்தர் வருகையை அறிந்தான். அவன் தன் பரிவாரங்களுடன் எதிர் சென்று வரவேற்று அவரை அழைத்துப் போனான்; அவரும் அவர் சீடர்களும் வாழ்ந்திருத்தற் கேற்ற மாளிகை ஒன்றை அமைத்துக் கொடுத்தான். இவ்வாறு புத்தருக்கு அரசன் சிறப்புச் செய்யவே, அதனை யறிந்த குடிமக்கள் அவர்பால் மிக்க பக்தி கொண்டனர்.

புத்தர் அங்குத் தங்கியிருந்த நாட்களில் வைகறை

யில் நீராடிச் சீடர்களுக்கு உபதேசம் செய்வார்; பின்னர் நண்பகற் பொழுதில் சீடர்களுடன் பிச்சைக்குச் செல்வார். ஒரு மனையின் முன் சிறிது நேரம் நிற்பதும், அவர்கள் பிச்சையிட்டால் ஏற்பதும், இன்றேல் ஒன்றும் பேசாது அயல் வீட்டிற்குச் செல்வதும் அவருடைய வழக்கம். புத்தர் அங்கு இருக்கும் காலத்தில், ஒருநாள் தம் தந்தையைக் காணச் சென்ற போது அவர் தாயார் தம்மையும் துறவற நிலையிற் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினார். புத்தர் அவருக்குத் துறவற நிலையிற் சேர அனுமதி கொடுத்தார்.

பின்னர் புத்தர் பிறநாடுகளுக்குச் சென்றார்; அங்கெல்லாம் தம் கொள்கைகளைப் பரப்பி வருகையில் தம் புதல்வனையும் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டு அவனுக்கு உபதேசம் செய்தார். அவ்வுபதேசங்கள் 'மகா ராகுல சூத்திரம்' என்னும் பெயருடன் வழங்குகின்றன. புத்தர் ஜாதிமத வேறுபாடு கருதாது எல்லோரையும் சமமாகக் கருதித் தம் மதத்தில் சேர்த்துக் கொண்டார்; எல்லா உயிர்களிடத்தும் பேரருள் உடையவராய் விளங்கினார். இக்காரணங்களால் ஆயிரக்கணக்கான மக்கள் அவர் மதத்தைத் தழுவலாயினர். புத்தமதம் இந்தியாவின் எல்லைகளைக் கடந்து வெளிநாடுகள் பலவற்றிலும் பரவியது.

புத்த மதத்தின் முக்கியமான கொள்கைகள் தன்னடக்கமும், தன்னைச் சீர்திருத்தலுமே ஆகும். அம்மதம் அன்பையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது. உயிர்களுக்குள் வேற்றுமை கருதாமல் எல்லாவற்றினிடமும் அன்பு செலுத்துவதும், நல்லொழுக்கத்தில் ஒழுகுவதுமே அம்மதத்தின் முடிவான நோக்கங்கள். எவ்வுயிரையும் துன்புறுத்த

லாகாது; பிறர் பொருளைக் கவரலாகாது; பொய் சொல்லலாகாது; கள் உண்ணல் கூடாது; தீயொழுக்கத்தில் ஒழுகலாகாது; பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்னும் இவையே புத்தர் போதித்த ஒழுக்க முறைகளாகும்.

புத்தர் உலகத்திற்கு வழிகாட்டிய உத்தமப் பெருமக்களுள் தலை சிறந்தவர். அவர் உலகுயிர்களின் துன்பத்தைப் போக்கி இன்பம் செய்யவே பாடுபட்டார். அவருடைய போதனைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் இன்ப வாழ்வு பெறுவர் என்பதில் ஐயமில்லை.

பெரியோர்	ஈடுபட்டு	ஞானோதயம்
அறநெறி	பிணி	அறவழி
அவதார புருஷர்	முதியவன்	பரிவாரங்கள்
புத்த மதம்	அரண்மனை	துறவறம்
வட இந்தியா	கொள்கைகள்	பேரருள்
மகப்பேறு	வளம்	தன்னடக்கம்
மணம்	கடுந்தவம்	அடிப்படையாக
இல்வாழ்வு	சிந்தனை	கீழ்ப்படிந்து

கேள்விகள்

1. புத்த மதம் பரவியுள்ள நாடுகள் யாவை?
2. புத்தருடைய இளமைப் பெயர் யாது?
3. புத்தருக்கு உலக வாழ்க்கையில் வெறுப்புண்டானது எவ்வாறு?
4. புத்தருக்கு உண்டான ஞானோதயம் யாது?
5. முதன் முதலில் புத்த மதத்தில் சேர்ந்தவர்கள் யார்?
6. புத்த மதத்தில் பலர் சேரக் காரணம் என்ன?

7. புத்த மதத்தின் முக்கியக் கொள்கைகள் யாவை?
8. புத்தர் உபதேசித்த ஒழுக்க முறைகள் யாவை?

பயிற்சி

1. புத்தருடைய முழு வரலாற்றையும் படித்துத் தெரிந்து கொள்.

2. முகம்மது நபி, ஏசுநாதர், இராமகிருஷ்ணர், காந்தியடிகள் ஆகியோருடைய வரலாறுகளையும் படித்துத் தெரிந்து கொள்.

3. மணம் - திருமணம், வாசனை—இவ்வாறு இரு பொருள் தரும் சொற்களைக் குறித்துக்கொள்.

4. பொருள் கூறு: பிணி, வனம், அறம், ஞானம்.

5. அவதார புருஷர், அறநெறி, இல்வாழ்க்கை, கடுந்தவம், அடிப்படையாக, கீழ்ப்படிந்து, பரிவாரங்கள்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

6. எதிர்ச் சொல் கூறு: அறம், முதியவன், துறவறம்.

7. பிரித்து எழுது: தன்னடக்கம், ஞானோதயம், நல்லொழுக்கம்.

8. குழந்தை பிறந்தது.
சிங்கங்கள் இருக்கின்றன.
இன்ப வாழ்வு பெறுவர்.

இவ்வாக்கியங்களில் பிறந்தது என்னும் வினைச்சொல் முன் நடந்ததைக் காட்டுகிறது. இது இறந்த காலம்.

இருக்கின்றன என்னும் வினைச் சொல் இப்பொழுது நடந்துகொண்டிருப்பதைக் காட்டுகிறது. இது நிகழ் காலம்.

பெறுவர் என்னும் வினைச்சொல் இனி நடக்கப் போவதைக் காட்டுகிறது. இது எதிர்காலம்.

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலங்

கள் மூன்று



17. ஔவையார் தூது

காட்சி 1

இடம் : காஞ்சிநகர், அரண்மனை.

காலம் : காலை.

உறுப்பினர் : தொண்டைமான், ஔவையார்.

(தொண்டைமான், ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். வாயிற் காவலன் வருகின்றான்.)

வாயிற் காவலன் : அரசர் பெருமானே! அருந் தமிழ்ப் புலமை அம்மையார் ஒருவர் உங்களைக் காண வேண்டி வாயிலில் வந்துள்ளார். அவர் பெயர் ஔவை யார் என்றார்.

தொண்டைமான்: ஔவையாரா! விரைந்து சென்று வர விடு.

(அரசன் எழுந்து எதிர்கொண்டு வருகிறான்.)

செந்தமிழ்ச் செல்வியீர், வருக! நும் வரவு நல்வரவாகுக! உமது பெரும் புலமையையும் அரசியல் அறிவுத் திறத்தையும் புலவர் பலர் புகழ்ந்து கூறக் கேட்டு மகிழ்ந்துள்ளேன். உம்மைக் காணவேண்டும் என்னும் அவா எனக்கு மிக்கிருந்தது. அது இன்றே கை கூடியது. வந்து இருக்கையில் அமருங்கள்.

(அரசனும் ஔவையாரும் ஆசனங்களில் அமர்கின்றனர்.)

ஔவையார்: தொண்டை நாட்டு மன்னரே, உமது செங்கோல் ஆட்சியைப் பற்றியும், உமது வீரமும் ஈகையுமாகிய விழுமிய குணங்களைப் பற்றியும், தமிழ் மொழிப் பற்றைப் பற்றியும், நானும் நிரம்பக் கேள்வியுற்றிருக்கிறேன். உம்மையும் உமது நாட்டையும் காண வேண்டும் என்னும் அவா எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. அதற்குரிய சமயம் இப்பொழுதே வாய்த்தது.

தொண்டைமான்: அம்மையீர், உம்மை வரவேற்று உபசரிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது பற்றி மிகவும் பெருமை அடைகிறேன். உங்களுக்கு என் அரண்மனைச் சிறப்பையெல்லாம் காட்ட விரும்புகின்றேன்.

ஔவையார்: நான் உமது சிறப்பையெல்லாம் கண்டு களிக்கவே வந்துள்ளேன். உமது விருப்பப்படியே செய்வேன்.

தொண்டைமான்: தமிழ்த் தாயரே, இது ஓவிய மண்டபம். இதில் பல நாட்டு ஓவியப் புலவர்களையும் கொண்டு வெவ்வேறு வகையான ஓவியங்

களைத் தீட்டச் செய்திருக்கிறேன். இது சிற்பக்கூடம். சிற்பக்கலையில் தேர்ச்சிபெற்ற புலவர்களால் செய்யப் பட்ட சிற்பங்கள் இதில் சேமித்து வைக்கப்பட் டுள்ளன.

ஔவையார்: காஞ்சிபுரம் எப்பொழுதுமே கலை வளர்ச்சிக்குப் பெயர்போனது. காஞ்சி அரசர் கள் கலை விநோதர்கள் என்பதை நான் முன்னமே கேட்டிருக்கிறேன். அதை நான் இப்பொழுது நேரில் காண்கிறேன். இந்த அரண்மனையே ஒரு கலைக் களஞ்சியமாக அன்றோ காட்சியளிக்கின்றது!

தொண்டைமான்: அம்மையீர்! இதோ இந்தப் படைக் கொட்டிலைப் பாருங்கள். இவை யாவும் இப்பொழுது புதியவையாகச் செய்யப்பட்ட படைக் கலங்கள். இவை போன்ற படைக்கலங்களை நீங்கள் உங்கள் அதியனிடம் கண்டதுண்டோ?

ஔவையார்: இவை போன்ற படைக்கலங் களை எங்கள் அதியனிடம் காண முடியாது. இவை காம்பு திருத்தி, வடித்து, நெய் தடவி, பள பளப்பாக அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற் றிற்கு மயில் பீலி அணிந்து மாலை சூட்டியிருப்பது எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது! இவை அடுக் கடுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அழகைப் பார்த்தால் கொலு வைக்கப்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. எங்கள் அதியன் படைக்கலங்களோ நாள்தோறும் போரில் பகைவர் உடல்களைக் குத்திப் பிளப்பதால் காம்பு முறிந்து, வாய் மடிந்து, சிதைந்து கொல்லன் உலைக்களத்திலே கிடக்கின்றன. அவற்றை இவற்றிற்கு ஒப்பாகக் கூற முடியுமோ? ஒரு காலும் முடியாது.

தொண்டைமான்: அன்னையே, உமது உபு

கருத்தை உணர்ந்து கொண்டேன். உங்கள் அதியன் நாள்தோறும் போர்புரிந்து வெற்றி பெறும் வீரன் என்றும், நான் போர்ப் பயிற்சியே இல்லாதவன் என்றும் கூறுகின்றீர்! இதுதானே உமது உட்கருத்து?

ஔவையார்: நீர் உணர்ந்தது அதுவானால், உண்மையே. எங்கள் அதியன் வெற்றி வீரன் மாத்திரம் அல்லன்; கொடை வீரனும் ஆவான். என்னைப் போன்ற புலவர்களுக்கெல்லாம் தஞ்சமாக உள்ளவன் அவன். அவன் அருங்குணங்களை நீர் அறியின் அவனோடு பகை கொள்ள மாட்டீர்; தோழமை கொண்டு வாழ்வீர். எனக்கு உங்களிடையே வேற்றுமை இல்லை. ஆனால் அதியமானை நீர் போரில் வெல்லுவதென்பது எளிய காரியம் அன்று. நீங்கள் இருவரும் எதிர்த்துப் போர் தொடங்குவீரானால் தமிழகமே நிலை குலைந்து போகும். நீர் போர் ஆசையை விட்டு அதியமானோடு நட்புக் கொள்வீரானால் தமிழகத்தைப் பெரிய ஆபத்திலிருந்து பாதுகாத்தவர் ஆவீர். தமிழ் மக்கள் உம்மை வழி வழியாக வாழ்த்துவர்.

தொண்டைமான்: செந்தமிழ்த் தாயரே, நான் அதியன் பெருமையை அறியாமல் ஆணவத்தால் அறிவு மயங்கி அவன்மீது பகைமை பாராட்டினேன். உமது அறிவுரையால் மனம் தெளிந்தேன். அவனோடு போர் தொடுக்கும் எண்ணத்தை விட்டொழித்தேன். இனி உமது விருப்பப்படியே அதியனோடு அன்பு பூண்டு வாழ்வேன்.

ஔவையார்: தொண்டையர் தலைவரே, இதுவே நான் உம்மிடம் வேண்டி வந்த பரிசு. இனி நான் சென்று வருவேன். விடை தருவீராக.

(ஔவையார் போகின்றார்)

பகைமை	கைவிடுதல்	அவா
கைகூடியது	உபசரி	பேறு
கலைக்களஞ்சியம்	பீலி	அடுக்கடுக்காக
படைக்கலம்	உலைக்களம்	தஞ்சம்
வழிவழியாக	பூண்டு	விடை

கேள்விகள்

1. அதியமான் தொண்டைமானிடம் யாரைத் தூதாக அனுப்பினான்?

2. தொண்டைமானின் படைக்கலங்களைக் கண்ட ஔவையார் கூறியது என்ன?

3. ஔவையார் கூறியதைக் கேட்ட தொண்டைமான் அவருக்கு அளித்த வாக்குறுதி யாது?

பயிற்சி

1. இந்த நாடகத்தைப் படி.

2. இதை உன் நண்பர்களோடு சேர்த்து நடித்துப் பழகு.

3. இதில் நீ யாராக நடிக்க விரும்புகிறாய்? ஏன்?

4. கோடிட்ட இடங்களில் 'போ' என்னும் வினைச் சொல்லைப் பொருத்தமாக மாற்றி அமைத்து வாசி:

ஔவையார் முன்பு தூது ———
நான் இப்பொழுது பாடசாலைக்குப் ———
நீ நாளை சென்னைக்கு ———

5. நான் அறிவேன்—இவ்வாறே கீழே கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து சொல்:

நான் அறிவேன்	நாங்கள் ———
நீ ———	நீங்கள் ———
அவன் ———	அவள் ———
அவர் ———	அவர்கள் ———
அது ———	அவை ———

6. அரசர்.
அரசர் அறிந்தார்.

முன்னுள்ள அரசர் என்னும் சொல் ஒருவரின் பெயரைக் குறித்து நிற்கிறது. அரசர் அறிந்தார் என்பதிலுள்ள அரசர் என்னும் சொல் அறிந்தார் என்னும் பயனிலைக்கு எழுவாய். இவ்விரு சொற்களும் பொருளில் வேறுபட்டிருக்கின்றன. இவ்வாறு பெயர்ச் சொல் பொருளில் வேறுபடுவதற்கு வேற்றுமை என்பது பெயர்.

ஔவையார்	ஔவையாரிடமிருந்து
ஔவையார் வந்தார்.	கவர்ந்தார்.
ஔவையாரை வரவேற்றார்.	ஔவையாரது பாட்டு.
ஔவையாரால் அறிந்தார்.	ஔவையாரிடம் சென்றார்.
ஔவையாருக்குக் கொடுத்தார்.	ஔவையாரே! வருக.

7. இப்பாடத்திலிருந்து அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் கொடு.

8. உயர்திணைச் சொல்லுக்கு மூன்று உதாரணம் சொல்.

9. அஃறிணைச் சொல்லுக்கு ஆறு உதாரணம் சொல்.



18. வீரமா முனிவர்

செந்தமிழ் இலக்கியங்களில் சிறந்து விளங்கும் காப்பியங்கள் பல. இவை பலவேறு சமயங்களைச் சார்ந்தவை. இராமயணம் ஒரு வைணவ நூல். மணிமேகலை பௌத்த மத நூல். பெரிய புராணம் சைவ மதத்தினரது தலையாய நூல். சீராப் புராணம் என்பது மகம்மதியரது காப்பியம். அது போலவே தேம்பாவணி என்பது கிறித்துவ சமயத்தை எடுத்துரைக்கும் சீரிய நூலாகும்.

தேம்பாவணி என்னும் செந்தமிழ் நூலைப் பாடியவர் வீரமா முனிவர் என்னும் இத்தாலியராவர். இவர் தம் நாட்டைத் துறந்து நம் நாட்டுக்கு ஏசுவின் பணி புரிய வந்தவர். சமயத்தொண்டு புரிய வந்தவர்

தமிழ்த் தொண்டும் புரியலானார். அதனால் இவரது தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும் ஒன்றற்கொன்று உதவலாயின.

வீரமா முனிவர் இயற் பெயர் ஜோஸப் பெஸ்கி என்பதாம். இவர் கி. பி. 1680-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இத்தாலி நாட்டிலே கஸடிகிலியோன் என்னும் நகரில் தோன்றினார். இவரது தந்தையின் பெயர் கண்டால்போ பெஸ்சி; தாயின் பெயர் எலிசபெத் பெஸ்கி. ஜோஸப் பெஸ்கி இலக்கியப் படிப்பை முடித்த பின்னர் கடவுள் திருப்பணிக்குத் தம்மைப் ஒப்புக் கொடுத்து, தமது பதினெட்டாவது வயதிலேயே ஏசு சபையில் சேர்ந்தார். பின்னர் இவர் பல் வேறு மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார்; பிரெஞ்சு, கிரேக்கம், எபிரேயம், போர்த்துகீஸ், தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளை நன்கு கற்றார். எனினும் இவர் எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற்று விளங்கினார்.

பெஸ்கி 1706-ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்றுச் சமயத் தொண்டுகளில் ஈடுபடலானார். இவர் 1710-ஆம் ஆண்டு இந்தியா வந்து சேர்ந்தார். அக் காலத்தில் இந்தியாவில் கிறித்து மதத்திற்கு எதிர்ப்பு இருந்து வந்தது. அதனால் நம் பெஸ்கி அவர்கள் தொடக்கத்தில் பல அல்லல்களுக்கு ஆளாக நேர்ந்தது. அவற்றை இவர் தம் கலங்கா மனத்தாலும், சலியா உழைப்பாலும் களைந்தார்; தமிழ் நாட்டில் பலவிடங்களுக்கும் தடையின்றிச் சென்று சமயத் தொண்டுகளைச் செய்து வருவாராயினர். அக் காலத்துத் தமிழ் நாட்டில் பாளையக்காரனாக விளங்கிய சந்தா சாகிபு பெஸ்கி அவர்களைப் போற்றிப் பட்டமும் பதவியும் வழங்கினான்.

பெஸ்கி தமிழில் உள்ள காவியங்களை நன்கு கற்ருர்; கற்ற நூல்களில் உள்ள சொற்களையும், கருத்துக்களையும் மனத்திற் கொண்டு தேம்பாவணி யென்னும் செந்தமிழ் நூலை இயற்றினுர்; இதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினுர். சங்கத்து இருந்த தமிழ் வாணர்கள் பெஸ்கி சுவாமி யாரை மிகவும் பாராட்டி அவரது பெருமைக்கு அறி குறியாக 'வீரமா முனிவர்' என்னும் விழுமிய பட்டத்தை அளித்தனர்.

வீரமா முனிவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகள் பல. இவர் தம் சமயத்தைப் பற்றிய நூல்களை ஆக்கியதோடு அமையவில்லை. வீரமா முனிவர் தமிழ் எழுத்துக்களில் இருந்த ஒருசில குறை களைப் போக்க முற்பட்டார். அக் காலத்தில் மெய் யெழுத்துக்கள் புள்ளி பெருமலிருந்தன. எகர ஒகரங் கள் நெட்டெழுத்தாக வரும்போது தம் மீது புள்ளிகள் பெற்று விளங்கின. இவை அக் காலத்திலிருந்த தமிழர்களுக்கு இடரை விளைத்தன. வீரமா முனிவர் இவ்விடரைப் போக்க நினைந்தார்; மெய்யெழுத்துக்கள் என்றறிய அவற்றின் மேல் புள்ளிகளைப் பொறித்தார்; நெட்டெழுத்தென அறிய எகர ஒகரங்களில் இக் காலத்துள்ள வேறுபாடுகளைச் செய்தருளினுர். தமிழ் மொழியில் செய்த இச் சீர்திருத்தத்தை இவர் தமிழுக் குச் செய்த முதற்பெருந் தொண்டு என்று கூறலாம்.

வீரமா முனிவர் தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழியில் ஒரு சிலரே புலமை பெற்றிருந்தனர். இதற்குக் காரணம் தமிழ் மொழியில் உரைநடை நூல் கள் இல்லாமையே என்பதை முனிவர் உணர்ந்தார்; செய்யுளின் வாயிலாக அறிவு ஊட்டுவதை விட உரை நடை நூல்களின் வாயிலாக அறிவூட்டுதல் எளிது

என்பதை அறிந்தார் ; அதற்கெனப் பல உரை நடை நூல்களை ஆக்கலானார்கள். பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம் முதலிய நூல்கள் இதற்கெனவே எழுதப்பட்டவையாகும்.

வீரமா முனிவர் காலத்தில் தமிழ் மொழியில் அகராதிகள் இல்லை. அக் காலத்தில் செய்யுளால் செய்யப்பட்ட நிகண்டுகளே இருந்தன. முனிவர் மேனாட்டு மொழிகளில் உள்ளன போன்ற அகராதியை ஆக்க முயன்று, சதுரகராதி என்ற அகராதியை இயற்றித் தமிழ் மொழியை வளம்படுத்தினார்.

வீரமா முனிவர் இலக்கண நூல்கள் பலவற்றைச் செய்தார். தொன்னூல் விளக்கம் என்னும் அரிய நூலும், கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் நூலும் இவரால் எழுதப்பட்டன. இன்னும் இவர் திருக் குறளின் அறம், பொருள் என்ற இரு பால்களையும் இலத்தீன் மொழியில் பெயர்த் தெழுதினார். இங்ஙனம் வீரமா முனிவர் செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழி பெயர்ப்பு ஆகிய நூல்களை ஆக்கித் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு அளவிடற்கரியதாகும்.

வீரமா முனிவர் ஓர் உண்மைக் கவிஞர். இவரு டைய திறத்தைத் தேம்பாவணி நமக்குத் தெளிவாக் கும்.. இவரது தன்னலமற்ற தெய்வத் தொண்டை இவரது பிற நூல்கள் நமக்கு அறிவுறுத்தும். இவர் ஒரு சிறந்த தியாகி ; வாது புரியும் வன்மை மிக்கவர். இவருடன் வாது புரிந்த பலர் இவர் சொல்லுக்கு அஞ்சி அகன்றனர் என்பர்.

வீரமா முனிவர் தம் இறுதிக் காலத்தை அம்பலக் காடு என்னும் ஊரில் கழித்தார். அங்கிருந்த வேத சாத்திரக் கல்லூரியில் கண் காணிப்பாளராக இருந்து அருங்கடன் ஆற்றி வந்தார். மூப்பினால் உடலும்,

உழைப்பினால் உள்ளமும் தளர்ந்த அருந்தமிழ் முனிவர் 1747-ஆம் ஆண்டு இறைவன் திருவடி நீழலில் இளைப்பாற இம் மண்ணுலகை நீத்தருளினார்.

இத்தாலியராகிய இவர் நம் மொழிக்குச் செய்த தொண்டுகளுக்கு நாம் செய்யும் கைம்மாறும் ஒன்றுளது. அது இவர் இயற்றிய செந்தமிழ் நூல்களை நன்கு கற்று மேம்படுவதே யாகும்.

இலக்கியம்	தொடக்கம்	வேறுபாடு
காப்பியம்	அல்லல்	வாயிலாக
பல்வேறு	ஆளாக	உரைநடை
துறந்து	நேர்ந்தது	ஒழுக்கம்
பணி	சலியா	திறம்
தொண்டு	அரங்கேற்றம்	வாது
தோன்று	பாராட்டி	வன்மை
ஒப்புக்கொடுத்து	விழுமிய	நீத்தார்
சமயம்	அடையவில்லை	மேம்பாடு

கேள்விகள்

1. வீரமா முனிவரின் இயற்பெயர் என்ன? அவர் எந்நாட்டினர்?

2. வீரமா முனிவர் தமிழ் நாட்டிற்கு வந்தது ஏன்?

3. வீரமா முனிவர் என்ற பட்டம் அவருக்கு யார் கொடுத்தார்கள்?

4. அவர் இயற்றிய நூல்கள் யாவை?

5. வீரமா முனிவர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் யாவை?

6. அவர் எப்படிப்பட்ட குணமுள்ளவர்?

7. அவருக்கு நாம் செய்யும் நன்றி யாது?

பயிற்சி

1. வீரமா முனிவரின் தாய்நாட்டைப் படத்தில் பார்த்துத் தெரிந்துகொள்.

2. இவரைப்போலத் தமிழுக்குத் தொண்டு செய்த வேறு சில அயல்நாட்டினரைத் தெரிந்துகொள்.

3. வீரமா முனிவர் காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களைத் தெரிந்துகொள்.

4. அம்பலக்காடு எங்கு உள்ளது என்பதைத் தெரிந்துகொள்.

5. பொருள் தெரிந்துகொள்: துறந்து, சமயம், அல்லல், விழுமிய, வன்மை, நீத்தார்.

6. கீழே கோடிட்ட இடங்களில் எதிரில் கொடுக்கப் பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றியமைத்து வாசி:

——ஏசு சபையில் சேர்ந்தார்.	(பெஸ்கி)
பெஸ்கி பல்வேறு——கற்றார்.	(மொழிகள்)
பெஸ்கி——அனைவரையும் வென்றார்.	(அறிவு)
சந்தாசாகிபு——பட்டம் வழங்கினான்.	(பெஸ்கி)
பெஸ்கி——இந்தியாவுக்கு வந்தார்.	(இத்தாலி)
——படைக்கலங்கள்.	(அதியன்)
வீரமா முனிவர்——வாழ்ந்தார்.	(அம்பலக்காடு)

7. செய்தார் = செய் + த் + ஆர்
காண்கிறார் = காண் + கிறு + ஆர்
வாழ்வார் = வாழ் + வ் + ஆர்

இவற்றுள் செய் என்பது செயலைக் காட்டும். இது பகுதி. ஆர் என்பது செயலைச் செய்யும் எழுவாயைக் காட்டும். இது விகுதி. த், கிறு, வ் என்பன காலத்தைக் காட்டும். இவை இடைநிலைகள்.

பகுதி, விகுதி, இடைநிலை இம்மூன்றும் பகுபத உறுப்புகள்.

19. செஞ்சி வீரர்

தென் ஆர்க்காடு ஜில்லாவில் செஞ்சி என்பதொரு கிராமம் உள்ளது. அதன் அருகில் பழமையான மலைக் கோட்டை ஒன்று இருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்குமுன் தேசிங்கு என்னும் வீரமன்னர் அக்கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்து வந்தார். அவரால் அவ்வூரும் அக்கோட்டையும் சரித்திரச் சிறப்புப் பெற்றன.

தேசிங்கு இளமையிலேயே வீரத்தில் விருப்பம் உடையவராக இருந்தார். சிறுபிள்ளைப் பருவத்திலேயே அவரிடம் வீரருக்கு உரிய அடையாளங்கள் காணப்பட்டன. வில், வாள், ஈட்டி முதலியவைகளையே அவர் விளையாட்டுக் கருவிகளாக விரும்பினார். மகம்மதுகான் என்னும் மகம்மதியச் சிறுவர்

அவருக்குத் தோழர் ஆனார். இருவரும் அரண்மனையிலேயே ஒருசேர வளர்ந்தனர். இருவரும் ஒன்றாகவே படிப்பர்; மல்போர், வாள் போர், சிலம்பம் இவற்றைப் பழகுவர்; குதிரைச் சவாரி செய்வர்; காட்டில் புகுந்து வேட்டை ஆடுவர். தேசிங்கு விளையாட்டுப் பருவத்திலேயே பல வீரச் செயல்கள் புரிந்தார்: ஒரு பெரிய வேங்கைப் புலியை எதிர்த்துப் போராடிக் கொன்றார்; புகழ்பெற்ற மல்லன் ஒருவனைப் போரில் வென்றார்; ஒரு சிங்கத்தோடு போர் செய்து அதனை வென்று அடக்கிப் பிடித்து வந்தார். தேசிங்கின் இவ் வீர விளையாட்டுக்களைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் வியப்புக் கொண்டனர்.

தேசிங்கு இளைஞராக இருந்தபோது டில்லி அரசரிடம் ஒரு முரட்டுக் குதிரை இருந்தது. அதற்குப் பாராசாரி என்பது பெயர். அதை யாராலும் அடக்க முடியவில்லை. அதை அடக்குபவருக்குப் பரிசு கொடுப்பதாக டில்லி அரசர் விளம்பரப் படுத்தினர். இளைஞராகிய தேசிங்கு அக் குதிரையை அடக்கிப் புகழ்பெற விரும்பினார். அவர் மகம்மதுகானோடு டில்லிக்குச் சென்றார்; யாராலும் அடக்கமுடியாத அம்முரட்டுக் குதிரையை அவர் அடக்கினார்; அதன் மீது ஏறி அமர்ந்து நெடுந்தூரம் சவாரி செய்து திரும்பினார். டில்லி அரசர் தேசிங்கின் திறமையைப் பாராட்டினார்; அந்தக் குதிரையைத் தேசிங்குக்கே பரிசாகக் கொடுத்துவிட்டார். தேசிங்கு வெற்றி வீரராகச் செஞ்சிக்குத் திரும்பினார். பாராசாரிக் குதிரை தேசிங்கின் பிரியமான வாகனமாக இருந்து வந்தது.

தேசிங்கு செஞ்சிக்குத் திரும்பியதும் அவர் தந்தையார் இறந்தார். தேசிங்கு செஞ்சி மன்னராக

முடிசூடினார். அவர் தம்து உயிர்த் தோழரான மகம்மதுகானைத் தளபதியாக அமர்த்திக் கொண்டார். தேசிங்கின் முன்னோர்கள் ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வந்தனர். தேசிங்கு பிறருக்கு அடங்கி அடிமையாக அரசாள விரும்ப வில்லை. ஆகவே அவர் அரசரானதும் ஆர்க்காட்டு அரசருக்குக் கப்பம் செலுத்துவதை நிறுத்திவிட்டார். வழக்கப்படி செஞ்சியிலிருந்து கப்பத்தொகை வராமல் போகவே ஆர்க்காட்டு அரசர் தூதரை அனுப்பினார். தேசிங்கு மன்னர் கப்பம் செலுத்த மறுத்து விட்டார்; "நான் யாருக்கும் வணங்கிக் கப்பம் செலுத்த மாட்டேன். தைரியம் இருந்தால் உங்கள் அரசர் என்னைப் போரில் வென்று கப்பம் கொள்ளட்டும்" என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

தேசிங்கு மன்னரின் பதிலைக் கேட்டு ஆர்க் காட்டு அரசர் அடங்காக் கோபம் கொண்டார். ஆயி னும் அவர் தேசிங்கின் வீரத்திற்குப் பயந்து உடனே போருக்குப் புறப்படவில்லை; செஞ்சியின்மீது படை யெடுப்பதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார். அச்சமயம் தேசிங்கு மன்னரின் தளபதியான மகம் மதுகானுக்குத் திருமணம் நிச்சயமாகியது. மகம்மது கான் மணம் செய்துகொள்வதற்காகத் தமது சொந்த ஊருக்குச் சென்றார். அதனை அறிந்த ஆர்க்காட்டு அரசர், செஞ்சியின்மீது படையெடுக்க அதுவே தக்க சமயம் என்று துணிந்தார். மகம்மதுகான் திருமணத் தன்று ஆர்க்காட்டுப் படை செஞ்சியை நோக்கி எழுந்தது.

அது தேசிங்கு மன்னருக்குத் தெரிந்தது. அவர் உடனே குதிரை வீரர் மூலமாக மகம்மதுகானுக்குச் செய்தி அனுப்பினார். மகம்மதுகான் மணமகளுக்க

விரைந்து சென்றார். தேசிங்கு மன்னர் கோபாவேசத்தோடு வருவதைக் கண்டு பகைவர் படை அஞ்சி ஓடத் தொடங்கியது. அவர் ஓடிய சேனையை விடாமல் மடக்கிக் கொன்று குவித்தார்; தோழனைக் கொன்ற வஞ்சகனைத் தேடிப் பிடித்து வெட்டி வீழ்த்தினார். பிறகு அவர் சிறிது தூரத்தில் ஆர்க்காட்டு அரசர் யானைமேல் சென்றுகொண்டிருப்பதைக் கண்டுவிட்டார். உடனே விரைந்து சென்று குதிரையை அந்த யானையின்மேல் பாயவிட்டார். குதிரை முன்னங் கால்களைத் தூக்கி யானையின்மீது பாயும்போது, அதன் கீழ் மறைந்திருந்த பகைவீரன் குதிரையின் பின்னங்காலை வாளால் வெட்டிவிட்டான். பாராசாரிக் குதிரை அலறிக்கொண்டு கீழே சாய்ந்தது.

தேசிங்கு மன்னர் தமது அருமைக் குதிரையை அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டு அழுதார். உண்மைத் தோழனையும், உயிருக்குயிரான பாராசாரிக் குதிரையையும் இழந்து அவர் உயிரோடு ஊர் திரும்ப விரும்பவில்லை. அவர் அவ்விடத்திலேயே தமது வாளை மேலே வீசி, அதற்கு நேராக மார்பைக் காட்டி நிமிர்ந்து நின்றார். வாள் விசையோடு வந்து அவர் மார்பில் பாய்ந்தது. செஞ்சி வீரர் வீரமரணம் அடைந்து வீர சொர்க்கம் புகுந்தார். இச் செய்தி கோட்டையில் இருந்த அரசியார்க்கு அறிவிக்கப் பட்டது. அக் கற்பரசியாரும் தீக்குளித்துக் கணவரைப் பின்பற்றிச் சென்றார்.

தேசிங்கு மன்னரின் வீரச் சிறப்பையும், அவர் மனைவியாரின் கற்பின் பெருமையையும் கண்ட ஆர்க்காட்டு அரசர் தம் செய்கைக்காக மிகவும் வருந்தினார். அவர் அரசியாரின் நினைவுக்காக ஆர்க்காட்டுக்கு அருகில் புதிதாக ஒரு நகரை நிர்மாணப்

செய்து, அதற்கு இராணிப்பேட்டை என்று பெயர் வைத்தார். செஞ்சிக் கோட்டையும், இராணிப் பேட்டையும் இன்றும் அவர்கள் பெருமையை விளக்கி நிற்கின்றன.

பழமையான	தளபதி	துணிந்தார்
மலைக்கோட்டை	கப்பம்	நெருங்கி
இளமை	செலுத்துவதை	சின்ன பின்னம்
தோழன்	உறுதியாக	புறமுதுகு
வியப்பு	அடங்கா	வஞ்சனை
நெடுந்தூரம்	தக்க சமயம்	உயிருக்குயிரான
நிர்மாணம்	செய்தி	இழந்த

கேள்விகள்

1. தேசிங்கு இளமையில் எப்படிப்பட்ட குண முள்ளவராக இருந்தார்?
2. டில்லி அரசரிடம் எப்படிப்பட்ட குதிரை இருந்தது?
3. குதிரையை அடக்கியதால் தேசிங்கு பெற்ற பரிசு யாது?
4. மகமதுகான் எவ்வாறு கொல்லப்பட்டார்?
5. மகமதுகான் இறந்த செய்தி கேட்ட தேசிங்கு என்ன செய்தார்?
6. இராணிப்பேட்டையை யார் ஏற்படுத்தினார்? ஏன்?
7. தேசிங்குக்கும் ஆர்க்காட்டு நாவாபுக்கும் ஏன் பகைமை உண்டாயிற்று?

பயிற்சி

1. இப்பாடத்தை மவுனமாக வாசி.
2. இது போன்ற வீரர் வரலாறுகளைப் படித்துத் தெரிந்துகொள்.

3. செஞ்சியுள்ள இடத்தைப் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்.

4. ஆர்க்காடு, இராணிப்பேட்டை—இவை உள்ள இடங்களைத் தெரிந்துகொள்.

5. ஆர்க்காட்டிலிருந்து செஞ்சிக்குச் செல்லும் வழியைத் தெரிந்துகொள்.

6. செஞ்சிக்குச் சென்று கோட்டையைப் பார்.

7. (1) இறந்தகாலமாக மாற்று: படிப்பர், பழகுவர் ஆடுவர், வருவேன், வாழ்வேன்.
(2) நிகழ்காலமாக மாற்று: பெற்றன, சென்றார் பறந்தது, துறந்தான், வீழ்த்தினார்.
(3) எதிர்காலமாக மாற்று: கவலைப்படுகிறேன், விரும்புகின்றேன், படிக்கிறான், காண்கிறோப், பெறுகிறோம்.

8. தேசிங்கு புலியைக் கொன்றார்: இவ்வாக்கியத்தில் கொன்றார் என்னும் வினையைச் செய்தவனைக் குறிக்கும் தேசிங்கு என்னும் சொல்லே எழுவாய். இத்தகைய வினை செய்வினை எனப்படும்.

இவ் வாக்கியத்தை புலி தேசிங்கால் கொல்லப்பட்டது—என்றும், மாற்றி எழுதலாம். இதில் முன் செயப்படு பொருளாய் இருந்த புலி என்னும் சொல்லே எழுவாயாக இருக்கிறது. அதற்கேற்றபடி வினை கொல்லப்பட்டது என மாறியுள்ளது. இது செயப்பாட்டுவினை.

9. கீழுள்ள வாக்கியங்களில் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி வாசி:

தேசிங்கு குதிரையை அடக்கினார்.
வீரன் குதிரையின் காலை வெட்டினான்.
அரசர் தேசிங்கின் திறமையைப் பாராட்டினார்.

20. தேசிங்கும் குதிரையும்

குதிரையின் அருகே வந்துநின்றான்
குழந்தை தேசிங்கு ;
கொல்லும் வேங்கை போல நின்றது
குதிரையும் அப்போது.

பார்த்தான் மன்னன் லகானைக் கையால்
பாங்குட னேபற்றிப்
பாய்ந்தே ஏறி முதுகில் அமர்ந்தான்
பாலன் தேசிங்கு.

கலகல வென்றே சிரித்துப் பிடித்தான்
கையில் சாட்டைதனை ;
கனைத்த பரியைக் கழுத்தில் தட்டினான்
கண்மணி தேசிங்கு ;

தட்டின தட்டில் குதிரை கிளம்பித்
தரையில் நில்லாமல்
தாவியே வானில் சென்று பாய்ந்தது
தங்கமேனிக் குதிரை.

மலையும் குன்றும் உடைந்து சிதறி
மண்ணில் விழுவதைப்பார் !
குன்று மலைகளைத் தாண்டிக் குதிரை
குதித்துப் பாயுது பார் !

அசுவம் போகும் வேகத் தாலே
 அலையுது மேகமெலாம் !
மேகம் இடித்து மின்னல் கக்கி
 மழையைப் பொழியுது பார் !

புரவி போகும் வேகம் அறிந்தான்
 புலிக்குட்டி தேசிங்கு ;
பொல்லாக் குதிரை தன்னைக் கொல்லப்
 போகுதென் றறிந்தான்.

லாகானை இழுத்துக் கொடுத்தான் சிமிட்டா
 ராஜா தேசிங்கு ;
சிமிட்டா கொடுத்த வேகத்தி னாலே
 திகைத்து நின்றது பார் !

நின்ற குதிரையை டில்லிக்குத் திருப்பி
 நேரே ஓட்டிவந்தான் ;
நிமிஷந் தன்னில் கீழே குதித்து
 நின்றான் தேசிங்கு.

—தேசிங்கு ராஜன் கதை

21. வீர மங்கை

முன்னொரு காலத்தில் மலைமேலிருந்த ஓர் ஊரில், மன்னன் ஒருவன் நீதிநெறி வழுவாது அரசாட்சி செய்துவந்தான். அம்மன்னன் ஆட்சியில் குடிகள் எல்லோரும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அரசனைக் கடவுள் என்று எண்ணி, அவனுக்குப் பல வகையில் ஊழியம் செய்து வாழ்ந்து வந்தனர்.

அவ்வூர் மன்னன்மீது மாற்றான் ஒருவன் போர் தொடுத்தான். போர்ப் பறை முழங்கியது. போர்ப் பறையைக் கேட்ட மலையூரின் மக்கள் தங்கள் மன்னனுக்கு உதவத் திரண்டனர். வீட்டிற்கு ஒருவன் வீதம் படையில் சேர்ந்தனர்.

அவ்வூரில் நாட்டுப்பற்று, அரசனிடம் அன்பு முதலியவற்றில் சிறந்த குடும்பம் ஒன்று இருந்தது.

அக்குடும்பத்தில் இருந்தவர் அனைவரும் போர்த் தொழிலில் வல்லவர்கள்; அரசனிடம் அளவிலா அன்புடையவர்கள். அவர்களில் ஐந்து வயதுடைய சிறுவன் ஒருவனைத் தவிர்த்து ஆடவர் யாவரும் அணி வகுப்பில் சேர்ந்தனர். இதனைக் கண்ட வீட்டுத் தலைவி அடங்கா மகிழ்ச்சியுற்றாள். அவ் வீரப்பணிக்கு அனுப்ப வயது வந்த பிள்ளைகள் தனக்கு இல்லையே என்று அவள் வருந்தினாள்.

முதல் நாள் போரில் மலை அரசனுக்கு வெற்றியே. ஆயினும் அக்குடும்பத்தின் வயது சென்ற வீரன் இறந்தான். தன் தந்தை இறந்தமைக்கு அவ்வீர மங்கை வருந்தவில்லை; அவன் அரசனுக்குத் துணையாகச் சென்று நாட்டிற்காகப் போர் புரிந்து உயிர் விட்டதைப் பெருமையாகவே எண்ணி மகிழ்ந்தாள். மறு நாள் அத்தலைவியின் கணவன் இறந்தான். அவள் கலங்கவில்லை. தன் தமையனைத் தேற்றிப் போர் முகத்திற்கு அனுப்பினாள். மூன்றாம் நாள் அவனும் இறந்தான். அச் செய்தி அவள் உள்ளத்தைக் கலங்கச் செய்தது. இனிப் போருக்கு அனுப்பத் தன் வீட்டில் எவரும் இல்லையே என்று அவள் வருந்தினாள். திடீரென அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. கலங்கியிருந்த அவள் மனம் தெளிவடைந்தது.

தனக்கு இருப்பது ஒரே மகன்தான் என்பதை அவள் அறியாதவளல்லள். முன் நடந்த போர்களில் தந்தை, கணவன், உடன் பிறந்தான் என்னும் இம் மூவரும் வீர மரணம் எய்தியதையும் அவள் மறக்கவில்லை. ஆனால் அவள் தன் நாட்டுப் பற்றைக் கொண்டு தன் கடமையை ஆராய்ந்தாள்; தன் சிறு மகனை அழைத்தாள்; அவன் தலையில் எண்ணெ

யிட்டுச் சீவினுள்; வெள்ளிய உடைகளை அணிவித்தாள்; ஒரு மூலையில் கிடந்த ஒடிந்த வேலை நிமிர்த்தி அவன் கையில் கொடுத்தாள்; போர் முனைக்குச் சென்று வெற்றிபெற்று வருமாறு வாழ்த்தினுள்.

அந் நிலையில் அங்கு ஒரு வீரன் குதிரையின்மேல் தோன்றினுன். அவன் அம்மடந்தை செய்யும் தொழிலைக் கண்டான். அவன் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் சுரந்தது; அவ்வம்மையை நோக்கி, அவன் செய்யும் காரியம் எத்தகைய மடமையானது என்பதை எடுத்துக் கூறினுன். ஆனுல் அத்தாய் அவ்வீரனுக்குத் தன் கடமைகளை எடுத்துக் கூறினுள்; தன் மகனை உடனழைத்துச் செல்லுமாறு அவனை வேண்டினுள்.

அக் குதிரை வீரன் செய்வது அறியாமல் திகைத்தான். இருந்தாற் போலிருந்து வெற்றி முரசு முழங்கியது. மலை நாட்டு மன்னனின் போர் வீரர்கள் வெற்றியை அறிவிக்கக் குதிரைகளிலேறி மலை நாட்டைச் சுற்றி வந்தனர். அவர்களில் ஒருவன், சிறுவனுடன் இருக்கும் குதிரை வீரனை அணுகி வணங்கி, "அரசரே, நம் படை வெற்றி பெற்றது!" என்று கூறினுன்.

அரசன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை; அவன் அச்சிறுவனை அப்படியே தூக்கித் தன் குதிரைமீது வைத்துக் கொண்டு அரண்மனையை அடைந்தான். அதனைக் கண்டாள் வீரத்தாய். தன்னிடம் பேசியவன் அரசன் என்பதை அவள் உணர்ந்தாள். போரில் உற்ருர் ஒருசேர உயிரிழந்ததை அவள் மறந்தாள்; தங்கள் மன்னன் பெற்ற வெற்றியை நினைந்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள்; வீடும் வாயிலும் அலங்கரித்து வெற்றி விழாவைச்

சிறப்பாகக் கொண்டாடினாள். அவள் செய்கையைக் கண்டு அவ்வூர் மக்கள் வியந்தனர். அவர்கள் அவளை 'வீரமங்கை' என்று புகழ்ந்தனர்.

தாய் நாட்டின் உரிமைக்கு இணையாக அவள் இவ்வுலகில் வேறு எதையும் கருதவில்லை என்பது இச் சம்பவத்தால் விளங்குகின்றது. இத்தகைய வீரத் தாய்மாராலேயே அன்று தமிழ் நாட்டின் தனியுரிமை பாதுகாக்கப்பட்டு வந்தது.

நீதி	திரண்டனர்	கலங்க
அணுகி	வழுவாது	அறிவிலா
கடமை	மட்டற்ற	பறை
மகிழ்ச்சி	சுரந்தது	அலங்கரித்து
முழங்கியது	தவிர்த்து	திகைத்தான்

கேள்விகள்

1. மலையூர் அரசன் எப்படிப் பட்டவன்?
2. வீரத்தாய் கடமையை உணர்ந்தவள் என்பதை எதனால் அறியலாம்?
3. கலங்கியிருந்த அவள் முகம் மலர்ந்தது ஏன்?
4. போரில் தங்கள் அரசன் வெற்றி பெற்றான் என்பதை அறிந்த அம்மங்கை என்ன செய்தாள்?
5. அவளை அவ்வூர் மக்கள் வீரமங்கை என்று ஏன் புகழ்ந்தனர்?

பயிற்சி

1. இக் கதையை மவுனமாக வாசி.
2. இது போன்ற இலக்கியக் கதைகளைப் படித்துத் தெரிந்துகொள்.

3. இதனை அரசன் சொல்வதாகச் சொல்.

4. இதனைச் சிறுவன் சொல்வதாகச் சொல்.

5. கீழ்வரும் வாக்கியங்களை இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது:

(1) பிணக்குவியலில் மறைந்திருந்த ஒரு பகை வீரன் மகமதுகானைத் துப்பாக்கியால் சுட்டான்.

(2) குதிரை யானையின்மீது பாயும்போது, அதன் கீழ் மறைந்திருந்த பகைவீரன் குதிரையின் காலை வெட்டி விட்டான்.

(3) தாய் நாட்டின் உரிமைக்கு இணையாக அவள் இவ்வுலகில் வேறு எதையும் கருதவில்லை என்பது இச்சம்பவத்தால் விளங்குகிறது.

6. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்றிச் சொல்:

(1) செய்தி வீரரால் அறிவிக்கப்பட்டது.

(2) மகமதுகான் பகைவீரனால் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான்.

(3) அவள் ஊராரால் புகழப்பட்டாள்.

22. பழைய கோட்டைப் பட்டக்காரர்

கால்நடைகளைச் செல்வமாகப் போற்றுவது நம் நாட்டு வழக்கம். நமது நாடு விவசாய நாடாகையால் நமக்குக் கால்நடைகள் இன்றியமையாத செல்வமாகின்றன. கால் நடைகளைப் போற்றி வளர்ப்பது நாட்டின் செல்வத்தை வளர்ப்பதாகும். இத்தகைய தேசீயத் திருப்பணியை விருப்பத்தோடு தொடங்கிச் சிறப்பாகச் செய்து வந்த ஒருவர் நம் தமிழ் நாட்டில் உண்டு. அவரே பழைய கோட்டைப் பட்டக்காரர்

குடியைச் சேர்ந்த நல்ல தம்பி சர்க்கரை மன்ருடியார் என்பவர் ஆவர்.

பழைய கோட்டை என்பது கோயம்புத்தூர் ஜில்லாவில் தாராபுரம் தாலூகாவில் உள்ளதோர் ஊர். அவ்வூரில் பட்டக்காரர் என்னும் பழைய குடியினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் கொங்கு வேளாளர் மரபைச் சேர்ந்தவர்கள். அக்குடியின் முன்ஞேர் பழங் காலத்தில் சிறந்த சிற்றரசர்களாக விளங்கினர். அவர்கள் துணையால் போரில் வெற்றி பெற்ற அக்காலத்துப் பேரரசர்கள் அவர்களுக்கு உத்தமக்காமிண்டான், மன்ருடியார் என்ற பட்டங்களை வழங்கிச் சிறப்புச் செய்தனர். பேரரசர்களால் பட்டப் பெயர்கள் பெற்ற சிறப்பால் எல்லோரும் அக்குடியினரைப் பட்டக்காரர் என்று மரியாதையாக வழங்கலாஞர்கள். அக்குடியினருள் இருபத்தொன்பதாவது பட்டக்காரராய் இருந்தவர் நம் நல்ல தம்பி சர்க்கரை மன்ருடியார் என்பவர்.

பட்டக்காரர் மரபில் வந்தவர்களுள் சிலர் நெடுங் காலத்திற்கு முன்பே கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் சிறந்த குதிரைகளை மிகுதியாக வளர்த்து வந்தார்கள். அக்காலத்தில் பழைய கோட்டை குதிரைகளுக்குப் பெயர் பெற்ற இடமாக விளங்கியது. அவர் வழியில் வந்த நல்ல தம்பி சர்க்கரை மன்ருடியார் கால்நடைப் பண்ணையைப் பெருக்கி, உயர்ந்த வகைப் பசுக்களையும் எருதுகளையும் வளர்த்து, பழைய கோட்டையின் புகழ் இமயம் முதல் குமரி வரையில் பரவுமாறு செய்தார்.

நல்ல தம்பி சர்க்கரை மன்ருடியார், இருபத்தெட்டாவது பட்டக்காரராயிருந்த நல்ல சேஞபதிச் சர்க்கரை மன்ருடியார் அவர்களின் மூத்த மகஞவார்.

இவர், தந்தையார் இறக்கவே இளமைப் பருவத்தி லேயே பட்டக்காரர் ஆனார். இவர் பல வகையிலும் தமது முன்னோர்களைக் காட்டிலும் மிக்க சிறப்புடன் விளங்கினார். இவர் காலத்திலேயே பட்டக்காரர் என்னும் பெயர் தமிழ் நாடெங்கும் நன்றாய்த் தெரிய லாயிற்று. இவர் தமிழ் மொழிப் புலமையும், சைவப் பற்றும் சிறந்தவர். இவர் ஓய்வு நேரங்களைத் தமிழ் நூல்களைப் படிப்பதிலேயே கழித்தார். 'கொங்கு மண் டல சதகம்', 'சிவன் மலை புராணம்', 'சிவன் மலைக் குறவஞ்சி', 'காதல் மங்கல வாழ்த்து' முதலிய செந் தமிழ்ச் செய்யுள் நூல்களை இவர் தாமே இயற்றி வெளியிட்டுள்ளார்.

இவர் பல பொது ஸ்தாபனங்களிலும் பங்கு கொண்டு பொது நலத்திற்கு அரிய சேவைகள் செய்து வந்தார்; கோயம்புத்தூர் ஜில்லா போர்டு அங்கத் தினராகவும், துணைத் தலைவராகவும், ஈரோடு தாலூக்கா போர்டு தலைவராகவும், கீழ்க் கோவை ஜில்லா போர்டு தலைவராகவும் பதவி வகித்து அரிய தொண்டுகள் செய்து வந்தார். இவர் கோவை ஜில்லாவுக்குச் செய்த சேவைகளைப் பாராட்டிப் பொதுமக்கள் இவருடைய உருவப் படத்தை ஜில்லா போர்டு கட்டடத்தில் திறந்து வைத்துள்ளனர். இவர் ஈரோடு கூட்டுறவு நில அடமான பாங்கின் தலைவராக வும், கோவை விவசாயக் கல்லூரியின் மேற்பார்வை யாளராகவும், ஈரோடு வட்ட அறநிலயக் குழுவின் தலைவராகவும், சென்னைச் சட்ட சபை உறுப்பினராக வும் பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்து பொது நலத்திற்குப் பலவகைகளில் தொண்டு புரிந்துள்ளார்.

இவர் செய்த தொண்டுகளில் இவருடைய புகழை நாடெங்கும் பரவச் செய்தது பழைய கோட்டைக்

கால்நடைப் பண்ணையே ஆகும். பிற்காலத்தில் சிறந்த கால்நடை வளர்ப்பாளராகப் பேரும் புகழும் பெறுவதற்கு ஏற்ற இயல்புகள் இவரிடம் இளமையி லேயே காணப்பட்டன. இவர் பிள்ளைப் பருவத்தி லிருந்தே மாடுகளிடத்தில் மிக்க அன்புடையவராக இருந்தார். இவருடைய முன்ஞேர்கள் முன்னமே கால்நடைப் பண்ணையை ஆரம்பித்து நடத்தி வந்த தால் இவர் இளம் பருவத்தில் எப்பொழுதும் மாடுக ளிடையிலேயே பழகி வந்தார்; இளங் கன்றுகளிடம் நெருங்கிப் பழகி இன்புற்ருர்; அவற்ரேடு கூடிக் குதித்து விளையாடி மகிழ்ந்தார். இப்பழக்கத்தால் இவருக்கு இயல்பாகவே மாட்டின் தன்மைகளும் நுட் பங்களும் தெரியவந்தன. இவர் அவை பற்றிய ஆராய்ச்சியில் ஆர்வங் கொண்டார். இவருக்குத் தமது முன்ஞேர் நடத்தி வந்த கால்நடைப் பண்ணை யைப் பெருக்குவதில் ஊக்கம் உண்டாகியது. இவ ருடைய ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும் கால்நடைப் பண்ணை நாளுக்கு நாள் வளர்ந்தது. சில நூறு மாடுகளே இருந்த பண்ணை இரண்டாயிரம் மாடு களைக் கொண்ட பெரும் பண்ணையாகப் பெரு கியது.

கால்நடைப் பண்ணை நடத்துவதென்பது எளிய காரியம் அன்று. அதற்கு அடிப்படையாக ஆர்வமும் ஊக்கமும் வேண்டும்; நிறைந்த அனுபவம் வேண்டும்; மேய்ச்சல் நிலம், செல்வ வசதி முதலிய எல்லாம் வேண்டும். இவை யாவும் பட்டக்காரரிடம் குறை வறப் பொருந்தியிருந்தன. ஆகவே இவர் தமது பண்ணையை விரைவில் பெருக வளர்த்துச் சிறக்க நடத்திப் புகழ் பெற்ருர். இவருடைய கால்நடைப் பண்ணை இன்று இந்தியாவிலேயே இணையற்றதாக

விளங்குகிறது. அதனால் பழைய கோட்டையின் பெயரும் பட்டக்காரர் புகழும் எங்கும் பரவியுள்ளன.

காங்கேயம் எருது என்னும் உயர்ந்த வகை மாடுகள் சிறந்த இனம் என்று இப்பொழுது எல்லோராலும் புகழப்படுகின்றன. நம் நாட்டினரால் மாத்திரம் அன்றி அயல் நாட்டு மக்களாலும் காங்கேயம் எருதுகள் மிகவும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன. இவ்வாறு உலகப் புகழ்பெற்று விளங்கும் காங்கேயம் மாடுகளை இவரே அரும்பாடுபட்டுத் தமது பண்ணையில் உற்பத்தி செய்தார். இப்பொழுது இம்மாடுகள் இந்தியா எங்கும் பரவி, விவசாயம் முதலிய பல வேலைகளுக்கும் பயன்பட்டு வருகின்றன.

இவர் பண்ணையில் மைசூர் மாடுகள், காங்கேயம் மாடுகள், ஆடுகள் முதலியவை ஆயிரக் கணக்கில் வளர்க்கப்படுகின்றன. மாடுகளே அன்றி நாட்டுக் குதிரை எனப்படும் ஒருவகைக் குதிரைகளும் இவர் பண்ணையில் உற்பத்தியாகின்றன. இப்பண்ணையில் வளர்க்கப்படும் குதிரைகளில் காங்கேய நாட்டுக் குதிரைகள் சிறந்தவை. இவர் கால்நடைப்பண்ணையை அமைத்து நடத்தி வந்த முறை மிகவும் பாராட்டுதற்கு உரியதாகும். சென்னைக் கவர்னராக இருந்த பென்ட்லண்டு பிரபு, சர். ஜார்ஜ் ஸ்டான்லி, எர்ஸ்கின் பிரபு ஆகியோரும், அரசாங்கக் கால்நடை அதிகாரிகளும் இவருடைய பண்ணையைப் பார்வையிட்டு இவர் சேவையைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

பழைய கோட்டைப் பண்ணை தென்னாட்டிற்கே பெருமை தருவதொன்றாகும். இப்பண்ணையால் தமிழ் நாட்டுப் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய மாடுகள் கிடைத்து வருகின்றன. இவ்வளவு சிறப்புள்ள இப்பண்ணை எல்லோரும் சென்று காணத் தக்கது.

இதனைக் காண்பதனால் மாடு வளர்ப்பு முறைகளை அறியலாம்.

நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் புகழ்பெற்ற கால்நடைப் பண்ணைக் காப்பாளராக விளங்கினார்; சிறந்த பொது நலத் தொண்டராக வாழ்ந்தார்; 'பட்டக்காரர்' என்று எல்லோராலும் மரியாதையாகச் சொல்லப்பட்டார். இவருடைய பெருமையைப் பாராட்டி அரசாங்கத்தார் இவருக்கு ராய் பகதூர் என்னும் பட்டத்தை வழங்கினர். இவ்வாறு பேரும் புகழும் பெற்று விளங்கிய இவர் தமது அறுபதாம் வயதில் காலமானார். இவர் மறைவு தமிழ் நாட்டு விவசாயத்திற்கும், கால்நடை வளர்ச்சிக்கும் மிகப் பெரிய நஷ்டமாகும்.

இவருக்குப் பிறகு இவரது மூத்த குமாரராகிய நல்ல சேனாபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் முப்பதாவது பட்டக்காரராக வந்துள்ளார். இவர் தமது தந்தையாரைப் போலவே பொது நலத் தொண்டில் ஊக்கமும் கால்நடை வளர்ச்சியில் ஆர்வமும் உள்ளவர். இவர் மேற்பார்வையில் இப்பொழுது பழைய கோட்டைக் கால்நடைப் பண்ணை மிகச் சிறந்த முறையில் நடந்து வருகிறது.

கால்நடை	புலமை	இணையற்ற
போற்றுவது	பொதுநலம்	முறைகள்
இன்றியமையாத	பதவி	அரும்பாடு
மரபு	அறநிலையக்குழு	சேவை
வழங்கி	துட்பம்	பாராட்டு
ஈடுபட்டு	எளிய	உரியது
பண்ணை	குறைவற	மரியாதை

கேள்விகள்

1. பழைய கோட்டை எங்கு இருக்கிறது? அது எதனால் புகழ்பெற்றது?

2. பட்டக்காரர் யார்? அவர்களுக்கு அப்பெயர் எப்படி வழங்கியது?

3. நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார் வகித்த பதவிகள் யாவை?

4. அவர் இயற்றிய நூல்கள் யாவை?

5. அவர் செய்த பொதுநலத் தொண்டுகளில் முக்கியமானது எது?

6. பழைய கோட்டைப் பண்ணையில் வளர்க்கப்படும் மாடுகள், குதிரைகள் யாவை?

7. இப்பொழுது பண்ணையைக் கவனித்து வரும் பட்டக்காரர் யார்?

பயிற்சி

1. பழைய கோட்டைப் பண்ணையைப் பற்றிய புத்தகங்களை வாங்கிப் படி.

2. பழைய கோட்டைப் பண்ணையை நேரில் சென்று பார்.

3. உன் ஊரிலிருந்து பழைய கோட்டைக்குப் போக வழி சொல்.

4. முன்னோர், புகழ், பொதுநலம், நஷ்டம், அடிமை —எதிர்ச்சொல் கூறு.

5. மரியாதை, பாராட்டு, இன்றியமையாத, கால் நடை, அரும்பாடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

௬. புகழ் பரவியது. (முதல் வேற்றுமை)

கால் நடைகளை வளர்த்தார். (இரண்டாம் வேற்றுமை)

வாளால் வெட்டினான். (மூன்றாம் வேற்றுமை)

மகமதுகானுக்குச் செய்தி அனுப்பினார். (நான்காம் வேற்றுமை)

போர்க்களத்திலிருந்து திரும்பினார். (ஐந்தாம் வேற்றுமை)

தேசிங்கினது வீரம் (ஆறாம் வேற்றுமை)

கட்டடத்தில் வைத்துள்ளனர். (ஏழாம் வேற்றுமை)

தாயே! வருக. (எட்டாம் வேற்றுமை)



செய்யுட் பகுதி

1. வாக்குண்டாம்

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். (1)

உற்ற இடத்தில் உயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ !—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்? (2)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (3)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ;—சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (4)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே ; நலமிக்க
நல்லார்சொல் கேட்பது வும்நன்றே ;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே ; அவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று. (5)

தீயாரைக் காண்பதுவும் தீதே ;—திருவற்ற
தீயார்சொல் கேட்பது வும்தீதே ; தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே ; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது. (6)

உ. நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர் ;
பட்டாங்கில் உள்ள படி. (1)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (2)

ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய் ;
இருநாளுக் கேல்என்றால் ஏலாய்;—ஒருநாளும்
என்னோ யறியாய் ; இடும்பைகூர் என்வயிறே,
உன்னோடு வாழ்தல் அரிது ! (3)

ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே ;—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் ;
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (4)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் ;—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம் ? (5)

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும் ;
அன்றி அதுவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் ;
எனையாளும் ஈசன் செயல். (6)

—ஔவையார்

8. நீதிவெண்பா

கற்ருேர் கனம்அறிவர் கற்ருேரே ; கற்றறியா
மற்ருேர் அறியார் ; வருத்தம் உறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ ? நுவல். (1)

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்பு ?—பொற்பூறும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியர்ஆ வாரோ ? புகல். (2)

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ; நன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே.—வெற்றி
பெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே ; விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி ? (3)

பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலின் ஓர்
நற்புதல்வ ஊனப்பெறுதல் நன்ருமே—பொற்கொடியே !
புன்றிபல குட்டி பயந்ததனுல் ஏது பயன் ?
ஒன்றமையா தோகரிக்கன் ருேது. (4)

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் ; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (5)

ஈக்கு விடம்தலையில் ; எய்துமிருந் தேளுக்கு
வாய்த்தவிடம் கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே ; துச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே ஆம். (6)

4. விவேக சிந்தாமணி

பயன்கொடாதவை

ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக் குதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்;
பாபத்தைத் தீராத் தீர்த்தம்,
பயனில்லை ஏழுந் தானே. (1)

செல்வச் செருக்கு

செல்வம்வந் துற்ற காலைத்
தெய்வமும் சிறிது பேணார்;
சொல்வன அறிந்து சொல்லார்;
சுற்றமும் துணையும் நோக்கார்;
வெல்வதே நினைவ தல்லால்,
வெம்பகை வலிதென் றெண்ணார்;
வல்வினை விளைவும் ஓரார்
மண்ணின்மேல் வாழும் மாந்தர். (2)

பணமில்லாதவர் பிணம்

பொருள்இல்லார்க் கின்பம் இல்லை;
புண்ணியம் இல்லை; என்றும்
மருவிய கீர்த்தி இல்லை;
மைந்தரின் பெருமை இல்லை;

கருதிய கருமம் இல்லை ;
　　கதிபெற வழியும் இல்லை ;
பெருநிலம் தனில்சஞ் சாரப்
　　பிரேதமாய்த் திரிகு வாரே. (3)

மெய்யரின் பெருமையும் பொய்யரின் சிறுமையும்

மெய்யதைச் சொல்வா ராகில்
　　விளங்கிடும் மேலாம் நன்மை ;
வையகம் அவரைக் கொள்ளும் ;
　　மனிதரில் தேவ ராவர் ;
பொய்யதைச் சொல்வா ராகில்
　　போசனம் அற்ப மாகும் ;
' நொய்யவர் இவர்கள் ' என்று
　　நோக்கிடார் அறிவு ளோரே. (4)

துன்பம் எல்லோர்க்கும் ஒன்றே

' பாலுக்குச் சர்க்கரை இல்லை ' என் பார்க்கும்,
　　' பருக்கை அற்ற
கூழுக்குப் போடஉப் பில்லை ' என் பார்க்கும்,
　　' குற்றி தைத்த
காலுக்குத்தோற்செருப் பில்லை' என் பார்க்கும்,
　　' கனக தண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லை ' என் பார்க்கும்
　　விதனம் ஒன்றே. (5)

5. சதகச் செய்யுள்

வேளாளர் இயல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பதும்,
நாள்தோறும் மழை பொழிவதும்,
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்,
நவில்வேத வேதியரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்,
தொல்புவி செழிக்கும் நலமும்,
சுபசோ பனங்களும், கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்,
விற்பனையும், அளவில் புகழும்,
மிக்கஅதி காரமும், தொழிலாளர் சீவனமும்,
வீறுன சூரர்வலியும்,
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவதன்றோ ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே! (1)

கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலம் ; உயர்
தந்தையைச் சீறுகாலம் ;
சற்குருவை நிந்தை செய் காலம் ; மெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாதகாலம் ;
பேய்தெய்வம் என்றுப சரித்திடும் காலம் ;
புரட்டருக் கேற்றகாலம் ;
பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம் ; நற்
பெரியோர்சொல் கொளாத காலம் ;
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலம் ; மிகு
சிறியவன் பெருகுகாலம் ;
செருவில்விட் டோடினர் வரிசைபெறு காலம் ; வசை
செப்புவோர்க் குதவுகாலம் ;
வாய்மதம் பேசிவிடும் அனியாய காரர்க்கு
வாய்த்தகலி காலம் ஐயா !
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே ! (2)

6. திருக்குறள்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (1)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (2)

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது ? (3)

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. (4)

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (5)

ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (6)

தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும். (7)

நல்லா(று) எனினும், கொளல்தீது; மேல் உலகம்
இல்எனினும், ஈதலே நன்று. (8)

தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (9)

இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். (10)

7. வாழ்த்து

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நம்தே யத்தவர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

—பாரதியார்